
செப்டம்பர் 2021

WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

# நடப்பு நிகழ்வுகள்









**1. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'குன்மிங் பிரகடனம்' என்பதுடன் தொடர்புடைய நாடு எது?**

**அ) சீனா ☑**

ஆ) ஜப்பான்

இ) அமெரிக்கா

ஈ) தென் கொரியா



✓ அண்மையில் சீனா குன்மிங் பிரகடனத்தின் 'சுழிய வரைவை' ஐநா அவையில் சமர்ப்பித்தது. இந்த பிரகடனத்தில், "சுற்றுச்சூழல் நாகரிகம்" குறித்த முதன்மை சீனப் பொதுவுடைமைக் கட்சியின் கருத்து அடங்கும். கொள்கை வகுக்கும்போது பல்லுயிர் பாதுகாப்பில் கவனம் செலுத்தவும், மனித நலத்தைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கவும் இந்த ஆவணம் அழைப்பு விடுக்கிறது. COP 15 பல்லுயிர் பேச்சுவார்த்தை ஆனது 2021 அக்டோபரில் நடைபெறவுள்ளது.

---

**2. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'BH வரிசை' என்பதுடன் தொடர்புடைய துறை எது?**

அ) ஜவுளி

**ஆ) ஆட்டோமொபைல் ☑**

இ) செயற்கை நுண்ணறிவு

ஈ) நிதி சேர்க்கை




✓ வாகன உரிமையாளர், மாநிலம்விட்டு மாநிலம் மாறும்போது மீண்டும் வாகனப்பதிவு செய்வதைத் தவிர்க்க, புதிய வாகனப்பதிவில் 'BH' எனத் தொடங்கும் பதிவு வரிசையை நடுவண் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் அறிமுகம் செய்துள்ளது.

✓ இந்த அறிவிப்பின்படி BH–BHarat Series வாகன பதிவு வசதி, தன்னார்வ அடிப்படையில் பாதுகாப்பு பணியாளர்கள், நடுவண், மாநில அரசு ஊழியர்கள், மத்திய, மாநில பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் ஊழியர்களுக்கு பொருந்தும். இந்தப் பதிவின்கீழ் மோட்டார் வாகன வரி கூடுதலாக இருக்கும்.

---

**3. எச்சங்கத்தால் முன்மொழியப்பட்ட கரிம எல்லை வரியை (Carbon Border Tax) BRICS நாடுகள் அண்மையில் எதிர்த்தன?**

**அ) EU ☑**

ஆ) NATO

இ) OPEC

ஈ) G20



✓ BRICS நாடுகள் அதாவது பிரேசில், ரஷ்யா, சீனா & தென்னாப்பிரிக்கா ஆகியவை ஐரோப்பிய ஒன்றியத்தால் (EU) முன்மொழியப்பட்ட கரிம எல்லை வரிக்கு எதிராக இந்தியாவுடன் ஒன்றிணைந்துள்ளன. 27 உறுப்பினர்கள்கொண்ட EU, சமீபத்தில் கரிமசெறிவுடைய பொருட்களின் இறக்குமதிக்கு, 2026 முதல் எல்லைவரி விதிக்க முடிவுசெய்தது. BRICS நாடுகள் ஒன்றிணைந்து, புதுதில்லியில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்தன.

---

**4. இந்தியாவின் தலைமையின் கீழ், கீழ்காணும் எந்த ஆண்டு பன்னாட்டு தினை ஆண்டாக கொண்டாடப்படவுள்ளது?**

அ) 2022

**ஆ) 2023 ☑**

இ) 2024

ஈ) 2025



✓ மத்திய உழவு மற்றும் உழவர்கள் நலத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர், உழவர்களுக்கான தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பிரச்சாரத்தைத் தொடங்கினார். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சில் (ICAR) இப்பிரச்சாரத்தை ஏற்பாடுசெய்துள்ளது. இவ்வாண்டு உழவிற்கான பட்ஜெட் ₹1.23 இலட்சம் கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

✓ 2023ஆம் ஆண்டு, இந்தியாவின் தலைமையின்கீழ், பன்னாட்டு தினை ஆண்டாக கொண்டாடப்படவுள்ளது.

---

**5. சிறந்த புலிகள் பாதுகாப்பு நடைமுறைகளுக்கான உலகளாவிய உயரடுக்கு குறியீட்டைப் பெற்றுள்ள முதுமலை & ஆனைமலை புலிகள் காப்பகம் அமைந்துள்ள மாவட்டங்கள் எவை?**

**அ) நீலகிரி & கோயம்புத்தூர் ☑**

ஆ) நீலகிரி & திருப்பூர்

இ) திருப்பூர் & ஈரோடு

ஈ) தென்காசி & தேனி



✓ கோயம்புத்தூர் அருகே பொள்ளாச்சியில் பாலக்காட்டு கணவாயின் தெற்கேயுள்ள 4000 சகிமீ பாதுகாக்கப்பட்ட பகுதியான ஆனைமலை புலிகள் காப்பகமும் நீலகிரியில் உள்ள முதுமலை புலிகள் காப்பகமும், மேற்குத்தொடர்ச்சி மலையின் உயிரிபன்முகத்தன்மைகொண்ட இடங்க –ளாக உள்ளன. இவையிரண்டும் புலிகள் பாதுகாப்பில் உலகளாவிய உயரடுக்கு குறியீட்டைப் பெற்றுள்ளன.

✓ இது CATS'இன், புலிகளை நிர்வகிப்பதற்கான சிறந்த நடைமுறைகள் மற்றும் தரங்களுக்கான பாதுகாப்புக் கருவியாகும். கேரளத்தின் பரம்பிக் குளம், கர்நாடகாவின் பந்திப்பூர் மற்றும் அஸ்ஸாமின் மானஸ், கசிரங்கா மற்றும் ஒராங் உள்ளிட்ட 14 இருப்புக்கள் மட்டுமே CATS'இன்கீழ் தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் அங்கீகாரத்திற்காக இறுதி செய்யப்பட்டன. கார்பெட், ராந்தம்போர் மற்றும் பந்தவ்கர் போன்ற புகழ்பெற்ற காப்பகங்களுக்கு இந்தத் தகுதி கிடைக்கப்பெறவில்லை.

---

**6. ஜெர்மனிக்கான இந்தியாவின் அடுத்த தூதராக நியமனம் செய்யப்பட்டுள்ளவர் யார்?**

அ) மன்பிரீத் வோரா

ஆ) அஜய் பிசாரியா

**இ) ஹரிஷ் பர்வதனேனி ☑**

ஈ) ஜாவேத் அஷ்ரப்



✓ கடந்த 1990ஆம் ஆண்டுப் பிரிவைச் சார்ந்த இந்திய வெளியுறவு சேவை அதிகாரியான ஹரிஷ் பர்வதனேனி, ஜெர்மனிக்கான இந்தியாவின் அடுத்த தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தற்போது தில்லியிலுள்ள MEA தலைமையகத்தில் கூடுதல் செயலாளராக பணியாற்றி வருகிறார்.

---


**7. பெண்கள் சமத்துவ நாளாக கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

**அ) ஆகஸ்ட் 26 ☑**

ஆ) ஆகஸ்ட் 27

இ) ஆகஸ்ட் 28

ஈ) ஆகஸ்ட் 29




✓ 101ஆவது ஆண்டு பெண்கள் சமத்துவ நாளை ஐக்கிய அமெரிக்க நாடுகள் கொண்டாடுகிறது. இந்த நாள் (ஆகஸ்ட்.26), பெரும்பாலும் அமெரிக்காவில் அரசியலமைப்பு உரிமையைப்பெறும் அமெரிக்கப் பெண்களைப் போற்றுவதற்காக கொண்டாடப்படுகிறது.

✓ அமெரிக்க காங்கிரஸ், 1971ஆம் ஆண்டில் ஆக.26ஆம் தேதியை "மகளிர் சமத்துவ நாள்" என நிறுவியது. அது கடந்த 1973இல் அங்கீகரிக்கப்பட்டது. முழு சமத்துவத்தைப் பெறுவதற்கான பெண்களின் தொடர்ச்சியான போராட்டங்கள் நோக்கிய கவனத்தை இந்த நாள் ஈர்க்கிறது.

---

**8. உலக வில்வித்தை இளையோர் சாம்பியன்ஷிப்பில், இந்தியா, எத்தனை தங்கப்பதக்கங்களை வென்றது?**

அ) ஒன்று

ஆ) இரண்டு

**இ) மூன்று ☑**

ஈ) நான்கு

WORLD ARCHERY YOUTH CHAMPIONSHIPS 2021 WROCLAW

✓ வில்வித்தை சாம்பியன்ஷிப்பில் இந்தியா மூன்று தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது. உலக வில்வித்தை இளைஞோர் சாம்பியன்ஷிப்பில் இந்திய அணி 15 பதக்கங்களை வென்றது. 2021 உலக வில்வித்தை இளையோர் சாம்பியன்ஷிப், போலந்தில் உள்ள வுரோக்லாவில் நடந்தது.

✓ 15 பதக்கங்களில், இந்தியா, 'காம்பவுண்ட் கேடட்' மகளிர் & ஆடவர் & கலப்பு அணி நிகழ்வுகளில் மூன்று தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது. இறுதிப்போட்டியில், இந்திய மகளிர் அணி, துருக்கியை 228–216 என்ற கணக்கில் வீழ்த்தி தங்கப்பதக்கம் வென்றது.

**9. நாடுகளுக்கான உலகளாவிய கொரோனா வைரஸ் கண்டுபிடிப்பு தரவரிசையில் இந்தியாவின் தரநிலை என்ன?**

அ) 20

**ஆ) 32 ☑**

இ) 42

ஈ) 62

32

- ✓ ஹெல்த் இன்னோவேஷன் எக்ஸ்சேஞ்ச், UNAIDS உடன் இணைந்து ஸ்டார்ட்அப் பிளிங்க் தயாரித்த அறிக்கையின்படி, நாடுகளுக்கான உலகளாவிய கொரோனா வைரஸ் கண்டுபிடிப்பு தரவரிசையில் இந்தியா ஆறு இடங்கள் சரிந்து 32ஆவது இடத்தில் உள்ளது.
- ✓ COVID தொற்றுநோயை எதிர்கொள்ள உருவாக்கப்பட்ட புதுமையான தீர்வுகளை அடிப்படையாகக் கொண்ட உலகின் முதல் 40 நாடுகள் மற்றும் 100 நகரங்களை இந்த அறிக்கை தன்னகத்தே கொண்டுள்ளது.

---

**10.'AREAS' என்பது எந்த மத்திய அமைச்சகத்துடன் தொடர்புடைய ஒரு முன்னெடுப்பாகும்?**

அ) மின்துறை அமைச்சகம்

**ஆ) புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ☑**

இ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஈ) உழவு & உழவர்கள் நல அமைச்சகம்

MINISTRY OF NEW & RENEWABLE ENERGY

- ✓ மாநிலங்களின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சங்கம் (AREAS) என்பது புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் முன்னெடுப்பாகும். இது கடந்த 2014ஆம் ஆண்டில் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தால் ஒரு சங்கமாக உருவாக்கப்பட்டது. மாநிலங்களின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சங்கமானது சமீபத்தில் தனது 7ஆவது நிறுவன தினத்தை கொண்டாடியது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வெள்ளி வென்றார் மாரியப்பன்: இந்தியாவுக்கு மேலும் 2 வெண்கலம்**

டோக்கியோ பாராலிம்பிக்கில் ஆடவருக்கான உயரம் தாண்டுதலில் தமிழக வீரர் மாரியப்பன் தங்கவேலு (26) வெள்ளிப்பதக்கம் வென்றார். அதேபிரிவில் களம்கண்ட மற்றொரு இந்தியரான சரத்குமார் வெண்கலம் வெல்ல, துப்பாக்கி சுடுதலில் சிங்ராஜ் அதானாவும் வெண்கலப்பதக்கம் பெற்றார். இதனால் ஒரே நாளில் இந்தியாவுக்கு மூன்று பதக்கங்கள் கிடைத்தன. இதையடுத்து டோக்கியோ பாராலிம்பிக்கில் இதுவரை இந்தியாவுக்கு கிடைத்த பதக்கங்களின் எண்ணிக்கை பத்தாக உயர்ந்து உள்ளது. இதில் 2 தங்கம், 5 வெள்ளி, 3 வெண்கலம் அடக்கம்.

**உயரம் தாண்டுதல்:** ஆடவருக்கான உயரம் தாண்டுதல் 'டி42' பிரிவில் மாரியப்பன் 1.86 மீட்டர் உயரம் தாண்டி 2ஆம் இடம்பிடிக்க, சரத்குமார் 1.83 மீட்டர் உயரம் தாண்டி 3ஆம் இடம்பிடித்தார். ஏற்கெனவே ரியோ பாராலிம்பிக்கில் இதே பிரிவில் தங்கப்பதக்கம் வென்ற மாரியப்பனுக்கு, இது தொடர்ந்து 2ஆவது பாராலிம்பிக் பதக்கமாகும். சரத்குமாருக்கு இது முதல் பாராலிம்பிக் பதக்கம்.

**துப்பாக்கி சுடுதல்:** ஆடவர் (பி1) 10 மீட்டர் ஏர் பிஸ்டல் எஸ்ஹெச்'இல் இந்தியாவின் சிங்ராஜ் அதானா (39) வெண்கலப்பதக்கம் வென்றார்.

---

**2. உச்சநீதிமன்றத்தில் ஒரே நாளில் 9 நீதிபதிகள் பதவியேற்பு**

உச்சநீதிமன்ற வரலாற்றில் முதல்முறையாக ஒரே நாளில் ஒன்பது புதிய நீதிபதிகள் பதவியேற்றுக்கொண்டனர். உச்சநீதிமன்றத்தின் புதிய நீதிபதிகளாக குடியரசுத்தலைவரால் நியமிக்கப்பட்ட பி வி நாகரத்னா, ஹிமா கோலி, பெலா எம் திரிவேதி, அபய் ஸ்ரீநிவாஸ் ஒகா, விக்ரம் நாத், ஜிதேந்திர குமார் மகேஷ்வரி, சி டி இரவிகுமார், எம் எம் சுந்தரேஷ், பி எஸ் நரசிம்மா ஆகியோர் புதுதில்லியில் பதவியேற்றுக்கொண்டனர்.

அவர்களுக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என் வி ரமணா பதவிப் பிரமாணம் செய்துவைத்தார். உச்சநீதிமன்றத்தின் வரலாற்றில் ஒரே நாளில் 9 புதிய நீதிபதிகள் பதவியேற்றுக் கொள்வது இதுவே முதல் முறையாகும். புதிய நீதிபதிகளில் ஒருவரான விக்ரம் நாத், 2027ஆம் ஆண்டு பிப்ரவரியில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாகச் செயல்பட வாய்ப்புள்ளது. அதே ஆண்டு செப்டம்பரில் அவர் ஓய்வுபெற்றபிறகு, நீதிபதி பி வி நாகரத்னா தலைமை நீதிபதியாவார். உச்சநீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதி என்ற சிறப்பையும் அவர் பெறுவார்.

அதே ஆண்டு அக்டோபரில் நீதிபதி பி வி நாகரத்னா ஓய்வுபெறுவார். அவரைத் தொடர்ந்து, நீதிபதி பி எஸ் நரசிம்மா தலைமை நீதிபதியாகச் செயல்படுவார்.

**4 பெண் நீதிபதிகள்:**

புதிய நீதிபதிகள் பதவியேற்புமூலமாக உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 33ஆக அதிகரித்துள்ளது. ஒரு நீதிபதி பணியிடம் காலியாக உள்ளது. பணியில் உள்ள உச்சநீதிமன்ற பெண் நீதிபதிகளின் எண்ணிக்கை 4ஆக அதிகரித்துள்ளது. ஏற்கெனவே பணியில் உள்ள நீதிபதி இந்திரா பானர்ஜி அடுத்த ஆண்டு செப்டம்பரில் ஓய்வுபெறுவார்.

---

**3. ஏப்ரல்–ஜூன் காலாண்டில் 20.1% பொருளாதார வளர்ச்சி**

நடப்பு 2021–22ஆம் நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான முதலாவது காலாண்டில் நாட்டின் பொருளாதாரம் 20.1 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. கடந்த நிதியாண்டின் இதேகாலாண்டுடன் ஒப்பிடுகையில் தற்போது வளர்ச்சி இரட்டை இலக்க மதிப்பை அடைந்துள்ளது. கடந்த 2019–20ஆம் நிதியாண்டின் முதலாவது காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மதிப்பு ₹35.66 லட்சம் கோடியாக இருந்தது.

கரோனா தொற்று பரவல் காரணமாக கடந்த நிதியாண்டின் முதல் காலாண்டில் GDP மதிப்பு 24.4 சதவீதம் வீழ்ச்சி கண்டு ₹26.95 லட்சம் கோடியாகக் குறைந்தது.

நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் ஜிடிபி மதிப்பு ₹32.38 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளதாக தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO) செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மதிப்பு கடந்த நிதியாண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 20.1% அதிகம் என்றபோதிலும், அதற்கு முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் குறைவாகும்.

இதன்மூலமாக, கரோனாதொற்றுபரவலால் பாதிக்கப்பட்ட பொருளாதாரம் இன்னும் இயல்புநிலைக்குத் திரும்பாதது உறுதியாவதாக பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த ஏப்ரல் மத்தியில் கரோனா தொற்றின் 2ஆவது அலை பரவியதால் மாநில அரசுகள் அமல்படுத்திய பொதுமுடக்கத்தால் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டதாக NSO தெரிவித்துள்ளது. கரோனா பரவல் காரணமாக, பொருளாதாரம் சார்ந்த தரவுகளைச் சேகரிப்பதில் பிரச்னைகள் இருந்ததாகவும் என்எஸ்ஓ தெரிவித்துள்ளது.

**நிதிப்பற்றாக்குறை:** மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறை கடந்த ஜூலை இறுதி நிலவரப்படி, ₹3.21 லட்சம் கோடியாக உள்ளதாக கணக்குகள் கட்டுப்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது. இது நடப்பு நிதியாண்டுக்கான நிதிப் பற்றாக்குறை இலக்கில் 21.3 சதவீதம் ஆகும். நடப்பு நிதியாண்டின் முதல் 4 மாதங்களில் மத்திய அரசின் மொத்த வருவாய் ₹6.83 லட்சம் கோடியாகவும், செலவினம் ₹10.04 லட்சம் கோடியாகவும் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**4. BSF, ITBP படைப்பிரிவுகளுக்கு புதிய தலைவர்கள் பொறுப்பேற்பு**

எல்லைப்பாதுகாப்புப்படை (BSF) பிரிவின் டிஜியாக பங்கஜ் குமார்சிங்கும், இந்தோ திபெத்திய எல்லை போலீஸ் (ITBP) பரிவின் டிஜியாக சஞ்சய் அரோராவும் பொறுப்பேற்றுக்கொண்டர். பங்கஜ் குமார் சிங், 1998 இராஜஸ்தான் பிரிவைச் சேர்ந்தவர். இவர் நாட்டின் 63 ஆயிரம் கி.மீ. தூர பாகிஸ்தான், வங்கதேச எல்லைகளை கண்காணிக்கும் எல்லைப் பாதுகாப்புப் படைப் பிரிவின் புதிய தலைவராக பொறுப்பேற்றுள்ளார்.

இந்தப் படையில் 2.65 லட்சம் படை வீரர்கள் உள்ளனர். 1998 தமிழக பிரிவைச் சேர்ந்த சஞ்சய் அரோரா, நாட்டின் 3,488 கிமீ தூர சீனாவுடான எல்லையைப் பாதுகாக்கும் இந்தோ திபெத்திய எல்லை போலீஸ் படையின் தலைவராக பொறுப்பேற்றுள்ளார்.

இதற்கு முன்பு மத்திய துணை ராணுவப் படையின் (CRPF) சிறப்பு டிஜியாக அவர் பணியாற்றிவந்தார். தற்போது, 90,000 படை வீரர்களை கொண்ட ITBP'ஜன் டிஜி பொறுப்பை சஞ்சய் அரோரா ஏற்றுள்ளார். அவரது பணிக்காலம் 2025, ஜூலையில் முடிவடைகிறது. காவல் துறையில் பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ள ஐபிஎஸ் அதிகாரி பங்கஜ் குமார் சிங் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

1996ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தில் அவர் தொடுத்த வழக்கின்மூலம் தான் உளவுத்துறை இயக்குநர், சிபிஐ இயக்குநர், வெளியுறவுத்துறை

செயலர், ரா தலைவர், உள்துறை செயலர் ஆகியோருக்கு குறைந்தது 2 ஆண்டுகள் பதவிக்காலம் வழங்கும் முறை கொண்டுவரப்பட்டது.

---

**5. 'இஸ்கான்' நிறுவனர் சுவாமி பிரபுபாதா பிறந்தநாள்; ₹125 நாணயத்தை வெளியிட்டார் பிரதமர் மோடி**

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தை (இஸ்கான்) நிறுவிய பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதாவின் 125ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நினைவு நாணயத்தை பிரதமர் மோடி தில்லியில் வெளியிட்டார். 'ஹரே கிருஷ்ணா இயக்கம்' என்று அழைக்கப்படும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தை (இஸ்கான்) சுவாமி பிரபுபாதா நிறுவினார்.

உலகம் முழுவதும் கிருஷ்ண பக்தி இயக்கத்தை பரப்பிவரும் இஸ்கான், ஸ்ரீமத் பகவத் கீதை மற்றும் இதர இலக்கிய நூல்களை 89 மொழிகளில் அமைப்பு மொழிபெயர்த்துள்ளது.

---

**6. சிலம்பொலி செல்லப்பன், தொ பரமசிவன் உள்ளிட்டோர் நூல்கள் நாட்டுடைமை: அமைச்சர் தங்கம் தென்னரசு**

தமிழறிஞர்கள் சிலம்பொலி சு செல்லப்பன், முனைவர் தொ பரமசிவன் உள்பட 6 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்படுவதாக தமிழ்வளர்ச்சித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்தார்.

**சட்டப்பேரவையில் தமிழ்த்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதிலளித்து அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்ட அறிவிப்புகள்:** தமிழறிஞர்களான சிலம்பொலி சு செல்லப்பன், முனைவர் தொ பரமசிவன், புலவர் இளங்குமரனார், முருகேசபாகவதர், சங்கரவள்ளி நாயகம், புலவர் செ இராசு ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, பரிவுத்தொகை வழங்கப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ₹80 லட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

'தீராக் காதல் திருக்கு' என்ற பெயரில் ஊடகங்கள் வாயிலாகத் திருக்கு இன்றையத் தலைமுறையினரைச் சென்றடையும் வகையில் தொலைக்காட்சிகளுடன் இணைந்தும் இணைய வடிவிலும் அசைவூட்டும் படங்கள், விநாடி–வினா, குறும்படங்கள், நடனம் போன்ற கலை வடிவங்களோடு நிகழ்ச்சிகள் நடத்தப்படும். இதற்காக சிறப்பு நிதியாக ₹2 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

**தமிழ்ப்பரப்புரை கழகம்:** அயல்நாடு மற்றும் வெளிமாநிலங்களில் வாழும் தமிழர்களுக்குத் தமிழ் கற்பிக்க தமிழ்ப் பரப்புரைக் கழகம் உருவாக்கப்படும்.

அகரம் முதல் சிகரம் வரை எனப் பல படிநிலைகளாகப் பாடங்கள் கற்பிக்கப்பட்டு சான்றிதழ் தேர்வும் நடத்தப்படும். இதற்காக ₹1 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். பள்ளி மாணவர்கள் தங்களின் தமிழ்மொழி இலக்கியத் திறனை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் திறனறித் தேர்வு நடத்தி ஆண்டுதோறும் 1,500 பேர் தெரிவு செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு ஊக்கத்தொகையாக ₹1,500 வழங்கப்படும்.

சங்க இலக்கிய வாழ்வியலை எடுத்துரைக்கும் வகையில் புகழ்மிக்க ஓவியர்களைக் கொண்டு ஓவியங்கள் வரையப்பட்டு, எளிய விளக்க உரையுடன் உயர்தர அச்சு நூலாக வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக ₹15 லட்சம் ஒதுக்கப்படும். தமிழறிஞர்கள், எழுத்தாளர்களின் பிறந்தநாளன்று இலக்கியக்கூட்டங்கள் நடத்திட ₹15 லட்சமளிக்கப்படும். புகழ்பெற்ற தலைவர்கள், தமிழறிஞர்களின் ஒலி, ஒளிப்பொழிவுகள் ஆவணமாக்கப்படும். இதற்கென ஆண்டுதோறும் ₹25 லட்சம் ஒதுக்கீடு செய்யப்படும். சங்க இலக்கியங்கள் சந்தி பிரிக்கப்பட்டு நூல்களாக அச்சிட்டுக் குறைந்த விலையில் வெளியிட ₹10 லட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**தமிழில் பெயரின் முதல் எழுத்து:** தமிழில் பெயர் எழுதும்போது முன் எழுத்தையும் தமிழிலேயே எழுதும் நடைமுறையைப் பள்ளி, கல்லூரி மற்றும் அரசு ஆவணங்களில் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்களும் பொது பயன்பாடுகளில் இம்முறையைப் பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்படும். வணிக நிறுவனங்களில் வழங்கப்படும் பற்றுச்சீட்டுகள் தமிழிலும் அச்சிட்டு வழங்கப்படவும், குடியிருப்பு அடுக்ககங்கள் மற்றும் வணிக வளாகங்களுக்குத் தமிழில் பெயர்சூட்ட ஊக்குவிக்கப்படவும் வழிமுறைகள் உருவாக்கப்படும் என்றார் அமைச்சர் தங்கம் தென்னரசு.

---

**7. அகரத்தில் 13 அடுக்கு உறை கிணறு கண்டெடுப்பு**

சிவகங்கை மாவட்டம், அகரத்தில் நடைபெற்று வரும் ஏழாம்கட்ட அகழாய்வில் 13 அடுக்கு உறை கிணறு கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தமிழக தொல்லியல் துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

கீழடி, அகரம், கொந்தகை, மணலூர் ஆகிய பகுதிகளில் ஏழாம்கட்ட அகழாய்வுப்பணிகள் கடந்த பிப்ரவரி மாதம் முதல் நடந்து வருகின்றன. இதில், சுடுமண் முத்திரை, காதணிகள், தந்தத்தினாலான பகடை, முதுமக்கள் தாழி, உருவ பொம்மை, கருப்பு, சிவப்பு பானை ஓடுகள், தமிழி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், பழங்கால மக்கள் பயன்படுத்திய புழங்குப் பொருள்கள் உள்ளிட்ட ஏராளமான தொல் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

---

**1. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'இந்தியா SIZE' ஆய்வுடன் தொடர்புடைய அமைச்சகம் எது?**

**அ) ஜவுளி அமைச்சகம் ☑**

ஆ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

இ) உள்துறை அமைச்சகம்

ஈ) பாதுகாப்பு அமைச்சகம்

- ✓ புது தில்லியில் அமைந்துள்ள தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப நிறுவனமானது (NIFT), நடுவண் ஜவுளி அமைச்சகத்தின்கீழ் உள்ள ஒரு நிறுவனம் ஆகும். அந்நிறுவனம், "இந்தியா SIZE" என்ற ஓர் ஆய்வை மேற்கொள்கிறது.
- ✓ இது, இந்திய மக்களுக்கான ஒரு விரிவான உடலளவு விளக்கப்படத்தை உருவாக்கும் ஒரு விரிவான உடற்கூற்றளவைசார் ஆய்வாகும். இந்தத் தரவுகளின்மூலம் இந்திய மக்களுக்கேற்ற பணிச்சூழலியல் ரீதியாக வடிவமைக்கப்பட்ட தயாரிப்புகளை உருவாக்க முடியும்.

---

**2. பிரெஞ்சு மேம்பாட்டு நிறுவனமான 'AFD'இன் ஆதரவுடன், பின்வரும் எந்த இந்திய மாநிலம், பல்லுயிர் பாதுகாப்புத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது?**

அ) கர்நாடகா

**ஆ) இராஜஸ்தான் ☑**

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) கோவா

- ✓ இராஜஸ்தான் மாநிலத்தின் கிழக்கு மாவட்டங்களில் பிரெஞ்சு வளர்ச்சி நிறுவனமான Agence Francaise de Developpement (AFD) ஆதரவுடன் பல்லுயிர் பாதுகாப்புத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. இராஜஸ்தான் வனவியல் மற்றும் உயிரிமேம்பாட்டுத் திட்டமானது ஏற்கனவே மாநில அரசின் ஒப்புதலைப் பெற்றிருந்தது. ஏறக்குறைய 1200 சுய-உதவிக் குழுக்களின் உதவியுடன், கிராமங்களில் சூழல்-சுற்றுலா மற்றும் பிற நிலையான வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் ஒருபகுதியாக பரத்பூரில் ஒரு பல்லுயிர் பூங்காவும் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

---

**3. இந்தியாவின் முதல் பசுமை ஹைட்ரஜன் ஆலை அமைக்கப்படவுள்ள இடம் எது?**



அ) மும்பை

ஆ) சென்னை

**இ) மதுரா ☑**

ஈ) டிக்பாய்

- ✓ இந்திய அரசுக்கு சொந்தமான பொதுத்துறை நிறுவனமும் எண்ணெய் நிறுவனமுமான IOCL, நாட்டின் முதல் பசுமை ஹைட்ரஜன் ஆலையை மதுராவில் அமைக்கவுள்ளது. மதுராவின் தாஜ் டிரபீசியம் மண்டலத்திற்கு அருகாமையில் இருப்பதால், அவ்விடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம், நாட்டில் எண்ணெய் & எரிவாயு துறையில் பசுமை ஹைட்ரஜனை அறிமுகப்படுத்தவுள்ளது.

---

**4. அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற சத்தியன் ஞானசேகரனுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**



அ) டென்னிஸ்

**ஆ) டேபிள் டென்னிஸ் ☑**

இ) பூப்பந்து

ஈ) குத்துச்சண்டை

- ✓ ITTF செக் சர்வதேச ஓப்பனில், ஆடவர் ஒற்றையர் பட்டத்தை வெல்ல இந்திய டேபிள் டென்னிஸ் வீரர் சத்தியன் ஞானசேகரன் 4-0 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றிபெற்றார். 28 வயதான அவர், உலக தர வரிசையில் 39ஆவது இடத்தில் உள்ளார். கடந்த வாரம், புடாபெஸ்டில் நடந்த WTT'இல், கலப்பு இரட்டையர் பட்டத்தை வெல்வதற்காக அவர் மணிகா பத்ராவுடன் இணைந்து விளையாடினார்.

---

**5. மலபார்-21 கடற்படை பயிற்சியில் எத்தனை நாடுகள் பங்கேற்கின்றன?**



அ) 2

**ஆ) 4 ☑**

இ) 6

ஈ) 8

- ✓ இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் & ஆஸ்திரேலியாவின் கடற்படைகள் (QUAD) மலபார்-21 என்ற கடற்படைப் பயிற்சிகளில் பங்கேற்கின்றன. இந்த நான்கு நாடுகளும் கடந்த 2020 முதல் மலபார் பயிற்சியின் ஒரு பகுதியாக இருந்து வருகின்றன. இந்த ஆண்டின் மலபார் பயிற்சி பசிபிக் தீவான குவாமில் நடைபெறுகிறது. கடற்படைகளுக்கிடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துவதையும், கடல்சார் பாதுகாப்பில் பொதுவான புரிதலை உருவாக்குவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**6. மொராக்கோவுடனான தூதரக உறவை துண்டித்துள்ள நாடு எது?**



**அ) அல்ஜீரியா ☑**

ஆ) இந்தியா

இ) பிரான்ஸ்

ஈ) பாகிஸ்தான்

- ✓ அல்ஜீரியாவின் வெளியுறவு அமைச்சர் ராம்தேன் லாமாம்ரா தனது நாடு பகைமை நடவடிக்கைகளால் மொராக்கோவுடனான அரசியல் ரீதியான உறவுகளை முறித்துக்கொண்டதாக அறிவித்தார்.
- ✓ வட ஆப்பிரிக்க போட்டியாளர்களிடையே பலமாதங்களாக எழுந்த பதற்றத்தைத்தொடர்ந்து இம்முடிவெடுக்கப்பட்டுள்ளது. அல்ஜீரியாவிற்கும் மொராக்கோவிற்கும் இடையிலான எல்லை, 1994ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டுள்ளது. மொராக்கோ தனது நாட்டின் ஒருபகுதியாகக் கருதும் மேலை சகாராவுக்கு விடுதலைக்கோரும் பொலிசாரியோ இயக்கத்தை அல்ஜீரியா ஆதரித்து வருகிறது.

---

**7. இந்திய கடலோர காவல்படையின் அடிப்படையில், 'விக்ரஹா' என்றால் என்ன?**



**அ) கடலோர ரோந்துக்கப்பல் ☑**

ஆ) குரூஸ் ஏவுகணை

இ) கடலோர ஹெலிகாப்டர்

ஈ) கடலோர டிரோன்

- ✓ கடல் ரோந்துக் கப்பல்கள் வரிசையில் ஏழாவதான இந்திய கடலோரக் காவல்படை கப்பலான 'விக்ரஹா'வை ஆகஸ்ட்.28 அன்று இந்திய கடலோரக் காவல்படையில் மத்திய பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் இணைத்து வைத்தார்.
- ✓ ஆந்திர பிரதேச மாநிலத்தில் உள்ள விசாகப்பட்டிணத்தை மையமாகக் கொண்டு செயல்படவிருக்கும் இந்தக்கப்பல், கடலோரக்காவல் படையின் கிழக்கு கடல்பகுதியில் பணியாற்றும். லார்சன் & டூப்ரோ ஷிப் பில்டிங் லிமிடெட் நிறுவனத்தால் இக்கப்பல் கட்டமைக்கப்பட்டுள்ளது.

---

**8. காலநிலை மாற்றம் தொடர்பான அரசாங்கங்களுக்கிடையிலான குழுவின் தலைமையிடம் உள்ள இடம் எது?**

**அ) சுவிச்சர்லாந்து ☑**

ஆ) இந்தியா

இ) நியூயார்க்

ஈ) ஜெர்மனி

- ✓ காலநிலை மாற்றம் குறித்த அரசாங்கங்களுக்கிடையிலான குழு (IPCC) சுவிச்சர்லாந்தின் ஜெனீவாவை தலைமையிடமாகக் கொண்ட ஐநா அவையின் ஓர் அமைப்பாகும். பருவநிலை மாற்றம் குறித்த ஆறாவது மதிப்பீட்டு அறிக்கை (AR6) ஐபிசிசியால் "AR6 காலநிலை மாற்றம் 2021: இயற்பியல் அறிவியல் அடிப்படை" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டு உள்ளது. காலநிலை அமைப்புகள் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த சமீபத்திய கண்டுபிடிப்புகளை இந்த அறிக்கை அளிக்கிறது. உலக வெப்ப நிலை அடுத்த 2 தசாப்தங்களில் 1.5 டிகிரியை தாண்டும் என இந்த அறிக்கை கூறுகிறது.

**9. எந்த இந்திய மாநிலத்தின் 17ஆவது ஆளுநராக இல கணேசன் பதவியேற்றார்?**



அ) தெலுங்கானா

**ஆ) மணிப்பூர் ☑**

இ) அஸ்ஸாம்

ஈ) மேற்கு வங்கம்

✓ முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் இல கணேசன், மணிப்பூர் மாநிலத்தின் 17ஆவது ஆளுநராக இம்பாலில் பதவியேற்றார். மணிப்பூர் உயர்நீதிமன்ற தலைமைநீதிபதி பிவி சஞ்சய் குமார், இல கணேசனுக்கு பதவிப்பிரமாணமும் இரகசியக்காப்புப்பிரமாணமும் செய்துவைத்தார்.

**10. எந்த மாநிலத்தில் கடல்சார் ஆய்வுகள் குறித்த புதிய திறன் நிறுவனத்தை அமைக்கவுள்ளதாக நடுவண் கப்பல் போக்குவரத்து அமைச்சகம் அறிவித்துள்ளது?**



அ) உத்தர பிரதேசம்

ஆ) இமாச்சல பிரதேசம்

இ) கேரளா

**ஈ) அஸ்ஸாம் ☑**

✓ மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் சர்பானந்த சோனோவால், சென்னை இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின்கீழ் அஸ்ஸாமில் உள்ள கௌகாத்தியில் கடல்சார் ஆய்வுக்கான திறன் நிறுவனத்தை நிறுவுவதாக அறிவித்தார்.

✓ கௌகாத்தியில் உள்ள பாண்டுவில் ஒரு புதிய 'கப்பல் பழுதுபார்க்கும் வசதியை' அமைப்பதற்காக இந்திய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆணையம் மற்றும் ஹூக்லி கொச்சின் கப்பல் கட்டும் நிறுவனத்துக்கு இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

✓ இதற்கான தொழில்நுட்ப ஆதரவை ஐஐடி மெட்ராஸ் வழங்கும். 2023 ஆகஸ்டுக்குள் இது முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்லிப்வே எனப்படும் இந்த வசதி அஸ்ஸாம் மாநில அரசால் வழங்கப்பட்ட 3.67 ஏக்கர் நிலத்தில் உருவாக்கப்படவுள்ளது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. குடிசை மாற்று வாரியத்தின் பெயர் மாற்றம்:**

குடிசைப்பகுதி மாற்று வாரியமானது இனி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியமாக பெயர்மாற்றம் செய்யப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. தமிழ்நாட்டில் குடிசை மாற்று வாரியம் 1970ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

**2. தமிழ்வழியில் படித்தவர்களுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை: வழிகாட்டுதல்களுடன் அரசாணை வெளியீடு**

தமிழ் வழியில் படித்தவர்களுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை வழங்குவதற்கான வழிகாட்டுதல்களை அரசு வெளியிட்டுள்ளது. இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியிருப்பதாவது: பள்ளிப்படிப்பு, பட்டயப்படிப்பு, பட்டப்படிப்பு, முதுநிலை பட்டப்படிப்பு என அனைத்தையும் முழுவதுமாக தமிழ் வழியில் படித்திருக்க வேண்டும். இதர மொழிகளை பயிற்று மொழியாகக் கொண்டு பயின்று, தேர்வுகளை மட்டும் தமிழில் எழுதியவர்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் முன்னுரிமை கிடையாது.

ஒன்றாம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை பள்ளிக்குச் செல்லாமல் நேரடியாக பத்தாம் வகுப்பு தேர்வினை எழுதி தேர்ச்சிபெற்ற தனித் தேர்வர்கள் மற்றும் பிற மாநிலங்களில் தமிழ் அல்லாமல் இதர மொழியினை பயிற்றுமொழியாக கொண்டு பயின்று பின்பு இந்த மாநிலத்தில் நேரடியாகச் சேரும் வகுப்பிலிருந்து பள்ளி இறுதி வகுப்புகள் வரை தமிழ் வழியில் பயின்றவர்கள் இந்த முன்னுரிமைக்கு தகுதியுடையவர்கள் அல்லர்.

சான்றிதழ்களின் உண்மைத் தன்மையை சரிபார்த்த பின்னரே 20 சதவீத இடஒதுக்கீட்டின்கீழ் பணிநியமனம் செய்யப்படுவர். தமிழ் வழியில் கல்வி பயின்றதற்கான சான்றிதழ்களில், மாணவர்களின் பெயர், பயின்ற பள்ளி, கல்லூரி, கல்வி நிறுவனங்களின் பெயர், முகவரி, வகுப்புகள், சான்றிதழ் வழங்கிய அதிகாரி ஆகிய விவரங்கள் அடங்கிய விரைவு தகவல் குறியீட்டினை (QR) இடம்பெறச்செய்வதுடன் அச்சான்றிதழ்களை இ-சேவை மையங்கள்மூலம் வழங்குவதற்கு பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வித் துறைகள் உரிய ஆணைகளை வெளியிடும்.

தமிழ் இலக்கியத்தில் கல்வித் தகுதித் தகுதி பெற்றவர்களை மட்டுமே பள்ளி மற்றும் கல்லூரிகளில் தமிழ் பாடத்துக்கான ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும். தமிழ் பாடத்திலும் மாறுபட்ட வேறு ஒரு பாடத்திலும் பட்டம் பெற்றவர்களை தமிழ் ஆசிரியர்களாக நியமனம் செய்யக்கூடாது என்பதற்கான திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பாக பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வித் துறைகள் நடவடிக்கை மேற்கொள்ளும்.

மேற்கண்ட சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ள 20% முன்னுரிமை இட ஒதுக்கீடானது நேரடி பணி நியமனத்துக்கான ஒவ்வொரு தெரிவு நிலையிலும் (முதல்நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு, நேர்முகத்தேர்வு மற்றும் இதரநிலைகள்) பதவி வாரியாக பின்பற்றப்பட வேண்டும் என தலைமைச்செயலாளர் வெ இறையன்பு வெளியிட்டுள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**3. ஓராண்டில் 3,208 குழந்தைத் திருமணங்கள் நிறுத்தம்**

தமிழ்நாட்டில் ஓராண்டில் மட்டும் 3,208 குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக சமூகநலத்துறை கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

தமிழ்நாட்டில் கடந்த 2008ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு ஜூலை வரையில் 16,281 குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. கடந்த 2020ஆம் ஆண்டில் மட்டும் 3,208 குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன. குழந்தைத் திருமணத்தில் இருந்து மீட்கப்பட்ட பெண் குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளித்திடும் வகையில், கடந்த நிதியாண்டில் 1,021 பெண் குழந்தைகளுக்கு மாதம் தலா ஆயிரம் ரூபாய் வீதம் மூன்று மாதங்கள் தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**4. ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவின் தலைமைப் பொறுப்பு நிறைவு**

ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவின் தலைமைப் பொறுப்பு நிறைவடைந்துள்ளது. இதில், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட சில சர்வதேச விவகாரங்களில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் ஆகஸ்ட் மாதத்துக்கான தலைமைப் பொறுப்பை அந்த மாதம் 1ஆம் தேதி இந்தியா ஏற்றது. அதில், கடல்சார் பாதுகாப்பு, ஐநா அமைதிகாப்புப் படை, பயங்கரவாத எதிர்ப்பு ஆகிய தலைப்புகளில் முக்கியக் கூட்டங்களை இந்தியா நடத்தியது. இந்தியா தலைமையிலான கடைசிக் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது.

வெளியுறவுத் துறைச் செயலர் ஹர்ஷ்வர்தன் ஷ்ரிங்லா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், ஆப்கானிஸ்தான் விவகாரம் தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், 3 முக்கிய தீர்மானங்களுக்கான நீட்டிப்புக்கும் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும், லெபனான், மாலி, சோமாலியா ஆகிய நாடுகளில் அமைதியை நிலைநாட்டுவதற்கு ஐநா அளித்து வரும் ஆதரவை மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தான் விவகாரம் தொடர்பான தீர்மானத்தில், ஆப்கானிஸ்தான் பிராந்தியமானது மற்ற நாடுகளை அச்சுறுத்துவதற்கோ, பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் அளிக்கவோ, பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி வழங்கவோ பயன்படுத்தப்படக் கூடாது.

ஆப்கானிஸ்தான் மக்கள் எந்நேரத்திலும் நாட்டைவிட்டு வெளியேறலாம் என்றும், அவர்களது பயணம் தடுக்கப்படமாட்டாது என்றும் தலிபான்கள் ஆகஸ்ட் 27ஆம் தேதி உறுதியளித்துள்ளனர். வாக்குறுதிகள் அனைத்தையும் தலிபான்கள் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்துக்கு இந்தியா, அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் உள்ளிட்ட 13 நாடுகள் ஆதரவளித்தன. பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பு நாடுகளான சீனா, ரஷியா ஆகியவை தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

ஐநா பாதுகாப்பு கவுன்சிலில், இந்தியா கடந்த ஜனவரி 1ஆம் தேதிமுதல் தற்காலிக உறுப்பினராக இருந்துவருகிறது. மொத்தம் 15 உறுப்பினர்க -ளைக் கொண்ட இந்தக் கவுன்சிலில், நிரந்தர உறுப்பினர்களான அமெரிக்கா, ரஷியா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா ஆகிய 5 நாடுகளுடன் இந்தியா உள்ளிட்ட 10 நாடுகள் தற்காலிக உறுப்பினர்களாக உள்ளன.

இந்தியாவின் இரண்டு ஆண்டு தற்காலிக உறுப்பினர் பதவி, வரும் 2022ஆம் ஆண்டில் நிறைவடையும்.

---

**5. லடாக் யூனியன் பிரதேச விலங்காக பனிச் சிறுத்தை அறிவிப்பு**

லடாக் யூனியன் பிரதேச விலங்காக பனிச்சிறுத்தை, பறவையாக கருப்புக்கழுத்து கொக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவிப்பை அந்த யூனியன் பிரதேச அரசு புதன்கிழமை வெளியிட்டது.

ஜம்மு–காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை மத்திய அரசு கடந்த 2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ரத்து செய்தது. அந்த மாநிலத்தையும் ஜம்மு–காஷ்மீர், லடாக் என இரு யூனியன் பிரதேசங்களாக மத்திய அரசு பிரித்தது. இந்த நிலையில், லடாக் யூனியன் பிரதேசத்துக்கான விலங்கு மற்றும் பறவை அறிவிக்கப்பட்டுள்ளன.

யூனியன் பிரதேசத்தின் வனம், சுற்றுச்சூழல் துறை தலைமைச்செயலர் பவண் கோத்வால் இது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டார்.

முன்பு ஜம்மு–காஷ்மீர் மாநிலமாக இருந்தபோது மாநில விலங்காக காஷ்மீர் மான், பறவையாக கருப்புக் கழுத்து கொக்கு இருந்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அந்த மாநிலம் இப்போது இரு யூனியன் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டதையடுத்து, தனக்கான விலங்கு மற்றும் பறவையை லடாக் யூனியன் பிரதேச நிா்வாகம் அறிவித்துள்ளது.

இந்த விலங்கும், பறவையும் அரிய வகையைச்சேர்ந்தவையாகும். இதில் காஷ்மீர் மான், காஷ்மீர் பகுதியில் மட்டுமே காணப்படுகிறது. கருப்புக் கழுத்து கொக்கு கிழக்கு லடாக்கில் அதிகம் உள்ளது. பனிச்சிறுத்தைகள் லடாக் பகுதியில் 200 முதல் 300 வரையிலான எண்ணிக்கையில் இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

---

**6. ரஷியாவில் கூட்டு ராணுவப் பயிற்சி: இந்தியா பங்கேற்பு**

ரஷியாவில் 17 நாடுகள் இணைந்து மேற்கொள்ளவுள்ள கூட்டு ராணுவப் பயிற்சியில் இந்தியா பங்கேற்கவுள்ளது. ரஷியாவில் உள்ள நீஸ்நி நகரில் செப்டம்பர் 3 முதல் 16ஆம் தேதி வரை 'சபாட்' கூட்டு ராணுவப் பயிற்சி நடைபெறவுள்ளது. இப்பயிற்சியில் இந்தியா, ரஷியா, சீனா, பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், மியான்மர், மலேசியா, மங்கோலியா, ஆர்மீனியா, செர்பியா உள்ளிட்ட நாடுகள் பங்கேற்கவுள்ளன.

இந்தக் கூட்டுப் பயிற்சியில் இந்திய இராணுவ வீரர்கள் சுமார் 200 பேர் பங்கேற்கவுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் நாகா படைப்பிரி –வைச் சேர்ந்தவர்கள். இப்பயிற்சி பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகளி –ல் கவனம் செலுத்தும். இதில் பங்கேற்கும் நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு உறவையும், அவை ஒன்றிணைந்து செயல்படுவதையும் மேம்படுத்துவதுதான் இந்தப் பயிற்சியின் நோக்கம்.

---

**1.** NABARD'இன் முன்னெடுப்பான 'மை பேட் மை ரைட்' திட்டம் தொடங்கப்பட்ட மாநிலம் எது?

அ) தமிழ்நாடு



**ஆ) திரிபுரா ☑**

இ) குஜராத்

ஈ) உத்தர பிரதேசம்

✓ மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் திரிபுராவில் 'மை பேட் மை ரைட்' திட்டத்தை தொடங்கிவைத்தார். இந்தத் திட்டம் நபார்டு மற்றும் NAB அறக்கட்டளையின் ஒரு முன்னெடுப்பாகும்.

✓ கிராமப்புறங்களில் உள்ள பெண்களுக்கு மானியங்கள், ஊதிய ஆதரவு மற்றும் உபகரணங்கள்மூலம் சிறந்த வாழ்வாதாரம் மற்றும் மாதவிடாய் சுகாதாரத்தை வழங்குதல் இதன் நோக்கமாகும். இம்முன்முயற்சியின் கீழ், ஒரு சானிட்டரி பேட் தயாரிக்கும் இயந்திரம், இரண்டு மாதத்திற்கு தேவையான மூலப்பொருட்கள், 50 நாட்களுக்கு ஊதியம், பேக்கேஜிங் பொருட்கள் மற்றும் 3 கட்டங்களாக ஐந்து நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. கிராமப்புற பெண்களிடையே மாதவிடாய் நலத்தை மேம்படுத்துவதை இந்தத் திட்டம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**2.** 'மேரா வதன் மேரா சமன்' என்பது எந்த மத்திய அமைச்சகத்தால் நடத்தப்படும் ஒரு திட்டமாகும்?

அ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஆ) சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்

**இ) சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகம் ☑**

ஈ) பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

✓ இந்திய விடுதலையின் 75 ஆண்டுகளைக் கொண்டாடும் 'அம்ரித் மகோத்சவத்தின்' ஒருபகுதியாக, புது தில்லியில், 'மேரா வதன் மேரா சமன்' முஷைராவை சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது. இந்த நிகழ்ச்சியின்போது, நாட்டின் புகழ்பெற்ற கவிஞர்கள் தங்கள் கவிதை மற்றும் ஈரடிச்செய்யுள்களை வாசித்தனர். இந்நிகழ்ச்சிகளில், புகழ்பெற்ற மற்றும் வளர்ந்துவரும் கவிஞர்கள் "ஏக் பாரத்– ஷ்ரேஷ்தா பாரத்" குறித்த செய்தியை வழங்குவார்கள்.

---

**3.** 2021 ஆகஸ்ட் நிலவரப்படி, பிரதமர் ஜன் தன் யோஜனாவின்கீழ் உள்ள மொத்த வங்கிக்கணக்குகளின் எண்ணிக்கை என்ன?

அ) 32 கோடி

**ஆ) 43 கோடி ☑**

இ) 56 கோடி

ஈ) 67 கோடி

✓ பிரதமர் ஜன் தன் யோஜனாவின்கீழ் உள்ள மொத்த வங்கிக்கணக்குக –ளின் எண்ணிக்கை 2021 ஆகஸ்ட் மாத நிலவரப்படி 43 கோடியாக அதிகரித்துள்ளன. நிதி அமைச்சக தரவுகளின்படி, இந்தக் கணக்குகளில் உள்ள மொத்த வைப்புத்தொகையானது ₹1.46 லட்சம் கோடிக்கு மேல் உள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு 7 ஆண்டுகள் நிறைவடைந்து உள்ளது. 2014 ஆக.15 அன்று சுதந்திர தின உரையில், பிரதமர் மோடி அவர்களால் அறிவிக்கப்பட்ட இத்திட்டம், ஆக.28 அன்று தொடங்கப்பட்டது.

---

**4.** 'SACRED' என்பது முன்மொழியப்பட்ட வேலைவாய்ப்பகத்தின் பெயராகும். இது, பின்வரும் எந்தப் பிரிவு மக்களை குறிவைக்கிறது?

அ) திருநங்கைகள்



**ஆ) மூத்த குடிமக்கள் ☑**

இ) மாற்றுத்திறனாளி

ஈ) மத சிறுபான்மையினர்

✓ 'SACRED' என்ற முன்மொழியப்பட்ட வலைத்தளம், 'Senior Able Citizens for Re-Employment in Dignity' என்பதன் சுருக்கமாகும். மத்திய சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம், இதனை செயல்படுத்துவதற்கான திட்டங்களை வகுக்கிறது. இந்தப்பரிமாற்றகத்தின்மூலம், வேலைதேடும் மூத்த குடிமக்கள், அவர்களுக்குத் தேவையான பணிகளை அணுக ஒரு தளத்தைப்பெறுவார்கள். இதனை அமைப்பதற்காக உருவாக்கப்பட்ட அமைச்சர்களுக்கிடையிலான குழு, இதனைச் செயல்படுத்த ரூபாய் பத்து கோடியை அங்கீகரித்துள்ளது.

**5.** சமீபத்தில் மத்திய கிழக்கு பிராந்திய மாநாட்டை நடத்திய நாடு எது?

அ) ஐக்கிய அரபு அமீரகம்



ஆ) ஈரான்

**இ) ஈராக் ☑**

ஈ) பஹ்ரைன்

✓ ஈராக் சமீபத்தில் மத்திய கிழக்கு பிராந்திய மாநாட்டை நடத்தியது; இது பிராந்தியத்தில் பதற்றத்தைத் தணிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பிரான்ஸ் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இக்கூட்டத்திற்கு ஈராக், சௌதி அரேபியாவுக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பின்போது, பிராந்திய தண்ணீர் நெருக்கடி, யேமனில் போர் மற்றும் லெபனானின் பொருளாதார நிலைமைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. பிராந்தியத்தில் ஈராக் மத்தியஸ்தம் வகிப்பதால் இச்சந்திப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

---

**6.** அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற S P சேதுராமன் சார்ந்த விளையாட்டு எது?

அ) மட்டைப்பந்து



ஆ) ஹாக்கி

**இ) செஸ் ☑**

ஈ) டென்னிஸ்

✓ இந்திய கிராண்ட்மாஸ்டர் S P சேதுராமன் பார்சிலோனா ஓப்பன் செஸ் போட்டி பட்டத்தை வென்றார். அதே நேரத்தில் கார்த்திகேயன் முரளி மூன்றாம் இடத்தைப் பிடித்தார். 9 சுற்றுகளில் 7.5 புள்ளிகளைச் சேர்த்த சேதுராமன் சிறந்த டை–பிரேக் மதிப்பெண்ணின் அடிப்படையில் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார். ரஷ்யாவின் டேனியல் யுபாவும் இதே புள்ளிகளுடன் முடித்தார். ஒன்பது சுற்றுகளில் தோல்வியடையாமல், 6 போட்டிகளில் வென்று மூன்று போட்டிகளில் டிரா செய்தார் சேதுராமன்.

---

**7.** நார்தன் நிலக்கரி வயல்கள் நிறுவனத்தின் (NCL) தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?

அ) ஜார்க்கண்ட்

**ஆ) மத்திய பிரதேசம் ☑**

இ) குஜராத்

ஈ) ஒடிஸா

✓ அரசுக்குச்சொந்தமான மினிரத்னா பொதுத்துறை நிறுவனமான நார்தன் நிலக்கரி வயல்கள் நிறுவனமானது ₹3.5 கோடி மதிப்பில் திறன் மேம்பாட்டுத் திட்டத்தை அறிவித்துள்ளது. இது இந்திய நிலக்கரி நிறுவனத்தின் துணைநிறுவனமாகும்.

✓ இந்த நிறுவனத்தின் தலைமையகம் மத்திய பிரதேச மாநிலத்தின் சிங்ரௌலியில் உள்ளது. நிறுவனத்தின் செயல்பாட்டு பகுதிகளிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள 500 இளையோருக்கு பயிற்சி அளிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இதன்கீழ் இளையோருக்கு நெகிழிப் பொறியியல் வர்த்தகத் துறையில் பயிற்சியளிக்கப்படும், ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ₹70,000 செலவாகும்.

---

**8.** அண்மைய போர்ப்ஸ் இந்தியா அறிக்கையின்படி, உலகிலேயே பொது இடங்களில் அதிக CCTV கேமராக்களைக் கொண்டுள்ள நகரம் எது?

அ) லண்டன்



**ஆ) புது தில்லி ☑**

இ) மெல்போர்ன்

ஈ) சென்னை

✓ உலகின் மிக அதிகமாக கண்காணிக்கப்பட்ட நகரங்கள் குறித்த போர்ப்ஸ் இந்தியாவின் சமீபத்திய அறிக்கையின்படி, தில்லி, ஒரு சதுர மைலுக்கு 1,826.6 CCTV கேமராக்களுடன் முதலிடத்தில் உள்ளது.

✓ தில்லிக்கு அடுத்தபடியாக இலண்டனில் 1,138 CCTV கேமராக்கள் உள்ளன. 609.9 சிசிடிவி கேமராக்களுடன் சென்னை மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்த அறிக்கையின்படி, மும்பை, ஒரு சதுர மைலுக்கு 157.4 CCTV கேமராக்களுடன் 18ஆவது இடத்தில் உள்ளது.

இந்த அறிக்கையில், முதல் 20 நகரங்களில், மூன்று இந்திய நகரங்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளன.

---

**9. இராஜீவ் காந்தி கிசான் நியாய் யோஜனா என்பது எந்த இந்திய மாநிலத்தின் முயற்சியாகும்?**

அ) தெலுங்கானா

**ஆ) சத்தீஸ்கர் ☑**

இ) அஸ்ஸாம்

ஈ) மேற்கு வங்கம்

✓ இராஜீவ் காந்தி கிசான் நியாய் யோஜனா (RGKNY) என்பது சத்தீஸ்கர் மாநிலத்தின் ஒரு முதன்மையான திட்டமாகும். RGKNY இன்கீழ், பயிர் உற்பத்திக்கு, மாநில அரசு, அதன் உழவர்களுக்கு உள்ளீட்டு உதவியை வழங்குகிறது. தற்போதைய கரீப் பருவத்தில் விதைக்கப்பட்ட பயிர்கள், வறட்சிபோன்ற சூழ்நிலைகளால் அழிவுக்குள்ளானால், ஓர் ஏக்கருக்கு ₹9,000 நிதியுதவி வழங்கப்படும்.

---

**10. அண்மையில் காலமான புத்ததேவ் குஹா சார்ந்த துறை எது?**



அ) விளையாட்டு வீரர்

**ஆ) எழுத்தாளர் ☑**

இ) அரசியல்வாதி

ஈ) தொழிலதிபர்

✓ மதுக்கரி உட்பட பல பிரபலமான புத்தகங்களை எழுதிய பிரபல வங்காள எழுத்தாளர் புத்ததேவ் குகா அண்மையில் காலமானார். அவர் தனது 85ஆம் வயதில் காலமானார். ஆனந்த புரஸ்கர் மற்றும் ஷரத் புரஸ்கர் உட்பட பல விருதுகளை அவர் வென்றுள்ளார். வங்காள இலக்கியத்தில் 'ரிவு மற்றும் ரிஜுடா' என்ற 2 பிரபலமான கற்பனை கதாபாத்திரங்களை உருவாக்கியவராவார் இவர்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சென்னை அருகே சித்தமருத்துவப்பல்கலைக்கழகம்: அமைச்சர் மா சுப்பிரமணியன்**

இந்தியாவிலேயே முதன்முறையாக சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னைக்கு அருகில் ஏற்படுத்தப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா சுப்பிரமணியன் அறிவித்தார்.

தமிழக சட்டப்பேரவையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் மா சுப்பிரமணியன் வெளியிட்ட அறிவிப்புகள்:

தமிழகத்தின் பழமையான மருத்துவ முறையான சித்த மருத்துவத்தைப் போற்றும் வகையில் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட சித்த மருத்துவத்துக்கு என தனிப்பல்கலைக்கழகம் (இந்திய மருத்துவ முறைகளான ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி, யோகா, இயற்கை மருத்துவம் உள்பட) சென்னைக்கு அருகில் ஏற்படுத்தப்படும்.

டாம்ப்கால் நிறுவனம் உற்பத்தி செய்யும் சித்த, ஆயுர்வேத மற்றும் யுனானி மருந்துகள் மக்களுக்கு எளிதாகக் கிடைக்கும் வகையில் தமிழக அரசின் கூட்டுறவுச் சங்கங்கள்மூலமாக விற்பனை செய்யப்படும்.

முதியோர் நலனுக்காக நிறைவு வாழ்வு மையம் ₹3.25 கோடி செலவில் 100 சுகாதார நிலையங்களில் ஏற்படுத்தப்படும். சித்தமருத்துவத்தின் சிறப்பு சிகிச்சை முறையான காயகல்ப மருந்துகள் ஒற்றடம், நீராவிக் குளியல், தொக்கணம் நசியம் (ஆயில் மசாஜ்), திருமூலர் பிரணாயாமம், சித்தர் யோகம் போன்ற சிகிச்சைகள் இந்த முகாமில் அளிக்கப்படும். 120 சித்த, ஆயுர்வேத, யுனானி, ஹோமியோபதி, யோகா மற்றும் இயற்கை மருத்துவ மருந்தகங்கள் சுகாதார நலவாழ்வு மையங்களாக ₹32 கோடி செலவில் தரமுயர்த்தப்படும் என்றார்.

---

**2. ₹218 கோடியில் நான்கு புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கப்படும்: அமைச்சர் தா மோ அன்பரசன்**

தமிழகத்தில் 4 இடங்களில் ₹218 கோடியில் புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும் என்று ஊரகத் தொழில்துறை அமைச்சர் தா மோ அன்பரசன் அறிவித்தார். சட்டப்பேரவையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் தா மோ அன்பரசன் வெளியிட்ட அறிவிப்புகள்: சிட்கோ மூலம் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் சீரான தொழில் வளர்ச்சி ஏற்படுத்திட திருச்சி மணப்பாறை, திருவள்ளூர் காவேரிராஜபுரம், செங்கல்பட்டு கொடூர், மதுரை சக்கிமங்கலம் ஆகிய 4 இடங்களில் மொத்தம் 394 ஏக்கர் பரப்பளவில் ₹218 கோடி மொத்த திட்ட மதிப்பில் புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும். இதன்மூலம் மொத்தம் சுமார் 7 ஆயிரம் நபர்கள் வேலைவாய்ப்பினை பெறுவர்.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள 10 கூட்டுறவு தேயிலைத்தொழிற்சாலைகள் நபார்டு வங்கியின் ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தின் கடன் உதவியுடன் ₹50 கோடியில் நவீனமயமாக்கப்படும்.

**சிற்பப்பூங்கா:** சிட்கோமூலம் செங்கல்பட்டு மாவட்டம் கடம்பாடியில் 19 ஏக்கரில் ₹23 கோடி திட்ட மதிப்பில் சிற்பக்கலைஞர்களின் மேம்பாட்டுக் –காக சிற்பக்கலைஞர் தொழிற்பூங்கா சுமார் 100 சிற்பக்கலைஞர்கள் மற்றும் இதர 1000 நபர்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்படும்.

கோயம்புத்தூர் சொலவம்பாளையம் கிராமத்தில் 42.42 ஏக்கரில் ₹18 கோடி திட்ட மதிப்பில் ₹9 கோடி தமிழக அரசு மானியத்துடன் புதிய தனியார் தொழிற்பேட்டை அமைக்கப்படும். இதன்மூலம் சுமார் 1000 நபர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவர். மாநிலத்தில் நலிவுற்று வரும் பாரம்பரிய குறு மற்றும் சிறு தொழில்களான உப்பு உற்பத்தி, வெள்ளிக் கொலுசு, வெள்ளி விளக்கு தயாரித்தல், பித்தளைப் பொருள்கள் மற்றும் பாத்திரப் பொருள்கள் உற்பத்தி, பூட்டு உற்பத்தி மற்றும் பட்டுசார்ந்த தொழில்கள் சிறப்புத்தொழில் வகையின் கீழ் கொண்டு வரப்பட்டு சிறப்பு முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

சேலம் கிழங்கு மாவு மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கத்தில் தற்போது உள்ள 4 கிடங்குகளில் ஏற்றி இறக்கும் பணிகளை எளிதாகக் கையாளுவதற்கு 1.30 லட்சம் சதுர அடி பரப்பளவில் கன்வேயா', சரக்கு மின்தூக்கி போன்றவற்றைப் பொருத்தி இயந்திரமயமாக்கல் மற்றும் விரிவுபடுத்துதல் பணிகள் ₹45 கோடியில் மேற்கொள்ளப்படும். மேலும், கிடங்குகளின் கொள்ளளவை அதிகமாக்கிட சுமார் 1.07 லட்சம் சதுர அடியில் புதிய சேமிப்புக் கிடங்கு ₹40 கோடி செலவில் கட்டுவற்கு பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

---

**3. பசுமைத் திட்டங்களில் முதலீடு: இந்தியா–பிரிட்டன் ஒப்பந்தம்**

இந்தியாவின் பசுமைத் திட்டங்களில் 120 கோடி டாலர் (சுமார் ₹8,760 கோடி) முதலீடு செய்வதற்கான ஒப்பந்தம் இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்டது. இதுகுறித்து பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது: இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் இடையிலான 11ஆவது பொருளாதார மற்றும் நிதிப்பேச்சுவார்த்தை நடைபெற்றது.

காணொலி முறையில் நடந்த இந்தப் பேச்சுவார்த்தையில், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனும் பிரிட்டன் நிதியமைச்சர் ரிஷி சுனக்கும் பங்கேற்றனர். அப்போது, இந்தியாவில் அரசு&தனியார் நிறுவனங்களின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி உள்ளிட்ட திட்டங்களுக்காக 120 கோடி டாலர் முதலீடு செய்ய இருநாடுகளும் ஒப்புக்கொண்டன.

இதில், பிரிட்டனின் மேம்பாட்டு நிதி அமைப்பான சிடிசி, இந்திய பசுமைத் திட்டங்களில் மேற்கொள்ளவிருக்கும் 100 கோடி டாலர், பசுமைத் தொழில்நுட்பங்களை உருவாக்கும் நிறுவனங்களில் இந்தியாவும் பிரிட்டனும் கூட்டாக மேற்கொள்ளும் முதலீடுகள், இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கான 20 கோடி டாலர் கூட்டு முதலீடு ஆகியவையும் அடங்கும். இப்பேச்சுவார்த்தையின்போது, இரு நாட்டு நிதிச்சந்தைகளைப் பலப்படுத்துவதற்காக இணைந்து செயல்படு –வது குறித்து எதிர்கால வர்த்தகப் பேச்சுவார்த்தைகளின்போது ஆலோ –சிக்க இரு அமைச்சர்களும் ஒப்புக்கொண்டனர்.

---

**4. 75,000 ஹெக்டேரில் மூலிகை சாகுபடி: ஆயுஷ் அமைச்சகம் திட்டம்**

நாடு சுதந்திரமடைந்து 75 ஆண்டுகள் ஆனதை கொண்டாடும் அம்ருத் மஹோத்ஸவத்தின் ஒரு பகுதியாக இந்தியாவில் மருத்துவ தாவரங்கள் (மூலிகைகள்) பயிரிடுவதை ஊக்குவிப்பதற்காக தேசிய திட்டத்தை ஆயுஷ் அமைச்சகத்தின் தேசிய மருத்துவ தாவரங்கள் வாரியம் தொடங்கியுள்ளது. இதன்படி நாடு முழுவதும் அடுத்த ஓராண்டில் 75,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் மூலிகைகள் பயிரிடப்படும்.

உத்தர பிரதேசத்தின் சஹரன்பூர் மற்றும் மகாராஷ்டிரத்தின் புனேயில் இந்தத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

---

**5. மாநில நல்லாசிரியர் விருதுக்கு 385 பேர் தேர்வு**

தமிழகத்தில் நிகழ் கல்வியாண்டில் (2021–2022) மாநில நல்லாசிரியர் விருதுக்கு தேர்வுபெற்றுள்ள 385 ஆசிரியர்களின் பட்டியல் மாவட்டங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

குடியரசு முன்னாள் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் பிறந்தநாளான செப்.5ஆம் தேதி பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் ஆசிரியர் தின விழாவாக கொண்டாடப்பட்டு அந்த விழாவில் தொடக்க, நடுநிலை, உயர் நிலை, மேல்நிலைப்பள்ளிகளில் சிறப்பாகப் பணியாற்றும் ஆசிரியர்க –ளைத் தேர்வு செய்து அவர்களுக்கு மாநில நல்லாசிரியர் விருதான 'டாக்டர் ராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருது' வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருதுடன் ₹10 ஆயிரம், வெள்ளிப்பதக்கம் ஆகியவை வழங்கப்படும்.

**1. ஆண்டுதோறும் தேசிய சிறு தொழில் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

**அ) ஆகஸ்ட்.30 ☑**

ஆ) செப்டம்பர்.1

இ) செப்டம்பர்.3

ஈ) செப்டம்பர்.5




- ✓ தேசிய சிறுதொழில் நாள் என்பது நமது சமுதாயத்தில் உள்ள சிறு தொழில்களின் மதிப்பை அங்கீகரிக்கும் ஒரு கொண்டாட்டமாகும்.
- ✓ ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட்.30 அன்று, தேசிய சிறு தொழில் நாள் கொண்டாடுகிறது. 2000 ஆகஸ்ட்.30 அன்று, இந்தியாவில் உள்ள சிறு நிறுவனங்களுக்கு ஆதரவை வழங்குவதற்காக, இந்தத் துறைக்கான ஒரு விரிவான கொள்கைதொகுப்பு இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. உலகப்பொருளாதாரத்தில் MSMEகளின் பங்களிப்புபற்றிய விழிப்புணர்–வை அதிகரிப்பதற்காக ஐநா பொது அவை ஜூன்.27ஆம் தேதியை MSME நாளாக அறிவித்துள்ளது.

---

**2. எந்த பொதுத்துறை வங்கியின் MD & CEOஆக சாந்திலால் ஜைன் நியமிக்கப்பட்டுள்ளார்?**

அ) பஞ்சாப் நேஷனல் வங்கி

**ஆ) இந்தியன் வங்கி ☑**

இ) யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா

ஈ) பாரத வங்கி



- ✓ சாந்தி லால் ஜைன், இந்தியன் வங்கியின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச்செயலதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்நியமனத்திற்கு முன் அவர், பரோடா வங்கியின் நிர்வாக இயக்குநராக பணியாற்றினார். செப்.1 அன்று அவரது மூன்றாண்டுகால பதவிக்காலம் தொடங்கும்.

---

**3. "ஆட்கடத்தலுக்கு உள்ளானவர்கள் குறித்த பன்னாட்டு நாள் – International Day of the Victims of Enforced Disappearances" அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ) ஆகஸ்ட்.30 ☑**

ஆ) செப்டம்பர்.1

இ) செப்டம்பர்.3

ஈ) செப்டம்பர்.5




- ✓ ஆண்டுதோறும் ஆக.30 அன்று உலகம் முழுவதும் "ஆட்கடத்தலுக்கு உள்ளானவர்கள் குறித்த பன்னாட்டு நாள்" அனுசரிக்கப்படுகிறது.
- ✓ ஆட்கடத்தலுக்கு உள்ளானவர்களை கௌரவிப்பதற்கும் அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்குமாக இந்நாள் அனுசரிக்கப்படுகிறது. 2010 டிச.21 அன்று, ஐநா பொது அவை, அதிகாரப்பூர்வமாக இந்த நாளை அறிவித்தது. ஆட்கடத்தலுக்குள்ளானோரின் பாதுகாப்பிற்கு வழிவகுக்கும் சர்வதேச உடன்படிக்கையை ஏற்றுக்கொள்வதை இந்நாள் வரவேற்கிறது.

---

**4. வருவாய் வழக்குகளை ஒழுங்குபடுத்துவதற்கான தொழில்நுட்ப தளத்தை உருவாக்குதற்காக நடுவணரசு அமைத்துள்ள குழுவின் தலைவர் யார்?**

**அ) ஆஷிஷ் ஷிரதோன்கர் ☑**

ஆ) ஆதிர் ரஞ்சன் சௌத்ரி

இ) DY சந்திரசூட்

ஈ) துஷார் மேத்தா



- ✓ ஆஷிஷ் ஷிரதோன்கர் தலைமையிலான மேல்முறையீட்டு தாக்கல் செயல்முறையை நெறிப்படுத்தும் ஒரு தொழில்நுட்ப தளத்தை உருவாக்குவதற்காக மத்திய அரசு ஒரு குழுவை அமைத்துள்ளது.
- ✓ இந்தத்தளம் நேரடி மற்றும் மறைமுக வரிவிதிப்பு தொடர்பான அனைத்து செயல்முறைகளையும் உள்ளடக்கியது. ஆஷிஷ் ஷிராதோன்கர், தேசிய தகவல் மையத்தின் மின்னணு–நீதிமன்றத் திட்டத்திற்கும் தலைமை வகிக்கிறார். இந்தக்குழு தனது பணியை மூன்று மாதகாலத்திற்குள் முடிக்கவுள்ளது. வருவாய்த்துறை, CBDT & CBIT உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

---

**5. அணுவாயுத சோதனைகளுக்கு எதிரான பன்னாட்டு நாள் – Intl., Day against Nuclear Tests அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ) ஆகஸ்ட்.29 ☑**

ஆ) ஆகஸ்ட்.30

இ) ஆகஸ்ட்.31

ஈ) செப்டம்பர்.01




- ✓ ஆண்டுதோறும் ஆக.29 அன்று உலகம் முழுவதும் அணு சோதனைக்கு எதிரான பன்னாட்டு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. அணுவாயுதங்களை பரிசோதிப்பதால் ஏற்படும் தீங்கு விளைவுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், இதுபோன்ற சோதனைகளை முடிவுக்கு கொண்டு வருவதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ அணுவாற்றல் சோதனைகளுக்கு எதிரான பன்னாட்டு நாள் 2009 டிச.2 அன்று ஐநா பொதுச்சபையால் அதன் 64ஆவது அமர்வில் நிறுவப்பட்டது. நியூ மெக்ஸிகோவில் உள்ள பாலைவனத்தளத்தில், 'டிரினிட்டி' என்று அழைக்கப்படும் முதல் அணுசோதனை, அமெரிக்காவின் ராணுவத்தால் 1945 ஜூலை.16 அன்று நடத்தப்பட்டது.

---

**6. ஒலிம்பிக்/பாராலிம்பிக் துப்பாக்கிச்சுடுதலில் இந்தியாவின் முதல் தங்கப்பதக்கத்தை வென்ற வீராங்கனை யார்?**

**அ) அவனி லேகாரா ☑**

ஆ) இளவேனில் வாலறிவன்

இ) அபூர்வி சந்தேலா

ஈ) அஞ்சும் முத்கில்



- ✓ இந்திய பாராலிம்பிக் துப்பாக்கிச் சுடுதல் வீராங்கனை அவனி லேகாரா, டோக்கியோ பாராலிம்பிக்கில் பெண்களுக்கான 10 மீட்டர் ஏர்–ரைபிள் துப்பாக்கிச்சுடுதலில் நாட்டின் முதல் தங்கப்பதக்கத்தை வென்றார்.
- ✓ நாட்டின் வரலாற்றில் பாராலிம்பிக் அல்லது ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்ற முதல் இந்தியப் பெண் என்ற பெருமையைப் பெற்றார் இவர். இந்திய வட்டெறிதல் வீரர் யோகேஷ் கத்துனியா வெள்ளிப்பதக்கத்தை வென்றார். ஈட்டி எறிதல் போட்டியில் தேவேந்திர ஜஜாரியா மற்றும் சுந்தர் சிங் ஆகியோர் வெள்ளி மற்றும் வெண்கலப்பதக்கங்களை வென்றனர்.

---


**7. மேற்கு நைல் வைரஸ்தொற்று அதிகரிக்கலாம் என எச்சரிக்கை விடுத்துள்ள நாடு எது?**

அ) அமெரிக்கா

**ஆ) ரஷ்யா ☑**

இ) சீனா

ஈ) இங்கிலாந்து



- ✓ மிதவெப்பநிலையும் அதிக மழைப்பொழிவும் கொசுக்களுக்கு சாதகமான நிலைமைகளை உருவாக்குவதால், மேற்கு நைல் வைரஸ் (WNV) நோய்த் தொற்றுகள் அதிகரிக்கலாம் என ரஷ்யா எச்சரிக்கை விடுத்துள்ளது.
- ✓ இது கொசுக்களால் பரவும் ஒரு தொற்றுநோயாகும். இது பறவைகளிடம் இருந்து மனிதர்களுக்கு நோய்த்தொற்றுள்ள கியூலெக்ஸ் கொசுவால் பரவுகிறது. இது, மனிதர்களில் அபாயகரமான நரம்பியல் நோயினை உண்டாக்குகிறது. இது ஜிகா, டெங்கு மற்றும் மஞ்சள் காய்ச்சல் ஆகிய வைரஸ்களுடன் தொடர்புடையது.

---

**8. தீபோர் பீல் வனவுயிரி சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ) அஸ்ஸாம் ☑**

ஆ) சிக்கிம்

இ) மத்திய பிரதேசம்

ஈ) இமாச்சல பிரதேசம்




- ✓ தீபோர் பீல் என்பது அஸ்ஸாமின் கௌவுகாத்தியில் அமைந்துள்ள ஒரு மிகப்பெரிய நன்னீராகும். இது அம்மாநிலத்தின் ஒரே ராம்சார் தளமும் முக்கியமான பறவைகள் வாழிடமும் ஆகும். சுற்றுச்சூழல், வனம் & கால நிலை மாற்ற அமைச்சகமானது கௌகாத்தியின் தென்மேற்கு விளிம்பில் உள்ள தீபோர் பீல் வனவுயிரி சரணாலயத்தின் சூழல்–உணர்திறன் மண்டலத்தை அறிவித்துள்ளது. இந்த ஈரநிலம், கோடையில் 30 சகிமீ வரை விரிவடைகிறது; மேலும் குளிர்காலத்தில் சுமார் 10 சகிமீ வரை சுருங்குகிறது.

**9.** **காலாண்டு வீட்டு விலைக்குறியீட்டை வெளியிடுகிற நிறுவனம் எது?**

அ) தேசிய வீட்டு வசதி வங்கி

**ஆ) இந்திய ரிசர்வ் வங்கி ☑**

இ) NITI ஆயோக்

ஈ) தேசிய புள்ளியியல் அலுவலகம்

✓ பத்து முக்கிய நகரங்களின் வீட்டு பதிவு அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட பரிவர்த்தனை–நிலை தரவுகளின் அடிப்படையில் காலாண்டு வீட்டு விலைக் குறியீட்டை இந்திய ரிசர்வ் வங்கி வெளியிடுகிறது. அகமதாபாத், பெங்களூரு, சென்னை, தில்லி, ஜெய்ப்பூர், கான்பூர், கொச்சி, கொல்கத்தா, லக்னோ மற்றும் மும்பை ஆகியவை அந்தப் பத்து நகரங்களாகும். RBI தரவுகளின்படி, அகில இந்திய வீட்டுவிலை குறியீட்டின் வளர்ச்சியானது இந்த நிதியாண்டின் முதல் காலாண்டில் 2 சதவீதமாக குறைந்துள்ளது. இதன் வளர்ச்சி 8.8% (அகமதாபாத்) முதல் (–) 5.1 சதவிகிதம் (சென்னை) வரை இருந்தது.

---

**10.அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற சூப்பர்டெக் இரட்டைகோபுர வழக்குடன் தொடர்புடைய மாநிலம் எது?**

அ) கேரளா

**ஆ) உத்தர பிரதேசம் ☑**

இ) கர்நாடகா

ஈ) மகாராஷ்டிரா



✓ நொய்டாவில் சூப்பர்டெக்கின் எமரால்ட் கோர்ட் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட 40 மாடிகளை கொண்ட இரட்டை கோபுரங்களை இடித்துத்தள்ள உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

✓ மாவட்ட அதிகாரிகளுடனான ஒப்பந்தத்துடன் கட்டட விதிமுறைகளை மீறியதற்காக மூன்றுமாதங்களுக்குள் கோபுரங்களை இடிக்கவேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது. உத்தரபிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், இது சம்பந்தப்பட்ட குற்றவாளிகள்மீது விசாரணை மற்றும் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வ.உ.சி. 150–ஆவது பிறந்த தினம்: சென்னை, கோவையில் சிலை**

சுதந்திரப் போராட்டத்தில் தீரத்துடன் ஈடுபட்டு 'செக்கிழுத்த செம்மல்' என மக்களால் புகழப்படும் வ.உ.சிதம்பரனாரின் 150–ஆவது பிறந்த தினத்தை ஒட்டி 14 புதிய அறிவிப்புகளை முதல்வா் மு.க.ஸ்டாலின் வெளியிட்டாா். இந்த அறிவிப்பின்படி, வ.உ.சி.க்கு சென்னை, கோவை என இரண்டு இடங்களில் புதிதாக சிலை வைக்கப்பட உள்ளது. இதுகுறித்து, சட்டப்பேரவை விதி 110–ன் கீழ் முதல்வா் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட 14 அறிவிப்புகள்:

வ.உ.சி.,யின் 150–ஆவது பிறந்த தினம் வரும் 5–ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி, அரசு விழாவாக, அவரைப் பெருமைப்படுத்தும் வகையில் செயலாற்ற வேண்டுமென சட்டப் பேரவை உறுப்பினா் ஈஸ்வரன் கோரிக்கை விடுத்தாா். வ.உ.சி.,யின் 150–ஆவது பிறந்த தினம் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என எனது சுதந்திர தின உரையிலேயே கூறப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அவரது 150–ஆவது ஆண்டு பிறந்த தினம் வருவதால், 14 புதிய அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன. சென்னை காந்தி மண்டபத்தில் வ.உ.சிதம்பரனாா், சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டுள்ள மண்டபம் பொலிவூட்டப்பட்டு அவரது மாா்பளவு சிலை திறந்து வைக்கப்படும். தூத்துக்குடி மாநகரில் முதன்மைச் சாலையான மேலபெரிய காட்டன் சாலை இனி வ.உ.சிதம்பரனாா் சாலை என அழைக்கப்படும்.

**கோவை வ.உ.சி. பூங்கா:** தனது வாழ்நாளின் முக்கிய நாள்களைக் கோவைச் சிறையிலேயே கழித்த வ.உ.சிதம்பரனாரின் முழு உருவச் சிலையானது, கோவை வ.உ.சி. பூங்காவில் அமைக்கப்படும். செய்தித் துறையின் பராமரிப்பிலுள்ள ஓட்டப்பிடாரம் வ.உ.சிதம்பரனாா் வாழ்ந்த நினைவு இல்லமும், திருநெல்வேலியில் உள்ள அவரது மணிமண்டபமும் புனரமைக்கப்பட்டு அவ்விடங்களில் அவரது வாழ்க்கை வரலாற்றை அனைவரும் அறிந்து பயன் பெறும் வகையில் ஒலி–ஒளி காட்சி அமைக்கப்படும். வ.உ.சிதம்பரனாா் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் திரைப்படத்தை இளைய தலைமுறையினா் அறிந்து கொள்ளும் வகையில், நவீன டிஜிட்டல் முறையில் வெளியிடப்படும். நெல்லை மனோன்மணியம் சுந்தரனாா் பல்கலைக்கழகத்தில் வ.உ.சிதம்பரனாா் பெயரில் புதிய ஆய்விருக்கை அமைக்கப்படும். வ.உ.சி. எழுதியுள்ள அனைத்துப் புத்தகங்களும் புதுப்பொலிவுடன் புதுப்பிக்கப்பட்டு, தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் மூலம் குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

திருநெல்வேலியில் வ.உ.சிதம்பரனாா், மகாகவி பாரதியாா் படித்த பள்ளிகளுக்குத் தேவையான கூடுதல் வகுப்பறைகள், கலை அரங்கம் மற்றும் நினைவு நுழைவு வாயில் ரூ.1.05 கோடி மதிப்பில் அமைக்கப்படும்.

**கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விருது**

கப்பல் கட்டுமானம், தொழில்நுட்பம், போக்குவரத்து ஆகிய கப்பல் தொடா்பான துறைகளில் ஈடுபட்டு, சிறந்த பங்காற்றி வரும் தமிழா் ஒருவருக்கு 'கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விருது' ஆண்டுதோறும் அளிக்கப்படும். இந்த விருது ரூ.5 லட்சமும், பாராட்டுச் சான்றும் உள்ளடக்கியது. வ.உ.சிதம்பரனாா் நவம்பா் 18–இல் மறைந்தாா். இந்தத் தினம் தியாகத் திருநாளாக கடைப்பிடிக்கப்படும்.

**அரசு கட்டடங்களுக்கு பெயா்:**

இந்த ஆண்டு செப்டம்பா் 5–ஆம் தேதி முதல் அடுத்த ஆண்டு செப்டம்பா் 5–ஆம் தேதி வரை ஓராண்டில் தூத்துக்குடி, திருநெல்வேலியில் உருவாகும் அரசுக் கட்டடங்களுக்கு கப்பலோட்டிய தமிழா் வ.உ.சிதம்பரனாா் பெயா் சூட்டப்படும். அவரது தியாகத்தை பள்ளி, கல்லூரி மாணவா்கள் பயனடையும் வகையில், போக்குவரத்துத் துறை சாா்பில் பேருந்து ஒன்றில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் குறித்து புகைப்படக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்படும்.

நடமாடும் வ.உ.சி. வாழ்க்கை வரலாற்று கண்காட்சி கூடமானது, மாணவ–மாணவிகளின் பாா்வைக்காக பயணிக்கும். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக வ.உ.சிதம்பரனாா் குறித்த இணைய வழிக் கருத்தரங்கு நடைபெறும். தமிழ் நிகா்நிலைக் கல்வி கழகத்தின் வாயிலாகக் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாா் எழுதிய நூல்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியன இணையத்தில் மின்மயப்படுத்தி வெளியிடப்படும் என்று தனது அறிவிப்பில் முதல்வா் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளாா்.

---

**2. யெஸ்.பாலபாரதியின் நூலுக்கு பால சாகித்திய புரஸ்காா் விருது**

யெஸ்.பாலபாரதியின் "மரப்பாச்சி சொன்ன ரகசியம்' என்ற குழந்தைகள்" நூலுக்கு 2020–ஆம் ஆண்டுக்கான 'பால சாகித்திய புரஸ்காா் ' விருது வழங்கப்பட்டுள்ளது. சாகித்திய அகாதெமியின் தலைவா் டாக்டா் சந்திரசேகர கம்பாா் ஒப்புதலுடன் அகாதெமியின் செயலாளா் கே.ஸ்ரீனிவாசராவ் வெள்ளிக்கிழமை இதை அறிவித்துள்ளாா். இந்த விருதுக்காக அமைக்கப்பட்ட மூன்று போ் கொண்ட நடுவா் குழு 'மரப்பாச்சி சொன்ன ரகசியம்' நூலை ஒருமனதாகத் தோ்வு செய்துள்ளதாக அகாதெமியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் எம்.கமலவேலன், டாக்டா் ருத்ர துளசிதாஸ், யூமா வாசுகி ஆகியோா் இடம்பெற்றிருந்தனா்.

'இதை குழந்தைகளுக்கான நூல் என்று மட்டும் கருத முடியாது. பெற்றோரும் ஆசிரியா்களும் படிக்க வேண்டிய நூலாகக்கூட கருதலாம். குழந்தைகளின் வெகுளித்தனம், ஆா்வம், சிந்தனையைத் தூண்டக்கூடிய நூல்' என இந்நூல் குறித்த விமா்சனங்களும் வெளியாகியிருந்தன. 'பால சாகித்திய புரஸ்காா் ' விருதுக்கு தோ்வு செய்யப்பட்டுள்ள இந்த நூல் ஆசிரியருக்கு கேடயமும், ரூ 50,000 ரொக்கப் பரிசும் அளிக்கப்படும்.

---

**3. பாராலிம்பிக்கில் இந்தியா பதக்க வேட்டை : ஒரே நாளில் 2 தங்கம், ஒரு வெள்ளி, 1 வெண்கலம்**

டோக்கியோ பாராலிம்பிக் போட்டியில் சனிக்கிழமை ஒரே நாளில் இந்தியாவுக்கு 2 தங்கம், 1 வெள்ளி, 1 வெண்கலம் என 4 பதக்கங்கள் கிடைத்துள்ளன. இதையடுத்து இந்த பாராலிம்பிக்கில் இந்தியாவின் பதக்க எண்ணிக்கை 17–ஆக அதிகரித்துள்ளது. இதில் 4 தங்கம், 7 வெள்ளி, 6 வெண்கலம் ஆகியவை அடங்கும். இந்திய போட்டியாளா்களுக்கு சனிக்கிழமை, துப்பாக்கி சுடுதலில் ஒரு தங்கம், ஒரு வெள்ளியும், பாட்மிண்டனில் ஒரு தங்கம், ஒரு வெண்கலமும் கிடைத்துள்ளது.

துப்பாக்கி சுடுதல்: துப்பாக்கி சுடுதலில் பி4 கலப்பு 50 மீட்டா் பிஸ்டல் எஸ்ஹெச்1 பிரிவில் இந்தியாவின் மணீஷ் நா்வால் (19) முதலிடம் பிடித்து தங்கம் வென்றாா். அதே பிரிவில் களம் கண்ட மற்றொரு இந்தியரான சிங்ராஜ் அதானா (39) இரண்டாம் இடம் பிடித்து வெள்ளி வென்றாா். இதில் நா்வால் தனது முதல் பாராலிம்பிக்கிலேயே தங்கம் வென்றுள்ளாா். அதானா, இதே பாராலிம்பிக்கில் ஏற்கெனவே 10 மீட்டா் ஏா் பிஸ்டா் எஸ்ஹெச்1–இல் வெண்கலம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

பாட்மிண்டன்: பாட்மிண்டன் விளையாட்டில் ஆடவா் ஒற்றையா் எஸ்எல்3 பிரிவில் இந்தியாவின் பிரமோத் பகத் (33) தங்கமும், மனோஜ் சா்காா் (31) வெண்கலமும் வென்றனா். இருவருக்குமே இது முதல் பாராலிம்பிக் பதக்கமாகும். அதிலும், டோக்கியோ பாராலிம்பிக்கில் தான் பாட்மிண்டன் போட்டி முதல் முறையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதில் சாம்பியனாகி வரலாறு படைத்திருக்கிறாா் பிரமோத். பாட்மிண்டனில் மேலும் இரு இந்தியா்கள் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளதால், அதில் இந்தியாவுக்கு இன்னும் இரு பதக்கங்கள் உறுதியாகியுள்ளன.

---

### 4. ஃபேம் திட்டத்தின் கீழ் மின்சார பேருந்துகள்: கொள்முதலை கைவிட தமிழக அரசு முடிவு

மத்திய அரசின் ஃபேம் 2 திட்டத்தின் கீழ் மின்சார பேருந்து கொள்முதல் செய்வதைக் கைவிட முடிவு செய்யப்பட்டிருப்பதாக தமிழக போக்குவரத்துத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும் பெட்ரோல், டீசல் வாகனங்களுக்கு மாற்றாக மின்சார வாகனங்கள் பயன்படுத்துவதின் முக்கியத்துவத்தை பல நாடுகள் உணா்ந்துள்ளன. இந்தியாவிலும் மின்சார வாகனங்களை ஊக்குவிக்க வேண்டும் என நீதி ஆயோக் அழுத்தமாக சொல்லி வருகிறது.

சொல்வது மட்டுமின்றி அதைச் செயல்படுத்துவதிலும் முனைப்பு காட்டும் விதமாக கடந்த ஆண்டு தமிழகத்தின் முக்கிய நகரங்களான கோவை, சேலம், திருப்பூா், ஈரோடு, வேலூா், திருச்சி, விழுப்புரம், தஞ்சாவூா் ஆகிய நகரங்களில் ஃபேம் 2 திட்டத்தின் கீழ் மின்சார பேருந்துகளை வழங்குவதாக மத்திய அரசு தெரிவித்தது. இதன்படி, பேருந்துகளின் நீளம் மற்றும் மின்னேற்ற கட்டமைப்பைப் பொருத்து ரூ.35 முதல் 55 லட்சம் வரை மானியம் வழங்கப்படும் என கூறப்பட்டிருந்தது. திட்டத்துக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு வந்த நிலையில், திட்டத்தைக் கைவிட முடிவு செய்திருப்பதாக தமிழக போக்குவரத்துத் துறை அதிகாரிகள் தெரிவித்தனா்.

காரணம் என்ன? இதற்கான காரணம் குறித்து அவா்கள் விளக்கிக் கூறுகையில், 'மத்திய அரசு வழங்கும் மானியத் தொகைக்கும் பேருந்தின் விலைக்கும் பெரியளவில் வித்தியாசம் உள்ளது. குறிப்பாக மின்கலன்களை மாற்றித் தருவதற்கான தெளிவான விளக்கங்களும் திட்டத்தில் தரப்படவில்லை. எனவே, ஒப்பந்தப்புள்ளி கோரி வெளியிட்ட அறிவிப்பை ரத்து செய்வதைத் தவிர வேறு வழியில்லை. மேலும், தனியாா் மின்சார பேருந்து இயக்கும் நிறுவனத்தின் ஊழியா்களை வைத்து பேருந்துகளை இயக்கும் நிலை இருப்பதால் போக்குவரத்துக் கழக தொழிற்சங்கங்களும் கடும் எதிா்ப்பு தெரிவித்தன. இதையடுத்து அந்த திட்டம் கைவிடப்பட்டதாக அவா்கள் தெரிவித்தனா்.

விரைவில் மின்சார பேருந்துகள்: ஃபேம் 2 திட்டத்தின் கீழ் மின்சாரப் பேருந்துகளை கொள்முதல் செய்வதில் இருக்கும் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு முடிவை தமிழகம் கைவிட்டிருக்கும் நிலையில் கேரளம், கா்நாடகம், தெலங்கானா ஆகிய மாநிலங்களும் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போது, கேஎஃப்டபிள்யூ வங்கியுடன் இணைந்து தமிழகம் கொள்முதல் செய்ய உள்ள 500 பேருந்துகளும் எப்போது வாங்கப்படும் என்பதே அனைவரது எதிா்பாா்ப்பாக உள்ளது. இதன்படி, 80:20 என்னும் அடிப்படையில் கேஎஃப்டபிள்யூ மற்றும் தமிழகம் பேருந்தின் விலையை பகிா்ந்து கொள்ளும்.

கடந்த மாதம் தமிழக நிதியமைச்சா் வெளியிட்ட வெள்ளை அறிக்கையில், போக்குவரத்துத் துறை மற்றும் மின்சாரத்துறையில் கடன் மற்றும் நஷ்டம் அதிகளவு இருப்பதாக கூறப்பட்டுள்ள நிலையில், தமிழகத்தின் சுற்றுச்சூழல் நலன் கருதி விரைவில் மின்சார பேருந்துகள் வாங்கப்படும் எனவும், நிதிநெருக்கடி கருதி சரியான திட்டத்தில் தரமான மின்சாரப் பேருந்துகள் வாங்கப்படும் எனவும் போக்குவரத்துத் துறை உயரதிகாரிகள் தெரிவிக்கின்றனா். அட்டவணைக்காக.... (குறிப்பு டேப் பயன்படுத்தப்பட்டுள்ளது.) ஃபேம் 2 திட்டத்தின் கீழ் தமிழக நகரங்களுக்கு வழங்கப்பட இருந்த பேருந்துகளின் எண்ணிக்கை நகரம் பேருந்துகளின் எண்ணிக்கை கோவை 100 மதுரை 100 திருச்சி 100 சேலம் 50 திருப்பூா் 50 ஈரோடு 50 வேலூா் 50 தஞ்சாவூா் 25 பெட்டிச் செய்தி: மாறிவரும் காலநிலையில் மின்சார பேருந்தின் முக்கியத்துவம்: மின்சார பேருந்துகளின் முக்கியத்துவம் குறித்து சுற்றுச்சூழல் ஆா்வலா்கள் கூறியதாவது: காற்றில் நுண்துகள் அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாக இருப்பது அனல் மின் நிலையங்கள் மற்றும் வாகன புகை. இவற்றைக் கட்டுக்குள் கொண்டு வந்தால் இந்திய மக்களின் ஆயுள்காலமும் 5 ஆண்டுகள் அதிகரிக்கக் கூடும். எனவே, பேருந்துகளில் வெளியேறும் புகையை முற்றிலுமாக ஒழிக்க மின்சார பேருந்து அவசியம் என்றனா்.

காற்றில் இருக்க வேண்டிய நுண்துகளின் அளவு: இந்திய தர நிா்ணய அளவீட்டின்படி 60 மைக்ரோகிராம் உலக சுகாதார நிறுவனத்தின் காற்று தர நிா்ணய அளவீட்டின்படி 25 மைக்ரோ கிராம் சென்னையின் பல பகுதிகளில்...: 60 முதல் 128 மைக்ரோ கிராம் வரையும், 176 முதல் 228 மைக்ரோ கிராம் வரையும் காற்றில் நுண்துகள்கள் உள்ளன.

---

### 5. பாட்மிண்டன்: வரலாற்று தங்கம் வென்றாா் பிரமோத் பகத் :மனோஜுக்கு வெண்கம்; மேலும் இரு பதக்கங்கள் உறுதி

பாராலிம்பிக் பாட்மிண்டன் விளையாட்டில் ஆடவா் ஒற்றையா் எஸ்எல்3 பிரிவில் இந்தியாவின் பிரமோத் பகத் (33) தங்கமும், மனோஜ் சா்காா் (31) வெண்கலமும் வென்றனா். பாராலிம்பிக் போட்டியில் முதல் முறையாக டோக்கியோ பாராலிம்பிக்கில் சோ்க்கப்பட்டுள்ள பாட்மிண்டன் போட்டியில் தங்கம் வென்ற முதல் இந்தியா் என்ற பெருமையை பிரமோத் பெற்றுள்ளாா். அவரோடு மனோஜும் பதக்கம் வென்றுள்ள நிலையில், அவா்கள் தவிர சுஹாஸ் யதிராஜ், கிருஷ்ணா நாகா் ஆகிய மேலும் இரு இந்தியா்களும் இறுதிச்சுற்றுக்கு முன்னேறி பதக்கத்தை உறுதி செய்துள்ளனா்.

எஸ்எல்3 பிரிவு: ஆடவா் ஒற்றையா் எஸ்எல்3 பிரிவின் அரையிறுதிகளில் நடப்பு உலக சாம்பியனான பிரமோத் பகத்தும், மனோஜ் சா்காரும் களம் கண்டனா். இதில் பிரமோத் தனது ஆட்டத்தில் ஜப்பானின் டாய்சுகே ஃபுஜிஹாராவை 21–11, 21–16 என்ற செட்களில் வென்று இறுதிச்சுற்றுக்கு முன்னேறினாா். ஆனால் மனோஜ் சா்காா், இங்கிலாந்தின் டேனியல் பெத்தலிடம் 8–21, 10–21 என்ற செட்களில் வீழ்ந்தாா். இறுதிச்சுற்றில் அந்த டேனியலை எதிா்கொண்ட பிரமோத் 21–14, 21–17 என்ற நோ் செட்களில் 45 நிமிஷத்தில் வென்று சாம்பியன் ஆனாா்.

வெற்றிக்குப் பிறகு பேசிய பிரமோத், 'இந்தப் பதக்கம் எனக்கு மிகச் சிறப்பானதாகும். பாராலிம்பிக் பத்தக்கக் கனவு நனவாகியுள்ளது. பெத்தல் எனக்கு மிகவும் நெருக்கடி அளித்தாா். ஆனால் நான் தன்நிலையிழக்காமல் நிதானமாக எனது பலம் கொண்டு விளையாடினேன். இரு ஆண்டுகளுக்கு முன்பு அவருடன் விளையாடியபோது தோல்வி கண்டேன். அதிலிருந்து நுட்பங்களைக் கற்று தற்போது வென்றுள்ளேன். இந்தப் பதக்கத்தை எனது பெற்றோருக்கும், எனக்கு ஆதரவு அளித்த அனைவருக்கும் சமா்ப்பிக்கிறேன். இந்தியாவை பெருமையடையச் செய்ததற்காக மகிழ்ச்சி அடைகிறேன்' என்றாா். மறுபுறம், அரையிறுதியில் வீழ்ந்த மனோஜ் சா்காா், வெண்கலப் பதக்கத்துக்கான 'பிளே–ஆஃப்' சுற்றில், டாய்சுகே ஃபுஜிஹாராவை 22–20, 21–13 என்ற செட்களில் வென்று பதக்கத்தை கைப்பற்றினாா்.

பிரமோத் பகத்: 4 வயதாக இருக்கும்போது போலியோ பாதிப்பு ஏற்பட்டதால் மாற்றுத்திறனாளி ஆனாா். அண்டை வீட்டாா் பாட்மிண்டன் விளையாடுவதைப் பாா்த்து அதில் கவனம் செலுத்தத் தொடங்கிய பகத், 2006 முதல் போட்டிகளில் பங்கேற்கத் தொடங்கினாா். சா்வதேச அளவில் இதுவரை 45 பதக்கங்கள் வென்றுள்ளாா். இதில் ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியில் வென்ற ஒரு தங்கம், ஒரு வெண்கலம், 4 உலக சாம்பியன்ஷிப் பதக்கங்கள் ஆகியவையும் அடங்கும். மனோஜ் சா்காா்: 1 வயதாக இருக்கும்போது போலியாவால் பாதிக்கப்பட்டாா். 5 வயதிலிருந்து பாட்மிண்டன் விளையாட்டை தொடங்கிய மனோஜ், பின்னா் அதையே தீவிரமாக விளையாடத் தொடங்கினாா். 2011 முதல் பாரா பாட்மிண்டன் போட்டிகளில் விளையாட ஆரம்பித்தாா். 2016 ஆசிய சாம்பியன்ஷிப்பில் தங்கம் வென்றுள்ளாா் மனோஜ்.

எஸ்எல்4 பிரிவு: ஆடவா் ஒற்றையா் எஸ்எல்4 அரையிறுதியில் இந்தியாவின் தருண் தில்லான், சுஹாஸ் யதிராஜ் ஆகியோா் போட்டியிட்டனா். இதில் சுஹாஸ் தனது ஆட்டத்தில் 21–9, 21–15 என்ற செட்களில் இந்தோனேசியாவின் ஃபிரெடி சேதியாவனை வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறி பதக்கத்தை உறுதி செய்தாா். அதில் அவா் பிரான்ஸின் லுகாஸ் மாஸுரை ஞாயிற்றுக்கிழமை சந்திக்கிறாா். தருண்

தில்லான் தனது அரையிறுதியில் 16–21, 21–16, 18–21 என்ற செட்களில் அந்த லூகாஸ் மாஸூரிடம் தான் தோல்வி கண்டாா். அடுத்ததாக, வெண்கலப் பதக்கத்துக்கான 'பிளே–ஆஃப்' சுற்றில் அவா் இந்தோனேசியாவின் சேதியாவனை சந்திக்கிறாா். எஸ்ஹெச்6 பிரிவு: ஆடவா் ஒற்றையா் எஸ்ஹெச்6 பிரிவில் களம் கண்டுள்ள இந்தியரான கிருஷ்ணா நாகா் தனது அரையிறுதியில் 21–10, 21–11 என்ற செட்களில் இங்கிலாந்தின் கிறிஸ்டன் கூம்ப்ஸை தோற்கடித்தாா். இறுதிச்சுற்றில் அவா் ஹாங்காங்கின் சு மான் காயை ஞாயிற்றுக்கிழமை எதிா்கொள்கிறாா்.

கலப்பு இரட்டையா்: கலப்பு இரட்டையரில் எஸ்எல்3–எஸ்யு5 பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் பிரமோத் பகத்/பாலக் கோலி இணை 3–21, 15–21 என்ற செட்களில் இந்தோனேசியாவின் ஹேரி சுசான்டோ/லினி ராட்ரி ஆக்டிலா இணையிடம் வீழ்ந்தது. இதையடுத்து, பகத்/ கோலி கூட்டணி, வெண்கலப் பதக்கத்துக்கான 'பிளே–ஆஃப்' சுற்றில் ஜப்பானின் டாய்சுகே ஃபுஜிஹாரா/அகிகோ சுகினோ இணையை ஞாயிற்றுக்கிழமை எதிா்கொள்கிறது

---

**1. டோக்கியோ பாராலிம்பிக்கில் பதக்கம் வென்ற மாரியப்பன் தங்க வேலு & சரத் ஆகியோருடன் தொடர்புடைய விளையாட்டு எது?**



அ) பளு தூக்குதல்

ஆ) துப்பாக்கிச் சுடுதல்

**இ) உயரந்தாண்டுதல் ☑**

ஈ) ஈட்டி எறிதல்

✓ டோக்கியோ பாராலிம்பிக்கில் உயரந்தாண்டல் போட்டியில் மாரியப்பன் தங்கவேலு மற்றும் ஷரத் குமார் முறையே வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்றனர். மாரியப்பன் தங்கவேலு 2016 ரியோ பாராலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்றிருந்தார். 1968 பாராலிம்பிக் பதிப்பிலிருந்து 2016 பாராலிம்பிக் வரை மொத்தம் 12 பதக்கங்களை இந்தியா வென்றுள்ளது.

---

**2. தொழில்நுட்ப நிறுவனங்கள் மாற்று கட்டண முறைமைகளை வழங்குமாறு நிர்பந்திக்கும் உலகின் முதல் சட்டத்தை இயற்றிய நாடு எது?**

அ) பிரான்ஸ்

ஆ) இத்தாலி

**இ) தென் கொரியா ☑**

ஈ) இந்தியா

✓ கூகுள் மற்றும் ஆப்பிள் போன்ற தொழில்நுட்ப நிறுவனங்களை தங்கள் செயலிக்கூடங்களில் மாற்று கட்டண முறைமைகளை வழங்குமாறு நிர்பந்திக்கும் உலகின் முதல் சட்டத்தை தென்கொரியா நிறைவேற்றி உள்ளது. இதற்கான அந்த நாட்டின் முதன்மை தொலைத்தொடர்பு சட்டமான 'தொலைத்தொடர்பு வணிகச்சட்டம்' திருத்தப்படவுள்ளது.

---

**3. பன்னாட்டு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்த டேல் ஸ்டெய்ன் சார்ந்த நாடு எது?**



அ) ஆஸ்திரேலியா

**ஆ) தென்னாப்பிரிக்கா ☑**

இ) நியூசிலாந்து

ஈ) மேற்கிந்திய தீவுகள்

✓ புகழ்பெற்ற தென்னாப்பிரிக்க வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்டெய்ன் சுமார் 16 ஆண்டுகளுக்குப்பிறகு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார். ஸ்டெயின், கடந்த ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற்றபோது 439 விக்கெட்டுகளை வீழ்த்தி தென்னாப்பிரிக்காவின் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவர் ஆனார். ஸ்டெய்ன், 2004 டிச.17 அன்று புரோட்டீஸ் அணிக்காக அறிமுகமானதிலிருந்து, தென்னாப்பிரிக் –காவுக்காக 93 டெஸ்ட், 125 ஒருநாள் மற்றும் 47 T20 பன்னாட்டு போட்டிகளில் விளையாடியுள்ளார்.

---

**4. இந்திய உச்சநீதிமன்றத்தில், அனுமதிக்கப்பட்ட நீதியரசர்களின் எண்ணிக்கை என்ன?**



அ) 18

ஆ) 25

**இ) 34 ☑**

ஈ) 45

✓ மூன்று பெண்கள் உட்பட ஒன்பது புதிய நீதிபதிகள் உச்சநீதிமன்ற நீதிபதிகளாக பதவியேற்றுக்செய்துகொண்டனர். இந்த நியமனத்தின் மூலம், இந்திய தலைமை நீதிபதி உட்பட, உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 33 பேராக உயர்ந்துள்ளது. உச்சநீதிமன்ற வரலாற்றில், ஒன்பது நீதிபதிகள் ஒரே நேரத்தில் பதவியேற்றது இதுவே முதல்முறை. ஒன்பது நீதிபதிகளில் ஒருவரான நீதிபதி நாகரத்னா, 2027 செப்டம்பரில் இந்தியாவின் முதல் பெண் தலைமை நீதிபதியாக ஆகவுள்ளார்.

---

**5. சாகர் திட்டத்தின் ஒருபகுதியாக, 2021 ஆகஸ்ட்டில் INS ஐராவத் சென்றடைந்த நாடு எது?**



அ) இலங்கை ஆ) ஆப்கானிஸ்தான்

**இ) வியட்நாம் ☑** ஈ) மலேசியா

✓ இந்திய கடற்படை கப்பல் – INS ஐராவத் சமீபத்தில் மிஷன் சாகரின் ஒரு பகுதியாக வியட்நாமில் உள்ள ஹோ சி மின் துறைமுகத்தை அடைந்தது. இந்தக் கப்பல், COVID 19 தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்காக 100 மெட்ரிக் டன் திரவ மருத்துவ ஆக்ஸிஜன் மற்றும் 300 ஆக்ஸிஜன் செறிவூட்டிகளை கொண்டு சென்றது. "Security and Growth for All in the Region" என்பதன் சுருக்கந்தான் SAGAR. இதன்கீழ், துயர காலங்களில், இந்தியா தனது அண்டை நாடுகளுக்கு உதவிவருகிறது.

---

**6. அண்மையில் உணவு அவசரநிலையை அறிவித்த இந்தியாவின் அண்டைநாடு எது?**



அ) பாகிஸ்தான்

**ஆ) இலங்கை ☑**

இ) மியான்மர்

ஈ) பூட்டான்

✓ தீவு நாடான இலங்கை, உணவு அவசரநிலை மற்றும் பொருளாதார அவசரநிலை ஆகியவற்றை ஓர் அரசாணையின்கீழ் அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு, உணவுப் பொருட்களின் இருப்பு மற்றும் விலை நிர்ணயத்தில் கட்டுப்பாடுகளை விதிக்க அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கிறது. அந்நிய செலாவணி நெருக்கடியால் இலங்கை பாதிக்கப்பட் –டுள்ளது, இதன்காரணமாக அதன் நாணயம் மதிப்பிழப்பை நோக்கிச் சென்றுள்ளது; இதன் விளைவாக, பணவீக்கம் ஏற்பட்டுள்ளது.

---

**7. "இ–சோர்ஸ்" என்றவொரு இணையதளத்தை உருவாக்கியுள்ள நிறுவனம் எது?**

அ) பிட்ஸ்

ஆ) ஐஐஎம்–ஏ

**இ) ஐஐடி–எம் ☑**

ஈ) இஸ்ரோ

✓ இந்திய தொழில்நுட்ப நிறுவனம் மெட்ராஸ் (IIT–M) "இ–சோர்ஸ்" என்ற இணையதளத்தை உருவாக்கிவருகிறது. இத்தளம் முறையான மற்றும் முறைசாரா துறையில் பங்கேற்பாளர்களை இணைப்பதன்மூலம் மின் – அணுக் கழிவுகளை கையாள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மின் மற்றும் மின்னணு உபகரணங்கள் பிரிவில், மின்னணுக் கழிவுகளை வாங்குபவர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் இடையில் இது ஒரு சந்தைத்தளமாக செயற்படும். இது மின்னணுக் கழிவுகளை மறுசுழற்சி செய்யவும் மறுபயன்பாட்டுக்கு உகந்தவாறு மாற்றவும் ஒரு சிறந்த வழியை வகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

**8. யேமன் அருகே ஏடன் வளைகுடாவில் பின்வரும் எந்த நாட்டுடன் இணைந்து, இந்திய கடற்படை, கூட்டுப்பயிற்சியை மேற்கொண்டு வருகிறது?**



அ) ரஷ்யா

**ஆ) ஜெர்மனி ☑**

இ) பிரான்ஸ்

ஈ) இத்தாலி

✓ யேமன் அருகே ஏடன் வளைகுடாவில், இந்தியா மற்றும் ஜெர்மனியின் கடற்படையினர் கூட்டுப் பயிற்சியை மேற்கொண்டனர். இப்பயிற்சியில் உலங்கூர்தி தரையிறக்கம் மற்றும் தேடல் & பறிமுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்திய கடற்படையின் போர்க்கப்பலான "INS திரிகண்ட்" ஏடன் வளைகுடாவில் ஜெர்மானிய கப்பலான "பேயர்ன்" உடன் பயிற்சிபெற்றது. INS திரிகண்ட், தற்போது ஏடன் வளைகுடாவில் கடற்கொள்ளை தடுப்பு ரோந்துப்பணிக்காக நிறுத்தப்பட்டுள்ளது.

---

**9. சமீப செய்திகளில் இடம்பெற்ற Dr பிர்தௌசி காத்ரி மற்றும் முகமது அம்ஜத் சாகிப் ஆகியோர் பின்வரும் எந்த விருது பெற்றவர்கள்?**



அ) புக்கர் பரிசு

**ஆ) இராமன் மகசேசே விருது ☑**

இ) புலிட்சர் விருது

ஈ) ஆபெல் பரிசு

- ✓ வங்கதேசத்தைச் சார்ந்த தடுப்பூசி ஆராய்ச்சியாளர் Dr பிர்தௌஸி காத்ரி மற்றும் பாகிஸ்தானைச் சார்ந்த முகமது அம்ஜத் சாகிப் ஆகியோர் இந்த ஆண்டுக்கான (2021) இராமன் மகசேசே விருது பெற்ற ஐந்து பேருள் உள்ளனர். கடந்த 1957இல் நிறுவப்பட்ட இந்த விருது ஆசியாவின் மிக உயரிய கௌரவம் மற்றும் ஆசியாவின் நோபல் பரிசாக கருதப்படுகிறது.
- ✓ பிலிப்பைன்ஸ் மீனவர் மற்றும் சமூக சுற்றுச்சூழல் ஆர்வலர் ராபர்டோ பாலன், மனிதாபிமானப் பணிக்காக அமெரிக்காவின் ஸ்டீவன் மன்சி & புலனாய்வு இதழியல் பணிக்காக இந்தோனேசியாவின் வாட்ச்டாக் ஆகியோர் இவ்விருதைப் பெற்ற பிற வெற்றியாளர்களாவர். சமூகத்திற்கு குறிப்பிடத்தக்க சேவையை வழங்கும் ஆசியாவில் உள்ள தனிநபர்கள் அல்லது அமைப்புகளுக்கு இவ்விருது ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

---

**10. மாநிலங்களவையின் புதிய பொதுச்செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளவர் யார்?**

அ) M வெங்கையா

**ஆ) Dr ராமச்சார்யுலு ☑**

இ) உத்பல் குமார் சிங்

ஈ) தேஷ் தீபக் வர்மா



- ✓ மாநிலங்களவைத்தலைவரான M வெங்கையா, டாக்டர் பரசராம் பட்டாபி கேசவ ராமச்சார்யுலுவை மாநிலங்களவையின் புதிய பொதுச்செயலராக நியமித்தார். Dr ராமச்சார்யுலு, கடந்த 2018ஆம் ஆண்டு முதல் ராஜ்யசபா செயலகத்தில் செயலராக பணிபுரிந்துவருகிறார். அவர், நான்காண்டுகள் பதவியிலிருந்த பிறகு பதவி விலகிய தேஷ் தீபக் வர்மாவை தொடர்ந்து பதவியேற்றுள்ளார். மாநிலங்களவை செயலகத்தின்படி, பொதுச்செயலர் பதவியை அடைந்த முதல் மேலவை ஊழியர் ராமச்சார்யுலு ஆவார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கற்பித்தலில் புதுமை**

தேசிய நல்லாசிரியர் விருது பெற்ற தமிழகம், புதுவையைச் சேர்ந்த ஆசிரியர்கள் நவீன தொழில்நுட்பங்கள்மூலம் கற்பித்தலில் புதுமையைப் புகுத்தியவர்கள் ஆவர். திருச்சி மாவட்டம், பிராட்டியூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியை கே ஆஷா தேவி மாணவர்களுக்கு 10க்கும் மேற்பட்ட தனித்திறன் பயிற்சிகள் வழங்குவது, மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரித்தது போன்ற பல்வேறு செயல்பாடுகளில் சிறந்து விளங்கியுள்ளார்.

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியை டி லலிதா ஆராய்ச்சி சார்ந்த கல்வியை, தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கற்றுக்கொடுக்கும் செயல்முறைகளை அறிமுகப்படுத்தியுள்ளார். புதுச்சேரி மணப்பட்டு அரசு நடுநிலைப் பள்ளியைச் சேர்ந்த அறிவியல் ஆசிரியர் வி ஜெயசுந்தர் கிராமப்புற மாணவர்களுக்குப் புதுமையான முறையில் கல்வி கற்பித்து வருகிறார்.

---

**2. டோக்கியோ பாராலிம்பிக் போட்டிகள் நிறைவு; முதல்முறையாக 19 பதக்கங்களுடன் வரலாற்று சாதனை படைத்த இந்தியா**

டோக்கியோ பாராலிம்பிக் போட்டிகள் நேற்றுடன் நிறைவடைந்தன. இப்போட்டியில் 5 தங்கம், 8 வெள்ளி, 6 வெண்கலத்துடன் முதல்முறையாக 19 பதக்கங்களைப்பெற்று இந்தியக்குழுவினர் சாதனை படைத்துள்ளனர்.

ஜப்பான் தலைநகரம் டோக்கியோவில் பாராலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் கடந்த ஆக.24ஆம்தேதி தொடங்கின. இதில் 162 நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் கலந்துகொண்டனர். இந்தியா சார்பில் 54 வீரர், வீராங்கனைகள் 9 விளையாட்டுகளில் பங்கேற்றனர். சுமார் 2 வாரகாலம் நடந்த பாராலிம்பிக், நேற்று நிறைவடைந்தது. நிறைவு விழா அணிவகுப்பில் இந்திய தேசியக்கொடியை துப்பாக்கிச் சுடுதலில் தங்கம் வென்ற வீராங்கனை அவனி லேகாரா ஏந்திச்சென்றார். அவருடன் இந்தியாசார்பில் 11 பேர் அணிவகுப்பில் பங்கேற்றனர்.

கடைசி நாளான நேற்று இந்தியா இரு பதக்கங்களை கைப்பற்றியது. ஆடவருக்கான பாட்மிண்டன் SH 6 ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் இந்தியாவின் கிருஷ்ணா நாகர் 21–17, 16–21, 21–17 என்ற செட் கணக்கில் ஹாங்காங்கின் மான் ஹை சூவை வீழ்த்தி தங்கப்பதக்கம் வென்றார். அதேவேளையில் SL 4 பிரிவு இறுதிச்சுற்றில் இந்தியாவின் சுஹாஸ் யதிராஜ் 21–15, 17–21, 15–21 என்ற செட் கணக்கில் போராடி பிரான்ஸின் லூகாஸ் மசூரிடம் தோல்வியடைந்து வெள்ளிப்பதக்கம் பெற்றார். சுஹாஸ் யதிராஜ், உ பி மாநிலம் நொய்டா மாவட்ட நீதிபதி என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்மூலம் பாராலிம்பிக் தொடரில் இந்தியா ஒட்டுமொத்தமாக 5 தங்கம், 8 வெள்ளி, 6 வெண்கலத்துடன் 19 பதக்கங்கள் பெற்று பதக்கப் பட்டியலில் 24ஆவது இடம்பிடித்தது. பாராலிம்பிக் வரலாற்றில் 1968 முதல் இந்தியா பங்கேற்று வருகிறது. கடந்த 2016ஆம் ஆண்டு பாராலிம்பிக் வரை மொத்தமாக 12 பதக்கங்கள் மட்டுமே பெற்றிருந்தது. ஆனால், முதல்முறையாக டோக்கியோவில் இம்முறை 19 பதக்கங்கள் குவித்து வரலாற்று சாதனை படைத்துள்ளது.

இதற்கு முன்பு அதிகபட்சமாக 1984ஆம் ஆண்டு நியூயார்க் பாராலிம்பிக் மற்றும் 2016ஆம் ஆண்டு ரியோ பாராலிம்பிக்கில் தலா 4 பதக்கங்கள் பெற்றிருந்ததே சாதனையாக இருந்தது. இதை முறியடித்து தற்போது முதல்முறையாக இரட்டை இலக்கத்தில் பதக்கங்களை பெற்று சாதனை படைத்துள்ளனர் இந்தியக்குழுவினர்.

இந்தியா சார்பில் துப்பாக்கி சுடுதலில் அவனி லேகாரா, பாட்மிண்டனில் பிரமோத் பகத், கிருஷ்ணா நாகர், ஈட்டி எறிதலில் சுமித் அண்டில், துப்பாக்கி சுடுதலில்மணீஷ் நார்வால் ஆகியோர் தங்கப்பதக்கம் வென்றனர். டேபிள் டென்னிஸில் பவினாபென் படேல், துப்பாக்கிச் சுடுதலில் சிங்ராஜ் அதனா, வட்டு எறிதலில் யோகேஷ் கதுனியா, உயரம் தாண்டுதலில் நிஷாத் குமார், மாரியப்பன் தங்கவேலு, பிரவீன் குமார், ஈட்டி எறிதலில் தேவேந்திர ஜஜாரியா, பாட்மிண்டனில் சுஹாஸ் யதிராஜ் ஆகியோர் வெள்ளிப் பதக்கம் கைப்பற்றியுள்ளனர்.

மேலும், துப்பாக்கிச் சுடுதலில் அவனி லேகாரா, வில்வித்தையில் ஹர்விந்தர் சிங், உயரம் தாண்டுதலில் சரத் குமார், ஈட்டி எறிதலில் சுந்தர் சிங் குர்ஜார், பாட்மிண்டனில் மனோஜ் சர்கார், துப்பாக்கிச் சுடுதலில் சிங்ராஜ் அதனா ஆகியோர் வெண்கலப் பதக்கம் பெற்றனர்.

பதக்கப்பட்டியலில் 96 தங்கம், 60 வெள்ளி, 51 வெண்கலம் என மொத்தம் 207 பதக்கங்கள் குவித்து சீனா முதலிடம் பிடித்தது. 41 தங்கம், 38 வெள்ளி, 45 வெண்கலம் என 124 பதக்கங்களுடன் இங்கிலாந்து 2ஆம் இடமும், 37 தங்கம், 36 வெள்ளி, 31 வெண்கலம் என 104 பதக்கங்களுடன் அமெரிக்கா 3ஆம் இடமும் பிடித்தன.

---

**3. பயணம்தான், பந்தயமல்ல**

சமீபகாலமாக நாடுமுழுவதிலும் உள்ள தேசிய – மாநில நெடுஞ்சாலைகளில்தான் அதிக அளவில் விபத்துகள் அரங்கேறுகின்றன.

மத்திய அரசின் சாலைப்போக்குவரத்து – நெடுஞ்சாலை அமைச்சகம் வெளியிட்டுள்ள 2019ஆம் ஆண்டுக்கான புள்ளிவிவரம் இதனை உறுதி செய்கிறது. நாடு முழுவதிலுமுள்ள அனைத்துச் சாலைகளின் நீளத்தில் 2.03 சதவீதம் தேசிய நெடுஞ்சாலைகள் உள்ளன. ஆனால் நம் நாட்டில் ஏற்படும் சாலை விபத்து உயிரழப்புகளில் 35.7% தேசிய நெடுஞ்சாலைகளில்தான் நிகழ்கின்றன.

நாட்டின் மொத்த சாலைகளில் 3.01 சதவீதமாக இருக்கும் மாநில நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துகளில் 24.8% மரணங்கள் நிகழ்கின்றன. ஆனால், உள்ளூர், கிராமப்புற சாலைகளில் நேரிடும் உயிரழப்புகள் வெறும் 39 சதவீதம்தான் என்று கூறுகின்றது புள்ளிவிவரம்.

சாலை விபத்துகளில் 69 சதவீத விபத்துகள், வாகனங்களை மிதமிஞ்சிய வேகத்தில் ஓட்டுவதாலேயே நிகழ்கின்றன. சுமார் 6 சதவீத விபத்துகள் போக்குவரத்து விதிகளை மீறுவதால் நிகழ்கின்றன.

---

**1.** 'ZAPAD 2021' என்ற பெயரில் பன்னாட்டு இராணுவப்பயிற்சி நடைபெறுகிற நாடு எது?



**அ) ரஷ்யா ☑**

ஆ) சீனா

இ) இலங்கை

ஈ) இந்தியா

✓ செப்.3–16 வரை ரஷ்யாவின் நிஷ்னியில் நடைபெறும் 'ZAPAD–2021' என்ற பன்னாட்டு பயிற்சியில் இந்திய இராணுவம் பங்கேற்கிறது. பயங்கரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது இந்த இரண்டு வாரகால இராணுவப்பயிற்சி. யூரேசியா மற்றும் தெற்காசியாவிலிருந்து 10க்கும் மேற்பட்ட நாடுகள் இப்பயிற்சியில் பங்கேற்கின்றன. இப்பயிற்சியில் சீனாவும் பாகிஸ்தானும் பார்வையாளர் –களாக பங்கேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய ராணுவத்தின் சார்பாக 200 பேர்கொண்ட ஒரு குழு இப்பயிற்சியில் பங்கேற்கிறது.

---

**2.** மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் தலைவராக நியமிக்கப்பட்டு உள்ளவர் யார்?



**அ) J B மோகபத்ரா ☑**

ஆ) இராஜேஷ் தாமோர்

இ) பிரமோத் Y தேவிகர்

ஈ) தீபா ரசல்

✓ மூத்த அதிகாரியான J B மோகபத்ரா மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். 1985–தொகுதி இந்திய வருவாய் சேவை அதிகாரியான மோகபத்ரா, தற்போது வருமான வரித்துறையின் கொள்கையை உருவாக்கும் குழுவில் உறுப்பினராக உள்ளார். அமைச்சரவை நியமனக்குழுவானது CBDT'இன் தலைவராக மோகபத்ரா அவர்களை நியமிக்க ஒப்புதலளித்துள்ளது.

---

**3.** துளிர்நிறுவனங்கள் துறையை ஊக்குவிப்பதற்காக பொதுத்துறை –தனியார்துறை கூட்டாண்மையின் கீழ், 'புத்தாக்க திட்டம்' ஒன்றை தொடங்கியுள்ள மாநிலம் எது?




அ) தெலுங்கானா

**ஆ) பஞ்சாப் ☑**

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) கேரளா

✓ துளிர் நிறுவனங்கள் துறையை மேம்படுத்துவதற்காக முதலமைச்சர் அமரீந்தர் சிங், பொதுத்துறை – தனியார்துறை கூட்டாண்மையின் கீழ், 'புத்தாக்க திட்டம்' (Innovation Mission–IMPunjab) ஒன்றை தொடங்கினார். துளிர் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கு உலக முதலீட்டாளர்களையும் நிபுணர்களையும் கொண்டுவருவதை இது தனது நோக்கமாகக் கொண் –டுள்ளது. வலுவான அரசாங்க ஆதரவுடன் தனியார் துறையால் இந்தப் பணி விரைவுபடுத்தப்படும்.

---

**4.** நிதி அமைச்சகத்தின் சமீப தரவுகளின்படி, ஆகஸ்ட் மாதத்தில், எவ்வளவு GST வரி வருவாய் வசூலிக்கப்பட்டுள்ளது?




அ) ₹88,000 கோடி

ஆ) ₹98,000 கோடி

**இ) ₹1,12,000 கோடி ☑**

ஈ) ₹1,34,000 கோடி

✓ 2021 ஆகஸ்ட் மாதம் வசூலிக்கப்பட்ட மொத்த GST வருவாய் ₹1,12,020 கோடியாகும். 2021 ஆகஸ்ட் மாத GST வருவாய், கடந்தாண்டின் இதே கால GST வருவாயைவிட 30% அதிகம். இந்த மாதத்தில், உள்நாட்டு பரிவர்த்தனை வருவாய், கடந்த ஆண்டின் இதே மாதத்தைவிட, 27% அதிகம். கடந்த ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாத GST வசூல் ₹1 இலட்சம் கோடி இலக்கை கடந்துள்ளது.

---

**5.** "Ubreathe Life" என்ற உலகின் முதல் 'தாவர அடிப்படையிலான' ஸ்மார்ட் வளிதூய்மையாக்கியை, கீழ்க்காணும் எந்த நிறுவனத்தின் துளிர் நிறுவனம் உருவாக்கியுள்ளது?

அ) ஐஐடி–மெட்ராஸ்

**ஆ) ஐஐடி–ரோபர் ☑**

இ) ஐஐஎஸ்சி

ஈ) என்ஐவி

✓ உலகின் முதல் 'தாவர அடிப்படையிலான' ஸ்மார்ட் வளிதூய்மையாக்கி ஒன்றை உருவாக்கியுள்ளதாக IIT ரோபரின் ஒரு துளிர் நிறுவனம் கூறியுள்ளது. "Ubreathe Life" என்று பெயரிடப்பட்ட இதனை, அர்பன் ஏர் ஆய்வகம் உருவாக்கியுள்ளது. இது, கட்டடங்களின் உட்புறங்களில், வளி சுத்திகரிப்பு செயல்முறையை மேம்படுத்துகிறது. 'நகர்ப்புற மூணாறு விளைவு' என்றவொரு தொழில்நுட்பம் இதில் பயன்படுத்தப்படுகிறது. 'பைட்டோரெமிடேஷன்' என்பது தாவரங்கள் காற்றிலிருந்து மாசுக்களை திறம்பட அகற்றும் ஒரு செயல்முறையாகும்.

---

**6.** 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் (முதல் டோஸ்) தடுப்பூசி செலுத்திய முதல் இந்திய மாநிலம் எது?



அ) தமிழ்நாடு

**ஆ) இமாச்சல பிரதேசம் ☑**

இ) இராஜஸ்தான்

ஈ) அஸ்ஸாம்

✓ பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் முதல் தவணை COVID தடுப்பூசியை செலுத்திய நாட்டின் முதல் மாநிலமாக இமாச்சல பிரதேசம் மாறியுள்ளது. ஆகஸ்ட்.31 நிலவரப்படி, இந்தியா 50 கோடி 'முதல் டோஸ்' மற்றும் 15 கோடி 'இரண்டாவது டோஸ்' என்ற இலக்கை எட்டியுள்ளது. மொத்த செலுத்தப்பட்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கை 65 கோடியை தாண்டியுள்ளது. ஆகஸ்ட் மாதத்தின் இரு நாட்களில், தலா ஒவ்வொரு நாளிலும் 1 கோடிக்கும் அதிகமான தடுப்பூசிகளை வழங்கி இந்தியா சாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது.

---

**7.** UNEP'இன்படி, எந்த வகை பெட்ரோல், உலகத்திலிருந்து முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளது?



**அ) ஈயஞ்சேர் பெட்ரோல் ☑**

ஆ) மெழுகு பெட்ரோல்

இ) உயர் ஆக்டேன்கொண்ட பெட்ரோல்

ஈ) உயர் செடேன்கொண்ட பெட்ரோல்

✓ ஐநா சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) அண்மையில் ஈயஞ்சேர் பெட்ரோலின் பயன்பாடு உலகிலிருந்து ஒழிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது. இது மனித உயிர்களையும் சுற்றுச்சூழலையும் பாதுகாப்பதில் ஒரு முக்கிய மைல்கல்லாக பார்க்கப்படுகிறது; இது உலகளவில் 1.2 மில்லியன் முன்கூட்டிய மரணங்களைத் தடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

✓ குறைந்த தரமுடைய பெட்ரோலின் ஆக்டேன் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக அதில் ஈயம் சேர்க்கப்படுகிறது. அந்த ஈயமானது எந்திர செயல்திறனை அதிகரிக்கவும் உதவுகிறது.

---

**8.** 'ஹரா பரா' என்ற பெயரில் டிரோன் அடிப்படையிலான காடு வளர்ப்புத் திட்டத்தைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?



அ) குஜராத்

ஆ) பஞ்சாப்

இ) மணிப்பூர்

**ஈ) தெலுங்கானா ☑**

✓ தெலுங்கானா மாநில அரசு அண்மையில் 'ஹரா பரா' என்ற பெயரிலான டிரோன் அடிப்படையிலான காடு வளர்ப்புத்திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. இந்தத் திட்டத்தைத் தொடங்க, ஐதராபாத்தைச் சார்ந்த டிரோன் தொழில்நுட்ப துளிர் நிறுவனமான மருத் டிரோன்ஸுடன் தெலுங்கானா மாநில அரசு கூட்டுசேர்ந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், தெலுங்கானாவின் 33 மாவட்டங்களிலும் உள்ள காடுகளில் 12,000 ஹெக்டேர் பரப்பில் 50 இலட்சம் மரங்களை நடும்.

✓ 'Seedcopter' எனப்பெயரிடப்பட்ட இது, உள்ளூர் பெண்கள் மற்றும் நலச் சமூகங்களால் விதைபந்துகளைத் தயாரிப்பதை உள்ளடக்கியது; அவை, இலக்குவைக்கப்பட்ட பகுதிகளில் டிரோன்கள் வழியாக விதைக்கப்படும்.

---

**9.சமீபத்தில் 'நாடோடி விழாவை' நடத்திய இந்திய மாநிலம் அல்லது யூனியன் பிரதேசம் எது?**

**அ) லடாக் ☑**



ஆ) சிக்கிம்

இ) அந்தமான் & நிக்கோபார் தீவுகள்

ஈ) கேரளா

- ✓ லடாக்கின் துணைநிலை ஆளுநர் R K மாத்தூர், சமீபத்தில் கிழக்கு லடாக்கின் சாங்தாங் பகுதியில் உள்ள கோர்சோக் புவில் இரண்டு நாள் நடைபெறும் லடாக் நாடோடி விழாவை தொடங்கிவைத்தார். இந்த விழா, லடாக் கலாச்சார அகாதமியால் லடாக் சுற்றுலாத்துறையுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ✓ இது சாங்தாங் பிராந்தியத்தின் தனித்துவமான கலாச்சாரத்தை முன்னி -லைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சாங்தாங்கி என்பது லடாக்கை பூர்வீகமாகக்கொண்ட ஒரு காஷ்மீர் ஆட்டினமாகும். இதனை இப்பகுதியில் வாழும் நாடோடி இனக்குழுக்கள், அதிலிருந்து பெறப்படும் சிறந்த தரமான 'பஷ்மினா கம்பளி'க்காக வளர்க்கின்றனர்.

---

**10. 'Eat Right Station' சான்றிதழ் என்பது கீழ்காணும் எந்த அமைப்பின் முன்னெடுப்பாகும்?**

அ) FAO




**ஆ) FSSAI ☑**

இ) NABARD

ஈ) FCI

- ✓ இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர ஆணையமானது (FSSAI), ரயில் நிலையங்களுக்கு 'Eat Right Station' என்ற சான்றிதழை வழங்குகிறது. FSSAI உடன் இணைந்த ஒரு மூன்றாந்தரப்பு தணிக்கை நிறுவனம் 1 முதல் 5 வரையுள்ள மதிப்பீடுகளுடன் சான்றிதழை வழங்குகிறது.
- ✓ பயணிகளுக்கு உயர்தரமான, சத்தான உணவுகளை வழங்கி வருவதற்காக, இந்திய இரயில்வேயின் சண்டிகர் ரயில் நிலையத்துக்கு 'Eat Right Station' என்ற 5☆ தரச்சான்றிதழை FSSAI வழங்கியுள்ளது. உணவு மற்றும் சுகாதார நடவடிக்கைகளில் தரமான நடைமுறைகளை பின்பற்றும் ரயில் நிலையங்களுக்கு FSSAI இச்சான்றிதழை வழங்குகிறது. பயணிகளுக்கு பாதுகாப்பான மற்றும் நலமான உணவு கிடைப்பதை உறுதிசெய்ய, ரயில்வே நிலையங்களில் முன்மாதிரியான முயற்சிகளை இந்த 5☆ தரமதிப்பீடு குறிக்கிறது.
- ✓ சண்டிகர் ரயில் நிலையம், பயணிகளுக்கு உயர்தர, சத்தான உணவை வழங்கியதற்காக 5☆ 'Eat Right Station' சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்த சான்றிதழ் FSSAI'இன் 'Eat Right India' இயக்கத்தின் ஒருபகுதியாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மின்னுற்பத்தி திட்டத்துக்கு ஆலோசனைபெற நடுவணரசு நிறுவனத் -துடன் முதல்வர் முன்னிலையில் ஒப்பந்தம்**

சென்னை தலைமைச்செயலகத்தில் தமிழ்நாடு மின்னுற்பத்தி, பகிர்மான கழகத்துக்கும், இந்திய மரபுசாரா எரிசக்தி மேம்பாட்டு நிறுவனத்துக்கும் இடையே, தமிழ்நாட்டில் மின் உற்பத்தித் திறனை மேம்படுத்த புதிய திட்டங்கள், நவீன தொழில்நுட்ப முறைகளை கையாளுதல் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் மு க ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தானது.

**₹1,32,500 கோடி நிதி தேவை**

இத்திட்டங்களை செயல்படுத்த ₹1,32,500 கோடி நிதி தேவைப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக இந்திய மரபுசாரா எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம், மரபுசாரா எரிசக்தி துறையில் திறன் படைத்த நிறுவனங்கள் கையாளும் உத்திகளை ஆய்வுசெய்து ஆலோசனைகள் வழங்கும். மேலும், இந்திய மரபுசாரா எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம், சந்தை ஆய்வு, திட்டமேம்படுத்துதல், ஒப்பந்தப் புள்ளிகள் மேலாண்மை, அமலாக்கம் ஆகியவை தொடர்பாக தனது மேம்பட்ட ஆலோசனைகளை தமிழ்நாடு மின்னுற்பத்தி, பகிர்மானக் கழகத்துக்கு வழங்கும்.

---

**2. ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரிக்கு அகில இந்திய விருது**

சென்னை மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரிக்கு அகில இந்திய அளவில் 2ஆவது இடத்திற்கான தூய்மை மற்றும் நேர்த்தி விருது வழங்கப்பட்டுள்ளது. கடந்த 5 ஆண்டுகளாக இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகங்கள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகள் தங்கள் கல்வி வளாகங்களை தூய்மை, பசுமை வளாகங்களாக மேம்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அகில இந்திய தொழில்நுட்பக் கழகம் விருதுகள் வழங்கி ஊக்குவித்து வருகின்றது.

நாடு முழுவதும் 326 கல்வி நிறுவனங்களில் சாய்ராம் பொறியியல் கல்லூரி 2ஆம் இடத்திற்கான விருதைப் பெற்றுள்ளது.

---

**3. பெரியார் பிறந்த செப்.17ஆம் தேதி சமூகநீதி நாளாக அறிவிப்பு**

'பெரியார்' ஈ வெ இராமசாமியின் பிறந்தநாள் (செப்.17) ஆண்டுதோறும் சமூகநீதி நாளாகக் கடைப்பிடிக்கப்படும் என முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்தார்.

---

**4. காரைக்குடி CECRI ஆராய்ச்சியாளருக்கு இளம் விஞ்ஞானி விருது**

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் உள்ள மத்திய மின்வேதியியல் ஆய்வக (CECRI) ஆராய்ச்சியாளர் கிரிபாவுக்கு, மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சிக் கழகம் (CSIR) 2021ஆம் ஆண்டுக்கான இளம் விஞ்ஞானி விருதை அறிவித்துள்ளது. இரசாயன அறிவியல் துறையில் இவராற்றிய பங்களிப்பிற்காக இவ்விருது அளிக்கப்படுகிறது. இவ்விருது வரும் செப்.26 அன்று CSIR நிறுவன நாள் விழாவில் வழங்கப்படும்.

உணவுப் பொருள்கள் கெடுவதற்குமுன் அறிந்துகொள்ளவும், மனித உடலில் ஏற்படும் நோய்களை கண்டறிந்து கொள்ளும் வகையில் இரசாயனத்தைக்கொண்டு 'திரவ–திரவ இடைமுகம்' என்ற கண்டுபிடிப் -புக்காகவும் இவ்விருதை பெற்றுள்ளார்.

---

**5. நிலவை 9,000 முறை சுற்றிவந்துள்ள 'சந்திரயான்–2'**

நிலவை ஆய்வுசெய்வதற்காக இந்தியா சார்பில் அனுப்பப்பட்ட 'சந்திரயான்–2' விண்கலம், நிலவை 9,000'க்கும் அதிகமான முறை சுற்றிவந்துள்ளது என்று இந்திய விண்வெளி ஆய்வு மைய (ISRO) தலைவர் கே சிவன் கூறினார். தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டுவரும் விண்கலத்தின் படம்பிடிக்கும் கருவியும் அறிவியல் உபகரணங்களும் நிலவுகுறித்த அரிய தகவல்களை அளித்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். நிலவை சுற்றிவந்து ஆய்வு செய்துவரும் 'சந்திரயான்–2' வெற்றிகரமாக இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்வதை குறிக்கும் வகையில் 'நிலவு அறிவியல் பயிலரங்கம் 2021' என்ற தலைப்பிலான இரண்டு நாள் பயிலரங்கு ISRO சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

**6. இந்தியா–ஆஸ்திரேலியா இணைந்து 'ஆஸ்இண்டெக்ஸ்' என்னும் கூட்டு இராணுவப்பயிற்சி**

ஆஸ்திரேலியாவின், 'ராயல் ஆஸ்திரேலியன்' கடற்படை, இந்தியாவின் கடற்படையுடன் இணைந்து AUSINDEX என்னும் கூட்டு இராணுவப் பயிற்சியில் ஈடுபடவுள்ளன. இந்தப் பயிற்சி ஆஸ்திரேலியாவின் வடக்கு பிராந்திய கடற்பகுதியில் நடைபெறுகிறது. AUSINDEX கூட்டு இராணுவப் பயிற்சி 2015 முதல் நடந்து வருகிறது. கடந்த 2019'இல் நீர்மூழ்கி கப்பல் முறியடிப்பு பயிற்சியை இந்தியா இந்த ஒத்திகையின்போது பெற்றது குறிப்பிடத்தக்கது. அண்மையில் குவாமில் நடந்த மலபார்–21 பயிற்சியின் நீட்சியாக இந்தப் பயிற்சி மீண்டும் நடக்கிறது.

---

**7. இந்தியாவில் ஈயத்தால் ஏற்படும் மாசைக் கட்டுப்படுத்த ஐஐடி மெட்ராஸ் மற்றும் ஐஐடி கான்பூர் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு**

சென்னை ஐஐடி மற்றும் கான்பூர் ஐஐடி ஆராய்ச்சியாளர்கள் ஈய மாசுபாட்டைக் குறைக்க உதவும் கொள்கைகளையும் கருவிகளையும் கண்டறிய ஓர் ஆய்வு நடத்துகின்றனர். ஈய மாசுபாடு மக்களின் மன மற்றும் உடல்நலத்திற்குத் தீங்கு விளைவிப்பதுடன் சுற்றுச்சூழலையும் மாசுபடுத்தும் என்பதால் ஈயத்தை மறுசுழற்சி செய்வது குறித்த ஆய்வை இரு கல்விநிறுவனங்களின் ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்டுள்ளனர்.

இந்தியாவில் 27.5 கோடி சிறார்கள் உள்பட, உலகில் மூன்றில் ஒருபங்கு சிறார்கள் ஈயத்தால் பாதிக்கப்படுவதாக UNICEF அறிக்கை தெரிவிக்கிறது.

ஈயமாசுபாட்டால் பாதிக்கப்படுவர் ரத்தத்தில் ஈயத்தின் அளவு அதிகமாகி, புத்திக்கூர்மை, கவனம் ஆகியவற்றைப் பாதிப்பதுடன், இரத்த சோகை, சிறுநீரகம் மற்றும் கல்லீரல் நோய்களும் ஏற்படுகின்றன.

ஈயத்தை மறுசுழற்சி செய்யும் தொழிலாளர்கள், முறையான வழியில் மறு சுழற்சி செய்ய பயிற்சியில்லாமல், ஈயம்–அமில பேட்டரிகளை உடைத்து, நிலத்திலும் சுற்றுப்புறங்களிலும் அமிலம் மற்றும் ஈயமாசை உருவாக்குகி–ன்றனர். மேலும், திறந்த உலைகளில் ஈயத்தை உருக்குவதால் விஷ வாயுக்கள் வெளியேறி காற்றில் கலக்கின்றன. இது, பல்வேறு தீங்கான விளைவுகளை ஏற்படுத்துகிறது.

செலவு குறைவான வழிமுறைகளைப் பின்பற்றும் முறைசாராச் செயல்முறைகளும் அதனால் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளும் வளரும் நாடுகளில் அதிகம் காணப்படுகின்றன.

இதைத்தடுக்க கடுமையான சட்ட விதிமுறைகள் இல்லாமையும், மாற்று முறைகள் அதிக செலவு உள்ளதும் தவறான வழிமுறைகள் தொடர்வதற்–கு காரணங்களாகக் கூறப்படுகின்றன. முறைசார்ந்த மறுசுழற்சித் துறையில் வரியைக் குறைத்தல் மற்றும் மறுசுழற்சி – மறு உற்பத்தித் துறைகளுக்கு மானியம் வழங்குதல்போன்ற கொள்கைகள் ஈய மாசுபாட்டைக் குறைக்க உதவும் என்று இந்த ஆய்வு பரிந்துரைத்தது. அதே சமயத்தில், முறை சார்ந்த ஈய மறு உற்பத்தித் துறைக்கு அதிக மானியம் வழங்கப்படுவது, முறைசாரா மறுசுழற்சித்துறை முடங்க வழி வகுக்கும் என்றும் அந்த அறிக்கை எச்சரிக்கிறது.

---

### 8. ஓவல் டெஸ்ட்: இந்தியா 157 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி

இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டெஸ்டில் இந்தியா 157 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. ஐந்து ஆட்டங்கள்கொண்ட தொடரில் இந்தியா தற்போது 2–1 என்ற கணக்கில் முன்னிலையில் இருக்கிறது.

**பும்ரா '100' விக்கெட்**

இந்த ஆட்டத்தின்மூலம் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிவேகமாக 100 விக்கெட்டுகள் வீழ்த்திய இந்திய வேகப்பந்துவீச்சாளர் என்ற பெருமையை பும்ரா பெற்றார். அவர் தனது 24ஆவது ஆட்டத்தில் இந்த மைல்கல்லை எட்டியுள்ளார். முன்னதாக கடந்த 1980'இல் இந்திய முன்னாள் கேப்டன் கபில் தேவ் 25 டெஸ்டுகளில் 100 விக்கெட்டுகள் எட்டியதே விரைவானதாக இருந்தது.

**50 ஆண்டுகளில் முதல் வெற்றி**

ஓவல் மைதானத்தில் நடைபெறும் டெஸ்டில் இங்கிலாந்தை இந்தியா வீழ்த்தியது, கடந்த 1971ஆம் ஆண்டுக்குப் பிறகு இதுவே முதல்முறை ஆகும். அந்த ஆண்டில் அஜித் வடேகர் தலைமையிலான இந்திய அணி 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றிருந்தது. அதன்பிறகு ஓவலில் விளையாடிய எட்டு ஆட்டங்களில் இந்தியா வென்றதில்லை. அதில் ஐந்து ஆட்டங்கள் டிரா ஆக, மூன்று ஆட்டங்களில் இங்கிலாந்து வென்றிருந்தது. தற்போது 50 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஓவலில் இங்கிலாந்தை வீழ்த்தியுள்ளது இந்தியா.

---

**1.** **பத்திரிகையாளர் நலத்திட்டத்தின் தற்போதைய வழிகாட்டுதல்க –ளை ஆய்வுசெய்ய அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் யார்?**

**அ) அசோக் டாண்டன் ☑**

ஆ) சசி சேகர் வேம்படி

இ) நீரஜா சேகர்

ஈ) அலோக் அகர்வால்



✓ பத்திரிகையாளர் நலத்திட்டத்தின் தற்போதைய வழிகாட்டுதல்களை மதிப்பாய்வு செய்வதற்காக பன்னிருவர்கொண்ட குழுவை அரசாங்கம் அமைத்துள்ளது. இக்குழுவுக்கு பிரசார் பாரதி வாரிய உறுப்பினர் அசோக் டாண்டன் தலைமைதாங்குகிறார். இக்குழு, மரணத்தின்போது வழங்கப் –படும் கருணைத்தொகை மற்றும் பத்திரிகையாளர் நலத்திட்டத்தின்கீழ் உள்ள பிற வழக்குகளின் திருத்தத்தின் அவசியத்தை ஆராயும்.

---

**2.** **முதல் BRICS திரைப்பட தொழில்நுட்ப கருத்தரங்கத்தை ஏற்பாடு செய்த நாடு எது?**

அ) ரஷ்யா

ஆ) பிரேசில்

இ) சீனா

**ஈ) இந்தியா ☑**




✓ இந்தியாவின் மத்திய தகவல் & ஒலிபரப்பு அமைச்சகமும் வெளியுறவு அமைச்சகமும் இணைந்து BRICS திரைப்பட தொழில்நுட்ப கருத்தரங்கத் –தை செப்.1–2 அன்று ஏற்பாடு செய்தது. மெய்நிகர் வடிவத்தில் FICCI உடன் இணைந்து இந்தக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. BRICS உச்சி மாநாட்டிற்கு முன்னதாக திட்டமிடப்பட்ட சிறப்பு நிகழ்வின் ஒருபகுதியாக இந்தியா முதல் பிரிக்ஸ் திரைப்பட தொழில்நுட்ப கருத்தரங்கை ஏற்பாடு செய்தது. இதன் கவனம் சேவைத்துறை மற்றும் திரைப்படத்துறையில் பணியாற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களை அங்கீகரிப்பதில் உள்ளது.

---


**3.கொரோனா வைரஸின் C.1.2 திரிபானது, பின்வரும் எந்த நாட்டில் முதன்முதலில் பதிவுசெய்யப்பட்டது?**

அ) சீனா

**ஆ) தென்னாப்பிரிக்கா ☑**

இ) இந்தியா

ஈ) அமெரிக்கா



✓ கொரோனா வைரஸின் C.1.2 திரிபானது, தென்னாப்பிரிக்காவிலிருந்து முதன்முதலில் பதிவுசெய்யப்பட்டது. உலக நலவாழ்வு அமைப்பின்படி, இந்தத் திரிபு, தற்போதுவரை குறைந்தது ஆறுநாடுகளுக்கு பரவியுள்ளது. இந்திய அரசின் கூற்றுப்படி, இந்தியாவில் இதுவரை இந்தப் புதிய C.1.2 திரிபின் பாதிப்பு எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஐநா அவையின் பொதுநல அமைப்பு, இப்புதிய C.1.2 வைரஸ் திரிபை கண்காணிப்பதாக அறிவித்துள்ளது.

---


**4.** **'நிஞ்சா' வெடிகுண்டு என்றழைக்கப்படுகிற R9X ஹெல்பையர் ஏவுகணையுடன் தொடர்புடைய நாடு எது?**

**அ) அமெரிக்கா ☑**

ஆ) சீனா

இ) ஐக்கிய அரபு அமீரகம்

ஈ) இந்தியா



✓ ஆப்கானிஸ்தானில் நிகழ்த்தப்பட்ட டிரோன் தாக்குதலில் அமெரிக்கா ஒரு சிறப்புவகை ஏவுகணையைப் பயன்படுத்தியது. வெடித்துச் சிதறுவதற்கு பதிலாக கூர்மையான கத்திகளை அது ஏவுகிறது.

✓ ஹெல்பையர் ஏவுகணையைப் பயன்படுத்தி அமெரிக்கா தனது டிரோன் தாக்குதல்களை நடத்தியது. ஹெல்பையர் ஏவுகணையில் பல்வேறு வகைகள் உள்ளன. R9X ('நிஞ்சா' வெடிகுண்டு) என அழைக்கப்படும் இது, சுமார் 45 கிலோ கிராம் எடைகொண்டதாகும். உலங்கூர்திகள், வானூர்திகள் ஆகியவற்றிலிருந்து இந்த ஏவுகணையை ஏவமுடியும். இந்த ஏவுகணைகளின் தாக்கு தூரம் 500 மீட்டர் முதல் 11 கிமீ வரை உள்ளது. அமெரிக்கப் படைகள் தொடர்ச்சியாக இரண்டு டிரோன் தாக்குதல்களை நடத்தின.

---

**5.** **சமீபத்தில், எந்த நாட்டின் பிரதமராக இஸ்மாயில் சப்ரி யாகோப் நியமிக்கப்பட்டார்?**

**அ) மலேசியா ☑**

ஆ) ஆஸ்திரேலியா

இ) மியான்மர்

ஈ) இந்தோனேசியா



✓ மலேசிய அரசரானவர் இஸ்மாயில் சப்ரி யாகோப்பை மலேசிய நாட்டின் பிரதமராக நியமித்துள்ளார். முகைதீன் யாசினுக்குப் பதிலாக இஸ்மாயில் சப்ரி யாகோப் பிரதமராக நியமிக்கப்பட்டார். பொது சுகாதார அமைப்பை திறம்பட நிர்வகிக்க தவறியதால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை –யை இழந்ததை அடுத்து யாசின் பதவி விலகினார்.

✓ பிரதமராக நியமிப்பதற்கு முன் துணை பிரதமராக இருந்தார் இஸ்மாயில். இஸ்மாயில், 222'க்கு 114 என்ற பெரும்பான்மை ஆதரவைப் பெற்றார்.

---

**6.** **சமீபத்தில், ஸ்ரீநகரின் தால் ஏரியில் உள்ள ஒரு படகு இல்லத்தில், ATM வசதியைத் திறந்த வங்கி எது?**

**அ) பாரத ஸ்டேட் வங்கி ☑**

ஆ) HDFC வங்கி

இ) ஐசிஐசிஐ வங்கி

ஈ) இந்தியன் வங்கி




✓ பாரத ஸ்டேட் வங்கியானது (SBI) உள்ளூர்வாசிகள் மற்றும் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக ஸ்ரீநகரின் தால் ஏரியில் ஒரு படகு இல்லத்தில் ATM'ஐ திறந்துள்ளது. இம்மிதக்கும் ATM'ஐ SBI தலைவர் தினேஷ் கரே திறந்துவைத்தார். SBI, 2004'இல் கேரளாவில் தனது முதல் மிதக்கும் ATM'ஐ அறிமுகப்படுத்தியது. SBI'இன் இந்த மிதக்கும் ATM கேரள கப்பல் மற்றும் உள்நாட்டு நீர்வழி கழகத்திற்கு சொந்தமான ஜாங்கர் படகில் நிறுவப்பட்டது.

---

**7.** **"பிரைட் ஸ்டார்" என்றவொரு பன்னாட்டு இராணுவப் பயிற்சியை நடத்துகிற நாடு எது?**

அ) இந்தியா

ஆ) ஜப்பான்

இ) அமெரிக்கா

**ஈ) எகிப்து ☑**



✓ "பிரைட் ஸ்டார்" என்பது எகிப்தில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் ஒரு பன்னாட்டு இராணுவப் பயிற்சியாகும். இந்த ஆண்டு பயிற்சி, அமெரிக்கா உட்பட 21 நாடுகள் பங்கேற்கின்றன. எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகு, இதுபோன்ற பயிற்சி 1980'இலிருந்து நடத்தப்பட்டு வருகின்றது. கடைசியாக 2018'இல் இது நடத்தப்பட்டது. அதில் 16 நாடுகள் பங்கேற்றன.

---

**8.** **'பத்திரகார் கல்யாண் கோஷ்' என்பது பின்வரும் எம்மாநிலத்தில் செயல்படுத்தப்படுகிற பத்திரிகையாளர்களுக்கான திட்டமாகும்?**

அ) உத்தர பிரதேசம்

ஆ) மகாராஷ்டிரா

இ) ஹரியானா

**ஈ) சத்தீஸ்கர் ☑**

✓ சத்தீஸ்கர் மாநில அரசு 'பத்திரகார் கல்யாண் கோஷ்' என்ற திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. இந்தத்திட்டத்தின் கீழ், COVID'ஆல் உயிரிழந்த பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்படும்.

✓ மேலும், இத்திட்டத்தின்கீழ், COVID தொற்றுநோய்க்கான சிகிச்சைக்காக பத்திரிகையாளர்களுக்கு ₹2 இலட்சம் வழங்கப்படுகிறது. மூத்த பத்திரி –கையாளர் சம்மன் நிதி திட்டத்தின்கீழ், மூத்த பத்திரிகையாளருக்கான மாதாந்திர ஓய்வூதியத்தை ₹5000'லிருந்து ₹10,000 ஆக உயர்த்த அரசு முடிவுசெய்துள்ளது.

---

**9.** 'சுகாதார அறிவியல் பல்கலைக்கழக மசோதா' நிறைவேற்றப்பட்டு உள்ள மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) கேரளா

**இ) ஒடிஸா ☑**

ஈ) கர்நாடகா



✓ ஒடிஸாவின் சட்டமன்றம் சமீபத்தில் சுகாதார அறிவியல் மசோதா–2021ஐ நிறைவேற்றியது. இந்த மசோதா, மாநிலத்தின் அனைத்து மருத்துவ மற்றும் துணை மருத்துவ நிறுவனங்களையும் ஒரே சுகாதார அறிவியல் பல்கலைக்கழகத்தின்கீழ் கொண்டுவர எண்ணுகிறது. தற்போது, அந்த மாநிலத்தின் பல்வேறு மருத்துவ & துணை மருத்துவ நிறுவனங்கள் பல்வேறு பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

✓ இந்த மசோதா, பல்வேறு தரப்பினரின் கடுமையான எதிர்ப்புகளுக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

---

**10.** உலக அஞ்சல்தலை கண்காட்சியான 'Philanippon 2021' எங்கு நடைபெற்றது?

அ) சீனா

ஆ) மலேசியா

இ) தைவான்

**ஈ) ஜப்பான் ☑**




✓ 'Philanippon–2021' என்ற உலக அஞ்சல்தலை கண்காட்சியானது, சமீபத்–தில் ஜப்பானின் டோக்கியோ நகரத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வு, ஜப்பானில் அஞ்சல் சேவை தொடங்கப்பட்டதைக் குறிக்கும் வகையில் கடந்த 1971 முதல் ஒவ்வொரு பத்து ஆண்டுக்கும் ஒருமுறை ஜப்பானில் நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு, ஜப்பான் தனது அஞ்சல் சேவையின் 150ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஜனவரி 2022 முதல் அகவிலைப்படி உயர்வு அமல்: முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு**

தமிழக அரசு ஊழியர்களுக்கு ஜனவரி 2022 முதல் அகவிலைப்படி உயர்வு அமல்படுத்தப்படும் என்று சட்டப்பேரவையில் முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார். மத்திய அரசு தனது ஊழியர்களுக்கு அகவிலைப்படியை 17 சதவீதத்தில் இருந்து 28 சதவீதமாக உயர்த்தி கடந்த ஜூலை மாதம் முதல் வழங்கியுள்ளது. இதே அகவிலைப்படி உயர்வை அதே தேதியில் இருந்து தமிழக அரசும் வழங்கும் என ஊழியர்கள், ஆசிரியர்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்தனர். ஆனால், 2022ஆம் ஆண்டு ஏப்ரல் முதல்தான் அகவிலைப்படி உயர்வு அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கரோனாவைக் காரணம் காட்டி ஏற்கெனவே 27 மாதங்களாக அகவிலைப்படி உயர்வு நிறுத்திவைக்கப்பட்டதால் அரசு ஊழியர்கள் கடும் பாதிப்பைச் சந்தித்து வருகின்றனர். அகவிலைப்படியை உடனே வழங்க வேண்டும் என்று அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்தனர். அகவிலைப்படி உயர்வு வழங்குவதைத் தள்ளிவைக்கக் கூடாது என்றும், இதை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தினர்.

இந்நிலையில் ஜனவரி 2022 முதல் அகவிலைப்படி உயர்வு அமல்படுத்தப்படும் என்று சட்டப்பேரவையில் முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார். பட்ஜெட்டில் அடுத்த ஆண்டு ஏப்ரல் முதல் அகவிலைப் படி உயர்வு அமலாகும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில், ஜனவரி முதல் அமலாகும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதனால் 16 லட்சம் அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் பயன் பெறுவார்கள் என்றும், அகவிலைப்படி மூன்று மாதம் முன்கூட்டியே வழங்கப்படுவதால், அரசுக்கு 1,620 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும் என்றும் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். மத்திய அரசைப் போலவே தமிழக அரசும் அகவிலைப்படியை 28 சதவீதமாக உயர்த்தி வழங்கும் எனத் தெரிகிறது.

---

**2. பத்திரிகையாளர்களுக்கு நலவாரியம்–விருது: அமைச்சர் மு பெ சாமிநாதன் அறிவிப்பு**

பத்திரிகையாளர்களுக்கு நலவாரியம் மற்றும் முன்னாள் முதல்வர் கருணாநிதி பெயரில் விருதளிக்கப்படும் என்று செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் மு பெ சாமிநாதன் அறிவித்தார்.

**செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கைமீது நடந்த விவாதங்களுக்கு பதிலளித்து அவர் வெளியிட்ட அறிவிப்புகள்:**

உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்த பத்திரிகையாளர்கள் நலவாரியம் அமைக்கப்படும். இயற்கை எய்தும் பத்திரிகையாளர்களுக்கு முதல்வரின் பொதுநிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் குடும்ப உதவி நிதி ₹3 இலட்சத்திலிருந்து ₹5 இலட்சமாக உயர்த்தப்படும்.

பத்திரிகையாளர்களின் பணிகளைமேம்படுத்த பயிற்சிகள் அளிக்கப்படும். இளம்பத்திரிகையாளர்கள் இதழியல் துறையில் உயர்கல்வி படிக்கவும், பயிற்சிபெறவும் நிதியுதவி அளிக்கப்படும். சிறந்த இதழியலாளருக்கு 'கலைஞர் எழுதுகோல் விருது' அளிக்கப்படும். இந்த விருது ₹5 இலட்சம் பரிசுத்தொகையுடன், பாராட்டுச்சான்றிதழ் அடங்கியது என அமைச்சர் மு பெ சாமிநாதன் அறிவித்தார்.

---

**3. 2023'இல் இந்தியா தலைமையில் G20 மாநாடு**

வரும் 2023ஆம் ஆண்டில் G20 நாடுகள் மாநாடு இந்தியா தலைமையில் நடைபெறவுள்ளது. அதற்கான இந்தியாவின் ஒருங்கிணைப்பு அதிகாரியாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் நியமிக்கப்பட்டுள்ளார். அடுத்த G20 மாநாடு இத்தாலி தலைமை–யில் வருகிற அக்.30–31ஆம் தேதி வரை நடைபெறவுள்ள நிலையில், 2023ஆம் ஆண்டு மாநாட்டுக்கு இந்தியா முதன்முறையாக தலைமை வகிக்கவுள்ளது. G20 கூட்டமைப்புக்கு வரும் 2024ஆம் ஆண்டு நவ.30 வரை இந்தியா தலைமை வகிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இதற்கான அறிவிப்பை மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டது. அதில் கூறியிருப்பதாவது:** G20 நாடுகள் கூட்டமைப்புக்கு வரும் 2022 டிச.1ஆம் தேதி முதல் இந்தியா தலைமை வகிக்கவுள்ளது. அதன்மூலம், 2023ஆம் ஆண்டில் முதன்முறையாக இந்தியா தலைமையில் அந்த கூட்டமைப்பின் மாநாடு நடைபெறவுள்ளது. அந்த மாநாட்டுக்கான இந்தியாவின் ஒருங்கிணைப்பு அதிகாரியாக மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை G20 ஒருங்கிணைப்பு அதிகாரியாக மத்திய அமைச்சர் சுரேஷ் பிரபு இருந்துவந்தார்.

G20 நாடுகள் கூட்டமைப்பில் 1999ஆம் ஆண்டு இந்தியா உறுப்பினர் ஆனது. இந்த கூட்டமைப்பில் கடந்த 2014ஆம் ஆண்டு முதல் பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து நேரடியாகப் பங்கேற்று வருகிறார். இந்தியா, அமெரிக்கா, சீனா, ரஷியா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, ஜெர்மனி, கனடா, பிரேஸில், தென்னாப்பிரிக்கா, தென்கொரியா, ஆர்ஜென்டீனா, மெக்சிகோ, பிரான்ஸ், இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், துருக்கி, சௌதி அரேபியா, ஐரோப்பிய யூனியன் ஆகியவை G20 கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ளன.

---

**4. பிரிட்டிஷ் அகாதெமி பரிசு: இறுதிப்பட்டியலில் இந்திய வம்சாவளி எழுத்தாளர்**

2021ஆம் ஆண்டுக்கான பிரிட்டிஷ் அகாதெமி புத்தகப்பரிசுக்கான இறுதிப் பட்டியலில் இந்திய வம்சாவளி எழுத்தாளர் மகமூத் மம்தானியின் பெயர் இடம்பெற்றுள்ளது. இதுகுறித்து PTI செய்திநிறுவனம் தெரிவித்துள்ளதாவ–து: சர்வதேச கலாசாரப் புரிதலுக்கான பிரிட்டிஷ் அகாதெமி புத்தகப் பரிசுக்குத் தகுதியுடையவர்களின் இறுதிப்பட்டியல் வெளியிடப்பட்டது.

உலகம் முழுவதிலிருந்தும் தேர்வு செய்து இறுதி செய்யப்பட்ட அந்தப் பட்டியலில் 4 எழுத்தாளர்கள் இடம்பெற்றுள்ளனர். அவர்களில், இந்திய வம்சாவளி எழுத்தாளர் மகமூத் மம்தானியும் ஒருவர். 75 வயதான அவர், இந்தியாவைப் பூர்விகமாகக் கொண்டவர். மும்பையில் பிறந்தவர்.

இவரது 'நெய்தர் செட்லர் நார் நேட்டிவ்: தி மேக்கிங் அண்ட் அன்மேக்கிங் ஆப் பர்மனன்ட் மைனாரிட்டிஸ்' என்ற புத்தகம் பிரிட்டிஷ் அகாதெமி பரிசுக்கான இறுதிப்பட்டியலில் இடம்பெற்றுள்ளது. இறுதியில் மகமூத் மம்தானி தேர்ந்தெடுக்கப்பட்டால், அவருக்கு 25,000 பிரிட்டிஷ் பவுண்ட் (சுமார் ₹25 இலட்சம்) ரொக்கப்பரிசு வழங்கப்படும் என்று PTI செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

---

**1.** "Atlas of Mortality and Economic Losses from Weather, Climate and Water Extremes" **என்றவொன்றை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) FAO ☑

ஆ) WMO

இ) WTO

ஈ) IMF

- ✓ உலக வானிலை அமைப்பானது (WMO) 'Atlas of Mortality and Economic Losses from Weather, Climate and Water Extremes'ஐ (1970–2019) வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, கடந்த ½ நூற்றாண்டில் தீவிர வானிலை, காலநிலை அல்லது நீரழுத்தத்தால் ஏற்படும் ஒவ்வொரு மூன்றாவது இறப்பும் (35 சதவீதம்) ஆப்பிரிக்காவில் நிகழ்ந்துள்ளது.
- ✓ உலக மக்கள்தொகையில் 17 சதவீதம் மட்டுமே ஆப்பிரிக்க கண்டத்தில் உள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் வானிலை, தட்பவெப்ப நிலை மற்றும் நீர்நிலைகளால் ஆப்பிரிக்காவில் நடந்த மொத்த இறப்புகளில் 89 சதவீத இறப்பிற்கு நான்கு வறட்சிகள் (1973 மற்றும் 1983 எத்தியோப்பியா, 1981 மொசாம்பிக் & 1983 சூடான்) காரணமாக இருந்தன. கிட்டத்தட்ட 99% இறப்புகள் ஆப்பிரிக்காவின் குறைந்த முதல் கீழ்–நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளில் நிகழ்ந்துள்ளன.

---

**2.** **2021 செப்டம்பரில் பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவுத்துறையால் நடத்தப்படும் நிகழ்வின் பெயர் என்ன?**

**அ) ஷிக்ஷக் பர்வ் ☑**




ஆ) ஷிக்ஷக் கால்

இ) ஷிக்ஷக் செப்டம்பர்

ஈ) வித்யா பர்வ்

- ✓ பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவுத்துறையானது சிக்ஷக் பர்வ்–2021'ஐ செப்.5 முதல் 20 வரை கொண்டாட முடிவுசெய்துள்ளது. குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் செப்டம்பர்.5 அன்று மெய்நிகர் முறையில் 44 விருதுகளை வழங்குகிறார்.
- ✓ தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் சிறப்பையும் அர்ப்பணிப்பையும் அங்கீகரிப்பதற்காக ஆசிரியர்களுக்கான தேசிய விருதுகள் 1958ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றன.

---

**3.** **ஆண்டுதோறும் நடைபெறும் கிழக்குப் பொருளாதார மன்றத்தின் (EEF) கூட்டம் நடைபெறும் நாடு எது?**

அ) சுவிச்சர்லாந்து

**ஆ) ரஷ்யா ☑**

இ) ஜப்பான்

ஈ) சிங்கப்பூர்

- ✓ கிழக்குப் பொருளாதார மன்றம் என்பது ரஷ்யாவின் விளாடிவோஸ்டாக் நகரில் நடைபெறும் வருடாந்திர சந்திப்பாகும். இது ரஷ்யாவின் வளம் நிறைந்த ஆனால் வளர்ச்சியடையாத தூரக்கிழக்குப்பகுதிகளில் அந்நிய முதலீடுகளை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 2019ஆம் ஆண்டில், பிரதமர் மோடி, தூரக்கிழக்கிற்கு 1 பில்லியன் டாலர் கடனை அறிவித்தார். முன்மொழியப்பட்ட சென்னை–விளாடிவோஸ்டாக் கடல் வழிப்பாதை இருதரப்பு உறவுகளை ஒன்றாக ஊக்குவிக்கும்.
- ✓ மசகான் டாக்ஸ் லிமிடெட், ஸ்வெஸ்டாவில் உள்ள ரஷ்ய கப்பல்கட்டும் வசதியுடன் கூட்டுசேர்ந்து முக்கிய வணிகக் கப்பல்களை உருவாக்கும். ககன்யான் திட்டத்தின் மூலம் இந்தியாவும் ரஷ்யாவும் விண்வெளி ஆராய்ச்சியில் பங்குதாரர்களாக உள்ளன.

---

**4.** **நெகிழி ஒப்பந்தத்தை வெளியிட்டுள்ள முதல் ஆசிய நாடு எது?**

அ) தாய்லாந்து

ஆ) நேபாளம்

**இ) இந்தியா ☑**

ஈ) இலங்கை

- ✓ இயற்கைக்கான உலகளாவிய நிதியம் (WWF இந்தியா) மற்றும் இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு ஆகியவை இணைந்து நெகிழிக்கான ஒரு சுழற்சி அமைப்பை ஊக்குவிக்க ஒரு தளத்தை உருவாக்கியுள்ளன. புதிய தளம், 'இந்தியா நெகிழி ஒப்பந்தம்' என்று அழைக்கப்படுகிறது.
- ✓ இந்தியா, ஆண்டுக்கு 9.46 மில்லியன் டன் நெகிழிக்கழிவுகளை உருவாக்குகிறது; அதில் 40% சேகரிக்கப்படாமல் உள்ளது. நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து நெகிழியிலும் சரிபாதி பேக்கேஜிங்கில் பயன்படுத்தப்படுகிறது. பெரும்பாலானவை ஒற்றைப்பயன்பாட்டு நெகிழி ஆகும். நெகிழி பேக்கேஜிங்கைக் குறைத்தல், புதுமைப்படுத்துதல் மற்றும் மறு–ஆக்கம் செய்வதற்கான இலக்குகளை இது கொண்டுள்ளது.

---

**5.** **பனிச்சிறுத்தை மற்றும் கருப்பு கழுத்து கொக்கு ஆகியவற்றை மாநில விலங்கு மற்றும் பறவையாக ஏற்றுக்கொண்ட மாநிலம் எது?**

அ) தில்லி



ஆ) ஹரியானா

இ) பஞ்சாப்

**ஈ) லடாக் ☑**

- ✓ லடாக் யூனியன் பிரதேச விலங்காக பனிச் சிறுத்தை, பறவையாக கருப்புக் கழுத்து கொக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு இனங்களும் அழிவின் விளிம்பில் உள்ள இனங்களாகும். கருப்பு கழுத்து கொக்குகள் லடாக்கை பூர்வீகமாகக் கொண்டவை. அதே நேரத்தில், பனிச்சிறுத்தைகள் இந்த பகுதியில் அதிகம் காணப்படுகின்றன.
- ✓ IUCN'இன்படி, கருப்பு கழுத்து கொக்கு, "கிட்டத்தட்ட அருகிவிட்ட இனம்" ஆகும். பனிச்சிறுத்தை "அழிவாய்ப்பு நிலையிலுள்ள இனம்" ஆக உள்ளது. 2019 ஆகஸ்ட் வரை ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தின் மாநிலப் பறவையாக கருப்பு கழுத்து கொக்கு இருந்தது.

---

**6.** **புதிய 'காலநிலை நிதி தலைமைத்துவ முன்னெடுப்பு – இந்தியா' கூட்டாண்மையானது எந்த நாட்டுடன் கையெழுத்திடப்பட்டது?**

அ) அமெரிக்கா

ஆ) பிரான்ஸ்

**இ) இங்கிலாந்து ☑**

ஈ) ஆஸ்திரேலியா

- ✓ 11ஆவது இந்தியா–இங்கிலாந்து பொருளாதார & நிதி பேச்சுவார்த்தையில், இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் இங்கிலாந்து அதிபர் ரிஷி சுனக் ஆகியோர் சந்தித்துக் கொண்டனர். பசுமைத் திட்டங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆகியவற்றில் பொது மற்றும் தனியார் முதலீடுகளின் $1.2 பில்லியன் டாலர் தொகுப்பில் அவர்கள் இருவரும் கையெழுத்திட்டனர்.

---

**7.** **இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் மற்றும் எறிகணை கண்காணிப்பு கப்பலின் பெயர் என்ன?**

அ) அஜித்



**ஆ) துருவ் ☑**

இ) நரேன்

ஈ) ருத்ரா

- ✓ இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் & எறிகணை கண்காணிப்பு கப்பலான 'துருவ்' விசாகப்பட்டினத்திலிருந்து இந்திய கடற்படையில் இணைக்கப்படவுள்ளது. இந்தக் கப்பல் ஹிந்துஸ்தான் கப்பல்கட்டும் நிறுவனத்தால் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு மற்றும் தேசிய தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து உருவாக்கப்பட்டது.
- ✓ எதிரிநாட்டு நீர்மூழ்கிக்கப்பல்களை கண்டறிதலுக்காக 'INS துருவ்' கடல் படுக்கைகளை வரைபடமாக்க முடியும்.

---

**8.** SAGAR **திட்டத்தின்கீழ், இந்திய கடற்படையின் கடல்ரோந்துக் கப்பலான INS சாவித்திரி, எந்த நாட்டில் உள்ள சாட்டோகிராம் துறைமுகத்திற்கு சென்றது?**



அ) இலங்கை **ஆ) வங்காளதேசம் ☑**

இ) நேபாளம் ஈ) தாய்லாந்து

- ✓ இந்திய கடற்படையின் கடல் ரோந்து கப்பலான ஐஎன்எஸ் சாவித்ரி வங்காளதேசத்தின் சாட்டோகிராம் துறைமுகத்திற்கு சென்றடைந்தது.

COVID–19 தொற்றை கையாளுவதில் வங்கதேசத்தின் தொடர்ச்சியான முயற்சிகளுக்கு ஆதரவாக இரண்டு 960 LPM மருத்துவ ஆக்ஸிஜனை அது எடுத்துச்சென்றது. இவை இந்தியாவில் DRDOஆல் உருவாக்கப்பட்–டு தயாரிக்கப்பட்டது. இந்தக் கப்பல் சட்டோகிராம் துறைமுகத்திலிருந்து புறப்படும் போது BN கப்பலுடன் கடல்சார் கூட்டுப்பயிற்சியில் பங்கேற்க திட்டமிட்டுள்ளது.

---

**9. பாராலிம்பிக்ஸ் பதக்கம் வென்ற இந்தியாவின் முதல் இஆப அதிகாரி யார்?**



**அ) சுஹாஸ் யாதிராஜ் ☑**

ஆ) தேவேந்திர ஜஜாரியா

இ) யோகேஷ் கதுனியா

ஈ) பாவினா படேல்

✓ நொய்டா மாவட்ட நீதிபதி சுஹாஸ் L யாதிராஜ், பாராலிம்பிக்கில் பதக்கம் வென்ற முதல் இஆப அதிகாரியாக என்ற வரலாறுச் சாதனையை படைத்தார். அவர் இந்தோனேசியாவின் ஃப்ரெடி செட்டியவானை SL 4–குரூப் ஏ'இல் தோற்கடித்தார். அவர் முன்பு 2017 மற்றும் 2019'இல் BWF துருக்கிய சாம்பியன்ஷிப்பில் பல பதக்கங்களை வென்றுள்ளார். அவர் 2020'இல் பிரேசிலில் தங்கப்பதக்கத்தையும் வென்றார்.

---

**10. எந்த நிறுவனத்துடன் இணைந்து, இஸ்ரோ, விண்வெளியில் நுண்ணுயிரிகளை வளர்க்க ஒரு சாதனத்தை உருவாக்கியுள்ளது?**



அ) ஐஐடி–மெட்ராஸ்

ஆ) ஐஐடி–பம்பாய்

**இ) ஐஐஎஸ்சி ☑**

ஈ) டிஆர்டிஓ

✓ இந்திய அறிவியல் நிறுவனம் (IISc) மற்றும் இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO) ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்கள் குழு இணைந்து விண்வெளியில் நுண்ணுயிரிகளை வளர்ப்பதற்கான ஒரு சாதனத்தை உருவாக்கியுள்ளன. இந்தச் சாதனம் நுண்ணுயிர் மற்றும் பாக்டீரியா வளர்ச்சியைக்கண்காணிக்க எல்இடி மற்றும் போட்டோடியோட் உணரி கலவையைப் பயன்படுத்துகிறது.

✓ இந்தச் சாதனம் விண்வெளி வீரர்களால் இந்தியாவின் முதல் குழு விண்கலமான 'ககன்யான்' பயணத்தின் போது விண்வெளியில் உயிரியல் பரிசோதனைகளை மேற்கொள்ள பயன்படும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

### 1. கவிஞர் புலமைப்பித்தன் காலமானார்

கவிஞரும், பாடலாசிரியருமான புலமைப்பித்தன் உடல்நலக் குறைவு காரணமாக தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் 08–09–2021 காலமானார். அவருக்கு வயது 85.

பிரபல திரைப்படப் பாடலாசிரியராக அறியப்பட்ட புலமைப்பித்தன் (85), தமிழக சட்ட மேலவையின் முன்னாள் துணைத் தலைவராகவும் இருந்தவர்.

---

### 2. ஜவுளி உற்பத்தியை ஊக்குவிக்க ரூ.10,683 கோடி திட்டம்: மத்திய அமைச்சரவை ஒப்புதல்

ஜவுளித் துறையில் ரூ.10,683 கோடி மதிப்பிலான உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை திட்டத்துக்கு (பிஎல்ஐ) பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இந்தத் திட்டத்தால் தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு பெரும் பயன் கிடைக்கும். தில்லியில் மத்திய அமைச்சரவைக் கூட்டம், பிரதமர் மோடி தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு முடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. கூட்டத்துக்குப் பிறகு, மத்திய ஜவுளித் துறை அமைச்சர் பியூஷ் கோயல் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

'தற்சார்பு இந்தியா' என்ற தொலைநோக்குப் பார்வையை முன்னெடுத்துச் செல்லும் முயற்சியாக, உள்நாட்டு உற்பத்தியையும், ஏற்றுமதியையும் அதிகரிக்கும் நோக்கில் 13 முக்கியத் துறைகளில் உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை திட்டத்துக்கு (பிஎல்ஐ) மத்திய பட்ஜெட்டில் ரூ.1.97 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன் ஒரு பகுதியாக, செயற்கை இழை மற்றும் தொழில்நுட்பத்துக்கான பிரத்யேக இழை சார்ந்த ஜவுளித் துறையில் உள்நாட்டு உற்பத்தி, ஏற்றுமதியை அதிகரிக்க அடுத்த 5 ஆண்டுகளுக்கு ரூ.10,683 கோடி திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

13 துறைகளுக்கு பிஎல்ஐ திட்டம் அறிவிக்கப்பட்டிருப்பதன் வாயிலாக இந்தியாவின் குறைந்தபட்ச உற்பத்தி அடுத்த 5 ஆண்டுகளில் சுமார் ரூ. 37.5 லட்சம் கோடியாகவும், இதே காலகட்டத்தில் குறைந்தபட்ச வேலைவாய்ப்பு சுமார் ஒரு கோடியாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெவ்வேறு ஊக்குவிப்புக் கட்டமைப்புடன் இரண்டுவிதமான முதலீடுகளுக்கு வாய்ப்புள்ளது. குறைந்தபட்சம் ரூ. 300 கோடி முதலீடு செய்ய விரும்பும் எந்த நபரும் திட்டத்தில் பங்கேற்க விண்ணப்பிக்கலாம். இரண்டாவதாக, குறைந்தபட்சம் ரூ. 100 கோடி முதலீடு செய்ய விருப்பமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். மேலும், விருப்பம் உள்ள மாவட்டங்கள், 3 மற்றும் 4–ஆம் நிலை நகரங்கள் மற்றும் ஊரகப் பகுதிகளில் முதலீடு செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். இதன்மூலம் பின்தங்கிய பகுதிகளுக்கும் தொழில் துறை சென்றடையும். இந்தத் திட்டத்தால் தமிழ்நாடு, குஜராத், உத்தர பிரதேசம், மகாராஷ்டிரம், பஞ்சாப், ஆந்திரம், தெலங்கானா, ஒடிஸா உள்ளிட்ட மாநிலங்களில் மாபெரும் மாற்றம் ஏற்படும் என்றார் அவர்.

---

### 3. அரசுத் துறைகளை எண்மமயமாக்க புதிய திட்டம்

அரசுத் துறைகளின் செயல்பாடுகளை படிப்படியாக எண்மமயமாக்க, 'எண்ம (டிஜிட்டல்) தமிழ்நாடு' என்ற திட்டம் செயல்படுத்தப்படும் என்று தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் அறிவித்தார். சட்டப் பேரவையில் தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கைகளுக்கு பதிலளித்து அவர் புதன்கிழமை வெளியிட்ட அறிவிப்புகள்:–

வெளிப்படையான நிர்வாகத்தை குடிமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு மின்னாளுகையை படிப்படியாக அரசின் அனைத்து நிலைகளிலும் புகுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதை நோக்கமாகக் கொண்டு 'எண்ம தமிழ்நாடு' திட்டம் செயல்படுத்தப்படும். மக்களுடன் நேரடித் தொடர்பு கொண்ட மற்றும் அவர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தும் அரசுத் துறைகளின் செயல்பாடுகள் படிப்படியாக எண்மமயமாக்கப்படும். தரவுகளை ஏற்படுத்தி அவற்றை பகுப்பாய்வு செய்து அதன்மூலம் கொள்கைகளை வகுக்க ஏதுவாக, தமிழக அரசின் கொள்கை முடிவுகளுக்கான ஆதரவு அமைப்பு செயல்படுத்தப்படும். தரவுகளின் அடிப்படையில் அமைந்த ஆளுகையை முதலமைச்சரின் தகவல் பலகை வழியாக வழங்கவும், பல்வேறு தரவுத்தளப் பயனாளிகளின் தகவல்களை ஒருங்கிணைந்த வகையில் காண்பதற்கும் இந்த அமைப்பு உதவும்.

**எண்மமயமாக்கும் திட்டம்:** தமிழக அரசுத் துறைகளின் அலுவலகச் செயல்பாடுகளை எண்மமயமாக்கும் திட்டம் அரசால் செயல்படுத்தப்படும். இது விரைந்து முடிவெடுப்பதற்கான செயல்திறனை மேம்படுத்த உதவும். இது காகிதப் பயன்பாட்டைக் குறைக்கவும் உதவும். இந்தத் திட்டம் முதல்கட்டமாக தலைமைச் செயலகத்தில் இந்த ஆண்டுக்குள் செயல்படுத்தப்படும். இரண்டாவது கட்டமாக பிற அரசுத் துறை அலுவலகங்களில் அமல்படுத்தப்படும். இணையவழி வாணிபத்தின் வளர்ச்சி, வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்திடும் வகையில், தரவு மையங்கள் வேகமாக வளர்ந்து வருகின்றன. அடுத்த 4 ஆண்டுகளுக்குள் அதன் வளர்ச்சி விகிதம் 4 சதவீதத்துக்கும் மேல் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு தரவு மையக் கொள்கை வெளியிடப்படும். தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஆற்றல்மிக்க உலகளாவிய திறன் மையங்களை ஈர்க்கும் முக்கிய மாநிலமாகத் தமிழகம் விளங்குகிறது.

இதன் மூலம் மாநிலத்தை உலகளாவிய திறன் மையங்களுக்கான முக்கிய முனையமாக மாற்றிடும் வகையில் திறன் மையக் கொள்கை வெளியிடப்படும்.

**மெய்நிகர் அருங்காட்சியகம்:** மெய்நிகர் அருங்காட்சியகம், தமிழ் இணையக் கல்விக் கழகத்தில் அமைக்கப்படும். இதன்மூலம் தமிழகத்தின் பாரம்பரியம், வரலாற்றுச் சின்னங்கள், கலைப் பொருள் குறித்த ஆவணங்களை மெய்நிகர் மூலமாக அறிந்திட முடியும். இந்த அருங்காட்சியகம் மூன்று ஆண்டுகளுக்குள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ் இணையக் கல்விக் கழகத்தில் உள்ள

புத்தகங்கள், ஓலைச் சுவடிகள் ஆகியவற்றைக் கொண்ட மின்நூலகத்தை பார்வைக் குறைபாடு கொண்டவர்களும் எளிதாக வாசிக்க, உள்ளடக்கத் தமிழ் மின்நூலகமாக மாற்றப்படும். அரிய ஒலி–ஒளி ஆவணங்கள், ஒளிப்படங்கள், புகைப்படங்கள் ஆகியன மின்னுருவாக்கம் செய்யப்படும். தகவல் தொழில்நுட்பம் சார்ந்த உலகளாவிய நிறுவனங்களுடன் இணைந்து யூமாஜின் எனும் வருடாந்திர தொழில்நுட்பத் தலைமை உச்சி மாநாடு தமிழகத்தின் பல்வேறு சுற்றுலா நகரங்களில் நடத்தப்பட உள்ளது. முதலாவது மாநாடு சென்னையில் நடத்தப்படும் என்று அமைச்சர் மனோ தங்கராஜ் அறிவித்தார்.

**3–வது நிலை நகரங்களில் ஐ.டி. பூங்கா**

தமிழகத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்படும் என்று அமைச்சர் மனோ தங்கராஜ் தெரிவித்தார். இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிவிப்பு: வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வளர்ச்சியை ஊக்குவிக்கவும் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் படிப்படியாக அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளார்

---

**4. இந்திய விமானப் படைக்கு புதிதாக 56 போக்குவரத்து விமானங்கள்: மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

இந்திய விமானப் படைக்கு புதிதாக 56 போக்குவரத்து விமானங்களைக் கொள்முதல் செய்வதற்கு பாதுகாப்பு விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. தற்போது பயன்பாட்டில் இருக்கும் அவ்ரோ விமானங்களுக்கு மாற்றாக, சி–295 ரக விமானங்கள் கொள்முதல் செய்யப்படவுள்ளன. பிரதமர் மோடி தலைமையில் புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்ட முடிவுகள் குறித்து பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

ஸ்பெயினில் உள்ள ஏர்பஸ் டிபன்ஸ் அண்ட் ஸ்பேஸ் நிறுவனத்திடம் இருந்து 16 விமானங்கள் கொள்முதல் செய்யப்படும். இந்த விமானங்கள் 48 மாதங்களில் இந்தியாவிடம் ஒப்படைக்கப்படும். 40 விமானங்கள், டாடா நிறுவனம் தலைமையிலான கூட்டமைப்பு சார்பில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட உள்ளன. இந்த விமானங்கள், 10 ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்படும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ரஷியா–இந்தியா இடையே ஒப்பந்தம்:**

புவி அறிவியல் துறையில் இந்தியா, ரஷியா இடையே ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, இந்திய புவியியல் ஆய்வு நிறுவனமும், ரஷியாவின் ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனி ராஸ்ஜியாலோஜியா நிறுவனமும் இணைந்து கனிம வள ஆராய்ச்சி, வான் புவி இயற்பியல் தரவுகளின் ஆய்வு, பிளாட்டினம் குழும கூறுகள் (பிஜிஇ) மற்றும் அரிய பூமிக் கூறுகளின் (ஆர்இஇ) ஆராய்ச்சி ஆகியவற்றில் ஒத்துழைப்புடன் செயல்படும்.

**இந்தியா–அஜர்பைஜான் இடையே ஒப்பந்தம்:**

இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனத்துக்கும், அஜர்பைஜான் குடியரசின் தணிக்கையாளர் மன்றத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. தொழில்முறை கணக்கியல் பயிற்சி, தொழில் நெறிமுறைகள், கணக்கியல் சார்ந்த அறிவை மேம்படுத்துதல், தொழில்நுட்ப ஆராய்ச்சி, தொழில்முறை மற்றும் அறிவுசார் வளர்ச்சி ஆகிய துறைகளில் பரஸ்பரம் ஒத்துழைப்பு ஏற்பட இந்த ஒப்பந்தம் உதவிகரமாக இருக்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**இந்தியா–போர்ச்சுகல் இடையே ஒப்பந்தம்:**

போர்ச்சுகல் குடியரசில் இந்திய குடிமக்களைப் பணியில் அமர்த்துவதற்காக, இந்தியா– போர்ச்சுக்கல் அரசுகளுக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

---

**1.அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற கர்பி அமைதி ஒப்பந்தத்துடன் தொடர்புடைய மாநிலம் எது?**

அ) ஹரியானா

**ஆ) அஸ்ஸாம் ☑**

இ) மேகாலயா

ஈ) மிசோரம்



✓ நடுவணரசு, அஸ்ஸாம் மாநில அரசு மற்றும் கர்பி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு இடையேயான "கர்பி அமைதி ஒப்பந்தத்தில்" இந்திய அரசு கையெழுத்திடவுள்ளது. வடகிழக்கு இந்தியாவில், குறிப்பாக அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள முக்கிய இனங்களில் கர்பிகள் ஒன்றாகும்.

✓ அஸ்ஸாம் மாநிலத்தில் கடந்த 1980'களிலிருந்து கர்பிகள் வன்முறை நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் வரலாறு உள்ளது. சமீபத்தில், இக்குழுவின் 5 கிளர்ச்சிக் குழுக்களைச் சேர்ந்த 1040 பயங்கரவாதிகள் கௌத்தியில் நடந்த ஒரு நிகழ்வில் ஆயுதங்களுடன் சரணடைந்தனர்.

---

**2. 'வதன் பிரேம் யோஜனா'வை தொடங்கியுள்ள மாநிலம் எது?**

அ) உத்தர பிரதேசம்

**ஆ) குஜராத் ☑**

இ) ஹரியானா

ஈ) பஞ்சாப்



✓ குஜராத் மாநில அரசு 'வதன் பிரேம் யோஜனா' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்கீழ் தங்கள் சொந்த கிராமத்தின் வளர்ச்சி –க்கு நன்கொடை அளிக்க விழையும் NRI குஜராத்திகளுக்கு மாநில அரசு நிதியுதவி அளிக்கும். இந்தத்திட்டத்தின்கீழ், கிராமப்புறங்களில் பள்ளிகள், வடிகால், விளையாட்டு வளாகம்போன்ற சமூக உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான நன்கொடைகளை அரசாங்கம் ஊக்குவிக்கிறது.

---

**3. ஐரோப்பிய ஒன்றிய கவுன்சிலின் தலைமையை வகிக்கின்ற நாடு எது?**

அ) பெல்ஜியம்

**ஆ) ஸ்லோவேனியா ☑**

இ) செக் குடியரசு

ஈ) டென்மார்க்



✓ ஸ்லோவேனியா தற்போது ஐரோப்பிய ஒன்றிய கவுன்சிலின் தலைமை பொறுப்பை வகித்துவருகிறது. வெளியுறவு அமைச்சர் எஸ் ஜெய்சங்கர், ஸ்லோவேனிய அதிபர் போரட் பாஹோரை சந்தித்து இந்தியா மற்றும் ஐரோப்பிய யூனியன் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து விவாதித்தார்.

✓ ஸ்லோவேனியா, குரோஷியா மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகளுக்குச் சென்று இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தி, ஐரோப்பிய ஒன்றியத்துடன் இந்தியாவின் ஒத்துழைப்பை அவர் வலுப்படுத்த உள்ளார். ஸ்லோவேனியாவில் நடக்கும் 'Bled Strategic' கூட்டத்திலும் ஜெய்சங்கர் கலந்துகொள்வார்.

---

**4. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, "eNaira" என்ற டிஜிட்டல் நாணயத்துடன் தொடர்புடைய நாடு எது?**

**அ) நைஜீரியா ☑**

ஆ) சூடான்

இ) நமீபியா

ஈ) எகிப்து



✓ நைஜீரியாவின் மத்திய வங்கி "eNaira" என்ற பெயரில் தனது சொந்த டிஜிட்டல் நாணயத்தை அறிமுகப்படுத்தும் திட்டத்தை அறிவித்தது. மத்திய வங்கி அதன்சொந்த கிரிப்டோகரன்சியை வெளியிட 'பிட் இங்க்' ஐ தொழினுட்பப்பங்காளியாக கொண்டிருக்கும். eNaira ஒரு பணப்பையாக செயல்படும்; அதில் வாடிக்கையாளர்கள் தங்கள் வங்கிக்கணக்கில் உள்ள நிதியை வைத்திருக்க முடியும்.

---

**5. கஜகஸ்தானில் நடைபெறும் இந்தியா – கஜகஸ்தான் கூட்டு இராணுவப் பயிற்சியின் பெயர் என்ன?**

அ) இந்திரதனுஷ்–V

**ஆ) KAZIND–21 ☑**

இ) யுத் அபியாஸ்

ஈ) சம்பிரிதி IX



✓ KAZIND–21 என்பது இந்தியா–கஜகஸ்தான் கூட்டு இராணுவப்பயிற்சி ஆகும். இது கஜகஸ்தானில் நடக்கிறது. இந்த ஆண்டு நடைபெறுவது KAZIND'இன் 5ஆம் ஆண்டு இருதரப்பு கூட்டுப் பயிற்சியாகும். இந்தியா சார்பாக 90 படைவீரர்களும் கஜகஸ்தான் சார்பாக 120 துருப்புக்களும் பங்கேற்கின்றன. இப்பயிற்சி, 48 மணிநேர கூட்டு சரிபார்ப்பு பயிற்சியை உள்ளடக்கியது.

---

**6. செப்டம்பர்.17'ஐ சமூக நீதி நாளாகக் கொண்டாட முடிவுசெய்துள்ள மாநிலம் எது?**

**அ) தமிழ்நாடு ☑**

ஆ) மேற்கு வங்கம்

இ) கர்நாடகா

ஈ) கேரளா



✓ சீர்திருத்தவாதி ஈ வெ ராமசாமி பெரியாரின் பிறந்தநாளான செப்டம்பர்.17 அன்று சமூக நீதி நாளாகக் கொண்டாட தமிழக அரசு முடிவுசெய்துள்ளது. பெரியார் (1879 செப்.17 – 1973 டிச.24), முதல் அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டைப் பாதுகாத்தது) இயற்றுவதில் முக்கிய பங்கு வகித்தார்.

---

**7. அண்மையில், ஆன்லைன் சூதாட்டம் அல்லது பந்தயத்தை தடை செய்ய முடிவுசெய்துள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**

அ) மகாராஷ்டிரா

ஆ) கோவா

**இ) கர்நாடகா ☑**

ஈ) சிக்கிம்



✓ கர்நாடக மாநில அரசு ஆன்லைன் சூதாட்டம் அல்லது பந்தயத்தை தடை செய்ய முடிவுசெய்துள்ளது. மேலும் கர்நாடக காவலர் சட்டம், 1963'ஐ திருத்துவதும் இதிலடங்கும். சட்டம் மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் J C மதுஸ்வாமி குறிப்பிட்டுள்ளபடி குதிரைப் பந்தயங்களுக்கு இந்தத் தடை பொருந்தாது. கர்நாடக உயர்நீதிமன்றம் ஆன்லைன் பந்தயம் குறித்து ஒரு நிலைப்பாட்டை எடுக்குமாறு அம்மாநில அரசை பலமுறை கேட்டுக் கொண்டதை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டது.

---

**8. நிரந்தர வதிவிட சான்றிதழ் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே "குடியுரிமைச்சான்றிதழ்" வழங்க முடிவுசெய்துள்ள மாநில/யூனியன் பிரதேசம் எது?**

அ) ஜம்மு காஷ்மீர்

**ஆ) லடாக் ☑**

இ) சிக்கிம்

ஈ) தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி




✓ 2021 செப்டம்பர்.4 அன்று நிறைவேற்றப்பட்ட லடாக் குடியுரிமைச்சான்று ஆணை–2021'இன்படி, லடாக் நிர்வாகமானது ஜ & கா போலல்லாமல் அப்பகுதியில் நிரந்தர வதிவிட சான்றிதழ் வைத்திருப்போர்க்கு மட்டுமே "குடியிருப்புச்சான்று" வழங்க முடிவுசெய்துள்ளது. இப்புதிய குடியுரிமைச் சட்டங்கள் அயல்மாநிலத்தவர்களும் அங்கு வேலைக்கு விண்ணப்பிக்க அனுமதி வழங்குகிறது.

---

**9. யாருக்கு 7ஆவது யாமின் ஹசாரிகா வுமன் ஆப் சப்ஸ்டேன்ஸ் விருது வழங்கப்பட்டுள்ளது?**

அ) சுதா மூர்த்தி ஆ) அருந்ததி ராய்

இ) கிரண் தேசாய் **ஈ) நமீதா கோகலே ☑**



✓ எழுத்தாளர் நமிதா கோகலேவுக்கு 7ஆவது யாமின் ஹசாரிகா வுமன் ஆப் சப்ஸ்டேன்ஸ் விருது வழங்கப்பட்டுள்ளது. பெண் தொழில் வல்லுநர் –களின் கூட்டமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விருது, 2015ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 1977'இல் தில்லி மற்றும் யூனியன் பிரதேசங்களை நிர்வகித்த மத்திய காவல் சேவையான DANIPS'க்கு தேர்ந்தெடுக்கப்பட்ட வடகிழக்கு இந்தியாவின் முதல் பெண் யாமின் ஹசாரிகாவை இவ்விருது கௌரவித்துள்ளது.

**10.** பெஹ்லர் ஆமை பாதுகாப்பு விருது யாருக்கு வழங்கப்பட்டது?

அ) ஜோசப் L கோல்ட்ஸ்டீன்

**ஆ) ஷைலேந்திர சிங் ☑**

இ) ரிச்சர்ட் டாக்கின்ஸ்

ஈ) பிரியம்பதா மொஹந்தி ஹெஜ்மாடி



✓ அழிவின் விளிம்பில் உள்ள 3 ஆமை இனங்களை மீட்டதற்காக இந்திய உயிரியலாளர் ஷைலேந்திர சிங், 'பெஹ்லர் ஆமை பாதுகாப்பு' விருது வழங்கப்பட்டது. ஆமை உயிர்வாழ் கூட்டணி, IUCN/SSC ஆமை மற்றும் நன்னீர் ஆமை நிபுணர் குழு, ஆமை பாதுகாப்பு நிதியம்போன்ற ஆமை பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள பல உலகளாவிய அமைப்புகளால் இந்த விருது வழங்கப்படுகிறது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழகத்தின் புதிய ஆளுநராக ஆர் என் ரவி நியமனம்**

தமிழகத்தின் புதிய ஆளுநராக ஆர் என் இரவியை நியமனம் செய்து குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் உத்தரவிட்டுள்ளார். தமிழ்நாடு ஆளுநராக இருந்த பன்வாரிலால் புரோகித், பஞ்சாப் மாநிலத்தின் முழு நேர ஆளுநராக நியமனம் செய்யப்பட்டதை அடுத்து, நாகாலாந்து ஆளுநராகப் பொறுப்பு வகித்து வரும் ஆர் என் இரவி, தமிழக ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

உத்தரகண்ட் ஆளுநராக இருந்த பேபி இராணி மயூராவின் ராஜிநாமா கடிதத்தை குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் ஏற்றுக் கொண்டார். இதனையடுத்து உத்தரகண்ட் ஆளுநராக லெப்டினெண்ட் ஜெனரல் குர்மித் சிங் நியமிக்கப்பட்டுள்ளார். ஆர் என் ரவி வகித்துவந்த நாகாலாந் –து ஆளுநர் பொறுப்பினை அஸ்ஸாம் மாநில ஆளுநர் ஜெக்தீஷ் முகி கூடுதலாக கவனிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**2. தமிழ்ப்பண்பாட்டின் வேர்களைத் தேட இந்தியா – வெளிநாடுகளில் ஆய்வுகள்: முதல்வர் மு.க.ஸ்டாலின்**

தமிழ்ப் பண்பாட்டின் வேர்களைத் தேடுவதற்கான ஆய்வுகள் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். சட்டப்பேரவையில் விதி 110–ன் கீழ் அவர் வியாழக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு: தமிழ்ப் பண்பாட்டின் வேர்களைத் தேடி, இந்திய துணைக் கண்டத்திலும், கடல் கடந்து பயணம் செய்து தமிழர்கள் வெற்றித்தடம் பதித்த வெளிநாடுகளிலும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**தென் மாநிலங்கள்:** முதல் கட்டமாக, சங்ககாலத் துறைமுகமான முசிறி, இப்போது பட்டணம் என்ற பெயரில் கேரளத்தில் அமைந்துள்ளது. சேர நாட்டின் தொன்மையையும், பண்பாட்டையும் அறிந்து கொள்ளும் வகையில் கேரள மாநிலத் தொல்லியல் வல்லுநர்களுடன் இணைந்து அங்கு ஆய்வுப் பணி மேற்கொள்ளப்படும். ஆந்திர மாநிலம் வேங்கி, கர்நாடக மாநிலம் தலைக்காடு, ஒடிஸா மாநிலம் பாலூர் ஆகிய வரலாற்றுச் சிறப்புடைய இடங்களிலும் ஆய்வுகள் மேற்கொள்ள உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

ரோமப் பேரரசின் ஒருபகுதியாக விளங்கிய எகிப்து நாட்டிலுள்ள குசிர் அல் காதிம் மற்றும் பெர்னிகா, ஓமன் நாட்டின் கோர் ரோரி ஆகிய இடங்களில் பழந்தமிழகத்தோடு இருந்த வணிகத் தொடர்பை உறுதி செய்யும் வகையில் தமிழி எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கிடைத்துள்ளன. அந்தப் பகுதிகளில் அந்தந்த நாட்டின் தொல்லியல் வல்லுநர்களுடன் இணைந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். தென்கிழக்காசிய நாடுகளான இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, வியத்நாம் ஆகிய நாடுகளில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அந்தந்த நாட்டுத் தொல்லியல் வல்லுநர்கள் துணையுடன் உரிய அனுமதி பெற்று ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ் நிலப்பரப்பு: யாதும் ஊரே யாவரும் கேளிர் என உலகுக்கு அறிவித்த தமிழரின் பண்பாட்டு அடையாளங்களைத் தேடி இனி உலகெங்கும் பயணம் செய்வோம். இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு இனி தமிழ் நிலப் பரப்பில் இருந்துதான் தொடங்கி எழுதப்பட வேண்டும். இதனை சான்றுகளின் அடிப்படையில், அறிவியல் வழிநின்று நிறுவுவதே அரசின் தலையாய கடமை என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

**3. பயங்கரவாதத்துக்கு எதிராக செயல் திட்டம்**

உலகை அச்சுறுத்தி வரும் பயங்கரவாதத்துக்கு எதிரான செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்த பிரிக்ஸ் நாடுகள் உறுதியேற்றுள்ளதாக பிரதமா் நரேந்திர மோடி தெரிவித்தாா். பிரிக்ஸ் கூட்டமைப்பில் இந்தியா, பிரேஸில், ரஷியா, சீனா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன. அக்கூட்டமைப்பின் 13–ஆவது மாநாடு இந்தியா தலைமையில் காணொலி வாயிலாக வியாழக்கிழமை நடைபெற்றது. அந்த மாநாட்டுக்கு பிரதமா் மோடி தலைமை வகித்தாா்.

சீன அதிபா் ஷி ஜின்பிங், ரஷிய அதிபா் விளாதிமீா் புதின், பிரேஸில் அதிபா் ஜெயிா் போல்சனேரோ, தென்னாப்பிரிக்க அதிபா் சிரில் ராமபோசா ஆகியோா் மாநாட்டில் பங்கேற்றனா். ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் இடைக்கால அரசை அமைத்துள்ள சூழலில் நடைபெற்ற இந்த மாநாடு முக்கியத்துவம் பெற்றது.

**மாநாட்டின் கரு:** '15–ஆவது ஆண்டில் பிரிக்ஸ்: நீடித்த நிலையான ஒருமித்த ஒத்துழைப்பு' என்பதே இந்த மாநாட்டின் கருப்பொருளாக நிா்ணயிக்கப்பட்டுள்ளது.

**4. தேசிய நெடுஞ்சாலைகளில் போர் விமானங்களுக்கு அவசரகால இறங்குதளம்**

ராஜஸ்தான் மாநிலம், பார்மரில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில், இந்திய விமானப் படையின் விமானங்கள் தரையிறங்குவதற்கு அமைக்கப்பட்டுள்ள இறங்குதளம் வியாழக்கிழமை திறக்கப்பட்டது. பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரி பங்கேற்று இறங்குதளத்தை திறந்து வைத்தனர். பார்மரில் உள்ள தேசிய நெடுஞ்சாலை என்எச்–925 முதல் முறையாக, அவசரகால தரையிறக்கத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது.

ராஜ்நாத் சிங், நிதின் கட்கரி, முப்படைகளின் தலைமைத் தளபதி விபின் ராவத் ஆகியோருடன் ஹெர்குலிஸ் சி–130ஜே ரக போர் விமானம், இந்த இறங்குதளத்தில் தரையிறக்கம் செய்யப்பட்டு, ஒத்திகை நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து, இந்திய விமானப் படைக்குச் சொந்தமான ஏ.என்.–32 ராணுவ போக்குவரத்து விமானம், எம்.ஐ.–17வி5 ஹெலிகாப்டர் ஆகியவையும் அந்த இறங்குதளத்தில் தரையிறங்கின.

**தமிழகத்திலும்...**

தமிழ்நாடு, புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களில் 19 இடங்களில் நெடுஞ்சாலைகளில் போர் விமானங்கள் தரையிறங்குவதற்கு அவசரகால இறங்குதளம் அமைக்கப்படும் என்று அமைச்சர் நிதின் கட்கரி கூறினார்.

**5. ஆதிதிராவிடா்–பழங்குடியினா் நலன் காக்க தனி ஆணையம்: மசோதாவை தாக்கல் செய்தாா் முதல்வா் மு.க.ஸ்டாலின்**

ஆதிதிராவிடா் மற்றும் பழங்குடியினா் நலன்களைக் காக்க தனி ஆணையம் அமைப்பதற்கான சட்ட மசோதாவை முதல்வா் மு.க.ஸ்டாலின், வியாழக்கிழமை தாக்கல் செய்தாா். இந்த மசோதாவில் கூறப்பட்டுள்ளதாவது:– தமிழ்நாடு ஆதிதிராவிடா் மற்றும் பழங்குடியினா் மாநில ஆணையம் என்ற தனி அமைப்பை உருவாக்க மசோதா வழி செய்கிறது. இந்த ஆணையத்தின் தலைவராக ஆதிதிராவிடா் மற்றும் பழங்குடியினா் தொடா்பான விஷயங்களில் சிறந்த நிபுணத்துவம் கொண்ட ஓய்வு பெற்ற உயா் நீதிமன்ற நீதிபதி இருப்பாா். ஆதிதிராவிடா், பழங்குடியினா் நலனுக்காக பணியாற்றியுள்ள ஒருவா் துணைத் தலைவராகச் செயல்படுவாா்.

ஆதிதிராவிடா் சமுதாயத்தைச் சோ்ந்த மூன்று உறுப்பினா்கள், பழங்குடியின வகுப்பைச் சோ்ந்த ஒருவா் மற்றும் ஆதிதிராவிடா் மற்றும் பழங்குடியினா் துறையில் சிறந்த நிபுணத்துவம் கொண்ட ஒருவா் என மொத்தம் 5 போ் உறுப்பினா்களாக இருப்பா். மகளிா் ஒருவரும்

உறுப்பினராக இருப்பா். அரசு கூடுதல் செயலாளரின் படிநிலைக்குக் குறையாத ஐ.ஏ.எஸ்., அதிகாரிகளில் இருந்து ஒருவா் உறுப்பினா் செயலாளராக செயல்படுவாா். தலைவா், துணைத் தலைவா், உறுப்பினா் ஆகியோா் மூன்று ஆண்டுகளுக்கு பொறுப்பில் இருப்பா். தலைவருக்கான வயது வரம்பு 70 ஆண்டுகள் வரையிலும், துணைத் தலைவா், உறுப்பினா்களுக்கான வயது வரம்பு 65 ஆண்டுகள் வரையிலும் இருக்கும்.

**ஆணையச் செயல்பாடுகள்:** பாதிக்கப்பட்ட ஒருவா் அல்லது அவரின் சாா்பில் நபா் ஒருவரால் அளிக்கப்பட்ட மனுவின் புகாரை ஆணையம் விசாரிக்கும். ஆதிதிராவிடா் மற்றும் பழங்குடியினா் வன்கொடுமை தடுப்பு சட்டம் மற்றும் அவற்றில் வழங்கப்பட்ட உரிமைகள் மீறப்படுவதை கண்காணிக்கும் பணியில் ஈடுபடும். அரசு ஊழியா் ஒருவரால் உரிமை மீறலைத் தடுப்பதில் கவனக் குறைவு ஏற்பட்டால் அதன்மீதும் நடவடிக்கை எடுக்கும். ஒழுங்குமுறை நடவடிக்கைக்கு பரிந்துரை: அரசு ஊழியா் ஒருவா் ஆதிதிராவிடா் மற்றும் பழங்குடியினா் நலன்களைக் காப்பது தொடா்பான கடமைகளில் கவனக் குறைவாக இருந்தால் அதனை விசாரித்து ஒழுங்குமுறை நடவடிக்கைகளைத் தொடங்க அரசுக்குப் பரிந்துரை செய்யும்.

**ஆணையத்தின் அதிகாரங்கள்:** ஆதிதிராவிடா் மற்றும் பழங்குடியினா் நல ஆணையத்துக்கு, ஒரு உரிமையியல் நீதிமன்றத்துக்கான அதிகாரங்கள் அனைத்தும் வழங்கப்படும். எவா் ஒருவருக்கும் விசாரணைக்கான அழைப்பாணை விடுத்தல் மற்றும் அவரது வருகையை கட்டாயப்படுத்துதல் மற்றும் அவரை உறுதிமொழியின் பேரில் விசாரணை செய்தல், ஆவணம் எதையும் கண்டறிதல் மற்றும் முன்னிலைப்படுத்துமாறு கோருதல், உறுதிமொழி ஆவணங்களின் பேரில் சான்றினைப் பெறுதல், சாட்சிகள் மற்றும் ஆவணங்களை ஆய்வு செய்வதற்காக உரிய உத்தரவுகளை அளித்தல், ஆதிதிராவிடா் மற்றும் பழங்குடியினா்களை பாதிக்கும் முக்கியமான கொள்கைகள் குறித்து ஆணையத்திடம் அரசு ஆலோசனை செய்யலாம் என மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### 6. 'பொருநை – ஆற்றங்கரை நாகரிகம்' நூல் வெளியீடு

தென்னிந்தியாவின் நாகரிகத் தொட்டில் என அழைக்கப்படும் பொருநை ஆற்றங்கரை பெயரிலான புத்தகம் தமிழக அரசின் தொல்லியல் துறை சாா்பில் சட்டப்பேரவையில் வியாழக்கிழமை வைக்கப்பட்டது. தமிழகச் சட்டப்பேரவையில் வியாழக்கிழமை முதல்வா் மு.க.ஸ்டாலின் 110–ஆவது விதியின் கீழ் தமிழ்ப் பண்பாட்டின் வோ்களைத் தேடி இந்தியாவிலும் கடல் கடந்து அயல்நாடுகளிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் அறிவித்தாா்.

மேலும், ஆதிச்சநல்லூா், சிவகளை மற்றும் கொற்கை உள்ளிட்ட பகுதிகளில் கிடைத்த அரிய பொருள்களைக் காட்சிப்படுத்தும் விதமாக திருநெல்வேலியில் நவீன வசதிகளும் பொருநை அருங்காட்சியம் அமைக்கப்படும் என அறிவித்தாா். இந்த பொருநை நதியின் சிறப்பைக் குறிக்கும் வகையில் தமிழ்நாடு தொல்லியல் துறை சாா்பில் 76 பக்கங்களைக் கொண்ட பொருநை – ஆற்றங்கரை நாகரிகம் என்ற தலைப்பில் வண்ணப் புத்தகம் அச்சிடப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம் பேரவையில் வைக்கப்பட்டது.

---

### 7. தென் தமிழக பொக்கிஷங்களை காட்சிப்படுத்த நெல்லையில் ரூ.15 கோடியில் நவீன அருங்காட்சியகம்

தென் தமிழகத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட அரிய பொக்கிஷங்களை காட்சிப்படுத்த நெல்லையில் ரூ.15 கோடியில் நவீன அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். சட்டப் பேரவையில் விதி 110–ன் கீழ் வியாழக்கிழமை அவர் படித்தளித்த அறிக்கை:– தமிழ்நாடு தொல்லியல் துறையால் இப்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அகழாய்வின் போது ஆதிச்சநல்லூருக்கு அருகே சிவகளைப் பறம்புப் பகுதியில் முதுமக்கள் தாழி ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இதிலிருந்த நெல்மணிகள் அமெரிக்க நாட்டின் மியாமி நகரத்தில் அமைந்திருக்கும் உலகப் புகழ்பெற்ற பீட்டா பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டன. இதன் ஆய்வு முடிவுகள் கிடைத்துள்ளன.

கி.மு.1,155–ஆம் ஆண்டு: முதுமக்கள் தாழியில் கண்டெடுக்கப்பட்ட நெல்மணிகளின் காலம் கி.மு.1,155 எனக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, தண்பொருநை என்று அழைக்கப்பட்ட தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் 3, 200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை அறிவியல் ஆய்வுகளின் அடிப்படையில் உறுதிசெய்ய முடிகிறது. இதனை அறிவிப்பில் அளவிட முடியாத பெருமிதமும், மனமகிழ்ச்சியும் கொள்கிறேன். பண்டைய தமிழர்களின் செழுமையான பண்பாடு, கடல்வழி வணிகம், நீர் மேலாண்மை, இரும்பு உருக்குதல், அரிய மணிகள் தயாரித்தல், முத்துக் குளித்தல் போன்ற தொழில்நுட்பங்களை உலகம் அறிந்து கொள்ளத் தேவையான சான்றுகளைச் சேகரிக்கும் வகையில், இந்தியாவில் வேறெந்த மாநிலத்தை விடவும் அதிகளவு நிதியாக ரூ.5 கோடி நிகழ் நிதியாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின் போது கிடைத்த அரிய பொருள்களை அழகுறக் காட்சிப்படுத்தும் விதமாக, திருநெல்வேலி நகரில் ரூ.15 கோடியில் நவீன வசதிகளுடன் அருங்காட்சியகம் அமைக்கப்படும்.

கீழடி நாகரிகம்: கீழடியில் தொடர்ந்து அகழாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அங்கு அண்மையில் சூரியன், நிலவு மற்றும் வடிவியல் குறியீடுகள் கொண்ட முத்திரைகளுடன் கூடிய வெள்ளிக் காசு கண்டெடுக்கப்பட்டது. அதை ஆய்வு செய்த தலைசிறந்த நாணயவியல் அறிஞரும், கொல்கத்தா பல்கலைக்கழகப் பேராசிரியருமான சுஷ்மிதா பாசு மஜூம்தார், வெள்ளிமுத்திரைக் காசானது கி.மு.நான்காம் நூற்றாண்டுக்கு முற்பட்டது எனக் கருத்துத் தெரிவித்துள்ளார். ஏற்கெனவே, கரிம பகுப்பாய்வு முடிவுகளின்படி, கீழடியில் கண்டெடுக்கப்பட்ட தமிழி எழுத்துகளின் காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டு என்று அறிவிக்கப்பட்ட நிலையில், அதனை வலுப்படுத்தும் விதமாக இப்போது பெறப்பட்ட இரண்டு கரிம மாதிரிகளின் பகுப்பாய்வு முடிவுகளிலும் கீழடி நாகரிகம் கி.மு.ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனத் தெரிய வந்துள்ளது.

கொற்கையிலும் அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த அகழாய்வில் இப்போது கருப்பு வண்ணப்பூச்சு பெற்ற கங்கை சமவெளியைச் சேர்ந்த பானை ஓடுகள் கிடைத்துள்ளன. இதன்மூலம், கொற்கைத் துறைமுகமானது, கி.மு.ஆறாம் நூற்றாண்டுக்கு முன்பே வெளிநாடுகளுடனும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது என்பது உறுதியாகிறது என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

---

### 8. தேசிய கல்வி நிறுவனங்கள் தரவரிசையில் சென்னை ஐ.ஐ.டி. முதலிடம்

2021–ஆம் ஆண்டு தேசிய கல்வி நிறுவனங்கள் தரவரிசையில் சென்னை ஐஐடி ஒட்டுமொத்தப் பிரிவிலும், பொறியியல் பிரிவிலும் தொடர்ந்து மூன்றாவது முறையாக முதலிடத்தைப் பெற்றுள்ளது. இதில், பல்வேறு பிரிவுகளில் தமிழகத்தைச் சேர்ந்த 10 கல்வி நிறுவனங்கள் (பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தொழில்நுட்ப நிறுவனங்கள்) முதல் 10 இடங்களைப் பெற்றுள்ளன. நாடு முழுவதிலும் உள்ள கல்வி நிறுவனங்களைத் தரவரிசைப்படுத்த தேசிய கல்வி நிறுவன தரவரிசைக் கட்டமைப்பு (என்ஐஆர்எஃப்) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் 2015–ஆம் ஆண்டுமுதல் கல்வி நிறுவனங்களைத் தரவரிசைப்படுத்தி வருகிறது. இந்த நிலையில், 2021–ஆம் ஆண்டுக்கான தரவரிசைப் பட்டியலை மத்திய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் வியாழக்கிழமை காணொலி வழியில் வெளியிட்டார். கல்வித் துறை இணையமைச்சர்கள் அன்னபூர்ணா தேவி, டாக்டர் சுபாஷ் சர்க்கார், டாக்டர் ராஜ்குமார் ரஞ்சன் சிங் ஆகியோரும் பங்கேற்று தரவரிசைப் பட்டியலை வெளியிட்டனர்.

ஒட்டுமொத்தப் பிரிவிலும், பொறியியலிலும் சென்னை ஐஐடி தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக முதலிடத்தைப் பெற்றுள்ளது. பல்கலைக்கழகப் பிரிவிலும், ஆராய்ச்சி நிறுவனப் பிரிவிலும் பெங்களூரு இந்திய அறிவியல் நிறுவனம் (ஐஐஎஸ்) முதலிடம் பெற்றுள்ளது. பல்கலைக்கழகங்கள் தரவரிசையில் கோவை அமிர்தா விஷ்வ வித்யா பீடம் மூன்றாவது இடத்தையும், திருச்சி தேசிய தொழில்நுட்பக் கழகம் 9–ஆவது இடத்தையும் பெற்றுள்ளன. மேலாண்மைப் பிரிவில்ஆமதாபாத் ஐஐஎம் முதலிடத்தில் வந்துள்ளது.

மருத்துவக் கல்லூரிகளில் தில்லி எய்ம்ஸ் முதலிடம்: கல்லூரிகள் பிரிவில் முதல், இரண்டாம் இடங்களை முறையே தில்லியின் மிரண்டா ஹவுஸ், லேடி ஸ்ரீராம் மகளிர் கல்லூரி பெற்றுள்ளன. மூன்றாம் இடத்தில் சென்னை லயோலா கல்லூரியும், ஆறாவது, ஏழாவது இடங்கள் முறையே கோவை பிஎஸ்ஜி, ஆர்.கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை மாநிலக் கல்லூரி ஆகியவை இடம்பெற்றுள்ளன. மருத்துவக் கல்லூரியில் நான்காவது முறையாக தில்லி எய்ம்ஸ் முதலிடத்தைப் பெற்றது. வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி (சிஎம்சி) 3–ஆவது இடம் பெற்றுள்ளது. பல் மருத்துவத்தில் சென்னை சவிதா இன்ஸ்டிடியூட்

மருத்துவத் தொழில்நுட்ப அறிவியல் நிறுவனம் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

முதல்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஆராய்ச்சி நிறுவனப் பிரிவில் பெங்களூரு ஐஐஎஸ் முதலிடமும், சென்னை ஐஐடி 2–ஆம் இடமும் பெற்றுள்ளன. மற்ற பிரிவுகளில் மருந்தியலில் தொடர்ந்து நான்காவது முறையாக ஜாமியா ஹம்தார்த்தும், கட்டடவியலில் ஐஐடி ரூர்கி, சட்டப் படிப்பில் தொடர்ந்து நான்காவது முறையாக பெங்களூரு தேசிய சட்டப் பள்ளி ஆகியவை முதலிடத்தில் உள்ளன. இந்தத் தரவரிசையில் பல்வேறு பிரிவுகளில் முதல் 10 இடங்களில் தமிழக நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும், தமிழகத்தைச் சேர்ந்த 44 தொழில்நுட்ப நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் தரவரிசைப்பட்டியலில் இடம் பெற்று சாதனை படைத்துள்ளன.

### 9. இந்தியாவில் கார் தயாரிப்பு நிறுத்தம்: ஃபோர்டு அறிவிப்பு

அமெரிக்காவைச் சேர்ந்த ஃபோர்டு நிறுவனம் இந்திய ஆலைகளில் கார் உற்பத்தியை நிறுத்தவுள்ளதாக அறிவித்துள்ளது. இதுகுறித்து அந்த நிறுவனம் வியாழக்கிழமை தெரிவித்துள்ளதாவது: இந்தியாவில் ஃபோர்டு நிறுவனத்துக்குச் சொந்தமாக உள்ள இரண்டு ஆலைகளில் கார் உற்பத்தி பணிகள் நிறுத்தப்படவுள்ளன. அதன்படி, சென்னை (தமிழ்நாடு), சனந்த் (குஜராத்) ஆகிய இடங்களில் ரூ.18,750 கோடி (250 கோடி டாலர்) மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட இரண்டு ஆலைகளில் தயாரிக்கப்படும் எக்கோஸ்போர்ட், ஃபிகோ, ஆஸ்பயர் உள்ளிட்ட கார்களின் விற்பனை நிறுத்தப்படும். அதற்கு பதிலாக, மஸ்தங் உள்ளிட்ட இறக்குமதி செய்யப்படும் கார்களின் விற்பனையை இந்தியாவில் தொடர நிறுவனம் முடிவெடுத்துள்ளது. மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்வதின் ஒரு பகுதியாகவே இந்த முடிவை ஃபோர்டு எடுத்துள்ளது.

சனந்த் ஆலையில் 2021 நான்காம் காலாண்டிலிருந்தும், சென்னை ஆலையில் 2022 இரண்டாவது காலாண்டிலிருந்தும் கார் தயாரிக்கும் பணிகள் முற்றிலும் கைவிடப்படும். இருப்பினும், சனந்த் ஆலையிலிருந்து என்ஜின்கள் தயாரிக்கப்பட்டு நிறுவனத்தின் சர்வதேச செயல்பாடுகளுக்காக ஏற்றுமதி செய்யப்படும் என ஃபோர்டு தெரிவித்துள்ளது. இந்தியாவில் 30 ஆண்டுகால செயல்பாட்டைக் கொண்ட ஃபோர்டு நிறுவனத்துக்கு கடந்த பத்தாண்டுகளில் மட்டும் ரூ.15,000 கோடி அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. ஃபோர்டு நிறுவனத்தின் இந்த அதிரடி முடிவால் 4,000 பணியாளர்கள், விநியோகஸ்தர்கள் பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது

### 10. பாரதியார் நினைவு நாளான செப்.11 'மகாகவி நாள்' – முதல்வர் அறிவிப்பு

மகாகவி பாரதியாரின் நினைவைப் போற்றும் வகையில், அவரது நினைவு நாளான செப்டம்பர் 11 ஆம் தேதி 'மகாகவி நாளாக' கொண்டாடப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். மகாகவி பாரதியின் நூற்றாண்டு(1921–2021) நினைவு நாள் நாளை(செப்.11) அனுசரிக்கப்படுகிறது. இதையடுத்து, பாரதியாரின் நினைவு நாளான செப்டம்பர் 11 ஆம் தேதி 'மகாகவி நாளாக' அரசு சார்பில் கொண்டாடப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். மேலும் பாரதியின் பாடல்கள், கட்டுரைகளைத் தொகுத்து 'மனதில் உறுதி வேண்டும்' என்ற புத்தகமாக 37 லட்சம் மாணவர்களுக்கு வழங்கப்படும். பாரதியின் நினைவு நாளில் மாநில அளவில் மாணவர்களுக்கு போட்டிகளை நடத்தி இளங்கவிஞர் விருது வழங்கப்படும் உள்ளிட்ட 16 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: "பாட்டுக்கொரு புலவன் பாரதியடா அவன் பாட்டைப் பண்ணோடு ஒருவன் பாடினானடா அதைக் கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனடா" – என்று கவிமணி தேசிக விநாயகம் பாடினார். இப்படிக் கவிமணிகளையே பாடவைத்த பெரும்புலவன் பாரதியின் பெருமையைப் போற்றும் அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன். கடந்த ஆகஸ்ட் 15–ஆம் நாள் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்துவிட்டு உரையாற்றும்போது, மகாகவி பாரதியார் மறைந்து 100 ஆண்டுகள் ஆகிவிட்டது, அவர் மறைந்த ஆண்டின் நூற்றாண்டு என்று இந்த ஆண்டைக் குறிப்பிட்டுக் காட்டினேன். நூறாண்டுகள் கழித்து மட்டுமன்று, ஆயிரமாண்டுகள் கழித்தும் உயிரோட்டமுள்ள கவிதைகளை, பாடல்களைத் தமிழ்ச் சமுதாயத்துக்கு விட்டுச் சென்றவர்தான் மகாகவி என்று போற்றப்பட்ட பாரதியார் அவர்கள்.

"பைந்தமிழ்த் தேர்ப்பாகன், அவனொரு செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை! குவிக்கும் கவிதைக் குயில்! இந் நாட்டினைக் கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு; நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா; காடு கமழும் கற்பூரச் சொற்கோ; கற்பனை ஊற்றாம் கதையின் புதையல் திறம் பாட வந்த மறவன்; புதிய அறம் பாட வந்த அறிஞன்; நாட்டில் படரும் சாதிப் படைக்கு மருந்து! மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்; அயலார் எதிர்ப்புக்கு அணையா விளக்கவன்; என்னென்று சொல்வேன் என்னென்று சொல்வேன்" – என்று மகாகவியை வர்ணித்து எழுதியவர் தான் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள். தேசப் பற்று – தெய்வப் பற்று – தமிழ்ப் பற்று – மானுடப்பற்று ஆகிய நான்கும் கலந்தவர்தான் பாரதியார். நாட்டு விடுதலைக்காகப் போராடியவராக மட்டுமே இருந்திருந்தால் அதற்காக மட்டுமே அவர் நினைவுகூரப்பட்டிருப்பார். அதையும் தாண்டி சமூக, பொருளாதார உரிமைகளுக்காகவும் எழுதியதால்தான் பாரதியார் கவிதை வரிகளாய் உலவி வருகிறார்.

பாரதியார் அவர்கள் வரகவியா, மகாகவியா, தேசியக் கவியா என்று விவாதம் நடந்து கொண்டிருந்த காலத்தில் 1947–ஆம் ஆண்டே பாரதியாரை 'மக்கள் கவி' என்று எழுதியும் பேசியும் தொடங்கியவர் பேரறிஞர் அண்ணா. ஒரு பக்கம் நிலப்பிரபுத்துவம் – இன்னொரு பக்கம் சனாதனம் – இந்த இரண்டுக்கும் இடையில் இருந்து புதுயுகத்தைப் படைக்க நினைத்தவர் பாரதி என்று அண்ணா எழுதினார்கள். அதனால்தான் கழக அரசு அமைந்து, கருணாநிதி முதலமைச்சரானபோது எட்டையபுரத்தில் பாரதியார் பிறந்த வீட்டை அரசு சார்பில் விலைக்கு வாங்கி அதனை நினைவில்லம் ஆக்கினார்கள். அன்றைய அமைச்சர் சி.பா. ஆதித்தனார் தலைமையில் 12.5.1973 அன்று நடந்த விழாவில் பாரதியார் இல்லத்தை வரலாற்றுச் சின்னமாக அறிவித்து முன்னாள் முதல்வர் கருணாநிதி திறந்து வைத்தார்.

இதன் தொடர்ச்சியாக பாரதியார் நினைவைப் போற்றும் வகையில் அவர் மறைந்த நூற்றாண்டின் நினைவாக 14 முக்கிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன். 1. மகாகவி பாரதியாரின் நினைவு நாளான செப்டம்பர் 11–ஆம் நாள், அரசின் சார்பில் இனி ஆண்டுதோறும் 'மகாகவி நாளாக' கடைபிடிக்கப்படும். இதனையொட்டி, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மாநில அளவில் கவிதைப் போட்டி நடத்தி ' பாரதி இளங்கவிஞர் விருது' மாணவன் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் பரிசுத் தொகையுடன் வழங்கப்படும். 2. பாரதியாரின் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்கள் மற்றும் கட்டுரைகளைத் தொகுத்து 'மனதில் உறுதி வேண்டும்' என்ற புத்தகமாக, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்கள் சுமார் 37 லட்சம் பேருக்கு 10 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

3. மகாகவி பாரதியின் வாழ்க்கை குறித்தும், அவரின் படைப்புகள் குறித்தும் ஆய்வாளர்கள் பலர் குறிப்பிடத்தக்க ஆய்வுகளைச் செய்துள்ளனர். அவர்களில் முக்கியப் பங்காற்றிய பாரதி ஆய்வாளர்களான, மறைந்த பெ. தூரன், ரா.அ. பத்மநாபன், தொ. மு. சி. ரகுநாதன், இளசை மணியன் ஆகியோர்களின் நினைவாக அவர்தம் குடும்பத்தாருக்கும் மற்றும் மூத்த ஆய்வாளர் சீனி. விசுவநாதன், பேராசிரியர் ய. மணிகண்டன் ஆகியோருக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும், விருதும், பாராட்டுச் சான்றிதழும் அரசால் வழங்கி கவுரவிக்கப்படும். 4. பாரதியின் உருவச் சிலைகள், உருவம் பொறித்த கலைப்பொருட்களைப் பூம்புகார் நிறுவனத்தின் மூலம் உற்பத்தி செய்து குறைந்த விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

5. பாரதியின் கையெழுத்துப் பிரதிகள் தேடித் தொகுக்கப்பட்டு, அவை வடிவம் மாறாமல் செம்பதிப்பாக வெளியிடப்படும். பாரதியின் வாழ்வை சிறுவர்கள் அறியும் வண்ணம் சித்திரக்கதை நூலாகவும், பாரதியாரின் சிறந்த நூறு பாடல்களைத் தேர்வு செய்து தமிழ்நாட்டின் புகழ்பெற்ற ஓவியர்களின் வண்ண ஓவியங்களுடன் நூல் ஒன்றாகவும் வெளியிடப்படும். மேலும் பாரதியாரின் படைப்புகள் மற்றும் பாரதியார் குறித்த முக்கிய ஆய்வு நூல்களும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிப்படும். 6. பாரதியாரின் நூல்கள் மற்றும் அவரைப் பற்றிய ஆய்வு நூல்கள் அனைத்தையும் தொகுத்து, எட்டையபுரம் மற்றும் திருவல்லிக்கேணியில் உள்ள பாரதியார் நினைவு இல்லங்களிலும், சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்திலும், மதுரையில் அமைய உள்ள கலைஞர் நினைவு நூலகத்திலும் வைப்பதற்கு 'பாரதியியல்' என்ற தனிப்பிரிவு ஏற்படுத்தப்படும். 7. உலகத் தமிழ்ச் சங்கங்களை ஒருங்கிணைத்து பாரதி குறித்த நிகழ்வுகள் 'பாரெங்கும் பாரதி' என்ற தலைப்பில் நடத்தப்படும்.

8. திரைப்படங்களில் இடம்பெற்ற பாரதியாரின் பாடல்கள் மட்டுமே இடம்பெறும் இசைக்கச்சேரி 'திரையில் பாரதி' என்ற நிகழ்வாக நேரு

உள்விளையாட்டு அரங்கில் கொரோனா தொற்றுப் பரவல் முழுமையாக ஓய்ந்த பிறகு நடத்தப்படும். 9. பாரதியாரின் நினைவு நூற்றாண்டை முன்னிட்டு அடுத்த ஓராண்டிற்கு, சென்னை பாரதியார் நினைவு இல்லத்தில் வாரந்தோறும் நிகழ்ச்சியொன்று செய்தித்துறையின் சார்பில் நடத்தப்படும். 10. திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பாரதியார் பெயரில் ஆய்விருக்கை அமைக்கப்படும். 11. உத்தரப்பிரதேச மாநிலம் காசியில் பாரதியார் வாழ்ந்த வீட்டைப் பாராமரிக்க அரசின் சார்பில் நிதியுதவி வழங்கப்படும். 12. பாரதியார் படைப்புகளைக் குறும்படம் மற்றும் நாடக வடிவில் தயாரிக்க நிதியுதவி வழங்கி அவற்றை நவீன ஊடகங்களின் வழியாக வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

13. பாரதியாரின் உணர்வுமிக்க பாடல் வரிகளைப் பள்ளிகள், கல்லூரிகள், பேருந்து நிலையங்கள் போன்ற முக்கிய இடங்களில் எழுதியும் வரைந்தும் பரப்பப்படும். 14. பெண் கல்வியையும், பெண்களிடம் துணிச்சலையும் வலியுறுத்திய மகாகவி பாரதியின் பெயர், ஊரக வளர்ச்சித்துறையில் செயல்படுத்தப்படவுள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்கள் வாழ்வாதாரப் பூங்காவிற்கு 'மகாகவி பாரதியார் வாழ்வாதாரப் பூங்கா' எனப் பெயர் சூட்டப்படும். எழுத்தும் தெய்வம் – எழுதுகோலும் தெய்வம் என வாழ்ந்து புதுநெறி காட்டிய புலவன் பாரதியைப் போற்றுவோம்.

---

**11. 'சன்சத்' தொலைக்காட்சியை செப்.15–இல் தொடக்கி வைக்கிறாா் பிரதமா் மோடி**

நாடாளுமன்ற நடவடிக்கைகளை நேரடி ஒளிபரப்பு செய்வதற்கான 'சன்சத்' தொலைக்காட்சியை வரும் 15–ஆம் தேதி பிரதமா் நரேந்திர மோடி தொடக்கி வைக்கிறாா். கூட்டத்தொடா் நடைபெறும்போது மக்களவை நடவடிக்கைகளை 'லோக் சபா' தொலைக்காட்சியும், மாநிலங்களவை நடவடிக்கைகளை 'ராஜ்ய சபா' தொலைக்காட்சியும் நேரடியாக ஒளிபரப்பி வருகின்றன. அத்தொலைக்காட்சிகளை ஒன்றாக இணைத்து 'சன்சத்' என்ற பெயரில் ஒரே தொலைக்காட்சியாக மாற்ற மத்திய அரசு முடிவெடுத்தது.

சன்சத் தொலைக்காட்சியை அதிகாரபூா்வமாகத் தொடக்கி வைப்பதற்கான நிகழ்ச்சி வரும் 15–ஆம் தேதி நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெறுகிறது. அதில் பிரதமா் மோடி பங்கேற்று தொலைக்காட்சியைத் தொடக்கி வைக்கிறாா். குடியரசு துணைத் தலைவரும் மாநிலங்களவைத் தலைவருமான வெங்கையா நாயுடு, மக்களவைத் தலைவா் ஓம் பிா்லா ஆகியோரும் நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனா். நாடாளுமன்றக் கூட்டத்தொடா் நடைபெறும் சமயங்களில் சன்சத் தொலைக்காட்சி இரு தொலைக்காட்சிகளாக செயல்படும் எனவும் இதன் மூலமாக மக்களவை, மாநிலங்களவை நடவடிக்கைகளை மக்கள் நேரடியாக அறிந்து கொள்ள முடியும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனா்.

ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரியும் ஜவுளித்துறையின் முன்னாள் செயலருமான ரவி கபூா், சன்சத் தொலைக்காட்சியின் தலைமை நிா்வாக அதிகாரியாக (சிஇஓ) நியமிக்கப்பட்டுள்ளாா். காங்கிரஸ் மூத்த தலைவா் கரண் சிங், பொருளாதார நிபுணா் விவேக் தேப்ராய், நீதி ஆயோக் சிஇஓ அமிதாப் காந்த், வழக்குரைஞா் ஹேமந்த் பத்ரா, மத்திய நிதித்துறையின் முதன்மை பொருளாதார ஆலோசகா் சஞ்சீவ் சன்யால் உள்ளிட்டோா் கூட்டத்தொடா் நடைபெறாத சமயங்களில் சிறப்பு நிகழ்ச்சிகளை சன்சத் தொலைக்காட்சியில் தொகுத்து வழங்கவுள்ளனா்.

---

**12. எரிசக்தித் துறையில் ஒத்துழைப்பை அதிகரிக்க இந்தியா–அமெரிக்கா முடிவு**

எரிசக்தித் துறையில் நிலவி வரும் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு இந்தியாவும் அமெரிக்காவும் முடிவெடுத்துள்ளன. கடந்த ஏப்ரலில் நடைபெற்ற பருவநிலை மாநாட்டின்போது அமெரிக்கா–இந்தியா பருவநிலை மற்றும் தூய எரிசக்தி கொள்கை வடிவமைக்கப்பட்டது. அமெரிக்க அதிபா் ஜோ பைடனும் பிரதமா் நரேந்திர மோடியும் இணைந்து அக்கொள்கையை வெளியிட்டனா். அதன்படி, அமெரிக்கா–இந்தியா தூய எரிசக்தி ஒத்துழைப்பு என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. அந்த அமைப்பின் கூட்டம் வியாழக்கிழமை காணொலி வாயிலாக நடைபெற்றது. கூட்டத்தில் மத்திய பெட்ரோலியம்–இயற்கை எரிவாயுத் துறை அமைச்சா் ஹா்தீப் சிங் புரி, அமெரிக்க எரிசக்தித் துறை அமைச்சா் ஜெனிஃபா் கிரான்ஹோம் ஆகியோா் பங்கேற்றனா்.

கூட்டம் குறித்து பெட்ரோலியத் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், 'இந்தியா–அமெரிக்கா இடையே எரிசக்தித் துறையில் நிலவி வரும் ஒத்துழைப்பானது எரிசக்தி, எண்ணெய்–எரிவாயு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, நீடித்த வளா்ச்சி ஆகிய 4 தூண்களின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டிருந்தது. தற்போது ஐந்தாவது தூணாக வளா்ச்சிகாணும் எரிபொருள்கள் இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக தூய்மையான எரிசக்திப் பயன்பாட்டை ஊக்குவிப்பதில் இரு நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இரு நாடுகளுக்கும் பலன்: உயிரிஎரிபொருள்கள் துறையில் ஒத்துழைப்புடன் செயல்படுவதற்கென இந்தியா–அமெரிக்கா உயிரிஎரிபொருள்கள் செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. எரிசக்தித் துறையில் மேலும் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் கூட்டத்தின்போது அமைச்சா்கள் இருவரும் விவாதித்தனா்.

அணுசக்தித் துறையில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நிலவி வரும் ஒத்துழைப்பு தொடா்பாக இருவரும் ஆய்வு செய்தனா். இந்தியாவின் எரிசக்தி சந்தை தொடா்ந்து விரிவடைந்து வருவதும், அமெரிக்காவில் எரிசக்தி சாா்ந்த தொழில்நுட்பங்கள் வளா்ந்து வருவதும் இரு நாடுகளுக்கும் பலனளிக்கும் என்று அமைச்சா் ஹா்தீப் சிங் புரி கூட்டத்தின்போது தெரிவித்தாா். உரிய ஒத்துழைப்பு: புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சாா்ந்த திட்டங்களை அதிகரிப்பது தொடா்பாகக் கூட்டத்தின்போது விவாதிக்கப்பட்டது. 2030–ஆம் ஆண்டுக்குள் 450 ஜிகா வாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை உற்பத்தி செய்ய இலக்கு நிா்ணயித்ததற்காக இந்தியாவை அமெரிக்கா பாராட்டியது. அந்த இலக்கை அடைவதற்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் அமெரிக்கா உறுதியளித்தது.

எரிசக்தி தரவு மேலாண்மை, கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்கான தொழில்நுட்பங்கள், நிலக்கரி பயன்பாட்டைக் குறைத்தல், மின்சார விநியோகக் கட்டமைப்பை மேம்படுத்துதல் உள்ளிட்டவை குறித்தும் கூட்டத்தின்போது விவாதிக்கப்பட்டது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

**13. நிலவின் பரப்பில் சந்திரயான்–2 புதிய கண்டுபிடிப்புகள்**

நிலவை ஆய்வு செய்து வரும் 'சந்திரயான்–2' விண்கலம் பல புதிய விஷயங்களைக் கண்டறிந்து, தகவல் அளித்து வருவதாக இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) தெரிவித்துள்ளது. நிலவின் பரப்பில் குரோமியம், மாங்கனீஸ் ஆகிய தாதுக்கள் படிமங்களாக இருப்பதை சந்திரயான்–2 கண்டறிந்திருப்பதோடு, நீரேற்றம் மற்றும் பனிக்கட்டி வடிவில் நீா் இருப்பதற்கான தெளிவான அறிகுறிகளையும் கண்டறிந்து அனுப்பியுள்ளது.

நிலவை ஆய்வு செய்வதற்காக இஸ்ரோ அனுப்பிய இந்த விண்கலம் இரண்டு ஆண்டுகளாக சிறப்பான முறையில் ஆய்வுப் பணியை மேற்கொண்டு வருகிறது. இதனைக் குறிக்கும் வகையில், 'நிலவு அறிவியல் பயிலரங்கம் 2021' என்ற தலைப்பிலான இரண்டு நாள் பயிலரங்கு இஸ்ரோ சாா்பில் பெங்களூரு தலைமை அலுவலகத்தில் கடந்த வாரம் நடத்தப்பட்டது. இந்தப் பயிலரங்கில், சந்திரயான்–2 விண்கலத்தின் 'ஆா்பிட்டா்' இதுவரை அனுப்பியுள்ள தகவல்கள், ஆய்வு முடிவுகள் உள்ளிட்டவை குறித்த புள்ளி விவரங்கள், அறிவியல் ஆவணங்களை இஸ்ரோ தலைவா் கே.சிவன் வெளியிட்டாா். அப்போது, 'விண்கலம் நிலவை இதுவரை 9,000–க்கும் அதிகமான முறை சுற்றிவந்துள்ளது. விண்கலம் அளிக்கும் தகவல்களும் ஆய்வு முடிவுகளும் மிகுந்த ஊக்கமளிக்கும் வகையில் உள்ளன' என்று சிவன் கூறினாா். இந்த நிலையில், ஆா்பிட்டரின் கண்டுபிடிப்புகள் குறித்த மேலும் பல தகவல்களை இஸ்ரோ இப்போது வெளியிட்டுள்ளது.

நிலவை 100 கி.மீ. தொலைவில் இருந்தபடி சுற்றிவந்து ஆய்வு செய்து வரும் ஆா்பிட்டா் பகுதியில் எக்ஸ்ரே ஸ்பெக்டோமீட்டா் (கிளாஸ்), சூரிய சக்தியில் இயங்கும் எக்ஸ்ரே கண்காணிப்பு கருவி (எக்ஸ்.எஸ்.எம்), சுற்றுச்சூழல் ஆய்வு தொகுப்பு கருவி, ரேடாா் கருவி, படம் பிடிக்கும் அகச் சிவப்பு ஸ்பெக்ட்ரோமீட்டா் (ஐஐஆா்எஸ்), டெரய்ன் படம்பிடிக்கும் கேமரா (டிஎம்சி2), மிகத் தெளிவாக படம்பிடிக்கும் உயா் தரத்துடன் கூடிய கேமரா (ஓஹைச்ஆா்சி), இரட்டை அதிா்வெண் ரேடியோ கருவி ஆகிய 8 விஞ்ஞான கருவிகள் இடம்பெற்றுள்ளன. இந்தக் கருவிகள் அனைத்தும் நிலவு குறித்த பல புதிய, புதிரான தகவல்களை கண்டறிந்து வருகின்றன. குறிப்பாக, நிலவின் பரப்பில் நீரேற்றம் மற்றும் பனிக்கட்டி வடிவில் நீா் இருப்பதற்கான தெளிவான அறிகுறிகளை 'அகச் சிவப்பு ஸ்பெக்ட்ரோமீட்டா் (ஐஐஆா்எஸ்)' இதுவரை இல்லாத வகையில் கண்டறிந்து தகவல் அளித்துள்ளது.

நிலவின் மத்திய மற்றும் உயா் அட்சரேகைப் பகுதியில் புறகாற்று மண்டலத்தில் 'ஆா்கன்–40' வாயு இருப்பதை சந்திரயான்–2

சுற்றுச்சூழல் ஆய்வு தொகுப்பு கருவி கண்டறிந்துள்ளது. அதுபோல, நிலவின் பரப்பில் குரோமியம், மாங்கனீஸ் ஆகிய தாதுக்கள் படிமங்களாக இருப்பதை எக்ஸ்ரே ஸ்பெக்டோமீட்டா் (கிளாஸ்) கண்டறிந்துள்ளது. நிலவை சா்வதேச தரத்துக்கு படம் பிடித்து வரும் டிஎம்சி–2 கேமரா, நிலவின் பரப்பில் எரிமலை முகடுகள் இருப்பதை மிகத் தெளிவாக அடையாளம் கண்டுள்ளது. நிலவின் அயனி மண்டலத்தை ஆா்பிட்டரில் இடம்பெற்றிருக்கும் இரட்டை அதிா்வெண் ரேடியோ கருவி ஆய்வு செய்து தகவல் அளித்துள்ளது.

இந்த கண்டுபிடிப்புகள் குறித்த புள்ளி விவரங்கள் அனைத்தும் பொதுமக்களும் அறிந்துகொள்ளும் வகையில் 'பிரதான்' வலைதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது. நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்ய சந்திரயான்–2 விண்கலத்தை கடந்த 2019 ஜூலை 22–ஆம் தேதி ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து இஸ்ரோ அனுப்பியது. பல்வேறு கட்ட பயணத்துக்குப் பிறகு, சந்திரயான்–2 விண்கலம் வெற்றிகரமாக நிலவை நெருங்கியது. ஆனால், செப்டம்பா் 7–ஆம் தேதி, அதன் லேண்டா் கலன் திட்டமிட்டபடி நிலவில் தரையிறங்கவில்லை. திடீா் தொழில்நுட்பக் கோளாறால் லேண்டா் வேகமாகச் சென்று நிலவில் மோதி, செயலிழந்தது. அதேநேரம், விண்கலத்தின் மற்றொரு பகுதியான ஆா்பிட்டா், நிலவின் சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது. ஆா்பிட்டா் கடந்த 2 ஆண்டுகளாக நிலவை சுற்றிவந்து தொடா்ந்து ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

**1.** 'தி மார்னிங் கன்சல்ட்' நடத்திய ஆய்வில், எந்த நாட்டின் பிரதமர் முதலிடம் பிடித்துள்ளார்?

அ) ரஷ்யா



ஆ) ஆஸ்திரேலியா

இ) நியூசிலாந்து

**ஈ) இந்தியா ☑**

✓ 'தி மார்னிங் கன்சல்ட்' நடத்திய ஆய்வொன்றில், இந்தியப்பிரதமர் மோடி, 70% ஒப்புதல் மதிப்பீட்டைப்பெற்றுள்ளார். உலகளாவிய தலைவர்களின் ஒப்புதல் & மறுப்பு மதிப்பீட்டை இவ்வாய்வு கணக்கிடுகிறது. இந்தியாவில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் 70 சதவீதம் பேர் பிரதமர் மோடியின் தலைமையை அங்கீகரித்துள்ளனர்.

✓ அடுத்தபடியாக மெக்ஸிகோ அதிபர் லோபஸ் ஒபரடோர் 64% வாக்குகள், இத்தாலி பிரதமர் மாரியோ தெராகி 63% வாக்குகளுடன் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளனர். மொத்தம் 13 நாடுகளில் இந்த ஆய்வானது நடத்தப்பட்டது.

---

**2.** சமீப செய்திகளில் இடம்பெற்ற பஞ்சீர் பள்ளத்தாக்கு அமைந்துள்ள நாடு எது?

அ) இந்தியா



ஆ) பாகிஸ்தான்

இ) சீனா

**ஈ) ஆப்கானிஸ்தான் ☑**

✓ ஆப்கானிஸ்தானிலுள்ள பஞ்சீர் பள்ளத்தாக்கில், தலிபான் படைகளுக்கு எதிராக தேசிய எதிர்ப்பு முன்னணி (NRF) கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகிறது. போர்நிறுத்தத்திற்கு அழைப்புவிடுத்துள்ள NRF, தலிபான்கள் பஞ்சீரில் மேற்கொண்டு வரும் அவர்களது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும் என்றும் அது முன்மொழிந்துள்ளது. ஆப்கானிஸ்தானின் தலைநகர் உட்பட முக்கியபகுதிகள் தலிபான்களின் கட்டுப்பாட்டில் இருந்தாலும், பஞ்சீர் பள்ளத்தாக்கு இன்னமும் அவர்களின் கைகளுக்குச் செல்லவில்லை.

---

**3.** 2020 டோக்கியோ பாராலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில், இந்திய அணி, எத்தனை பதக்கங்களைப் பெற்றுள்ளது?

அ) 6

ஆ) 17

**இ) 19 ☑**

ஈ) 21

✓ டோக்கியோ பாராலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில், இந்திய அணி 5 தங்கம், 8 வெள்ளி மற்றும் 6 வெண்கலப் பதக்கங்களை உள்ளடக்கிய மொத்தம் 19 பதக்கங்களுடன் போட்டியை நிறைவுசெய்தது. மொத்தம் உள்ள 162 நாடுகளில் இந்தியா 24ஆவது இடத்திலும், பதக்கங்களின் எண்ணிக்கையில் 20ஆவது இடத்திலும் உள்ளது. இந்த ஆண்டு (2021), 9 விளையாட்டுப் பிரிவுகளில் பங்கேற்ற 54 பாரா-தடகள வீரர்களைக் கொண்ட மிகப்பெரிய குழுவை இந்தியா போட்டிக்கு அனுப்பியது.

---

**4.** பின்வரும் யாரின் நினைவுநாளை அனுசரிக்கும் விதமாக, செப்.5 அன்று ஐநா'இன் சர்வதேச தொண்டு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது?

அ) 'சுவாமி' விவேகானந்தர்



**ஆ) 'அன்னை' தெரசா ☑**

இ) 'மகாத்மா' காந்தி

ஈ) 'கர்மவீரர்' காமராஜர்

✓ ஆண்டுதோறும் செப்.5ஆம் தேதியன்று சர்வதேச தொண்டு நாளாக அனுசரிக்கப்படுகிறது. 'அன்னை' தெரசாவின் நினைவுநாளையொட்டி இந்தநாள் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த நாள், செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்கும்

✓ 2030'க்குள் SDG'களை அடைவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதுதொடர்பான தீர்மானம், 2012ஆம் ஆண்டில் ஐநா பொது அவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஐநா'இன் 44 உறுப்புநாடுகளால் இணைந்து இந்தத் தீர்மானம் வழங்கப்பட்டது.

**5.** 2015 நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்ட பாரம்பரிய இடங்கள் மற்றும் நலவாழ்வுத்துறை திட்டங்களை புனரமைப்பதற்காக, இந்தியா, எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?

அ) சீனா



ஆ) பாகிஸ்தான்

இ) அமெரிக்கா

**ஈ) நேபாளம் ☑**

✓ இந்தியாவும் நேபாளமும் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையெழுத்தி -ட்டுள்ளன. அதன்கீழ் கடந்த 2015 பூகம்பத்தின்போது சேதமடைந்த 14 கலாச்சார பாரம்பரியம் மற்றும் 103 நலவாழ்வுத்துறை திட்டங்களை புனரமைப்பதற்காக இந்தியா நேபாளத்திற்கு உதவும். இந்தப்புனரமைப்பு -க்கான மொத்த செலவு 420 கோடி நேபாள ரூபாய் ஆகும்.

✓ இது பூகம்பத்திற்கு பிந்தைய இந்தியாவின் மறுசீரமைப்பு தொகுப்பின் ஒருபகுதியாகும். இதன்கீழ், இந்தியா, நேபாளத்திற்கு $250 மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்கியுள்ளது.

---

**6.** SIMBEX என்பது சிங்கப்பூருக்கும் எந்த நாட்டிற்கும் இடையிலான கடல்சார் கடற்படைப்பயிற்சியாகும்?

அ) அமெரிக்கா



ஆ) சீனா

இ) ரஷ்யா

**ஈ) இந்தியா ☑**

✓ சிங்கப்பூர்-இந்தியா கடல்சார் இருதரப்பு பயிற்சியின் (SIMBEX) 28ஆவது பதிப்பு தென்சீனக்கடலில் நடந்தது. COVID தொற்றுநோய் காரணமாக, இந்த ஆண்டு SIMBEX, 'கடல்சார்' பயிற்சியாக மட்டுமே நடத்தப்பட்டது. 'SIMBEX' என்பது இந்தியக் கடற்படையின் மிகப்பழமையான இருதரப்பு கடல்சார் பயிற்சியாகும்.

---

**7.** INSPIRE விருதுகள் - MANAK'ஐ நிறுவி வழங்கிவரும் நடுவண் அமைச்சகம் எது?

**அ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

ஆ) மின்னணு அமைச்சகம்

இ) உழவு அமைச்சகம்

ஈ) உள்துறை அமைச்சகம்

✓ 'INSPIRE' விருதுகளுக்கான தேசிய அளவிலான கண்காட்சி மற்றும் திட்டப் போட்டி - MANAK (Million Minds Augmenting National Aspiration and Knowledge) அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் - மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின்கீழ் தொடங்கப்பட்டது. நாடு முழுவதுமுள்ள மாணவர்களின் கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்து -வது இதன் நோக்கமாகும்.

---

**8.** வானிலிருந்து ஏவக்கூடிய ஆளில்லா வான்வழி வாகனத்தை (ALUAV) உருவாக்குவதற்காக, இந்தியா, எந்த நாட்டுடன் ஒப்பந்தம் செய்துள்ளது?

**அ) அமெரிக்கா ☑**



ஆ) பிரான்ஸ்

இ) ரஷ்யா

ஈ) ஜெர்மனி

✓ வானிலிருந்து ஏவக்கூடிய ஆளில்லா வான்வழி வாகனத்தை (ALUAV) உருவாக்குவதற்கான அமெரிக்க பாதுகாப்புத்துறையின் திட்ட ஒப்பந்தத் -தில் இந்திய பாதுகாப்பு அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது. ALUAV' க்கான இந்தத் திட்ட ஒப்பந்தம், பாதுகாப்பு தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக முன்னெடுப்பின் ஒட்டுமொத்த கட்டமைப்பின்கீழ் உள்ளது.

✓ ALUAV முன்மாதிரியை இணைந்து உருவாக்கும் செயலில் வான்படை ஆராய்ச்சி ஆய்வகம், இந்திய வான்படை மற்றும் DRDO இடையேயான ஒத்துழைப்பும் இதிலடங்கும்.

---

**9.** **சுற்றுச்சூழல் அமைச்சர் பூபேந்திர யாதவ், இந்தியாவின் முதல் செயல்பாட்டு பனிப்புகை கோபுரத்தை எந்நகரத்தில் திறந்தார்?**



**அ) தில்லி ☑**

ஆ) வாரணாசி

இ) கொல்கத்தா

ஈ) லக்னோ

✓ நடுவண் சுற்றுச்சூழல், வனம் & காலநிலைமாற்ற அமைச்சர் பூபேந்திர யாதவ், இந்தியாவின் முதல் செயல்பாட்டு பனிப்புகை கோபுரத்தை தில்லி ஆனந்த் விகாரில் திறந்துவைத்தார். பனிப்புகை கோபுரம் என்பது வளிமாசைக் குறைப்பதற்காக பெரிய (அ) நடுத்தர அளவிலான காற்று தூய்மைப்படுத்திகளாக வடிவமைக்கப்பட்ட ஒரு கட்டமைப்பாகும். இந்தக் கோபுரத்தை, NBCC (இந்தியா) லிட்’ஐ திட்ட மேலாண் ஆலோசகராக வைத்துக்கொண்டு டாடா ப்ராஜெக்ட்ஸ் லிட் கட்டியுள்ளது.

---

**10.** **PRANA தளத்தைத் தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?**



அ) புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்

ஆ) புவி அறிவியல் அமைச்சகம்

இ) சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம்

**ஈ) சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் ☑**

✓ மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பூபேந்திர யாதவ், 2021 செப்.7 அன்று 'PRANA' என்ற இணையதளத்தைத் தொடங்கினார். தூயகாற்று மற்றும் நீலவானத்தை உறுதிசெய்வதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டிற்கு இணங்க தேசிய தூய்மைவளி திட்டத்தின் முன்னேற்றத்தைக் கண்கா–ணிப்பதற்காக PRANA இணையதளம் பயன்படுத்தப்படும்.

✓ 'நீலவானிற்கான தூயவளி பன்னாட்டு நாளையொட்டி' மேன்மையுறா நகரங்களில் இது தொடங்கப்பட்டது. மேன்மையுறா நகரங்கள் என்பது 5 ஆண்டு காலப்பகுதியில் தேசிய வளி தரத்தை பூர்த்தி செய்யத் தவறிய நகரங்களாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பனாரஸ் பல்கலையில் பாரதியார் பெயரில் தமிழ் ஆய்வு இருக்கை: பிரதமர் மோடி**

மகாகவி பாரதியார் நினைவுநூற்றாண்டை ஒட்டி சுப்ரமணிய பாரதியார் பெயரில் பனாரஸ் பல்கலைக்காகத்தில் தமிழ் ஆய்வு இருக்கை அமைக்கப்படும் என பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

---

**2. சென்னை அம்பத்தூரில் ரூ.2,500 கோடியில் தகவல் தரவு மையம்: முதல்வா் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினாா்**

சென்னை அம்பத்தூரில் ரூ.2,500 கோடியில் அமையவுள்ள தரவு மையத்துக்கு முதல்வா் மு.க.ஸ்டாலின் சனிக்கிழமை அடிக்கல் நாட்டினாா். முதல்வரின் முகாம் அலுவலகத்தில் இருந்து காணொலி வழியாக புதிதாக அமையவுள்ள மையத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ஜப்பான் நாட்டினை தலைமையமாகக் கொண்டு என்டிடி க்ளோபல் தரவு மைய நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனம் 20–க்கும் மேற்பட்ட நாடுகளில் 160 தகவல் தரவு மையங்களை நிறுவியுள்ளன. சென்னையிலும் தனது மையத்தை இந்த நிறுவனம் அமைக்க உள்ளது. இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:– தகவல் தரவு மையங்களை அமைத்துச் செயல்படுவதில் உலகளவில் ஒரு முன்னணி நிறுவனமாக என்டிடி செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனம் ரூ.2,500 கோடி முதலீடு செய்வதுடன், 700 பேருக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரும் வகையில் தகவல் தரவு மையம் மற்றும் கேபிள் இறங்குதளங்களை அமைத்திட உள்ளது. இந்தத் திட்டத்தில் 50 மெகாவாட் சூரிய மின்சக்தி பூங்காவும் நிறுவப்பட உள்ளது.

**6 இடங்களில் சரக்குகளை கையாளும் முனையம்**

சரக்குகளைக் கையாளும் வகையில் ஆறு இடங்களில் ரூ.2,000 கோடியில் முனையங்கள் அமைக்கப்பட உள்ளன. இதற்கான புரிந்துணா்வு ஒப்பந்தம் தமிழக அரசுக்கும், டிபி வேல்ா்ட் குழுமம் இடையே பரிமாறிக் கொள்ளப்பட்டது. இதற்கான நிகழ்வு, சென்னையில் உள்ள முதல்வரின் முகாம் இல்லத்தில் நடந்தது. இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி: ஐக்கிய அரசு அமீரக நாடுகளைச் சோ்ந்த டிபி குழுமம், தூத்துக்குடி, திருவள்ளூா், ஸ்ரீபெரும்புதூா், சேலம், ஈரோடு மற்றும் கோயம்புத்தூா் ஆகிய நகரங்களில் ரூ.2,000 கோடி முதலீட்டில் கன்டெய்னா் முனையம், சிறு துறைமுகம், குளிா்பதனக் கிடங்கு, பல்பொருள் கிடங்குப் பூங்கா, நவீன வா்த்தகக் கிடங்கு மண்டலம் மற்றும் தகவல் தரவு மையம் போன்றவற்றை நிறுவத் திட்டமிட்டுள்ளது. இதற்காக தமிழக அரசுடன் அந்த நிறுவனம் சனிக்கிழமை புரிந்துணா்வு ஒப்பந்தம் செய்து கொண்டது.

ரூ.2,000 கோடி முதலீட்டில் 4 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்க புரிந்துணா்வு ஒப்பந்தம் வழிவகை செய்கிறது. சென்னை, திருவள்ளூா், தூத்துக்குடி, ஸ்ரீபெரும்புதூரில் கன்டெய்னா் முனையங்கள், கன்டெய்னா் சரக்கு நிலையங்கள், சுங்கக் கிடங்குகள், குளிா்பதனக் கிடங்குகள், உள்நாட்டுக் கிடங்கள் போன்ற பல உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்கெனவே நிறுவி உள்ளது குறிப்பிடத்தக்கது.

---

**3. ரஷிய, ஆப்பிரிக்க சிகரங்களின் உச்சியை எட்டி சிஐஎஸ்எஃப் வீராங்கனை சாதனை**

ரஷியா, ஆப்பிரிக்காவிலுள்ள இரண்டு சிகரங்களின் உச்சியை குறுகிய இடைவெளியில் அடைந்து மத்திய தொழிலக பாதுகாப்புப் படை வீராங்கனை (சிஐஎஸ்எஃப்) சாதனை படைத்துள்ளாா். இதுதொடா்பாக தன்சானியாவிலுள்ள இந்திய தூதரக அதிகாரி பினயா பிரதான் சுட்டுரையில் வெளியிட்ட பதிவில், "சிஐஎஸ்எஃப் வீராங்கனை கீதா சாமோத்தா கடந்த ஆகஸ்ட் 13–ஆம் தேதி ரஷியாவிலுள்ள எல்பிரஸ் சிகரத்தின் உச்சியை அடைந்தாா். அவா் ஆப்பிரிக்க கண்டத்தின் மிக உயா்ந்த சிகரமான கிளிமாஞ்சாரோ உச்சியை சனிக்கிழமை எட்டினாா்.

இதன் மூலம் இரண்டு சிகரங்களின் உச்சியை குறுகிய கால இடைவெளியில் எட்டிய இந்தியா் என்ற சாதனையை அவா் படைத்துள்ளாா்'' ' என்று தெரிவித்தாா். ரஷியாவிலுள்ள எல்பிரஸ் சிகரம் கடல் மட்டத்திலிருந்து 5,642 மீட்டா் உயரம் கொண்டது. கிழக்கு ஆப்பிரிக்க நாடான தான்சானியாவிலுள்ள கிளிமாஞ்சாரோ சிகரம் 5,895 மீட்டா் உயரம் கொண்டது.

---

**4. 'குவாலிஃபயா்' கையில் 'கோப்பை' : வரலாறு படைத்தா் எம்மா ராடுகானு**

அமெரிக்காவில் நடைபெறும் யுஎஸ் ஓபன் டென்னிஸ் போட்டியில் மகளிா் ஒற்றையா் பிரிவில் இங்கிலாந்து வீராங்கனை எம்மா ராடுகானு (18) சாம்பியன் ஆனாா். கிராண்ட்ஸ்லாம் போட்டியில் தகுதிச்சுற்று (குவாலிஃபயா்) வழியே முன்னேறி வந்து வாகை சூடிய முதல் போட்டியாளா் என்ற வரலாற்று சாதனையை அவா் எட்டியுள்ளாா். நியூயாா்க் நகரில் சனிக்கிழமை நள்ளிரவு (இந்திய நேரப்படி) நடைபெற்ற இறுதிச்சுற்றில் அவா், கனடா வீராங்கனை லெய்லா ஃபொ்னாண்டஸை 6–4, 6–3 என்ற நோ் செட்களில் 1 மணி நேரம் 51 நிமிஷங்களில் வீழ்த்தினாா்.

அமெரிக்க ஓபன் வரலாற்றிலேயே 2–ஆவது முறையாக இறுதிச்சுற்றில் பதின் வயது போட்டியாளா்கள் இருவா் மோதினா் என்பதால், இந்த இறுதிச்சுற்றுக்கு ரசிகா்களிடையே பலத்த எதிா்பாா்ப்பு இருந்தது. புத்தகப் பையுடன் பள்ளிக்கு வருவது போல் ராடுகானு, லெய்லா இருவருமே களத்துக்குள் நுழைந்தபோது ரசிகா்கள் அனைவரும் எழுந்து நின்று கரவொலி எழுப்பி உற்சாக வரவேற்பு அளித்தனா். விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் இருவருமே தோ்ந்த முன்னணி வீராங்கனைகளை போல ஆடினா். பல ஷாட்கள் ரேலிக்களாகத் தொடா்ந்தன. முன்னதாக, காலிறுதிச்சுற்று வரையில் லெய்லா–ராடுகானு இருவருமே பெரிதாக கவனம் பெற்றிருக்கவில்லை. ஆனால், நவோமி ஒசாகாவை வீழ்த்தி கவனம் ஈா்த்தாா் லெய்லா. மறுபுறம் சத்தமின்றி இதர போட்டியாளா்களை வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறிய ராடுகானு, அதில் லெய்லாவையே வீழ்த்தி அனைவரையும் அசத்தினாா்.

**2–ஆவது கிராண்ட்ஸ்லாம்**

தாம் களம் கண்ட 2–ஆவது கிராண்ட்ஸ்லாம் போட்டியிலேயே சாம்பியனாகியிருக்கிறாா் ராடுகானு. இதற்கு முன் கடந்த விம்பிள்டனில் பங்கேற்ற அவா், அதில் 4–ஆவது சுற்றின்போது மூச்சுத்திணறல் ஏற்பட்டு பாதியில் விலகியிருந்தாா்.

**செட்டை இலக்காமல் சாம்பியன்**

அமெரிக்க ஓபனில் இறுதிச்சுற்று வரை எந்த சுற்றிலுமே ஒரு செட்டை கூட இழக்காமல் சாம்பியன் ஆகிய 2–ஆவது வீராங்கனை ராடுகானு.

முன்னதாக அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் 2014–இல் அவ்வாறு சாம்பியனாகியிருந்தார்.

**18 வயதில் பட்டம்**

கிராண்ட்ஸ்லாம் போட்டியில் சாம்பியன் ஆகியிருக்கும் 2–ஆவது இளம் வீராங்கனை (18) ராடுகானு. முதல் வீராங்கனையாக ரஷியாவின் மரியா ஷரபோவா உள்ளார். அவர் 2004–இல் தனது 17–ஆவது வயதில் விம்பிள்டனில் சாம்பியனானார்.

**44 ஆண்டுகளுக்குப் பிறகு**

இங்கிலாந்து கிராண்ட்ஸ்லாம் போட்டியில் 1977–க்குப் பிறகு சாம்பியனாகியிருக்கும் முதல் இங்கிலாந்து வீராங்கனை ராடுகானு. இதற்கு முன் 1977–இல் விம்பிள்டன் போட்டியில் அந்நாட்டைச் சேர்ந்த விர்ஜினியா வேட் சாம்பியனாகியிருந்தார். ராடுகானு சாம்பியன் ஆன இந்தப் போட்டியில் விர்ஜினியாவும் அவரது ஆட்டத்தை மைதானத்தில் இருந்து நேரடியாக கண்டு களித்தார். ஆட்டத்துக்குப் பிறகு ராடுகானுவை சந்தித்து ஆரத்தழுவி பாராட்டினார்.

---

**5. லா லிகா: அட்லெடிகோ மாட்ரிட் வெற்றி**

ஸ்பெயினில் நடைபெறும் லா லிகா கால்பந்து போட்டியில் அட்லெடிகோ மாட்ரிட் 2–1 என்ற கோல் கணக்கில் எஸ்பான்யோலை வீழ்த்தியது. அட்லெடிகோ மாட்ரிட் தரப்பில் யானிக் கராஸ்கோ (79–ஆவது நிமிஷம்), தாமஸ் லெமார் (90+9 நிமிஷம்) ஆகியோரும், எஸ்பான்யோல் தரப்பில் ரௌல் டி தாமஸும் (40–ஆவது நிமிஷம்) கோலடித்தனர். இதர ஆட்டங்களில் அத்லெடிக் கிளப் 2–0 என்ற கோல் கணக்கில் மல்லோர்காவை வென்றது. லெவான்டே – ராயோ வால்கேனோ அணிகள் மோதிய ஆட்டம் (1–1) டிரா ஆனது.

---

**1. SBI'இன் முன்னாள் தலைவர் ரஜினிஷ் குமாரை பொருளாதார ஆலோசகராக நியமித்த மாநிலம் எது?**

அ) மேற்கு வங்கம்



ஆ) ஒடிஸா

**இ) ஆந்திர பிரதேசம் ☑**

ஈ) அஸ்ஸாம்

✓ ஆந்திர பிரதேச மாநில அரசு தனது பொருளாதார ஆலோசகராக SBI'இன் முன்னாள் தலைவர் ரஜினிஷ் குமாரை நியமித்துள்ளது. அமைச்சரவை அந்தஸ்திலான இப்பதவியினை ஈராண்டுகாலம் அவர் வகிப்பார்.

---

**2. 'பிஸினஸ் பிளாஸ்டர்ஸ்' திட்டத்தைத் தொடங்கியுள்ள மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

அ) சிக்கிம்




**ஆ) தில்லி ☑**

இ) கர்நாடகா

ஈ) மகாராஷ்டிரா

✓ தில்லியின் துணை முதலமைச்சர் மணீஷ் சிசோடியா, 2021 செப்.7 அன்று 'பிசினஸ் பிளாஸ்டர்ஸ்' திட்டத்தைத் தொடங்கிவைத்தார். இந்தத் திட்டம், பள்ளி அளவில் இளம் தொழில்முனைவோரை உருவாக்குவதை நோக்கமாகக்கொண்டதாகும். இந்தத் திட்டம் அனைத்து தில்லி அரசுப் பள்ளிகளிலும் "தொழில் முனைவோர் மனநிலை பாடத்திட்டத்தின்" கீழ் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின்கீழ், 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அவர்கள் தங்கள் தொழிலைத் தொடங்குவதற்கு ₹2,000 தொடக்கப்பணம் வழங்கப்படும்.

---

**3. 'புஜுர்கோன் கி பாத் – தேஷ் கே சாத்' திட்டத்தைத் தொடங்கி உள்ள அமைச்சகம் எது?**

அ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்



**ஆ) கலாச்சார அமைச்சகம் ☑**

இ) சுற்றுலா அமைச்சகம்

ஈ) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

✓ நடுவண் கலாச்சாரத் துறை அமைச்சர் கிஷன் ரெட்டி கங்காபுரம், 'புஜுர்கோன் கி பாத் – தேஷ் கே சாத்' திட்டத்தை மத்திய கலாச்சாரத் துறை இணையமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வாலுடன் இணைந்து புது தில்லியின் IGNCA'இல் தொடங்கிவைத்தார். இந்தத்திட்டம் இளையோர் மற்றும் விடுதலைக்கு முன்பு இந்தியாவில் சுமார் 18 ஆண்டுகள் வாழ்ந்த 95 வயது (அ) அதற்கு மேற்பட்ட வயதுடைய நபர்களுக்கிடையேயான தொடர்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**4. நாடாளுமன்ற அவைத்தலைவர்களின் 5ஆவது உலக மாநாடு நடைபெறும் நகரம் எது?**

அ) பாரிஸ்



ஆ) புது தில்லி

இ) பெய்ஜிங்

**ஈ) வியன்னா ☑**

✓ செப்.7–8 ஆகிய தேதிகளில் வியன்னாவில் நாடாளுமன்ற அவைத் தலைவர்களின் ஐந்தாவது உலக மாநாடு நடைபெறுகிறது. ஆஸ்திரிய நாடாளுமன்றம், நாடாளுமன்றங்களுக்கிடையேயான ஒன்றியம் & ஐநா அவையால் நடத்தப்படும் மாநாட்டில் பங்கேற்பதற்காக மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா வியன்னா சென்றடைந்தார்.

✓ நாடாளுமன்ற பரிமாணத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன் ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை இம்மாநாடு தவறாமல் நடத்தப்படுகிறது.

---

**5. சமீபத்தில், F1 டச்சு கிராண்ட் பிரிக்ஸை வென்றது யார்?**

அ) லூயிஸ் ஹாமில்டன்



**ஆ) மேக்ஸ் வெர்ஸ்டாபென் ☑**

இ) சார்லஸ் லெக்லெர்க்

ஈ) ஜார்ஜ் ரஸ்ஸல்

✓ செப்.5, 2021 அன்று நெதர்லாந்தின் சாண்ட்வார்ட்டில் நடந்த F1 டச்சு கிராண்ட் பிரிக்ஸில் ரெட் புல் பந்தய ஓட்டுநர் மேக்ஸ் வெர்ஸ்டாப்பன் வென்றார். மெர்சிடிஸ் பந்தய ஓட்டுநர்கள் லூயிஸ் ஹாமில்டன் மற்றும் வால்டெரி பொட்டாஸ் ஆகியோர் முறையே இரண்டு மற்றும் மூன்றாம் இடங்களைப் பிடித்தனர்.

---

**6. உச்ச தணிக்கை நிறுவனங்களின் ஆசிய அமைப்பின் (ASOSAI) அவையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?**

அ) ஹூ காய்



ஆ) மிட்சுகிகோ கவாடோ

**இ) G C முர்மு ☑**

ஈ) சென் சூ

✓ 2024–2027ஆம் ஆண்டு வரை உச்ச தணிக்கை நிறுவனங்களின் ஆசிய அமைப்பின் (ASOSAI) அவையின் தலைவராக இந்தியாவின் கம்ப்ரோலர் & ஆடிட்டர் ஜெனரல் GC முர்மு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 2024'இல் ASOSAI'இன் 16ஆவது அவையை நடத்தவுள்ளார்.

---

**7. 'ஆத்ம நிர்பார் கிரிஷி யோஜனா' மற்றும் 'ஆத்ம நிர்பார் பக்வானி யோஜனா' திட்டங்களைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?**

அ) சிக்கிம்



**ஆ) அருணாச்சல பிரதேசம் ☑**

இ) இமாச்சல பிரதேசம்

ஈ) அஸ்ஸாம்

✓ அருணாச்சல பிரதேச மாநில அரசானது ஆத்ம நிர்பார் கிரிஷி யோஜனா மற்றும் ஆத்ம நிர்பார் பக்வானி யோஜனா ஆகிய இரண்டு திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. ஆத்ம நிர்பார் கிரிஷி யோஜனா ஒரு வேளாண் துறை திட்டமாகும். ஆத்ம நிர்பார் பக்வானி யோஜனா என்பது ஒரு தோட்டக்கலைத் திட்டமாகும். இந்த இரண்டு திட்டங்களுக்கும் சேர்த்து தலா ₹60 கோடி என மொத்தம் 120 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

---

**8. G20'க்கான இந்தியாவின் ஷெர்பாவாக நியமிக்கப்பட்டவர் யார்?**

**அ) பியூஷ் கோயல் ☑**



ஆ) அஷ்வினி வைஷ்ணவ்

இ) மன்சுக் மாண்டவியா

ஈ) சுப்ரமணியம் ஜெய்சங்கர்

✓ வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் பியூஷ் கோயல், G20'க்கான இந்தியாவின் செர்பாவாக நியமிக்கப்பட்டுள்ளார். G20 என்பது உலகின் முக்கிய பொருளாதாரங்களை ஒன்றிணைக்கும் ஒரு செல்வாக்குமிக்க குழுவாகும். அடுத்த G20 உச்சிமாநாடு இத்தாலிய தலைமையின்கீழ், அக்.30–31, 2021 வரை நடைபெறவுள்ளது. இந்தியா, டிசம்பர்.1, 2022 முதல் G20 தலைமையை ஏற்று, முதல்முறையாக 2023'இல் G20 தலைவர்களின் உச்சிமாநாட்டையும் நடத்தும்.

---

**9.பின்வரும் எம்மாநிலத்தின் தேசிய நெடுஞ்சாலையில், அவசரகால தரையிறங்கும் வசதியை நடுவண் பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் திறந்து வைத்தார்?**

அ) உத்தர பிரதேசம்



ஆ) இமாச்சல பிரதேசம்

**இ) இராஜஸ்தான் ☑**

ஈ) குஜராத்

✓ இந்திய வான்படைக்கான அவசரகால தரையிறங்கும் வசதியை இராஜ –ஸ்தானில் உள்ள பார்மருக்கு அருகில் இருக்கும் தேசிய நெடுஞ்சாலை 925A'இன் சட்டா–காந்தவ் தடத்தில் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் நிதின் கட்கரி ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். இந்திய வான் படையின் விமானங்களை அவசரமாக தரையிறக்க தேசிய நெடுஞ்சாலை பயன்படுத்தப்படுவது இதுவே முதல்முறை.

---

**10. எந்த மாநிலத்தின் நீர்வழங்கல் உட்கட்டமைப்பை மேம்படுத்து –வதற்காக இந்திய அரசும் ஆசிய வளர்ச்சி வங்கியும் $112 மில்லியன் மதிப்பிலான கடனொப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன?**

அ) பீகார்

ஆ) இராஜஸ்தான்

இ) மேற்கு வங்கம்

**ஈ) ஜார்க்கண்ட் ☑**

- ✓ ஜார்க்கண்ட் மாநிலத்தில் நீர்வழங்கல் உட்கட்டமைப்பை மேம்படுத்துவ –தற்காக இந்திய அரசும் ஆசிய வளர்ச்சி வங்கியும் $112 மில்லியன் மதிப்பிலான கடனொப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. ஜார்க்கண்ட் மாநிலத்தின் 4 நகரங்களில் சேவை விநியோகத்தை மேம்படுத்துவதற் –காக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் திறன்களை இந்தக் கடன் வலுப்படுத்தும்.
- ✓ இது இராஞ்சி மற்றும் ஜும்ரி தெலையா, ஹுசைனாபாத் மற்றும் மேதினி நகர் ஆகிய 3 நகரங்களில் தொடர்ச்சியான, சுத்திகரிக்கப்பட்ட குழாய் நீர் விநியோகத்தை உறுதிசெய்யும். இந்த நகரங்கள் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பின்தங்கிய பகுதிகளில் அமைந்துள்ளன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தேசிய கல்வி நிறுவனங்கள் தரவரிசை: சவீதா பல் மருத்துவக் கல்லூரி மூன்றாமிடம்**

தேசிய அளவில் சிறந்த கல்வி நிறுவனங்களின் பட்டியலில் (என்ஐஆர்எஃப்) பல் மருத்துவப் பிரிவில் சென்னை அருகில் உள்ள சவீதா பல் மருத்துவக் கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. மத்திய கல்வி அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் தேசிய நிறுவனத் தரவரிசைக் கட்டமைப்பு (என்ஐஆர்எஃப்) ஆண்டுதோறும் சிறந்த பல்கலைக்கழகம், கல்லூரிகளின் தேசிய தரவரிசைப் பட்டியலை வெளியிட்டு வருகிறது. அந்த வகையில் நிகழாண்டுக்கான தரவரிசைப் பட்டியல் கடந்த வாரம் வெளியிடப்பட்டது.

இதில் சென்னை அருகில் உள்ள சவீதா பல் மருத்துவக் கல்லூரி, சவீதா சட்டக் கல்லூரி ஆகியவை மாநில அளவில் முதலிடம் பெற்றுள்ளன. மேலும் தேசிய அளவில் சவீதா பல் மருத்துவக் கல்லூரி 78.33 மதிப்பெண்களுடன் 3–ஆவது இடத்தையும், சவீதா சட்டக் கல்லூரி 55.19 மதிப்பெண்களுடன் 13–ஆவது இடத்தையும் பெற்றுள்ளன. ஒட்டுமொத்தமாக சவீதா நிகர் நிலைப் பல்கலைக்கழகம் தேசிய அளவில் 29–ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

---

**2. செப்டம்பரில் கோவேக்ஸின் தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பு ஒப்புதல் அளிக்க வாய்ப்பு**

இந்த மாதம் கோவேக்ஸின் தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பு ஒப்புதல் அளிக்க வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவில் கோவிஷீல்ட், கோவேக்ஸின், ஸ்புட்னிக்–வி கரோனா தடுப்பூசிகளை அவசரகால அடிப்படையில் பயன்படுத்த மத்திய அரசு அனுமதியளித்துள்ளது. அதேவேளையில் அமெரிக்காவின் ஃபைஸா், ஜான்சன் & ஜான்சன், மாடா்னா, சீனாவின் சைனோஃபாா்ம், பிரிட்டனின் கோவிஷீல்டு தடுப்பூசிகளை அவசரகால அடிப்படையில் பயன்படுத்த அனுமதியளித்துள்ள உலக சுகாதார அமைப்பு, இந்தியாவில் பாரத் பயோடெக் நிறுவனம் உருவாக்கிய கோவேக்ஸின் தடுப்பூசிக்கு மட்டும் ஒப்புதல் அளிக்கவில்லை.

அந்தத் தடுப்பூசிக்கு ஒப்புதல் அளிக்கத் தேவையான ஆவணங்களை உலக சுகாதார அமைப்பிடம் பாரத் பயோடெக் நிறுவனம் வழங்கியுள்ளதாக கடந்த ஜூலை மாதம் மத்திய அரசு தெரிவித்திருந்தது. இந்நிலையில் கோவேக்ஸின் தடுப்பூசியின் அவசரகால பயன்பாட்டுக்கு இந்த மாதம் உலக சுகாதார அமைப்பு அனுமதி அளிக்க வாய்ப்புள்ளது என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---

**3. செப்.24–இல் க்வாட் கூட்டம்: பிரதமா் மோடி அமெரிக்கா பயணம்**

க்வாட் கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளின் தலைவா்கள் பங்கேற்கும் கூட்டம் அமெரிக்க தலைநகா் வாஷிங்டனில் வரும் 24–ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதையொட்டி பிரதமா் நரேந்திர மோடி அமெரிக்கா பயணிக்கவுள்ளாா். க்வாட் கூட்டமைப்பில் இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில் அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் முதல்முறையாக வரும் 24–ஆம் தேதி க்வாட் தலைவா்களின் கூட்டம் நடைபெறவுள்ளது. அமெரிக்க அதிபா் ஜோ பைடன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் இந்திய பிரதமா் மோடி, ஆஸ்திரேலிய பிரதமா் ஸ்காட் மோரிஸன், ஜப்பான் பிரதமா் யோஷிஹிடே சுகா ஆகியோா் கலந்துகொள்கின்றனா்.

க்வாட் கூட்டமைப்பிலுள்ள நாடுகளுக்கு இடையிலான உறவை வலுப்படுத்துவது, கரோனா தொற்று போன்ற பிரச்னைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது, பருவநிலை மாற்றம், கட்டுப்பாடற்ற இந்தோ–பசிபிக் பிராந்தியம், புதிய தொழில்நுட்பங்கள் உள்ளிட்டவை தொடா்பாக கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று வெள்ளை மாளிகை ஊடகப் பிரிவு செயலா் ஜென் சாகி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த முறை காணொலி வழியாக நடைபெற்ற இந்தக் கூட்டம் இம்முறை நேரில் நடைபெறவுள்ளதால் அதில் பங்கேற்க பிரதமா் மோடி அமெரிக்கா செல்லவுள்ளது உறுதியாகியுள்ளது.

---

**4. தமிழ்ப் பல்கலை.யின் திறனாய்வு செம்மல் விருதுக்கு க. பஞ்சாங்கம் தோ்வு**

தஞ்சாவூா் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ந. சுப்புரெட்டியாா் நூற்றாண்டு அறக்கட்டளை சாா்பில் வழங்கப்படும் திறனாய்வுச் செம்மல் விருதுக்கு க. பஞ்சாங்கம் தோ்வு செய்யப்பட்டுள்ளாா். இதுகுறித்து தமிழ்ப் பல்கலைக்கழகம் திங்கள்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள பேராசிரியா் ந. சுப்புரெட்டியாா் நூற்றாண்டு அறக்கட்டளை சாா்பில் திறனாய்வுச் செம்மல் விருது நிகழாண்டு முதல் வழங்கப்படவுள்ளது.

இவ்விருதுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டு, விண்ணப்பங்கள், பரிந்துரைகள் பெறப்பட்டன. இதில் 2021ஆம் ஆண்டுக்கான திறனாய்வுச் செம்மல் விருதுக்குத் தமிழின் முன்னோடி இலக்கியத் திறனாய்வாளரான புதுச்சேரியைச் சோ்ந்த பேராசிரியா் க. பஞ்சாங்கம் ஒருமனதாகத் தோ்வுக் குழுவால் தோ்ந்தெடுக்கப்பட்டாா். இதற்கான பரிசு வழங்கும் நிகழ்வு செப்டம்பா் 27 ஆம் தேதி தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும். இதில், விருதுடன் ரூ. 25,000 தொகையும், சான்றிதழும் வழங்கப்படும்.

---

**1. மன்னார் வளைகுடாவில் ஆற்றல் தீவை உருவாக்குவதற்காக, தமிழ்நாடு, எந்த நாட்டோடு கூட்டிணைந்துள்ளது?**

அ) ஜெர்மனி

**ஆ) டென்மார்க் ☑**

இ) ஜப்பான்

ஈ) தென் கொரியா



✓ தமிழ்நாடும் டென்மார்க்கும் இலங்கையின் மேற்கு கடற்கரைக்கும் இந்தியாவின் தென்கிழக்கு முனைக்கும் இடையே அமைந்துள்ள மன் –னார் வளைகுடாவில் ஆற்றல் தீவொன்றை உருவாக்க திட்டமிட்டுள்ள –ன. பசுமை ஆற்றல் துறையில் தமிழ்நாடு தனது தடத்ததை விரிவாக்க விழைவதால் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது.

✓ இந்த இலக்கை அடைய, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறையில் $5–10 பில்லியன் நிதியை தமிழ்நாட்டில் டென்மார்க் முதலீடு செய்ய வாய்ப்பு உள்ளது. இந்த முதலீட்டின்மூலம், 4–10 GW ஆற்றலை உற்பத்தி செய்ய முடியும்.

---

**2. எம்மாநிலத்தின் கிராமப்புற இணைப்பை விரிவுபடுத்துவதற்காக இந்திய அரசாங்கமும் ஆசிய வளர்ச்சி வங்கியும் $300 மில்லியன் டாலர் மதிப்பிலான கடனொப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன?**

அ) அஸ்ஸாம்

**ஆ) மகாராஷ்டிரா ☑**

இ) ஒடிஸா

ஈ) ஜார்க்கண்ட்



✓ ஆசிய வளர்ச்சி வங்கியும் இந்திய அரசும் மகாராஷ்டிரா மாநிலத்தின் கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்த உதவும் வகையில் கிராமப்புற இணைப்புகளை மேம்படுத்துவதற்காக கூடுதல் நிதியுதவியாக $300 மில்லியன் கடனொப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. தற்போதைய மகாராஷ்டிர கிராமப்புற இணைப்பு மேம்பாட்டு திட்டத்திற்கான கூடுதல் நிதி, 1100 கிராமப்புற சாலைகள் மற்றும் 230 பாலங்களை மேம்படுத்த உதவும்.

---

**3. CII தேசிய ஆற்றல் தலைவர் மற்றும் சிறப்பு ஆற்றல் திறன் அலகு ஆகிய மதிப்புமிக்க விருதுகளை வென்றுள்ள இந்திய வானூர்தி நிலையம் எது?**

அ) நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சர்வதேச விமான நிலையம்

**ஆ) தில்லி சர்வதேச விமான நிலைய லிட் ☑**

இ) சென்னை சர்வதேச விமான நிலைய லிட்

ஈ) சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையம்

✓ இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு (CII) ஏற்பாடு செய்த 22ஆவது தேசிய விருது வழங்கும் விழாவில், தில்லி சர்வதேச விமான நிலைய லிட் CII 'தேசிய ஆற்றல் தலைவர்' மற்றும் 'சிறந்த ஆற்றல் திறன் அலகு' ஆகிய மதிப்புமிக்க விருதுகளை வென்றுள்ளது.

---

**4. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மேம்பாட்டு திட்டங்களுக்கான புரிந்து உணர்வு ஒப்பந்தத்தில் இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம், பின்வரும் எந்த நிறுவனத்துடன் கையெழுத்திட்டது?**

**அ) தமிழ்நாடு மின்னுற்பத்தி மற்றும் விநியோகக் கழகம் ☑**

ஆ) குஜராத் மாநில மின்சாரக் கழகம்

இ) மேற்கு வங்க மாநில மின்சார விநியோகக் கழகம்

ஈ) தெற்கு பீகார் மின் விநியோக நிறுவனம்

✓ இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிறுவனமானது தமிழ்நாடு மின்னுற்பத்தி & விநியோகக்கழகத்துடனான (TANGEDCO) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், IREDA, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டமேம்பாட்டுக்காக TANGEDCO'க்கு தொழில்நுட்ப நிபுணத்துவத்தையும் ஆதரவையும் விரிவுபடுத்தும்.

✓ IREDA, TANGEDCO'க்கு நிதிசார் மாதிரிகளை உருவாக்குதல், சந்தை கருவியைப் புரிந்துகொள்வது, முன்மொழியப்பட்ட கடன் தேவைக்கான காப்பீட்டு சேவைகள், சந்தைக்கு முந்தைய கணக்கெடுப்புகள் மற்றும் சாத்தியமான முதலீட்டாளர்களிடையே ஆர்வத்தைத் தூண்டுவதன் மூலம் கடன் திரட்டுவதில் உதவி செய்யும்.

---

**5. அண்மையில், 2 நாள் நடைபெற்ற, 'நிலவு அறிவியல் பயிலரங்கம் 2021'ஐ தொடங்கிய நிறுவனம் எது?**

**அ) இஸ்ரோ ☑**

ஆ) நாசா

இ) ஜஜஎஸ்சி

ஈ) பிர்லா கோளரங்கம்



✓ இந்திய விண்வெளி ஆய்வுமையமானது (இஸ்ரோ) சந்திரயான்–2 விண்கத்தின் ஈராண்டுகால செயல்பாட்டின் நிறைவை நினைவுகூரும் வகையில் 2 நாள் 'நிலவு அறிவியல் பயிலரங்கத்தைத்' தொடங்கியது.

✓ சந்திரயான்–2 ஆனது நிலவை 9,000'க்கும் மேற்பட்ட முறை சுற்றி முடித்துள்ளது. ISRO தலைவர், சந்திரயான்–2 தரவின் அடிப்படையில் ஆவணங்களையும், விண்கலத்தின் தரவுகளையும் வெளியிட்டார்.

---

**6. இமயமலை வெற்றி நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

**அ) செப்டம்பர் 9 ☑**

ஆ) செப்டம்பர் 10

இ) செப்டம்பர் 11

ஈ) செப்டம்பர் 12



✓ 2021 செப்.9 அன்று நௌலா அறக்கட்டளையுடன் இணைந்து தேசிய தூய்மை கங்கை திட்டம், இமயமலை வெற்றி நாளை ஏற்பாடு செய்தது. "Contribution of Himalayas and our responsibilities" என்பது நடப்பு (2021) ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும். இமயமலை வெற்றி நாளானது ஆண்டுதோறும் செப்டம்பர்.9ஆம் தேதி உத்தரகண்ட் மாநிலத்தில் கொண்டாடப்படுகிறது. இமயமலை சுற்றுச்சூழல் மற்றும் பிராந்தியத்தை பாதுகாக்கும் நோக்கத்துடன் இது கொண்டாடப்படுகிறது. கடந்த 2015ஆம் ஆண்டில் அப்போதைய முதல்வரால் அதிகாரப்பூர்வமாக இமயமலை வெற்றி நாள் அறிவிக்கப்பட்டது.

---

**7. கரைநீங்குங்காற்று (Offshore Wind) குறித்த சிறப்பு மையத்தைத் தொடங்குவதற்காக, எந்த நாட்டோடு, இந்தியா, கூட்டுசேர்ந்துள்ளது?**

அ) கனடா

ஆ) பிரான்ஸ்

**இ) டென்மார்க் ☑**

ஈ) ஜப்பான்



✓ மத்திய மின்சாரம் மற்றும் புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் R K சிங், டென்மார்க்கின் காலநிலை, எரிசக்தி மற்றும் பயன்பாட்டுத் துறை அமைச்சர் டான் ஜோர்கென்சனை புதுதில்லியில் சந்தித்தார். பசுமையை நோக்கிய ஆற்றல்மாற்றம் இந்தியாவின் கொள்கையின் ஒரு முக்கிய பகுதியாகும் என்பது சிறப்பிக்கப்பட்டது.

✓ 2030'க்குள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் உற்பத்தித்திறனை 450 GW அளவுக்கு அடைய இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது. தற்போது, இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் 146 GW ஆக உள்ளது, மேலும் லடாக், அந்தமான் & நிக்கோபார் தீவு மற்றும் இலட்சத்தீவு தீவை எரிசக்தி மற்றும் போக்குவரவில் பசுமையாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இரு அமைச்சர்களும் கூட்டாக இணைந்து பசுமை உத்தி கூட்டாண்மையின்கீழ், 'கரைநீங்குங்காற்று குறித்த சிறப்பு மையத்தைத்' தொடங்கினர்.

---

**8. ஸ்வச் சர்வேக்ஷன் கிராமீன்–2021'ஐ தொடங்கியுள்ள நடுவண் அமைச்சகம் எது?**

அ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஆ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

இ) சிறுபான்மை விவகார அமைச்சகம்

**ஈ) ஜல் சக்தி அமைச்சகம் ☑**

✓ ஜல் சக்தி அமைச்சகத்தின் இணையமைச்சர், ஸ்ரீ பிரகலாத் சிங் பட்டேல், தூய்மை இந்தியா இயக்கம் (கிராமீன்) கட்டம் – II'இன்கீழ் 'ஸ்வச்

சர்வேக்ஷன் கிராமீன் – 2021'ஐ தொடங்கிவைத்தார். 2021 செப்டம்பர்.9 அன்று குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை ஏற்பாடு செய்த நிகழ்வில் இது தொடங்கப்பட்டது. 'ஸ்வச் சர்வேக்ஷன் கிராமீன் – 2021', நாடு முழுவதும் குடிநீர் & சுகாதாரத்துறையால் மேற்கொள்ளப்படும்.

---

**9. புனைவுநாவலான பிரனேசிக்காக புனைகதைக்கான பெண்கள் பரிசை வென்றவர் யார்?**



அ) J K ரோலிங்

**ஆ) சுசன்னா கிளார்க் ☑**

இ) சுதா மூர்த்தி

ஈ) மைக்கேல் ஒபாமா

✓ பிரிட்டிஷ் எழுத்தாளர் சுசன்னா கிளார்க் தனது மனதைவருடும் புனைவு நாவலான 'பிரனேசி'க்காக புகழ்பெற்ற பெண்கள் பரிசை வென்றார். 61 வயதான கிளார்க்கின் இந்நாவலுக்காக 30,000 பவுண்டுகள் ($41,000) பரிசு வழங்கப்பட்டது.

---

**10. உலக தற்கொலை தடுப்பு நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**




அ) செப்டம்பர் 11

**ஆ) செப்டம்பர் 10 ☑**

இ) செப்டம்பர் 9

ஈ) செப்டம்பர் 12

✓ உலக தற்கொலை தடுப்பு நாளானது ஆண்டுதோறும் செப்.10 அன்று கடைப்பிடிக்கப்படுகிறது. "Creating hope through action" என்பது நடப்பு (2021) ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும். உலக தற்கொலை தடுப்பு நாள் என்பது ஆண்டுதோறும் செப்டம்பர்.10 அன்று ஒரு விழிப்புணர்வு நாளாக அனுசரிக்கப்படுகிறது. இந்தநாள், சர்வதேச தற்கொலை தடுப்பு சங்கத்தால் ஏற்பாடு செய்யப்படுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 15-09-2021 – 'பேரறிஞர்' அண்ணா அவர்களின் 113ஆவது பிறந்தநாள்.**

---

**2. வாகனங்களுக்கு 5 ஆண்டு 'பம்பர் டு பம்பர்' காப்பீடு கட்டாயம் என்ற உத்தரவு வாபஸ்**

'பம்பர் டு பம்பர்' அடிப்படையில் வாகனங்களுக்கு ஐந்து ஆண்டுக்கான காப்பீடு கட்டாயம் என்ற உத்தரவை சென்னை உயர்நீதிமன்றம் வாபஸ் பெற்றுள்ளது. சாலைவிபத்து மரணம்தொடர்பான வழக்கு ஒன்றில், 'பம்பர் டு பம்பர்' அடிப்படையில் வாகனங்களுக்கு ஐந்து ஆண்டுக்கான காப்பீடு கட்டாயம் என்று சென்னை உயர்நீதிமன்றம் கூறியிருந்தது. 'பம்பர் டு பம்பர்' அடிப்படையில் வாகன உரிமையாளர், ஓட்டுநர், வாகனத்தில் பயணிக்கும் அனைவருக்கும் காப்பீடு செய்யப்படுகிறது.

செப்.1ஆம் தேதி முதல் விற்கப்படும் அனைத்து வாகனங்களுக்கும் 'பம்பர் டு பம்பர்' அடிப்படையில் 5 ஆண்டு காப்பீடு கட்டாயம் என்று சென்னை உயர்நீதிமன்றம் கூறியிருந்த நிலையில், தற்போதைய சூழ்நிலையில் அனைத்து வாகனங்களுக்கும் சாத்தியமில்லை என்று எதிர்தரப்பினர் கூறியதை அடுத்து, நீதிமன்றம் கூறிய உத்தரவு வாபஸ் பெறப்பட்டுள்ளது. பயணிகளின் பாதுகாப்பு கருதி உரிய சட்டதிருத்தங்கள்கொண்டு வரப்படும் என்று நம்புவதாக இந்த வழக்கினை விசாரித்த நீதிபதி வைத்தியநாதன் அமர்வு கூறியுள்ளது.

---

**3. காவல்துறையில் 134 பேருக்கு அண்ணா பதக்கங்கள்: முக ஸ்டாலின் அறிவிப்பு**

காவல் துறையில் 134 பேருக்கு நடப்பாண்டில் அண்ணா பதக்கங்கள் அளிக்கப்படும் என முதல்வர் முகஸ்டாலின் அறிவித்துள்ளார். இதுகுறித்து வெளியிட்ட அறிவிப்பு: தமிழ்நாட்டில் காவல், தீயணைப்பு, சிறைத்துறை, ஊர்க்காவல், விரல்ரேகை உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் சிறப்பாகப் பணியாற்றும் காவலர்களைப்பாராட்டும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர்.15'இல் அண்ணா பிறந்த தினத்தின் போது முதலமைச்சரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு காவல்துறையில் இரண்டாம் நிலை காவலர் முதல் காவல் கண்காணிப்பாளர் வரையிலான 100 பணியாளர்கள், தீயணைப்புத் துறையில் எட்டு பேர், சிறைத் துறையில் 10 பேர், ஊர்க்காவல் படையில் 5 பேர், விரல்ரேகைப் பிரிவில் 2 பேர், தடய அறிவியல் துறையில் 2 பேருக்கும் பதக்கங்கள் அளிக்கப்படும். மேலும், மதுரையில் உள்ள சஞ்சய் டெக்ஸ்டைல் என்ற நிறுவனத்தில் நடந்த விபத்தில் தீயை அணைக்கப் போராடி உயிரைத் தியாகம் செய்த ஏழு தீயணைப்பு வீரர்களுக்கும் அண்ணா பதக்கங்கள் அளிக்கப்பட உள்ளன.

மொத்தமாக 134 பேருக்கு பதக்கங்கள் வழங்கப்படுகிறது. இந்தப் பதக்கங்கள் வேறொரு நாளில் அளிக்கப்படும்.

---

**3. 'சன்சத் தொலைக்காட்சி' இன்று தொடக்கம்**

நாடாளுமன்ற நடவடிக்கைகளை நேரடி ஒளிபரப்பு செய்வதற்கான 'சன்சத்' தொலைக்காட்சியை குடியரசு துணைத்தலைவர் வெங்கையா நாயுடு, பிரதமர் மோடி, மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா ஆகியோர் இணைந்து தொடக்கி வைக்கின்றனர். சர்வதேச ஜனநாயக தினமான செப்.15'இல் இந்த தொலைக்காட்சி சேனல் தொடங்கப்படுவதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கூட்டத்தொடர் நடைபெறும்போது மக்களவை நடவடிக்கைகளை 'லோக் சபா' தொலைக்காட்சியும், மாநிலங்களவை நடவடிக்கைகளை 'ராஜ்ய சபா' தொலைக்காட்சியும் நேரடியாக ஒளிபரப்பிவருகின்றன. அத்தொலைக்காட்சிகளை ஒன்றாக இணைத்து 'சன்சத்' என்ற பெயரில் ஒரே தொலைக்காட்சியாக மாற்ற மத்திய அரசு கடந்த பிப்ரவரியில் முடிவெடுத்தது.

அதன்படி இப்போது சன்சத் தொலைக்காட்சி அதிகாரபூர்வமாகத்தொடக்கி வைக்கப்படுகிறது. இதன்மூலமாக மக்களவை, மாநிலங்களவை நடவடிக்கைகளை மக்கள் நேரடியாக அறிந்துகொள்ளமுடியும். இதுதவிர மற்ற நாள்களில் நாட்டின் ஜனநாயக அமைப்புகள், அரசு நிர்வாகம், திட்டங்கள், கொள்கைகள் அமல்படுத்தப்படும் விதம், இந்தியாவின் கலாசாரம், வரலாற்றுத் தொன்மை, நாட்டுநலன்சார்ந்த செயல்பாடுகள் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**4. யுஎஸ் ஓபன்: சக்கர நாற்காலியில் இரு சாதனையாளர்கள்: 'கோல்டன் ஸ்லாம்' பெற்றனர் குருட், அல்காட்**

யுஎஸ் ஓபன் டென்னிஸ் போட்டியில் ஜோகோவிச் சாதனை படைப்பாரா என சர்வதேச விளையாட்டு ரசிகர்களும் ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருந்த நிலையில், அதே யுஎஸ் ஓபனில் சத்தமின்றி இருவர் சக்கரநாற்காலியில் இருந்தபடியே சாதனை படைத்திருக்கிறார்கள்.

US ஓபன் போட்டியில் ஆடவர், மகளிர் ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவு போட்டிகளுடன், ஜூனியர் பிரிவு போட்டிகளும், சக்கர நாற்காலியுடன் விளையாடும் மாற்றுத்திறனாளிகளுக்கான போட்டிகளும் நடப்பது வழக்கம். அந்த வகையில் இந்த முறை சக்கரநாற்காலி வீரர், வீராங்கனைகளுக்காக நடத்தப்பட்ட போட்டியில் மகளிர்பிரிவில் நெதர்லாந்தின் டைடே டி குருட் (24), ஆடவர் பிரிவில் ஆஸ்திரேலியாவின் டைலன் அல்காட் (30) சாம்பியனாகியுள்ளனர். சிறப்பு என்னவென்றால், இவர்கள் இருவருமே இந்த சாம்பியன்ஷிப் பட்டம்மூலம் 'கோல்டன் ஸ்லாம்' சாதனையை எட்டியிருக்கிறார்கள்.

ஒரே டென்னிஸ் காலண்டரில் வரும் 4 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளிலும் சாம்பியனாகி, அதே ஆண்டில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியிலும் சாம்பியன் ஆவதே 'கோல்டன் ஸ்லாம்' எனப்படுகிறது.

குருட் மற்றும் அல்காட் இருவருமே தற்போது அத்தகைய சாதனையை எட்டியிருக்கிறார்கள். நடப்பு காலண்டரில் ஏற்கெனவே ஆஸ்திரேலிய ஓபன், பிரெஞ்சு ஓபன், விம்பிள்டன் ஆகியவற்றில் கோப்பை வென்றிருந்த இருவரும், பின்னர் டோக்கியோ பாராலிம்பிக்கிலும் தங்கம் வென்றிருந்தனர். கடைசியாக தற்போது நடைபெற்ற யுஎஸ் ஓபனில் இருவருமே சாம்பியனாகி கோல்டன் ஸ்லாம் மைல் கல்லை எட்டியிருக்கிறார்கள்.

இதில் சக்கரநாற்காலி போட்டியாளர்களில் 'கோல்டன் ஸ்லாம்' வென்ற முதல் போட்டியாளர் என்ற பெருமையை குருட் எட்ட, அவரைத் தொடர்ந்து அல்காட்டும் அதே சாதனையை படைத்தார்.

**கிராண்ட்ஸ்லாமில் இதுவரை சாம்பியன் பட்டம்**

**டைடே டி குருட்**

ஆஸ்திரேலிய ஓபன் – 2018, 2019, 2021

பிரெஞ்சு ஓபன் – 2019, 2021

விம்பிள்டன் – 2017, 2018, 2021

US ஓபன் – 2018, 2019, 2020, 2021 (இரட்டையர் பிரிவில் 12 பட்டங்கள்) (பாராலிம்பிக் – ஒரு வெள்ளி (2016), ஒரு தங்கம் (2021)

**டைலன் அல்காட்**

ஆஸ்திரேலிய ஓபன் – 2015, 2016, 2017, 2018, 2019, 2020, 2021

பிரெஞ்சு ஓபன் – 2019, 2020, 2021

விம்பிள்டன் – 2019, 2021

US ஓபன் – 2015, 2018, 2021 (இரட்டையர் பிரிவில் 8 பட்டங்கள்) (பாராலிம்பிக் – இரு தங்கம் (2016, 2021)

---

**5. ஓய்வு பெற்றார் மலிங்கா**

இலங்கை கிரிக்கெட் வீரர் லசித் மலிங்கா (38), அனைத்து விதமான கிரிக்கெட்டிலும் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார்.

வேகப்பந்துவீச்சாளரான அவர், உலகின் முன்னணி பேட்ஸ்மேன்கள் மிரளும் வகையில் யார்க்கர் பந்துகள் வீசுவதில் வல்லவராக இருந்தார். ஏற்கெனவே டெஸ்ட் மற்றும் ஒன்டே கிரிக்கெட்டிலிருந்து கடந்த ஜனவரி மாதம் ஓய்வு பெற்றிருந்த மலிங்கா, தற்போது டி20 கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட்டில் கடந்த 2004 ஜூலைமாதம் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர்மூலம் களம்கண்ட மலிங்கா, கடைசியாக 2020 மார்ச்சில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான T20 தொடரில் விளையாடி –யிருந்தார். IPL கிரிக்கெட் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக அவர் விளையாடினார்.

---

**1. அண்மையில் பதவி விலகிய ஆளுநர் பேபி இராணி மௌரியா, பின்வரும் எந்த மாநிலத்தின் ஆளுநராக இருந்தார்?**



அ) உத்தர பிரதேசம்

ஆ) ஒடிஸா

இ) மணிப்பூர்

**ஈ) உத்தரகாண்ட் ☑**

✓ உத்தரகாண்ட் மாநில ஆளுநர் பேபி இராணி மௌரியா தனது பதவிக் காலம் முடிவதற்கு ஈராண்டுகளுக்கு முன்பே (2021 செப்டம்பர்.8) பதவி விலகியுள்ளார். அவர்தனது பதவிவிலகல் கடிதத்தை குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்திடம் வழங்கினார். அவர், கடந்த 2018 ஆகஸ்ட்.26 அன்று உத்தரகாண்ட் மாநிலத்தின் ஆளுநராக பதவியேற்றார்.

---

**2. புவி அறிவியல் துறையில் ஒத்துழைப்பு குறித்து இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?**



அ) ஆஸ்திரேலியா

ஆ) பிரான்ஸ்

**இ) ரஷ்யா ☑**

ஈ) நியூசிலாந்து

✓ இந்திய புவியியல் ஆய்வு நிறுவனம் மற்றும் உருசிய கூட்டமைப்பு சட்டங்களின்கீழ் நிறுவப்பட்டுள்ள அரசுத்துறை நிறுவனமான ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனி ராஸ்ஜியாலோஜியா இடையே புவி அறிவியல் துறை –யில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட பிரதமர் மோடி தலைமையிலான அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

---

**3. சில்சார் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் சுகாதார உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக, அஸ்ஸாம் மாநில அரசு, எந்த அமைப்போடு கூட்டிணைந்துள்ளது?**

**அ) இந்திய நிலக்கரி நிறுவனம் ☑**

ஆ) NTPC லிட்

இ) AIIMS

ஈ) ICMR

Coal India Ltd

✓ நிலக்கரி அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய நிலக்கரி நிறுவனம் (CIL) சில்சார் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையின் சுகாதார உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக அஸ்ஸாம் மாநில அரசின் நல வாழ்வு மற்றும் குடும்பநலத்துறையுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்தப் புதிய CSR முயற்சியில், CIL, ₹5 கோடி மதிப்பீட்டில், சில்சார் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் ICU வசதி மற்றும் மருத்துவ வாயு குழாய் ஆகியவற்றை அமைக்கும்.

---

**4. அண்மையில், ரிசர்வ் வங்கியால் உடனடி திருத்த நடவடிக்கை (Prompt Corrective Action) கட்டமைப்பிலிருந்து நீக்கப்பட்ட பொதுத் துறை வங்கி எது?**

அ) யூனியன் பேங்க் ஆப் இந்தியா

ஆ) பஞ்சாப் & சிந்து வங்கி


இ) பேங்க் ஆப் இந்தியா

**ஈ) UCO வங்கி ☑**

✓ இந்திய ரிசர்வ் வங்கியானது பொதுத்துறை வங்கியான UCO வங்கியை நிதி மற்றும் கடன்விவரங்களை மேம்படுத்துவதற்கான உடனடி திருத்த நடவடிக்கை கட்டமைப்பிலிருந்து நீக்கியுள்ளது. இம்முடிவு, அவ்வங்கிக்கு கடன் வழங்குவதற்கு (குறிப்பாக பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு நிறுவனங்களுக்கு) அதிக சுதந்திரத்தை அளிக்கிறது.

---

**5. கல்வியை ஆபத்திலிருந்துப் பாதுகாப்பதற்கான சர்வதேச நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**




**அ) செப்டம்பர் 9 ☑** ஆ) செப்டம்பர் 10

இ) செப்டம்பர் 12 ஈ) செப்டம்பர் 15

✓ கல்வியை ஆபத்திலிருந்து பாதுகாப்பதற்கான சர்வதேச நாள் செப்9 அன்று உலகளவில் கடைபிடிக்கப்படுகிறது. ஆபத்திலிருந்து கல்வியைப் பாதுகாப்பதற்கான முதல் சர்வதேச நாள், 2020 செப்.9 அன்று அனுசரிக் –கப்பட்டது. இராணுவ மோதல்களால் பாதிக்கப்பட்ட நாடுகளில் வாழும் குழந்தைகள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் குறித்த விழிப்புணர்வை பரப்பவும் இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.

---

**6. அண்மையில், TATA AIA ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் விளம்பரத் தூதுவராக அறிவிக்கப்பட்டவர் யார்?**

அ) பஜ்ரங் புனியா

**ஆ) நீரஜ் சோப்ரா ☑**

இ) லவ்லினா போர்கோஹெய்ன்

ஈ) PV சிந்து

✓ இந்திய தடகள வீரரும் ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்றவருமான நீரஜ் சோப்ராவை TATA AIA ஆயுள்காப்பீட்டு நிறுவனம் அதன் விளம்பரத் தூதுவராக அறிவித்துள்ளது. நீரஜ் சோப்ராவால் கையொப்பமிடப்பட்ட முதல் விளம்பரத் தூதுவ கூட்டாண்மையையும் இது குறிக்கிறது.

---

**7. அண்மையில் இந்தியா, பின்வரும் எந்த நாட்டுடன் கடல்சார் விவகார பேச்சுவார்த்தையை நடத்தியது?**



அ) ஆஸ்திரேலியா

ஆ) இங்கிலாந்து

**இ) ஜப்பான் ☑**

ஈ) பிரான்ஸ்

✓ 2021 செப்.9 அன்று இந்தியாவும் ஜப்பானும் தங்கள் ஆறாவது கடல்சார் விவகார பேச்சுவார்த்தையை மெய்நிகர் வடிவத்தில் நடத்தின. கடல்சார் பாதுகாப்புச்சூழல், பிராந்திய ஒத்துழைப்பு நடவடிக்கைகள் & இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் இருநாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்புக்கா –ன வாய்ப்புகள்பற்றிய ஆலோசனைகள் இதில் கலந்துரையாடப்பட்டன.

---

**8. சமீபத்தில், குடிபெயர்ந்தோரின் பாதுகாவலர்களின் நான்காவது மாநாட்டில் சிறப்புரை வழங்கிய வெளியுறவு இணையமைச்சர் யார்?**



அ) நித்யானந்த் ராய்

**ஆ) V முரளீதரன் ☑**

இ) அனுராக் தாக்கூர்

ஈ) பாபுல் சுப்ரியோ

✓ குடிபெயர்ந்தோரின் பாதுகாவலர்களின் நான்காவது மாநாடு செப்.10 அன்று நடைபெற்றது. கடந்த 1983ஆம் ஆண்டில் இதே தேதியில்தான் குடிபெயர்வுச்சட்டம் இயற்றப்பட்டது. இதன்சமயம், வெளியுறவு இணை அமைச்சர் V முரளீதரன் சிறப்புரை ஆற்றினார். அப்போது, புதிய இடங்கள் மற்றும் வாய்ப்புகள்பற்றி இளையோர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் தெரிவிப்பதில் குடிபெயர்ந்தோரின் பாதுகாவலர்கள் வகிக்கும் முக்கியப் பங்கு குறித்து அவர் சிறப்பித்துத் தெரிவித்தார்.

---

**9. டிஜிட்டல் மக்கள்தொகை கடிகாரம் திறக்கப்பட்டுள்ள நகரம் எது?**



அ) ஹைதராபாத்

ஆ) மும்பை

இ) நாக்பூர்

**ஈ) தில்லி ☑**


✓ மக்கள்தொகை, மனித முதலீடு மற்றும் நீடித்த வளர்ச்சி குறித்த கருத்தரங்கிற்கு, மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை இணை அமைச்சர் டாக்டர் பாரதி பிரவீன் பவார் தலைமைதாங்கினார். தில்லி பல்கலையில் உள்ள பொருளாதார வளர்ச்சி மையத்தில், டிஜிட்டல் மக்கள்தொகை கடிகாரத்தை, அவர் திறந்து வைத்தார்.

✓ Dr தீபாஞ்சலி ஹலாய் மற்றும் Dr சுரேஷ் சர்மா எழுதிய 'அஸ்ஸாமில் குழந்தை மற்றும் குழந்தை இறப்பு – மக்கள்தொகை மற்றும் சமூக–பொருளாதார தொடர்புகள்' என்ற நூல், HMIS சிற்றேடு, மதிப்பீட்டு கையேடு ஆகியவற்றை மத்திய இணையமைச்சர் வெளியிட்டார்.

---

**10.** பஞ்சாபின் ஆளுநராக நியமிக்கப்பட்டவர் யார்?

அ) R N இரவி



**ஆ) பன்வாரிலால் புரோகித் ☑**

இ) குர்மித் சிங்

ஈ) ஜெகதீப் தங்கர்

✓ பஞ்சாப் மாநிலத்தின் புதிய ஆளுநராக தமிழ்நாடு ஆளுநர் பன்வாரிலால் புரோகித்தை குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் நியமித்துள்ளார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தொலை தொடர்பு துறையில் முக்கிய சீர்திருத்தங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

தொலை தொடர்பு துறையில் அமைப்பு மற்றும் செயல்முறை சீர்த்திருத்தங்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை இன்று ஒப்புதல் அளித்தது. இது வேலை வாய்ப்பை உருவாக்கி பாதுகாக்கும், ஆரோக்கியமான போட்டியை ஊக்குவிக்கும், நுகர்வோர் நலனை பாதுகாக்கும், பணப்புழக்கத்தை ஏற்படுத்தும், முதலீட்டை ஊக்குவிக்கும் மற்றும் தொலை தொடர்பு சேவை அளிப்பவர்கள் மீதான ஒழுங்குமுறை சுமையை குறைக்கும்.

கொரோனா சவால்களை எதிர்கொள்வதில் தொலை தொடர்பு துறையின் சிறப்பான செயல்பாடுகளின் பின்னணியில், ஆன்லைன் கல்வி, வீட்டிலிருந்தே பணியாற்றுதல், காணொலி காட்சி கூட்டம், சமூக ஊடகம் மூலம் தனிநபர்கள் இடையேயான தொடர்பு அதிகரிப்பு ஆகியவற்றால் இணையதள டேட்டா நுகர்வு மிகவும் அதிகரித்துள்ளதால், இந்த சீர்திருத்த நடவடிக்கைகள், பிராட் பேண்ட் மற்றும் தொலை தொடர்பின் ஊடுருவல் மற்றும் பரவலை மேலும் ஊக்குவிக்கும்.

வலுவான தொலை தொடர்பு என்ற பிரதமரின் தொலைநோக்கை, மத்திய அமைச்சரவையின் முடிவு வலுப்படுத்துகிறது. போட்டி மற்றும் நுகர்வோர் தேர்வு, அனைத்தும் உள்ளடங்கிய வளர்ச்சிக்கான அந்தியோதயா மற்றும் பின்தங்கிய பகுதிகளை முன்னுக்கு கொண்டு வருதல், ஆகியவற்றுடன் இணைக்கப்படாதவர்களை உலகளாவிய பிராட்பேண்ட் இணைக்கும். இந்த சீர்திருத்தம், 4ஜி பரவலை ஊக்குவிக்கும், பணப்புழக்கத்தை புகுத்தும், 5ஜி வலையமைப்புக்கான முதலீட்டு சூழலை ஏற்படுத்தும். தொலை தொடர்பு சேவை அளிப்பவர்களுக்கான 9 அமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் 5 செயல்பாட்டு சீர்திருத்தங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**அமைப்பு சீர்திருத்தங்கள்:**

1. சரிசெய்யப்பட்ட மொத்த வருவாய் சீரமைப்பு: தொலைதொடர்பு அல்லாத வருவாய் சரிசெய்யப்பட்ட மொத்த வருவாயின் வரையறையிலிருந்து விலக்கப்படும்.

2. வங்கி உத்திரவாதங்கள் சீரமைப்பு: உரிமம் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் மீதான வங்கி உத்திரவாத தேவைகள் 80 சதவீதம் குறைப்பு.

3. வட்டி விகிதங்கள் சீரமைப்பு / அபராதங்கள் நீக்கம்.

4. இனிமேல் நடைபெறும் ஏலங்களுக்கு வங்கி உத்திரவாதம் தேவையில்லை.

5. அலைக்கற்றை (ஸ்பெக்டரம்) ஏலம் எடுக்கும் காலம் 20 ஆண்டிலிருந்து 30 ஆண்டுகளாக அதிகரிப்பு.

6. எதிர்கால ஏலங்களில் பெறப்படும் அலைக்கற்றைகளை, 10 ஆண்டுகளுக்குப்பின் ஒப்படைக்கலாம்.

7. ஏலத்தில் பெறப்படும் அலைக்கற்றைக்கு அலைக்கற்றை பயன்பாட்டு கட்டணம் வசூலிக்கப்படாது.

8. அலைக்கற்றை பகிர்வு ஊக்குவிக்கப்படும்.

9. மூதலீட்டை ஊக்குவிக்க, தொலை தொடர்பு துறையில் 100 சதவீத அன்னிய நேரடி முதலீட்டுக்கு அனுமதி

**செயல்பாட்டு சீர்திருத்தங்கள்:**

1. அலைக்கற்றை ஏலம், ஒவ்வொரு நிதியாண்டில் கடைசி காலாண்டில் நடைபெறும்.

2. எளிதாக தொழில் செய்வது ஊக்குவிக்கப்படும்.

3. வாடிக்கையாளர்பற்றி அறியும் முறையில் சீர்திருத்தங்கள்: வாடிக்கையாளரின் சுய தகவல்களுக்கு அனுமதி.

4. வாடிக்கையாளர் விவரம் பற்றிய படிவங்கள் டிஜிட்டல் முறையில் சேமிக்கப்படும்.

---

**2. ரஷியாவில் 'எஸ்சிஓ' நாடுகளின் கூட்டு ராணுவப் பயிற்சி: இந்தியா பங்கேற்பு**

ரஷியாவில் நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு (எஸ்சிஓ) நாடுகளின் கூட்டு ராணுவப் பயிற்சியில் இந்தியா பங்கேற்றுள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிரான கூட்டு ராணுவத் தாக்குதல் பயிற்சி ஷாங்காய் ஒத்துழைப்பு நாடுகளிடையே இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வருகிறது. இதன் 6–ஆவது கட்டப் பயிற்சி செப்.13 –25ஆம் தேதி வரை ரஷியாவின் ஆரன்பெர்க் பகுதியில் நடைபெறுகிறது.

ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பின் உறுப்பு நாடுகள் இடையேயான உறவை மேம்படுத்துவதும், பல்வேறு நாடுகளின் ராணுவ வீரர்களுக்குத் தலைமை தாங்கும் வகையில் ராணுவ தளபதிகளின் செயல்திறனை வலுப்படுத்துவதும் இந்தப் பயிற்சியின் நோக்கமாகும்.

இந்தியாவின் சார்பில் 38 இந்திய விமானப்படை வீரர்கள் உள்பட 200 ராணுவ வீரர்கள் இந்தப் பயிற்சியில் இடம்பெற்றுள்ளனர் என்று இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது. ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு நாடுகளின் ஆயுதப் படைகள் இடையே சிறந்த பயிற்சி முறைகளை பரிமாறிக்கொள்ள இப்பயிற்சி ஏதுவாக இருக்கும். 2001இல் உருவாக்கப்பட்ட ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பில் (SCO) ரஷியா, சீனா, கிர்கிஸ்தான், கஜகஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் முதலில் இடம்பெற்றிருந்தன. 2017இல் இந்தியா, பாகிஸ்தானும் நிரந்தர உறுப்பினர்களாக இணைந்தன.

---

**3. இணைய குற்றங்கள்: 2020–இல் 11.8 சதவீதம் அதிகரிப்பு**

இந்தியாவில் இணைய குற்றங்கள் (சைபர் கிரைம்) தொடர்பாக 2020–ஆம் ஆண்டில் 50,035 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதும், இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 11.8 சதவீதம் கூடுதல் என்பதும் தேசிய குற்றப் பதிவுத் துறை (என்சிஆர்பி) புள்ளிவிவரத்தின் மூலம் தெரியவந்துள்ளது. இவற்றில் 578 வழக்குகள், சமூக ஊடகங்களில் போலியான செய்திகளை வெளியிட்டது தொடர்பானவையாகும். 972 வழக்குகள் பெண்கள் மற்றும் குழந்தைகளை சமூக ஊடகங்கள் உள்ளிட்ட இணையவழியில் பின்தொடர்ந்து தொல்லை கொடுத்தல் தொடர்பானவை. போலியான சுயவிவரப் பதிவு தொடர்பாக 149 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இணையவழியில் தகவல் திருட்டு தொடர்பாக 98 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2020–இல் பதிவு செய்யப்பட்ட இணைய குற்ற வழக்குகளில், குற்றத்துக்கான நோக்கத்தைப் பொருத்தவரை 60.2 சதவீதம் மோசடி திட்டத்துடன் நடைபெற்றுள்ளன. அதாவது, 50,035 வழக்குகளில் 30,142 வழக்குகள் மோசடி திட்டத்துடன் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களாகும். இதற்கு அடுத்தபடியாக, 6.6 சதவீதம் (3,293 வழக்குகள்) பாலியல் அத்துமீறல் தொடர்பான வழக்குகள், மிரட்டி பணம் பறித்தல் தொடர்பாக 4.9 சதவீத (2,440 வழக்குகள்) வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக என்சிஆர்பி புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

**வழக்குப் பதிவில் உபி. முதலிடம்:**

அதிக இணைய குற்ற வழக்குகள் பதிவு செய்யப்படும் மாநிலங்களைப் பொருத்தவரை 11,097 வழக்குகளுடன் உத்தர பிரதேசம் முதலிடத்தில் உள்ளது. அதற்கு அடுத்தபடியாக கர்நாடகம் (10,741 வழக்குகள்), மகாராஷ்டிரம் (5,496), தெலங்கானா (5,024), அஸ்ஸாம் (3,530) ஆகிய மாநிலங்கள் உள்ளன.

**கர்நாடகத்தில் அதிக குற்றங்கள்:** அதே நேரம், இணைய குற்றங்கள் அதிகம் நடைபெறும் மாநிலங்களில் 16.2 சதவீத குற்றங்களுடன் கர்நாடகம் முதலிடம் வகிக்கிறது. அதற்கு அடுத்தபடியாக தெலங்கானா (13.4 சதவீதம்), அஸ்ஸாம் (10.1 சதவீதம்), உத்தர பிரதேசம் (4.8 சதவீதம்), மகாராஷ்டிரம் (4.4 சதவீதம்) ஆகிய மாநிலங்கள் உள்ளன.

தலைநகர் தில்லியில் 2020–ஆம் ஆண்டில் 168 இணைய குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. குற்றங்களின் விகிதம் 0.8 சதவீதமாக உளளது என்றும் என்சிஆர்பி புள்ளிவிவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2019–ஆம் ஆண்டில் நாடு முழுவதும் பதிவு செய்யப்பட்ட இணைய குற்றங்களின் எண்ணிக்கை 44,735

ஆகும். 2018–ஆம் ஆண்டில் 27,248 இணைய குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

---

**4. தடகள சாம்பியன்ஷிப்: பவித்ரா வெங்கடேஷ் வெற்றி**

தேசிய ஓபன் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் கம்பு ஊன்றித் தாண்டுதல் போட்டியில் தமிழக வீராங்கனை பவித்ரா வெங்கடேஷ் முதலிடம் பிடித்தார். அவர் 3.90 மீ தாண்டி முதலிடம் பிடிக்க, ரயில்வே –சின் மரியா ஜெய்சன் (3.80 மீ), கிருஷ்ணா ராச்சன் (3.60 மீ) ஆகியோர் 2 மற்றும் 3–ஆம் இடங்களைப் பிடித்தனர்.

5,000 மீ ஓட்டத்தில் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் முறையே ரயில்வே போட்டியாளர்கள் அபிஷேக் பால், பாருல் சௌதரி ஆகியோர் சாம்பியன் ஆகினர். அபிஷேக் 14 நிமிஷம் 16.35 நொடிகளில் இலக்கை எட்டி முதலிடம் பிடிக்க, சர்வீசஸ் வீரர்கள் தர்மேந்தர் (14:17.20) இரண்டாம் இடம், அஜய்குமார் (14:20.98) மூன்றாமிடம் பிடித்தனர். மகளிர் பிரிவில் பாருல் 15 நிமிஷம் 59.69 விநாடிகளில் இலக்கை எட்ட, மகாராஷ்டிரத்தி –ன் கோமல் சந்திரகாந்த் (16:01), சஞ்சீவனி பாபர் ஜாதவ் (16:19) ஆகியோ –ர் அடுத்த இரு இடங்களைப் பிடித்தனர்.

---

**5. மாரியப்பனுக்கு 'மை ஸ்டாம்ப்' வழங்கி கௌரவித்த தபால்துறை**

பாரா ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்ற மாரியப்பனுக்கு 'மை ஸ்டாம்ப்' கொடுத்து அஞ்சல் துறை கௌரவித்துள்ளது.

---

**1. குஜராத்தின் முதலமைச்சராக பதவியேற்றவர் யார்?**

**அ) பூபேந்திர படேல் ☑**



ஆ) ஆச்சார்யா தேவ்ரத்

இ) ஆனந்திபென் படேல்

ஈ) புஷ்கர் சிங் டாமி

✓ குஜராத் மாநில முதலமைச்சராக பூபேந்திர படேல் பதவியேற்றார். காந்தி நகரிலுள்ள ஆளுநர் மாளிகையில், ஆளுநர் ஆச்சார்யா தேவ்ரத் பதவிப் பிரமாணம் செய்துவைத்தார். அவர் குஜராத் மாநிலத்தின் கட்லோடியா தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராவார். செப்.13 அன்று விஜய் ரூபானி தனது பதவியை ராஜினாமா செய்தபிறகு, பூபேந்திர படேல் குஜராத்தின் முதலமைச்சரானார்.

---

**2. மத்திய நிலக்கரி வயல்கள் நிறுவனத்தின் திறந்தவெளி சுரங்கத் –தில் பணிபுரிந்த முதல் பெண் அகழ்வாய்வுப் பொறியாளர் யார்?**

அ) அகன்க்ஷா குமாரி



ஆ) சிவாங்கி சிங்

இ) பாவனா காந்த்

**ஈ) ஷிவானி மீனா ☑**

✓ ஜோத்பூர் ஐஐடி'இன் முன்னாள் மாணவரான ஷிவானி மீனா, இந்திய நிலக்கரி நிறுவனத்தின் பிரிவான (CCL) மத்திய நிலக்கரி வயல்கள் நிறுவனத்தின் திறந்தவெளி சுரங்கத்தில் பணிபுரிந்த முதல் பெண் அகழ்வாய்வு பொறியாளர் ஆவார்.

✓ நிலக்கரி சுரங்கத்தின் முக்கிய நிறுவனங்களுள் ஒன்றான CCL'இன் ராஜ்ரப்பா திட்டத்தில் அவர் நியமிக்கப்படுவார். தற்போது வரை இந்தப் பதவியை ஆண்களே வகித்து வருகின்றனர். ஜார்க்கண்டில் உள்ள வடக்கு கரன்புரா பகுதியிலுள்ள CCL'இன் சூரியில் நிலத்தடி சுரங்கத்தில் பணிபுரியும் நிலக்கரி இந்தியாவின் முதல் பெண் சுரங்கப்பொறியாளராக அகன்க்ஷா குமாரி ஆனார்.

---

**3. லெபனானின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

அ) ஹசன் டையப்



ஆ) அஜீஸ் அகன்னூச்

**இ) நஜிப் மிகடி ☑**

ஈ) மைக்கேல் ஔன்

✓ பேரழிவு தந்த பெய்ரூட் துறைமுக வெடிவிபத்தை தொடர்ந்து, முந்தைய நிர்வாகம் பதவி விலகிய ஓர் ஆண்டுக்குப் பிறகு லெபனானில் புதிய அரசாங்கம் அறிவிக்கப்பட்டது. லெபனானின் மிகப்பெரிய பணக்காரரான நஜிப் மிகடி பிரதமராகிறார். அவர் இதற்கு முன்பு இரண்டு முறை பிரதமர் பதவிவகித்துள்ளார்.

---

**4. மொராக்கோவின் பிரதமராக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ) மௌலே ஹாபித் எலலாமி



**ஆ) அஜீஸ் அகன்னூச் ☑**

இ) நிசார் பரகா

ஈ) அஜீஸ் ரப்பா

✓ மொராக்கோ மன்னர் ஆறாம் முகமது, தேசிய விடுதலைப் பேரணியின் அஜீஸ் அகன்னோச்சை பிரதமராக நியமித்து, அவரை அரசாங்கத்தை அமைக்கவும் கூறினார். செப்டம்பர்.8 அன்று நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அக்கட்சி மிகப்பெரிய கட்சியாக உருவெடுத்தது. மொராக்கோ –வில், அரசியல்வாதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் மட்டுமே உள்ளன; முக்கிய முடிவுகள் அனைத்தும் மன்னரிடமே உள்ளன.

---

**5. 'Human Rights and Terrorism in India' என்ற நூலின் ஆசிரியர் யார்?**

அ) அஜித் தோவல்



**ஆ) சுப்பிரமணியன் சுவாமி ☑**

இ) பிபின் ராவத்

ஈ) சசி தரூர்

✓ கடந்த 1999ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானின் காந்தகாரில் கடத்தப்பட்ட இந்தியன் ஏர்லைன்ஸ் விமானப்பயணிகளுக்கு ஈடாக மூன்று பயங்கரவாதிகளை விடுவித்தது, இந்தியாவின் நவீனகால வரலாற்றில் பயங்கரவாதிகளிடம் "மோசமாக சரணடைதல்" என்று பாஜக நாடாளு மன்ற உறுப்பினர் சுப்பிரமணியன் சுவாமி கூறினார்.

✓ அரசியலமைப்பால் அனுமதிக்கப்பட்ட மற்றும் உச்சநீதிமன்றத்தால் நியாயப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளுக்குள், பயங்கரவாதத்தை எவ்வாறு எதிர்த்துப் போராடுவது என்பதை விளக்கும் "Human Rights and Terrorism in India" என்ற நூலை அவர் வெளியிட்டுள்ளார்.

---

**6. உத்தரகண்ட் மாநிலத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டு உள்ளவர் யார்?**

அ) ஆச்சர்யா தேவ்ரத்



ஆ) பேபி ராணி மௌரியா

இ) பண்டாரு தத்தாத்ரேயா

**ஈ) குர்மித் சிங் ☑**

✓ ராணுவ துணைத்தலைவராக இருந்து ஓய்வுபெற்ற Lt.ஜெனரல் குர்மித் சிங், உத்தரகண்ட் மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்குமுன் அந்தப் பதவியை வகித்து வந்த பேபி இராணி மௌரியா பதவி விலகியதிலிருந்து அப்பதவி காலியாகவே இருந்தது.

---

**7. மருந்துகள், அழகுசாதனப் பொருட்கள் மற்றும் மருத்துவ சாதனங்களுக்கான புதிய சட்டத்தை உருவாக்குவதற்காக, புதிதாக உருவாக்கப்பட்ட அரசாங்கக் குழுவின் தலைவர் யார்?**

அ) பல்ராம் பார்கவா



ஆ) ரன்தீப் குலேரியா

**இ) V G சோமனி ☑**

ஈ) ககன்தீப் காங்

✓ மருந்துகள், அழகுசாதனப் பொருட்கள் மற்றும் மருத்துவ சாதனங்களுக் –கான புதிய சட்டத்தை உருவாக்குவதற்காக எட்டு உறுப்பினர்கள் கொண்ட குழுவை அரசாங்கம் அமைத்துள்ளது. இக்குழுவிற்கு இந்திய தலைமை மருந்துக்கட்டுப்பாட்டாளர் டாக்டர் V G சோமனி தலைமை தாங்குகிறார். 1940ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் ஒப்பனை சட்டமானது மருந்துகள், ஒப்பனை மற்றும் மருத்துவ சாதனங்களின் இறக்குமதி, உற்பத்தி, விநியோகம் மற்றும் விற்பனையை ஒழுங்குபடுத்துகிறது. இந்தச் சட்டம் அவ்வப்போது திருத்தப்படுகிறது. கடைசியாக 2008'இல் இந்தச் சட்டம் திருத்தஞ்செய்யப்பட்டது.

---

**8. 13ஆவது BRICS உச்சிமாநாட்டிற்கு தலைமைதாங்கியவர் யார்?**

அ) ஜி ஜின்பிங்



**ஆ) நரேந்திர மோடி ☑**

இ) விளாடிமிர் புதின்

ஈ) சிரில் ராமபோசா

✓ 13ஆவது BRICS உச்சிமாநாட்டிற்கு பிரதமர் மோடி தலைமைவகித்தார். "BRICS@15: Intra BRICS Cooperation for Continuity, Consolidation and Consensus" என்பதை இந்த உச்சிமாநாட்டின் கருப்பொருளாக இந்தியா தேர்ந்தெடுத்தது. BRICS தலைவர்களான பிரேசில் அதிபர் ஜெய்ர் பொல்சனாரோ, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின், சீன அதிபர் ஜி ஜின்பிங், தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ராமபோசா ஆகியோர் உச்சிமாநாட்டில் பங்கேற்றனர்.

✓ இந்தியாவின் BRICS தலைமை பொறுப்பின் போது பல்வேறு புதிய முன் முயற்சிகள் சாத்தியமாகின. BRICS டிஜிட்டல் நலவாழ்வு மாநாடு, பல்முனை சீர்திருத்தங்கள் குறித்த BRICS அமைச்சர்களின் முதல் கூட்டறிக்கை, BRICS பயங்கரவாத எதிர்ப்பு திட்டம், தொலைதூர திறனறி செயற்கைக்கோள்கள் துறையில் ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம், BRICS மெய்நிகர் தடுப்பூசி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம், பசுமை சுற்றுலாவுக்கான BRICS கூட்டணி ஆகியவை இவற்றில் அடங்கும்.

---

**9.** 'bob World' **என்ற பெயரில் தனது டிஜிட்டல் வங்கி தளத்தை தொடங்கியுள்ள வங்கி எது?**

அ) இந்தியன் வங்கி

ஆ) பந்தன் வங்கி

**இ) பரோடா வங்கி ☑**

ஈ) பாசிம் பங்கா கிராமின் வங்கி

✓ அனைத்து வங்கியியல் சேவைகளையும் ஒரே கூரையின்கீழ் வழங்கும் நோக்கில் பரோடா வங்கி தனது டிஜிட்டல் வங்கி தளத்தை 'bob World' என்ற பெயரில் அறிமுகப்படுத்தியுள்ளது. சேமிப்பு, முதலீடு, கடன் மற்றும் வாங்கு ஆகிய நான்கு முக்கிய தூண்களின்கீழ், வங்கித் தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் பரந்த வசதியை இது வழங்கும்.

---

**10.இந்திய ஏற்றுமதி–இறக்குமதி வங்கியின் (EXIM வங்கி) நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



**அ) ஹர்ஷ பூபேந்திர பங்காரி ☑**

ஆ) டேவிட் ரஸ்கின்ஹா

இ) சக்திகாந்த தாஸ்

ஈ) நிருபேந்திர மிஸ்ரா

✓ இந்திய ஏற்றுமதி–இறக்குமதி வங்கியின் நிர்வாக இயக்குநராக ஹர்ஷ பூபேந்திர பங்காரியை அரசாங்கம் நியமித்துள்ளது. தற்போது EXIM வங்கியின் துணை நிர்வாக இயக்குநராக இருந்து வரும் பங்காரி, 3 ஆண்டு காலத்திற்கோ அல்லது அரசாங்கத்தின் அடுத்த உத்தரவு வரும் வரையோ இந்தப் பொறுப்பில் இருப்பார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. திருச்செந்தூர், சமயபுரம், திருத்தணி கோவில்களில் முழுநேர அன்னதானம் திட்டம்: முதல்வர் தொடக்கி வைத்தார்**

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில், சமயபுரம் மாரியம்மன் கோவில், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோவில் ஆகிய கோவில்களி–ல் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க ஸ்டாலின் தலைமைச்செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக தொடக்கிவைத்தார்.

ஏற்கனவே, பழனி தண்டாயுதபாணி சுவாமி கோவில், திருவரங்கம் அரங்கநாதசுவாமி கோவில் ஆகியவற்றில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் செயல்பட்டுவருகிறது. தற்போதைய 3 கோவில்களையு–ம் சேர்த்து மொத்தம் 5 கோவில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் மொத்தம் 754 கோவில்களில் மதியம் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

---

**2. அரசுப்பணிகளுக்கான நேரடி நியமன வயது 32ஆக உயர்வு**

அரசுப்பணிகளுக்கான நேரடி நியமன வயது வரம்பை 32ஆக உயர்த்தி தமிழக அரசு அரசாணை வெளியிட்டது. சட்டப்பேரவையில் மனிதவள மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் கரோனா பெருந்தொற்று கார–ணமாக பணியாளர் தெரிவு முகமைகளால் நடத்தப்படும் அரசுப் பணிக–ளுக்கான போட்டித் தேர்வுகள் தாமதமானதால், நேரடி நியமன வயது உச்சவரம்பு இரண்டு ஆண்டுகள் உயர்த்தப்படும் என அறிவித்திருந்தார்.

அதன்படி அரசுப்பணிகளில் நேரடி நியமனத்துக்கான வயது வரம்பை 30லிருந்து 32ஆக உயர்த்தி தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. கருணை அடிப்படை பணி நியமன வயது உச்சவரம்பில் எந்தவித மாற்றம் இல்லை எனவும் கூறப்பட்டுள்ளது.

**மாற்றுத்திறனாளிகளுக்கு 4% இடஒதுக்கீடு:**

மேலும் அரசு வேலைவாய்ப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கான 4% இடஒதுக்கீட்டை உறுதிசெய்வதற்காக அனைத்துத் துறைகளிலும் கண்–காணிப்பு அதிகாரிகளை நியமிக்கவும் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

---

**3. 17–09–2021 – ஈ வெ ரா பெரியாரின் 143ஆவது பிறந்தநாள்.**

---

**4. எல்லோர்க்கும் எல்லாம்; சமூக நீதிக் கண்காணிப்புக் குழு அமைக்க முடிவு: முதல்வர் ஸ்டாலின்**

சமூகநீதி அளவுகோலானது சட்டப்படி உள்ளது. ஆனால் முழுமையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்காகத் தமிழ்நாடு அரசால் ஒரு கண்காணிப்புக் குழு அமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கல்வி, வேலைவாய்ப்பு, பதவிகள், பதவி உயர்வுகள், நியமனங்கள் ஆகியவற்றில் சமூக நீதி அளவுகோல் முறையாக, முழுமையாகப் பின்பற்றப்படுகிறதா என்பதை இக்குழு கண்காணிக்கும்; வழிகாட்டும்; செயல்படுத்தும். சரியாக நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் உரிய நடவடிக்கை எடுக்க அரசுக்கு இக்குழு பரிந்துரை செய்யும். இதற்கான விதிமுறைகள் விரைவில் வெளியிடப்படும். இதில் அரசு அதிகாரிகள், கல்வியாளர்கள், சட்ட வல்லுநர்கள் இடம்பெறுவார்கள்.

1916ஆம் ஆண்டு தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற பெயரால் தொடங்கப்பட்ட நீதிக்கட்சியானது அன்றைய சென்னை மாகாணத்தில் சமூக நீதி, தீண்டாமை ஒழிப்பு, ஒடுக்கப்பட்டோர் உரிமை, சுயாட்சிக் கருத்துகள் ஆகியவற்றுக்காகக் குரல் கொடுத்தது. 1920ஆம் ஆண்டு நடந்த முதல் தேர்தலில் வென்ற நீதிக்கட்சி ஆட்சியானது இதனைப் பல்வேறு அரசாணைகள் மூலமாகச் செயல்படுத்தியது.

அதில் மிக மிக முக்கியமான அரசாணை வெளியிடப்பட்டு இன்றுடன் 100 ஆண்டுகள் ஆகின்றன. அதுதான் தமிழ்ச் சமுதாயத்தின் பல தலைமுறைகளை மாற்றிய சமூக நீதி அரசாணை ஆகும்.

16.9.1921 அன்று நீதிக்கட்சி ஆட்சியின் முதல்வரான பனகல் அரசர் காலத்தில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. "அரசுப் பணிகளில் குறிப்பிட்ட வகுப்பினர் ஆதிக்கம் செலுத்தும் நிலை இருக்குமானால் அது நாட்டுக்குப் பெரும் தீங்கை விளைவிக்கும். அனைத்துச் சமூகத்தினரும் ஏற்றம் பெறும் வகையில் மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு பணியிடங்கள் வழங்கப்பட வேண்டும்" என்ற அடித்தளத்தில் அந்த அரசாணை வெளியிடப்பட்டது. இதுதான் சமூக நீதிக்கான அடித் தளம் ஆகும். அதிலிருந்துதான் சமூக நீதி வரலாற்றின் மாபெரும் பயணம் தொடங்கியது.

நூறு ஆண்டுகள் கழித்து செப்டம்பர் 16ஆம் நாளான இன்று வெள்ளுடை வேந்தர் தியாகராயர், சமுதாய சீர்திருத்த மருத்துவர்களான நடேசனார், TM நாயர், கடலூர் ஏ சுப்பராயலு, பனகல் அரசர், அமைச்சர் S முத்தையா, பி டி இராஜன் ஆகியோரை நினைத்துப் பார்க்கிறேன். இவர்கள் உள்ளிட்ட பெருமக்கள் அன்று தொடங்கிவைத்த சமூக நீதிப்புரட்சிதான் தமிழ்ச்சமுதாயத்தின் லட்சக்கணக்கானவர்கள் இல்லங்களில் விளக்கே–ற்றக் காரணமாக அமைந்தது. இந்த உத்தரவை எப்படிச் செயல்படுத்த வேண்டும் என்ற தரவரிசைப் பட்டியலைப் போட்டுக் கொடுத்தார் அன்றைய அமைச்சர் எஸ் முத்தையா. அதனால்தான், "இனிப்பிறக்கும் பிள்ளைகளுக்கு முத்தையா என்று பெயர் சூட்டுங்கள்" என்றார் தந்தை பெரியார்.

---

**1.** **2021 – இத்தாலிய கிராண்ட் பிரிக்ஸை வென்றவர் யார்?**



அ) மேக்ஸ் வெர்ஸ்டாபென்

**ஆ) டேனியல் ரிச்சியார்டோ ☑**


இ) லாண்டோ நோரிஸ்

ஈ) லூயிஸ் ஹாமில்டன்

✓ மொன்சாவில் நடைபெற்ற F1 கார் பந்தயத்தில், ஆஸ்திரேலியாவைச் சார்ந்த டேனியல் ரிச்சியார்டோ, 2021 – இத்தாலிய கிராண்ட் பிரிக்ஸை வென்றார். லாண்டோ நோரிஸ் இரண்டாவது இடத்தைப் பிடித்தார். F1 சாம்பியன் போட்டியாளர்களான மேக்ஸ் வெர்ஸ்டாப்பன் மற்றும் லூயிஸ் ஹாமில்டன் ஒருவருக்கொருவர் பந்தயத்திலிருந்து வெளியேறினர். வால்டேரி போட்டாஸ் மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

---

**2.** **50'க்கும் மேற்பட்ட புற்றுநோய் வகைகளை கண்டறியும் உலகின் மிகப்பெரிய இரத்த பரிசோதனையை கண்டறிந்துள்ள நாடு எது?**



அ) சீனா

ஆ) ரஷ்யா

இ) பிரான்ஸ்

**ஈ) ஐக்கியப் பேரரசு ☑**

✓ இங்கிலாந்தைச் சேர்ந்த NHS மருத்துவர்கள், இரத்த பரிசோதனைமூலம் தொடக்க நிலையிலேயே 50 வகையான புற்றுநோய்களை கண்டறியும் "Revolutionary" என்ற சோதனையை கண்டுபிடித்துள்ளனர். அறிகுறிக–ள் வெளிப்படுவதற்கு முன்பே ஐம்பது வகையான புற்றுநோய்களை இதன்மூலம் கண்டறியவியலும்.

---

**3.** **சமீபத்தில் காலமான பிரபல எழுத்தாளர் அஜீஸ் ஹஜினி சார்ந்த மாநிலம் அல்லது யூனியன் பிரதேசம் எது?**



அ) லடாக்

**ஆ) ஜம்மு காஷ்மீர் ☑**

இ) இமாச்சல பிரதேசம்

ஈ) உத்தரகாண்ட்

✓ ஜம்மு–காஷ்மீரின் பிரபல எழுத்தாளர் அஜீஸ் ஹஜினி அண்மையில் காலமானார். காஷ்மீர் எழுத்தாளர், கவிஞர், விமர்சகராவார் அவர். அவர் ஜம்மு காஷ்மீர் கலை, கலாச்சாரம் மற்றும் மொழிகளின் அகாதமியின் முதல் செயலாளராக பணியாற்றினார். 2013ஆம் ஆண்டில் அவரது 'தேஜ் பஜார்' மற்றும் 2016ஆம் ஆண்டில் 'கிடாப் ஆன் கானேவு'க்காக அவருக்கு சாகித்திய அகாதமி விருதும் வழங்கப்பட்டது.

---

**4.** **அண்மையில், பின்வரும் எந்த நாட்டுடன், கடல்சார் விவகாரங்கள் குறித்த பேச்சுவார்த்தையை இந்தியா நடத்தியது?**



அ) ஆஸ்திரேலியா

ஆ) இங்கிலாந்து

**இ) ஜப்பான் ☑**

ஈ) பிரான்ஸ்

✓ 2021 செப்.9 அன்று இந்தியாவும் ஜப்பானும் ஆறாவது கடல்சார் விவகார பேச்சுவார்த்தையை நடத்தின. இந்தப் பேச்சுவார்த்தையில் கடல்சார் பாதுகாப்பு சூழல், பிராந்திய ஒத்துழைப்பு நடவடிக்கைகள் & இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் 2 நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள்பற்றி விவாதிக்கப்பட்டன.

---

**5.** **சுப்பிரமணிய பாரதியின் நினைவுநாளை 'மகாகவி நாள்' எனக் கொண்டாட முடிவுசெய்துள்ள மாநிலம் எது?**



**அ) தமிழ்நாடு ☑**

ஆ) கேரளம்

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) ஒடிஸா

✓ கவிஞர் மற்றும் விடுதலைப் போராட்ட வீரரான சுப்பிரமணிய பாரதியின் நினைவு நாளை, செப்டம்பர்.11 அன்று 'மகாகவி நாள்' எனக்கொண்டாட தமிழ்நாடு அரசு முடிவுசெய்துள்ளது. அவரது படைப்புகள் தேசபக்தியை ஊட்டுபவையாக தமிழ் இலக்கியத்தில் அழியாத முத்திரையை பதித்தன.

✓ அரசுப்பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான மாநில அளவிலான கவிதை போட்டியை நடத்தி, 'பாரதி இளங்கவி விருது'ம் ₹1 லட்சம் பணப் பரிசும் வழங்க, தமிழ்நாடு அரசு முடிவுசெய்துள்ளது. பெண்கள் வாழ்வாதார இயக்கத்திற்கு 'பாரதியார்' எனப் பெயர்சூட்டப்படவுள்ளது. இந்தத் திட்டம் ஊரக வளர்ச்சித் துறையால் செயல்படுத்தப்படவுள்ளது.

---

**6.** **அண்மையில், ஆசியாவின் ஒலிம்பிக் கவுன்சிலின் இடைக்கால தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



அ) ஷேக் அஹ்மத் அல்–பஹத் அல்–சபா

ஆ) தாமஸ் பாக்

**இ) ரந்தீர் சிங் ☑**

ஈ) ஜியானி இன்பான்டினோ

✓ ஜெனீவா நீதிமன்றத்தால் போலி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஷேக் அஹ்மத் அல்–ஃபஹத் அல்–சபா பதவி விலகியதை அடுத்து, ஆசியாவின் ஒலிம்பிக் கவுன்சிலின் இடைக்கால தலைவராக இந்திய விளையாட்டு நிர்வாகி ரந்தீர் சிங் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் 1991 முதல் 2015 வரை 24 ஆண்டுகள் OCA'இன் பொதுச்செயலாளராக பணியாற்றினார். அவர், 1987 முதல் 2012 வரை இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் (IOA) பொதுச் செயலாளராகவும் பணியாற்றினார். 2001 முதல் 2014 வரை சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் முழு நேர உறுப்பினராக இருந்தார்.

---

**7.** **தினை உற்பத்தியை அதிகரிப்பதற்காக எந்த மாநிலத்தின் 14 மாவட்டங்கள் இந்திய தினை ஆராய்ச்சி நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்துள்ளன?**

அ) தமிழ்நாடு

ஆ) மத்திய பிரதேசம்

**இ) சத்தீஸ்கர் ☑**

ஈ) ஜார்க்கண்ட்

✓ சத்தீஸ்கர் மாநிலத்தின் 14 மாவட்டங்கள், அந்தந்த பகுதிகளில் தினை உற்பத்தியை அதிகரிப்பதற்காக ஐதராபாத்தைச் சேர்ந்த இந்திய தினை ஆராய்ச்சி நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்ப–மிட்டுள்ளன. இந்தத் தினை, சத்தீஸ்கர் குறு வன உற்பத்தி கூட்டுறவு கூட்டமைப்பின் வான்தான் சங்கங்கள்மூலம் கொள்முதல் செய்யப்படும்.

✓ அவை பதப்படுத்தப்பட்டபின், மதிய உணவு திட்டங்கள், பொது விநியோக முறை மற்றும் ஊட்டச்சத்து திட்டங்களில் பயன்படுத்தப்படும்.

---

**8.** **தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு (NIRF) 2021'இல், சிறந்த கல்வி நிறுவனமாக தேர்வுசெய்யப்பட்டுள்ள உயர்கல்வி நிறுவனம் எது?**



**அ) ஐஐடி மெட்ராஸ் ☑**

ஆ) ஐஐடி பம்பாய்

இ) அண்ணா பல்கலைக்கழகம்

ஈ) மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்

✓ மெட்ராஸ் இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (IIT–M) 2021'இல் சிறந்த உயர்கல்வி நிறுவனமாகத் தேர்வுசெய்யப்பட்டுள்ளது. அதைத்தொடர்ந்து பெங்களூரு இந்திய அறிவியல் நிறுவனமும் (IISc) மற்றும் ஐஐடி பம்பாய் கல்வி நிறுவனமும் உள்ளன.

✓ தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பின் (NIRF) ஒருபகுதியாக, கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான், தரவரிசைகளை அறிவித்தார். இது இந்திய நிறுவனங்களின் தரவரிசையாகும்.

---

**9.** **எந்த நாட்டில், காற்றிலிருந்து $CO_2$'ஐப் பிரிக்கும் உலகின் மிகப் பெரிய ஆலை செயல்படத் தொடங்கியுள்ளது?**



**அ) ஐஸ்லாந்து ☑**

ஆ) ஜெர்மனி

இ) இந்தியா

ஈ) ஜப்பான்

- ✓ காற்றில் இருந்து கரியமில வாயுவை உறிஞ்சி பாறையாக மாற்றும் உலகின் மிகப்பெரிய ஆலை ஐஸ்லாந்தில் இயங்கத் தொடங்கியது.
- ✓ 'எரிசக்தி' என்று பெயரிடப்பட்ட 'Orca' என்ற ஐஸ்லாந்திய சொல்லை நிறுவனத்தின் பெயராகக்கொண்ட இந்த ஆலை நான்கு அலகுகளைக் கொண்டுள்ளது. சுவிச்சர்லாந்தின் கிளைம்வொர்க்ஸ் & ஐஸ்லாந்தின் கார்ப்பிக்ஸ் ஆகியவற்றால் கட்டப்பட்ட இந்த ஆலை ஒவ்வொரு ஆண்டும் 4,000 டன் $CO_2$'ஐ காற்றிலிருந்து உறிஞ்சும்.

---

**10. பாரத் பெட்ரோலிய நிறுவனத்தின் புதிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

**அ) அருண் குமார் சிங் ☑**

ஆ) S வரதராஜன்

இ) அருண் சிங்

ஈ) K இளங்கோவன்



- ✓ 'மகாரத்னா' நிறுவனமும் பார்ச்சூன் குளோபல் 500'இல் இடம்பெற்று உள்ள நிறுவனமுமான BPCL அதன் தலைவராகவும் மற்றும் நிர்வாக இயக்குனராகவும் அருண் குமார் சிங்கை நியமிப்பதாக அறிவித்தது. செப். 7, 2021 அன்று அவர் பொறுப்பேற்றுக்கொண்டார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நோயாளிகள் பாதுகாப்பு நாள்**

நோயாளிகள் பாதுகாப்பு நாள் 17-09-2021 அன்று கடைபிடிக்கப்பட்டது. உலக நோயாளிகள் பாதுகாப்பு நாள் ஆண்டுதோறும் செப்டம்பர்.17ஆம் தேதி கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், நடப்பாண்டில் "தாய் மற்றும் சேய் பாதுகாப்பு" என்ற கருப்பொருளின்கீழ் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த உலக சுகாதார அமைப்பு அறிவுறுத்தியுள்ளது.

---

**2. பனை மேம்பாட்டுத் திட்டம்**

பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வகை செய்யும் பனை மேம்பாட்டுத் திட்டத்தை தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ளது.

**இதுகுறித்து, தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்தி:**

தமிழ்நாட்டில் பனைமரங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு, இப்போதுள்ள பனை மரங்களைப் பாதுகாப்பதுடன், கூடுதலாக பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கத் திட்டம் வகுக்கப்பட்டது. அதன்படி, நடப்பாண்டு முப்பது மாவட்டங்களில் 76 லட்சம் பனை விதைகளையும், ஒரு லட்சம் பனங் கன்றுகளையும் முழு மானியத்தில் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. பனை மேம்பாட்டு இயக்கமாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்துக்கு ₹3 கோடி நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

---

**3. பிரபல இயற்பியல் விஞ்ஞானி தாணு பத்மநாபன் மறைவு**

பிரபல இயற்பியல் பேராசிரியரும் 'பத்மஸ்ரீ' விருதுபெற்ற விஞ்ஞானியுமா -ன தாணு பத்மநாபன் (64) காலமானார்.

பத்மநாபனுக்கு மத்திய அரசு கடந்த 2007'இல் பத்மஸ்ரீ விருதை வழங்கி கௌரவித்தது. அண்மையில் அவருக்கு கேரள அறிவியல், தொழில்நுட்ப கவுன்சில் 'கேரள சாஸ்திர புரஸ்காரம்' என்னும் வாழ்நாள் சாதனை விருதையும் வழங்கி கௌரவித்தது.

---

**4. சுற்றுச்சூழல் விதிமீறல்கள்: அதிகபட்சமாக தமிழகத்தில் 42,756 வழக்குகள்; 2019-ஐ காட்டிலும் 3 மடங்கு அதிகரிப்பு**

சுற்றுச்சூழல் விதிமீறல் தொடர்பாக கடந்த 2020-இல் இந்திய அளவில் பதிவு செய்யப்பட்ட 61,767 வழக்குகளில் அதிகபட்சமாக 42,756 வழக்குகள் தமிழகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது கடந்த 2019ஆம் ஆண்டைக் காட்டிலும் 3 மடங்கு அதிகரித்துள்ளதாக தேசிய குற்றப்பதிவு ஆவணக் காப்பகம் தெரிவித்துள்ளது.

இந்திய அளவில் நடைபெறும் குற்றங்கள் குறித்த புள்ளிவிவரத்தை தேசிய குற்றப்பதிவு ஆவணக் காப்பகம் ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. இதன்படி, கடந்த 2020ஆம் ஆண்டு நடந்த குற்றச்செயல்கள் குறித்த புள்ளிவிவரம் கடந்த சில நாள்களுக்கு முன்பு வெளியிடப்பட்டது.

அதில், இந்திய அளவில் கடந்த 2019ஆம் ஆண்டைக் காட்டிலும் குற்றச் செயல்களின் எண்ணிக்கை 28 சதவீதம் அதிகரித்துள்ளது. அதிலும் குறிப்பாக இந்திய வனச் சட்டம், வனப் பாதுகாப்பு சட்டம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம், நீர் மற்றும் காற்று பாதுகாப்பு சட்டம், வன விலங்குகள் பாதுகாப்புச் சட்டம், சிகரெட் மற்றும் புகையிலை தடுப்புச் சட்டம், ஒலி மாசு தடுப்புச்சட்டம், தேசிய பசுமைத்தீர்ப்பாயச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 2019'ஐக் காட்டிலும் 78.1% அதிகரித்துள்ள -து தெரியவந்துள்ளது.

**தமிழகம் முதலிடம்:** கரோனா தொற்று காரணமாக பிற குற்றச் செயல்கள் பெரிய அளவில் அதிகரிக்காத நிலையில், சுற்றுச்சூழல் மற்றும் வன விலங்குகள் மீதான குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளது.

சுற்றுச்சூழல் மாசு தொடர்பான சட்டங்களின்கீழ், 2020-இல் 61,767 வழக்குகள் நாடு முழுவதும் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதில், தமிழகத்தில் மட்டும் இந்தச் சட்டத்தின்கீழ், 42,756 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 3 மடங்கு அதிகமாகும். தமிழகத்தை அடுத்து ராஜஸ்தானில் 9,543 வழக்குகளும், உத்தரப் பிரதேசத்தில் 2,981 வழக்குகளும், கேரளத்தில் 1,795 வழக்குகளும், உத்தரகண்டில் 1,271வழக்குகளும் அதிகபட்சமாக பதிவு செய்யப்பட்டுள்ளன. மிசோரம் மாநிலத்தில் சுற்றுச்சூழல் சட்டத்தின்கீழ் ஒரு வழக்கும் பதிவு செய்யப்படவில்லை.

சிகரெட் மற்றும் புகையிலைச் சட்டத்தின்கீழ் மட்டும் நாடு முழுவதும் பதிவு செய்யப்பட்ட 49,710 வழக்குகளில் 42,731 வழக்குகள் தமிழகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒலி மாசு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட 7,318 வழக்குகளில் அதிகபட்சமாக ராஜஸ்தான் மாநிலத்தில் 7,186 வழக்குகளும், மத்திய பிரதேசத்தில் 44 வழக்குகளும், தமிழகத்தில் 19 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தமிழகத்தில் 2020-இல் இந்திய வனச் சட்டம், வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தலா 3 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதே வேளையில் தேசிய பசுமைத் தீர்ப்பாயச் சட்டம், சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986, காற்று, நீர் பாதுகாப்புச் சட்டம் ஆகிய சட்டங்களின்கீழ் ஒரு வழக்கும் பதிவு செய்யப்படவில்லை என தேசிய குற்றப்பதிவு ஆவணக் காப்பகம் தெரிவித்துள்ளது.

---

**5. 2020-இல் சிறார் திருமணங்கள் 50% அதிகரிப்பு**

கடந்த ஆண்டில் சிறார் திருமணங்கள் சுமார் 50% அதிகரித்துள்ளதாக தேசிய குற்ற ஆவண காப்பகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2020-ஆம் ஆண்டில் நாடு முழுவதும் பதிவு செய்யப்பட்ட குற்றவியல் வழக்குகள் தொடர்பான விவரங்களை NCRP சமீபத்தில் வெளியிட்டது.

அதன்படி, சிறார் திருமணத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 785 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதிகபட்சமாக கர்நாடகத்தில் 184 வழக்குகளும், அஸ்ஸாமில் 138 வழக்குகளும், மேற்கு வங்கத்தில் 98 வழக்குகளும், தமிழகத்தில் 77 வழக்குகளும், தெலங்கானாவில் 62 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சிறார் திருமணத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த 2019-ஆம் ஆண்டில் 523 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. அதனுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை சுமார் 50 சதவீதம் அதிகமாகும்.

சிறார் திருமணத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த 2018-ஆம் ஆண்டில் 501 வழக்குகளும், 2017-இல் 395 வழக்குகளும், 2016-இல் 326 வழக்குகளும், 2015-இல் 293 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டிருந்தன. கரோனா தொற்று பரவல் காரணமாக பலரது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது, கடந்த ஆண்டில் சிறார் திருமணங்கள் அதிகரிக்க முக்கியக் காரணமாக இருந்ததாக சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர்.

---

**6. ஐசிஏஓ பாதுகாப்புக் குழுவின் முதல் பெண் தலைவராக இந்தியர் தேர்வு**

ஐநா சர்வதேச விமானப் போக்குவரத்து அமைப்பின் (ஐசிஏஓ) பாதுகாப்புக் குழுத் தலைவராக இந்தியாவைச் சேர்ந்த ஷெபாலி ஜுனேஜா தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஐநா'இன் ஐசிஏஓ அமைப்பு விமானப் போக்குவரத்து செயல்பாடுகள், அதன் உள்கட்டமைப்பு, சட்டவிரோத செயல்கள் தடுப்பு, எல்லை தாண்டிய போக்குவரத்தின் நடைமுறைகள் சார்ந்து இயங்கி வருகிறது. இந்த அமைப்பின் பாதுகாப்புக் குழுவுக்கு முதல் பெண்

தலைவராக இந்தியாவைச் சேர்ந்த ஷெபாலி ஜுனேஜா தேர்வுசெய்யப்ப -ட்டார். கடந்த 1992–ஆம் ஆண்டின் இந்திய வருவாய் பணி பிரிவு அதிகாரியான இவர், மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் இணைச் செயலராக பணிபுரிந்துள்ளார். கடந்த 2019ஆம் ஆண்டு முதல் ஐசிஏஓவில் இந்திய பிரதிநிதியாக பணிபுரிந்துவந்தார். இவர் ஐசிஏஓவின் பாதுகாப்புக் குழுத் தலைவராகியுள்ளதன் மூலம் 12 ஆண்டுகளுக்குப் பிறகு அக்குழுவின் தலைமைப்பொறுப்பு இந்தியாவுக்கு கிடைத்துள்ளது.

---

**7. தமிழகத்தைச் சேர்ந்த எழுத்தாளர் இமையம் உள்ளிட்ட 24 பேருக்கு சாகித்ய அகாதெமி விருது**

தமிழகத்தைச் சேர்ந்த எழுத்தாளர் இமையம் உள்பட பல்வேறு இந்திய மொழிகளைச் சேர்ந்த எழுத்தாளர்களுக்கு சிறந்த இலக்கியத்துக்கான சாகித்திய அகாதெமி விருதும், ஒரு இலட்சம் பரிசுத்தொகையும், தாமிர பட்டயமும் தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கப்பட்டது. இலக்கிய உலகில் சிறந்த படைப்புகளுக்கான உயரிய விருதாக சாகித்ய அகாதெமி கருதப்படுகிறது. 2020ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதமி விருது இந்த ஆண்டு பிப்ரவரியில் அறிவிக்கப்பட்டது. அதில் தமிழில் எழுத்தாளர் இமையம் மற்றும் ஹிந்தி, உருது, தெலுங்கு, கன்னடம் உள்பட 24 மொழிகளைச் சேர்ந்த எழுத்தாளர்களுக்கு இந்த விருது அறிவிக்கப்பட்டது.

கடலூர் மாவட்டம் கழுதூரைச் சேர்ந்த முதுகலைப் பட்டம் பெற்ற எழுத்தாளர் இமையம் (இயற்பெயர் வெ அண்ணாமலை) எழுதிய 'செல்லாத பணம்' என்னும் நாவலுக்கு இந்த விருது அறிவிக்கப்பட்டது. இதேபோன்று, 23 இந்திய மொழிகளைச் சேர்ந்த எழுத்தாளர்களுக்கும் சாகித்திய அகாதெமி விருது அறிவிக்கப்பட்டிருந்தது.

---

**1. மதிப்புமிக்க பத்தாண்டுகால துபாய் கோல்டன் விசாவைப் பெற்ற உலகின் முதல் தொழிற்முறை கோல்ப் வீரர் யார்?**



அ) டைகர் வூட்ஸ்

**ஆ) ஜீவ் மில்கா சிங் ☑**

இ) ரோரி மெக்லிராய்

ஈ) ஹிதேகி மத்சுயாமா

✓ ஐரோப்பிய சுற்றுப்பயணத்தில் நான்கு முறை வென்ற ஜீவ் மில்கா சிங், மதிப்புமிக்க பத்தாண்டுகால துபாய் கோல்டன் விசாவைப் பெற்ற உலகின் முதல் தொழிற்முறை கோல்ப் வீரராக மாறியுள்ளார். கோல்ப் விளையாட்டில் அவரது சாதனைகளைப் போற்றும் விதமாக அவருக்கு இந்த விசா வழங்கப்பட்டுள்ளது.

---

**2. பின்வரும் எந்த நாட்டுடன், இந்தியா, பருவநிலை நடவடிக்கை & நிதி திரட்டல் பேச்சுவார்த்தையைத் தொடங்கியுள்ளது?**



அ) சீனா

ஆ) ரஷ்யா

இ) பிரான்ஸ்

**ஈ) அமெரிக்கா ☑**

✓ பருவநிலை நடவடிக்கை & நிதி திரட்டல் பேச்சுவார்த்தை தொடங்கியது. இப்பேச்சுவார்த்தை மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலைத் துறை அமைச்சர் புபேந்தர் யாதவ், பருவநிலைக்கான அமெரிக்க அதிபரின் சிறப்பு தூதர் ஜான் கெர்ரி ஆகியோரால் தில்லியில் முறைப்படி தொடங்கி வைக்கப்பட்டது.

✓ இந்த பேச்சுவார்த்தை, பருவநிலை மற்றும் சுற்றுச்சூழலில், இந்தியா–அமெரிக்கா இடையிலான இருதரப்பு கூட்டுறவை வலுப்படுத்துகிறது.

---

**3. நடப்பாண்டில் (2021) வரும் உலக தேங்காய் நாளுக்கான கருப் பொருள் என்ன?**

**அ) Building a Safe Inclusive Resilient and Sustainable Coconut Community Amid COVID–19 Pandemic & Beyond ☑**



ஆ) Coconuts and Nutrition World

இ) Coconuts and COVID–19

ஈ) Coconuts in Asian and Pacific regions

✓ ஒவ்வோர் ஆண்டும் செப்.2 அன்று உலகம் முழுவதும் உலக தேங்காய் நாள் அனுசரிக்கப்படுகிறது. தேங்காயின் முக்கியத்துவம் மற்றும் அதன் நன்மைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. இது, ஆசிய மற்றும் பசிபிக் தேங்காய் சமூகம் நிறுவப்பட்ட நாளையும் நினைவுகூர்கிறது. நடப்பாண்டு (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருள் – "Building a Safe Inclusive Resilient and Sustainable Coconut Community Amid COVID–19 Pandemic & Beyond".

---

**4. 'பன்னாட்டுத் தொண்டு நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**



**அ) செப்டம்பர்.5 ☑**

ஆ) செப்டம்பர்.10

இ) செப்டம்பர்.15

ஈ) செப்டம்பர்.20

✓ ஆண்டுதோறும் செப்.5 அன்று உலகம் முழுவதும் சர்வதேச தொண்டு நாள் அனுசரிக்கப்படுகிறது. தன்னார்வ & கொடை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு மக்களையும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களையும் ஊக்குவிப்பதே இந்நாளின் நோக்கமாகும். செப்.5–அன்னை தெரசாவின் நினைவுநாளையும் குறிக்கிறது. கொல்கத்தாவில் மேற்கொண்ட தொண்டுகளுக்காக அவர் அறியப்படுகிறார். கடந்த 1979ஆம் ஆண்டில், அமைதிக்கான 'நோபல்' பரிசு அவருக்கு வழங்கப்பட்டது.

---

**5. நடப்பாண்டில் (2021) வரும், ஓசோன் படலத்தைக் காப்பதற்கான பன்னாட்டு நாளுக்கான (ஓசோன் நாள்) கருப்பொருள் என்ன?**




அ) Ozone for Life

ஆ) Ozone and COVID–19

இ) Ozone defending Humans

**ஈ) Montreal Protocol – Keeping us, our food and vaccines cool ☑**

✓ உலக ஓசோன் நாள் அல்லது 'ஓசோன் படலத்தை பாதுகாப்பதற்கான சர்வதேச நாள்', செப்.16 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. ஓசோன் படலத்தைக்காப்பதற்கான வியன்னா தீர்மானம் 1985 மார்ச்.22 அன்று 28 நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது. "Montreal Protocol – Keeping us, our food and vaccines cool" என்பது நடப்பாண்டு (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**6. பன்னாட்டு சம ஊதிய நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**




அ) செப்டம்பர்.15

**ஆ) செப்டம்பர்.18 ☑**

இ) செப்டம்பர்.20

ஈ) செப்டம்பர்.22

✓ செப்டம்பர்.18ஆம் தேதியை பன்னாட்டு சம ஊதிய நாளாக ஐநா அவை கொண்டாடுகிறது. இந்த நாள் முதன்முறையாக இவ்வாண்டு (2020) கொண்டாடப்பட்டது. பெண்கள் & சிறுமிகளுக்கு எதிரான பாகுபாட்டை முடிவுக்குக்கொண்டுவருதற்காக ஐநா அவை இந்நாளை அனுசரிக்கிறது. ஐநா அவையைப் பொறுத்தவரை, உலகின் அனைத்து பகுதிகளிலும் ஆண்களைவிட பெண்களுக்கு குறைவான ஊதியம் வழங்கப்படுகிறது.

---

**7. உலக அல்சைமர் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**




அ) செப்டம்பர்.20

**ஆ) செப்டம்பர்.21 ☑**

இ) செப்டம்பர்.22

ஈ) செப்டம்பர்.23

✓ அல்சைமர் என்பது ஞாபக மறதிக்கு வழிவகுக்கிற ஒரு நாட்பட்ட நோய் ஆகும். காலப்போக்கில் இதன் நிலை மிகமோசமடைந்து அன்றாட பணிகளைச் செய்வதுகூட கடினமாகிறது. கடந்த 1994ஆம் ஆண்டு முதல், ஆண்டுதோறும் செப்.21 அன்று அல்சைமர் நாள் அனுசரிக்கப்படுகிறது. உலகெங்குமுள்ள தேசிய & உள்ளூர் அல்சைமர் சங்கங்கள், இந்நோய் குறித்த விழிப்புணர்வு திட்டங்களை அடைய உதவும் வகையில், ஆண்டுதோறும் அல்சைமர் மாதமாக செப்டம்பரை அனுசரிக்கின்றன.

---

**8. 2021 – உலக முதலுதவி நாள் கடைபிடிக்கப்பட்ட தேதி எது?**




அ) செப்டம்பர்.10

**ஆ) செப்டம்பர்.11 ☑**

இ) செப்டம்பர்.12

ஈ) செப்டம்பர்.13

✓ உலக முதலுதவி நாளானது ஆண்டுதோறும் செப்டம்பர் இரண்டாவது சனிக்கிழமையன்று கடைபிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டு (2021) செப்.11 அன்று இந்த நாள் கடைபிடிக்கப்பட்டது. முதலுதவி பயிற்சியில் மக்களை ஊக்குவிப்பதற்காக இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது; அது காயங்களைத் தடுக்கவும் மற்றும் முக்கியமான சூழ்நிலைகளில் உயிரைக் காக்கவும் உதவுகிறது. பன்னாட்டு செஞ்சிலுவை சங்கம் மற்றும் செம்பிறை சங்கங்களின்படி, 2021 உலக முதலுதவி நாளிற்கான கருப்பொருள், "First aid and road safety" ஆகும்.

---

**9. சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?**




**அ) இக்பால் சிங் லால்புரா ☑**

ஆ) அதிப் ரஷீத்

இ) P K பிஞ்சா

ஈ) ஜான் பார்லா

- ✓ முன்னாள் இகாப அதிகாரி இக்பால் சிங் லால்புரா, சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையத்தின் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். குடியரசுத்தலைவரின் காவல் பதக்கம், சிறப்பாக சேவை புரிந்தமைக்கான காவல் பதக்கம், சிரோமணி சீக் சாஹித்கர் விருது, சீக்கிய அறிஞர் விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளை அவர் பெற்றுள்ளார். அவர் பஞ்சாபைச் சார்ந்தவராவார்.

---

**10. இந்தியாவின் முதல் உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட உயர் சாம்பல் நிலக்கரி வளிமயமாக்கல் அடிப்படையிலான மெத்தனால் உற்பத்தி ஆலை திறக்கப்பட்டுள்ள நகரம் எது?**



**அ) ஹைதராபாத் ☑**

ஆ) சென்னை

இ) மங்களூரு

ஈ) பெங்களூரு

- ✓ இந்தியாவின் முதல் உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட உயர்–சாம்பல் நிலக்கரி வளிமயமாக்கல் அடிப்படையிலான மெத்தனால் உற்பத்தி ஆலை ஹைதராபாத் BHEL ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையத்தில் திறக்கப்பட்டது. NITI ஆயோக், PMO–இந்தியா மற்றும் மத்திய நிலக்கரி அமைச்சகத்தின் முயற்சியான இந்த ஆலைக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை நிதியளித்தது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பொறியியல் கல்லூரிகளின் தரவரிசை வெளியீடு**

சென்னை மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரி தேசிய தரவரிசைப் பட்டியலில் 109–ஆவது இடத்தையும், தமிழ்நாட்டில் 7–ஆவது இடத்தையும் பெற்றுள்ளது. தேசிய அளவில் தரவரிசைப் பட்டியலில் இடம் பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த 10 பொறியியல் கல்லூரிகள் குறித்த விவரங்கள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன. தேசிய அளவில் 45–ஆவது இடத்தைப் பெற்ற சென்னை SSN பொறியியல் கல்லூரி தமிழக அளவில் 1–ஆவது இடத்தையும், தேசிய அளவில் 53–ஆவது இடத்தைப் பெற்ற கோவை PSG பொறியியல் கல்லூரி தமிழக அளவில் 2–ஆவது இடத்தையும் பெற்றுள்ளன.

தேசிய அளவில் 71–ஆவது இடத்தைப் பெற்ற மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரி தமிழக அளவில் 3–ஆவது இடத்தையும், தேசிய அளவில் 78–ஆவது இடத்தைப் பிடித்துள்ள கோவை ஸ்ரீ கிருஷ்ணா பொறியியல் கல்லூரி தமிழக அளவில் 4–ஆவது இடத்தையும், தேசிய அளவில் 90–ஆவது இடத்தைப் பெற்ற குமரகுரு பொறியியல் கல்லூரி தமிழக அளவில் 5–ஆவது இடத்தையும், தேசிய அளவில் 102–ஆவது இடத்தைப்பெற்றுள்ள கோவை CIT பொறியியல் கல்லூரி தமிழக அளவில் 6–ஆவது இடத்தையும் பெற்றுள்ளன.

தேசிய அளவில் 109–ஆவது இடத்தைப் பெற்ற சென்னை ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரி தமிழக அளவில் 7–ஆவது இடத்தையும், தேசிய அளவில் 110–ஆவது இடத்தைப் பெற்ற ராஜலட்சுமி பொறியியல் கல்லூரி தமிழக அளவில் 8–ஆவது இடத்தையும் பெற்றுள்ளன. தேசிய அளவில் 124–ஆவது இடத்தைப் பெற்ற சிவகாசி மெப்கோ பொறியியல் கல்லூரி தமிழக அளவில் 9–ஆவது இடத்தையும், தேசிய அளவில் 128–ஆவது இடத்தைப் பெற்ற கோவை அரசு பொறியியல் கல்லூரி தமிழக அளவில் 10–ஆவது இடத்தையும் பெற்றுள்ளன.

---

**2. தேசிய தடகள சாம்பியன்ஷிப்: தமிழக வீரர் பிரவீணுக்கு தங்கம்**

தேசிய ஓபன் தடகள சாம்பியன்ஷிப்பில் மும்முறை தாண்டுதலில் தமிழக வீரர் பிரவீண் சித்ரவேல் தங்கம் வென்றார். அவர் தனது முதல் முயற்சியிலேயே 16.88 மீ தூரம் தாண்டி முதலிடம் பிடித்தார். சர்வீசஸ் வீரர் அப்துல்லா அபுபக்கர் 16.84 மீ கடந்து வெள்ளியும், சகவீரர் கார்த்திக் உன்னிகிருஷ்ணன் 16.80 மீ கடந்து வெண்கலமும் வென்றனர்.

இந்திய வீரர்களில் இதுவரை சிறப்பாகச் செயல்பட்டவர்கள் வரிசையில், ரஞ்சித் மஹேஸ்வரி (17.30 மீ), அர்விந்தர் சிங் (17.17 மீ) ஆகியோரை அடுத்து பிரவீண் 3–ஆவது இடத்தில் இருக்கிறார்.

மகளிருக்கான 200 மீ ஓட்டத்தில் தமிழக வீராங்கனை அர்ச்சனா சுசீந்திரன், தில்லியின் தரன்ஜீத் கௌரை தோற்கடித்து முதலிடம் பிடித்தார். ஆடவர் 200 மீ ஓட்டத்தில் அஸ்ஸாம் வீரர் அமலன் போர்கோஹெய்ன் 20.75 விநாடிகளில் இலக்கை எட்டி தங்கம் வென்றார். மகளிர் சங்கிலி குண்டு எறிதலில் மஞ்சு பாலா சிங் 64.42 மீ தூரம் எறிந்து முதலிடம் பிடித்தார். ரயில்வேயின் சரிதா ரோமித் சிங், ஜோதி ஜாக்கர் ராணா ஆகியோர் முறையே அடுத்த இரு இடங்களைப் பிடித்தனர். 10,000 மீ ஓட்டத்தில் சர்வீசஸ் வீரர் கார்த்திக் குமார், மகாரா–ஷ்டிர வீரர் சஞ்சீவனி பாபுராவ் ஜாதவ் ஆகியோர் முதலிடம் பிடித்தனர்.

---

**1.** **பின்வரும் எந்த நகரத்தில், இராஜ மகேந்திர பிரதாப் சிங் பல்கலைக்கழகத்திற்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்?**

**அ) அலிகார் ☑**

ஆ) மீரட்

இ) ஜெய்ப்பூர்

ஈ) வாரணாசி



✓ அலிகரில் ராஜா மகேந்திர பிரதாப் சிங் மாநிலப் பல்கலைக்கழகத்துக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். தலைசிறந்த விடுதலைப் போராட்ட வீரர், கல்வியாளர் மற்றும் சமூக சீர்திருத்தவாதியான ராஜா மகேந்திர பிரதாப் சிங்கின் நினைவாகவும், அவரை கௌரவிக்கும் வகையிலும், உபி மாநில அரசால் இப்பல்கலைக்கழகம் அமைக்கப்படுகிறது. அலிகார் பிரிவில் உள்ள 395 கல்லூரிகளுக்கு இப்பல்கலை அங்கீகாரமளிக்கும்.

---

**2.** **பொறியாளர்கள் நாள் கடைபிடிக்கப்படுகிற தேதி எது?**

அ) செப்டம்பர்.14

ஆ) செப்டம்பர்.10

**இ) செப்டம்பர்.15 ☑**

ஈ) செப்டம்பர்.11




✓ சர் மோக்ஷகுண்டம் விஸ்வேஸ்வரய்யாவின் பிறந்தநாளை முன்னிட்டு செப்.15 அன்று பொறியாளர்கள் நாள் அனுசரிக்கப்பட்டது. இந்த நாள் பொறியியல் மற்றும் கல்வித்துறையில் சர் மோக்ஷகுண்டம் விஸ்வேஸ்வ–ரையாவின் பங்களிப்புகளைக் குறிக்கிறது. இந்தியா முழுவதும் அணைகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்மின்திட்டங்களை அமைப்பதில் அவர் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தார்.

---

**3.** **சமீபத்தில், மத்திய மறைமுக வரிகள் & சுங்கங்கள் வாரியத்தால் சுங்க விமான நிலையமாக அறிவிக்கப்பட்ட விமான நிலையம் எது?**

அ) காங்க்ரா விமான நிலையம்

ஆ) பாக்கியோங் விமான நிலையம்

இ) சுவாமி விவேகானந்தா விமான நிலையம்

**ஈ) குஷிநகர் விமான நிலையம் ☑**



✓ மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்கநங்கள் வாரியமானது (CBIC), குஷிநகர் விமான நிலையத்தை, சுங்க விமான நிலையமாக அறிவித்து உள்ளது. இந்த அறிவிப்பு பௌத்த யாத்திரீகர்கள் உட்பட பன்னாட்டுப் பயணிகளின் போக்குவரத்துக்கு உதவும்.

---

**4.** **ஹிந்தி திவாஸின்போது "உதான் திட்டத்தை" தொடங்கிய அமைப்பு எது?**

அ) ஐஐடி கௌகாத்தி

**ஆ) ஐஐடி பம்பாய் ☑**

இ) ஐஐடி காந்திநகர்

ஈ) ஐஐடி தில்லி

✓ 2021 செப்.14 அன்று ஹிந்தி திவாஸ் நாளன்று ஐஐடி–பாம்பே தனது "உதான் திட்டத்தை" அறிமுகப்படுத்தியது. உயர்கல்வி நிறுவனங்களில் சேரும்போது பல மாணவர்கள் எதிர்கொள்ளும் மொழி ரீதியிலான தடையை உடைக்கும் நோக்கில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.

✓ இந்த "உதான் திட்டம்" பாடப்புத்தகங்கள் & பிற ஆய்வுப்பொருட்களை ஆங்கில மொழியிலிருந்து ஹிந்தி மற்றும் பிற இந்திய மொழிகளுக்கு மொழிபெயர்க்க உதவுகிறது.

---

**5.** **2021 – சுவாமி பிரம்மானந்த் விருது யாருக்கு வழங்கப்பட்டது?**

அ) H C வர்மா

ஆ) அரவிந்த் கெஜ்ரிவால்

இ) ஆனந்த் மஹிந்திரா

**ஈ) ஆனந்த் குமார் ☑**



✓ ஐஐடி நுழைவுத் தேர்வுக்கு ஆதரவற்ற மாணவர்களைத் தயார்படுத்தும் "சூப்பர் 30" முயற்சியின்மூலம் கல்வித்துறைக்கு அவர் ஆற்றிவரும் பங்களிப்பிற்காக கணிதவியலாளர் ஆனந்த் குமாருக்கு 2021 – சுவாமி பிரம்மானந்த் விருது வழங்கப்பட்டது.

---

**6.** **US ஓபன் பெண்கள் இரட்டையர் பட்டத்தை வென்றவர் யார்?**

அ) கோகோ காஃப் மற்றும் கேட்டி மெக்னலி

**ஆ) சமந்தா ஸ்டோசூர் மற்றும் ஜாங் ஷுவாய் ☑**

இ) சமந்தா ஸ்டோசூர் மற்றும் எம்மா ரடுகானு

ஈ) பெங் சுவாய் மற்றும் வாங் கியாங்



✓ ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசர் மற்றும் சீனாவின் ஜாங் ஷுவாய் ஆகியோர் தொடர்ச்சியாக 11ஆவது ஆட்டத்தில் வெற்றிபெற்று அமெரிக்க ஓபன் மகளிர் இரட்டையர் இறுதிப்போட்டியில் அமெரிக்க இளம்பெண்க–ளான கோகோ காப் மற்றும் கேட்டி மெக்னலி ஆகியோரை வீழ்த்தி வெற்றிபெற்றனர்.

---

**7.** **எந்நாட்டின் கடற்படையுடன் இணைந்து, INS தபார், செங்கடலில் இராணுவப்பயிற்சியை நடத்தியது?**

**அ) சூடான் ☑**

ஆ) எகிப்து

இ) எத்தியோப்பியா

ஈ) ஓமன்



✓ இந்திய கடற்படையும் சூடான் கடற்படையும் சூடான் கடலுக்கு அப்பால் செங்கடலில் இருதரப்பு கடற்பயிற்சியை மேற்கொண்டன. INS தபார் மற்றும் அல்மாஸ் & நிமர் ஆகிய இரண்டு சூடான் கடற்படை கப்பல்கள் இந்திய கடற்படையுடன் இணைந்து இந்தப் பயிற்சியில் பங்கேற்றன.

---

**8.** **2022 பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டியிலிருந்து சர்வதேச ஒலிம்பிக் குழுமத்தால் இடைநீக்கம் செய்யப்பட்ட நாடு எது?**

அ) கியூபா

**ஆ) வட கொரியா ☑**

இ) வெனிசுலா

ஈ) பெரு

BEIJING 2022

✓ COVID தொற்றுநோயைக்காரணங்காட்டி டோக்கியோ விளையாட்டுக்கு ஓர் அணியை அனுப்ப மறுத்ததற்காக, 2022ஆம் ஆண்டு பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக்கிலிருந்து, வட கொரியாவை பன்னாட்டு ஒலிம்பிக் குழுமம் முறையாக இடைநீக்கம் செய்துள்ளது.

---

**9.** **மருத்துவ படிப்புகளின் சேர்க்கைக்கு NEET விலக்கு கோரும் மசோதாவை நிறைவேற்றிய மாநிலம் எது?**

**அ) தமிழ்நாடு ☑**

ஆ) கேரளா

இ) மகாராஷ்டிரா

ஈ) ஒடிஸா




✓ NEET (தேசிய தகுதி மற்றும் நுழைவுத்தேர்வு)'இலிருந்து மாநிலத்திற்கு நிரந்தர விலக்கு கோரும் மசோதாவை தமிழ்நாட்டின் சட்டசபை நிறைவேற்றியது. இம்மசோதா நிறைவேறியவுடன், மாணவர்கள் NEET அமல்படுத்தப்படுவதற்கு முன்பு இருந்ததுபோல், பன்னிரண்டாம் வகுப்பு மதிப்பெண்களின் அடிப்படையில் மருத்துவ இலங்கலை பட்டப்படிப்புக–ளில் சேர்க்கப்படுவார்கள்.

---

**10.** **பின்வரும் எந்த நாட்டிடம், இந்தியா, டார்னியர் விமானத்தை ஒப்படைத்துள்ளது?**

அ) சிங்கப்பூர்

ஆ) வியட்நாம்

**இ) மொரிஷியஸ் ☑**

ஈ) இலங்கை



- இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் கடல்சார் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக விஷன் சாகர் திட்டத்தின் ஒருபகுதியாக, இந்தியா, மொரிஷியஸிடம் டார்னியர் இரக விமானத்தை ஒப்படைத்துள்ளது.
- "Security and Growth for All in the Region" என்பதன் சுருக்கந்தான் SAGAR. இதன்மூலம் இந்தியா தனது கடல்சார் அண்டை நாடுகளுடன் பாதுகாப்பு & பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்த எண்ணுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. NEET தேர்வு நீடித்தால் தமிழகம் 75 ஆண்டுகாலம் பின்னோக்கி சென்றுவிடும்**

நீட் தோ்வு குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட ஓய்வு பெற்ற நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையிலான குழுவின் ஆய்வறிக்கை மக்கள் நல்வாழ்வுத் துறை இணையப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. நீட் தோ்வு இன்னும் சில ஆண்டுகள் தொடா்ந்தால் சுதந்திரத்துக்கு முன்பு இருந்த பின்னடைவை தமிழகம் மீண்டும் சந்திக்கும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் மருத்துவத் துறை மிகப் பெரிய அளவில் பாதிக்கப்படக் கூடும் என்றும், நகா்ப்புறங்கள், கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழைகளுக்கு மருத்துவக் கல்வி எட்டாக்கனியாகிவிடும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்ட வாய்ப்புகளைப் பயன்படுத்தியும், புதிய சட்ட முன்வடிவைக் கொண்டு வந்தும் நீட் தோ்வு முறையை தமிழகத்தில் ரத்து செய்ய நடவடிக்கை வேண்டும் என்று நீதிபதி ராஜன் குழு பரிந்துரைத்துள்ளது. நாடு முழுதும், மருத்துவப் படிப்புகளுக்கான மாணவா் சோ்க்கைக்கு நீட் நுழைவுத் தோ்வு நடத்தப்படுகிறது. தமிழகத்தைப் பொருத்தவரை மாநில அரசு அத்தோ்வை ரத்து செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து வருகிறது.

அதன் தொடா்ச்சியாக நீட் தோ்வில் உள்ள பாதகங்களை ஆராய நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையில் மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளா், மருத்துவக் கல்வி இயக்குநா் உள்பட 9 போ் அடங்கிய உயா்நிலைக் குழு ஒன்றை அரசு அமைத்தது. இக்குழுவானது அதுதொடா்பான ஆலோசனைக் கூட்டங்களை நடத்தியதுடன், பொதுமக்களிடம் இருந்தும் கருத்துகளைக் கேட்டிருந்தது. அதன்படி, சுமாா் 85 ஆயிரத்துக்கும் மேற்பட்டோா் தங்களுடைய கருத்துகளை தெரிவித்து இருந்தனா்.

அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஆய்வறிக்கையை முதல்வா் மு.க.ஸ்டாலினிடம் கடந்த சில வாரங்களுக்கு முன்பு நீதிபதி ராஜன் குழு சமா்ப்பித்தது. இதற்கிடையே, சட்டப் பேரவையில் நீட் தோ்வுக்கு விலக்கு அளிக்கும் மசோதாவை நிறைவேற்றி, அதனை ஆளுநா் மற்றும் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு தமிழக அரசு அனுப்பியுள்ளது. இந்நிலையில், ராஜன் குழுவின் ஆய்வறிக்கை மக்கள் நலத் துறை இணையப் பக்கத்தில் திங்கள்கிழமை வெளியிடப்பட்டது. அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

நீட் தோ்வின் சாதக, பாதகங்களை ஆய்வு செய்ததுடன் அதுதொடா்பாக பொது மக்களிடம் கருத்தறியப்பட்டது. அதற்காக விளம்பரம் வெளியிடப்பட்டு, முறையாகக் கருத்துகள் பெறப்பட்டன. மொத்தம் 86,342 பேரிடமிருந்து கருத்துகள் பெறப்பட்டன. அவற்றில், 85,953 கருத்துகள் மின்னஞ்சல் மூலமாகவும், 332 அஞ்சல் மூலமாகவும், 57 டிராப்–பாக்ஸ் மூலமாகவும் பெறப்பட்டன. அவற்றைப் பரிசீலித்தபோது அதில் 65,007 போ் நீட் தோ்வுக்கு எதிராகவும், 18,966 போ் ஆதரவாகவும் கருத்து தெரிவித்திருந்தனா். 1,453 போ் கருத்து தெரிவிக்க விரும்பவில்லை என்று குறிப்பிட்டிருந்தனா். அவா்கள் அளித்த ஆலோசனைகள் மற்றும் கருத்துகளை ஆய்வு செய்ததில் நீட் தோ்வு தமிழகத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை உணர முடிகிறது.

இந்தத் தோ்வு முறை தொடா்ந்தால், மாநிலத்தின் சுகாதாரக் கட்டமைப்பு சீா்குலையும். சுதந்திரத்துக்கு முன்பு கிராமங்களிலும், சிறுநகரங்களிலும், அடிப்படை மருத்துவப் பயிற்சிகளை மட்டுமே கற்ற சுகாதார ஊழியா்கள் மருத்துவம் பாா்த்து வந்தனா். அந்த நிலைக்குத்தான் தமிழகம் தள்ளப்படும். இதைத் தவிா்க்க தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு மருத்துவ இடங்களை மாநில அரசே நிரப்பலாம். அல்லது சட்ட மசோதாவை நிறைவேற்றி குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பலாம். அதைத் தொடா்ந்து பிளஸ் 2 மதிப்பெண் அடிப்படையில் மாணவா் சோ்க்க நடத்த வேண்டும் என்று அந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**2. உத்தரகாண்ட் மாநிலத்தில் இந்தியா–நேபாளம் கூட்டு ராணுவ பயிற்சி**

இந்தியா மற்றும் நேபாள நாட்டின் ராணுவம் கூட்டாக 15 நாட்கள் போர்ப் பயிற்சி பெறுகின்றன. இந்த பயிற்சி உத்தரகாண்ட் மாநிலம் பித்தோராகரில் நேற்று தொடங்கி உள்ளது. இதையொட்டி கலாசார நிகழ்வுகள் இடம் பெற்றன. அக்டோபர் 3–ந்தேதி வரை பயிற்சி நடக்கிறது. இந்த போர்ப்பயிற்சிக்கு சூர்யகிரண் என்று பெயரிடப்பட்டு உள்ளது. முன்னதாக கடந்த சனிக்கிழமை இந்த போர் பயிற்சிக்காக உத்தரகாண்ட் வந்திறங்கிய நேபாள ராணுவ குழுவினருக்கு இந்திய ராணுவ அணிவகுப்பு நடத்தி வரவேற்பு கொடுக்கப்பட்டது.

இதுகுறித்து இந்திய ராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இது இந்தியாவும், நேபாளமும் இணைந்து பங்குபெறும் 15–வது பயிற்சியாகும். இரு நாட்டு ராணுவ தடைப்படை குழுக்கள், தங்கள் பயங்கரவாத தடுப்பு யுத்திகள் மற்றும் பேரிடர் மீட்பு உத்திகள் பற்றிய பயிற்சிகளை பங்கிட்டு கொள்வதுடன், தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்கின்றன" என்று கூறப்பட்டு உள்ளது.

---

**3. இந்திய, இந்தோனேசிய கடற்படை கூட்டுப் பயிற்சி தொடக்கம்**

இந்திய, இந்தோனேசிய கடற்படைகள் இணைந்து மேற்கொள்ளும் கூட்டுப் பயிற்சி திங்கள்கிழமை தொடங்கியது. கடந்த 2018–ஆம் ஆண்டு முதல் இந்தியா, இந்தோனேசியா கடற்படைகள் இணைந்து 'சமுத்திர சக்தி' என்ற பெயரில் கூட்டுப் பயிற்சி மேற்கொண்டு வருகின்றன. இந்தப் பயிற்சி 3–ஆவது முறையாக இந்தோனேசியாவின் ஜாவா, சுமத்ரா தீவுகளுக்கு இடையே உள்ள சுன்டா நீரிணைப் பகுதியில் திங்கள்கிழமை தொடங்கியது. இந்தப் பயிற்சியில் இந்திய கடற்படையின் ஷிவாலிக், கட்மத் போா்க்கப்பல்களும், கடற்பகுதியில் நீண்ட தூரம் உளவு பாா்க்கும் பி81 விமானமும் பங்கேற்கின்றன.

இதுதொடா்பாக இந்திய கடற்படை செய்தித்தொடா்பாளரும் கமாண்டருமான விவேக் மத்வால் கூறுகையில், "கடல்சாா் நடவடிக்கைகளில் இந்தியா, இந்தோனேசியா கடற்படைகளுக்கு இடையிலான உறவை வலுப்படுத்துவதையும், பரஸ்பர புரிதல் மற்றும் கூட்டாக செயல்படுவதை மேம்படுத்துவதையும் 'சமுத்திர சக்தி' பயிற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது. கடல்சாா் பாதுகாப்பு நடவடிக்கைகள் சாா்ந்த பொதுவான புரிதலை வளா்த்துக் கொள்ளவும், இருதரப்பிலுமுள்ள சிறந்த நடைமுறைகளை பகிா்ந்துகொள்ளவும் இந்தப் பயிற்சி உதவும்' ' என்று தெரிவித்தாா்.

---

**4. புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருது: எஸ்.வி. சரஸ்வதிக்கு குடியரசுத் தலைவா் வழங்கினாா்**

ராணுவ செவிலியா் சேவை (எம்என்எஸ்) துணைத் தலைமை இயக்குநா் பிரிகேடியா் எஸ்.வி.சரஸ்வதிக்கு 2020–ஆம் ஆண்டுக்கான தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருதை குடியரசுத் தலைவா் ராம்நாத் கோவிந்த் வழங்கி கௌரவித்தாா். ராணுவ செவிலியா் சேவையில் மகத்தான பங்களிப்புக்காக அவருக்கு செவிலியா்களுக்கான மிக உயா்ந்த விருது வழங்கப்பட்டுள்ளது. காணொலி வாயிலாக திங்கள்கிழமை நடைபெற்ற இந்த விழாவில் குடியரசுத் தலைவா், பிரிகேடியா் எஸ்.வி.சரஸ்வதிக்கு இந்த விருதை வழங்கினாா்.

---

**1.** PM KUSUM திட்டத்தின்கீழ் ஆஃப்-கிரிட் சோலார் பம்புகளை நிறுவுவதில், நாட்டிலேயே முதலிடத்தில் உள்ள மாநிலம் எது?

அ) பீகார்

ஆ) இராஜஸ்தான்

**இ) ஹரியானா ☑**

ஈ) மத்திய பிரதேசம்

✓ 2020-21ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த 15,000 பம்புகளில் 14,418 பம்புகளை நிறுவி, பிரதான் மந்திரி கிசான் உர்ஜா சுரக்ஷா இவம் உத்தன் மகாபியான் (PM KUSUM) கீழ் ஆஃப்-கிரிட் சோலார் பம்புகளை நிறுவுவதில் ஹரியானா நாட்டிலேயே முதலிடத்தைப் பிடித்துள்ளது.

---

**2.** தேசிய வன தியாகிகள் நாள் கடைபிடிக்கப்படுகிற தேதி எது?



அ) செப்டம்பர்.14

ஆ) செப்டம்பர்.10

இ) செப்டம்பர்.15

**ஈ) செப்டம்பர்.11 ☑**

✓ செப்.11 அன்று தேசிய வன தியாகிகள் நாள் கொண்டாடப்படுகிறது. 2013 ஆம் ஆண்டில், சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் அறிவித்த பிறகு, இந்த நாள் அதிகாரப்பூர்வமாக நடைமுறைக்கு வந்தது. கடந்த 1730'இல் இதே தேதியில், பலரறியா கெஜார்லி படுகொலை நடந்ததைக் குறிக்கும் வகையில் இத்தேதி தேர்வு செய்யப்பட்டது இத்துயரச்சம்பவத்தின்போது, இராஜஸ்தானின் அப்போதைய மன்னர் மகாராஜா அபை சிங்கின் உத்தரவின் பேரில் மக்கள் கெஜார்லி மரங்களை வெட்டத்தொடங்கினர். இந்த மரங்கள், ராஜஸ்தானின் கெஜார்லி கிராமத்தில் உள்ள பிஷ்னோய் சமூகத்தைச் சேர்ந்த மக்களால் புனிதமாகக் கருதப்பட்டன.

---

**3.** 'இந்தியாவில் நகர்ப்புற திட்டமிடல் திறனில் சீர்திருத்தங்கள்' பற்றிய அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?

அ) தேசிய மேம்பாட்டுக் கழகம்

**ஆ) NITI ஆயோக் ☑**

இ) புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்

ஈ) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

✓ 'இந்தியாவில் நகர்ப்புற திட்டமிடல் திறனில் சீர்திருத்தங்கள்' பற்றிய அறிக்கையை, NITI ஆயோக் வெளியிட்டுள்ளது.

✓ சுகாதாரமான நகரங்களைத் திட்டமிடுதல், நகர்ப்புற நிலத்தின் உகந்த பயன்பாடு, மனிதவள திறன்களை அதிகரித்தல், நகர்ப்புற நிர்வாகத்தை வலுப்படுத்துதல், உள்ளூர் தலைமையை உருவாக்குதல், தனியார் துறையின் பங்கை மேம்படுத்துதல் மற்றும் நகர்ப்புற திட்டமிடல் கல்வி முறையை மேம்படுத்துதல் ஆகியவை உட்பட நகர்ப்புற திட்டமிடல் குறித்த பல அம்சங்களின் பரிந்துரைகள் இந்த அறிக்கையில் உள்ளன.

---

**4.** காவல்துறையினரின் கோரிக்கைகள் மற்றும் தேவைகளை அறிந்துகொள்வதற்காக புதிய காவலாணையத்தை அமைக்க முடிவு செய்துள்ள மாநிலம் எது?

**அ) தமிழ்நாடு ☑**

ஆ) இமாச்சல பிரதேசம்

இ) குஜராத்

ஈ) மணிப்பூர்

✓ காவல்துறையினரின் கோரிக்கைகள் மற்றும் தேவைகளை அறிந்து கொள்வதற்காக தமிழ்நாடு அரசு ஒரு புதிய காவல் ஆணையத்தை அமைக்கவுள்ளது. காவல்துறை மற்றும் பொதுமக்களுக்கிடையிலான உறவை வலுப்படுத்துவதற்கான வழிகள், தேவையான திட்டங்கள் மற்றும் காவல்துறையினருக்கான புதிய பயிற்சித்திட்டங்களை பரிந்துரைப்பது இதன் பணியாகும்.

✓ பொதுமக்கள் தங்கள் குறைகளை காவல்துறையில் பதிவுசெய்வதற்காக ஒரு திறன்பேசி செயலியை வெளியிடுவதோடு மட்டுமல்லாமல், ஓர் ஆன்லைன் புகார் தாக்கல் பொறிமுறையும் உருவாக்கப்படும். வங்கிகள், வேலைவாய்ப்பு மற்றும் பிற இணையவழி குற்றங்கள் சம்பந்தப்பட்ட குற்றங்களைச் சமாளிக்க நிபுணர்கள் பணியமர்த்தப்படுவார்கள்.

**5.** டிஜிட்டல் விவசாயத்தை முன்னெடுப்பதற்காக பின்வரும் எந்த நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது?



அ) சிஸ்கோ

ஆ) நிஞ்சாகார்ட்

இ) ITC லிட்

**ஈ) மேலே உள்ள அனைத்தும் ☑**

✓ டிஜிட்டல் விவசாயத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக தனியார் நிறுவனங்களுடன் 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் வேளாண் மற்றும் உழவர்கள் நல அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது. இத்திட்டங்களின் அடிப்படையில், எப்பயிரை விளைவிக்கலாம், எந்த வகை விதையைப் பயன்படுத்தலாம், அதிக மகசூலைப் பெறுவதற்காக என்ன செயல் முறைகளைப் பின்பற்றலாம் உள்ளிட்டவை குறித்த விவரமான முடிவுகளை விவசாயிகள் எடுக்க இயலும்.

---

**6.** கதிரியக்கத்தரவைப்பெறக்கூடிய புவி கண்காணிப்பு செயற்கைக் கோளை விண்ணில் செலுத்திய நாடு எது?

**அ) சீனா ☑**



ஆ) இந்தியா

இ) ஜெர்மனி

ஈ) ஜப்பான்

✓ சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சிகளை கண்காணிக்கும் மற்றும் அதன் இயற்கைவள கண்காணிப்பை அதிகரிக்கும் முயற்சியாக சீனா 24ஆவது காபென்-வரிசை புவி-கண்காணிப்பு செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தியது. லாங் மார்ச் 4C ஏவுகலத்தில், ஷான்ஸி மாகாணத்தில் உள்ள தையுவான் செயற்கைக்கோள் ஏவு மையத்தில் இருந்து இந்தச் செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட்டது.

✓ விண்வெளி, நிறமாலை மற்றும் கதிரியக்கத் தரவைப் பெறும் திறன் கொண்ட அந்த விண்கலத்தில் சீனா ஏழு இமேஜர்கள் மற்றும் சென்சார்களை பொருத்தியுள்ளது.

---

**7.** எந்த வங்கியின் பங்குதாரராக ரேகா ஜெயின் நியமிக்கப்பட்டார்?

அ) இந்தியன் வங்கி

**ஆ) பஞ்சாப் நேஷனல் வங்கி ☑**

இ) HDFC வங்கி

ஈ) ஐசிஐசிஐ வங்கி

✓ ஆஷா பண்டார்கர், பங்குதாரர் இயக்குநராக இருந்து விலகிய பிறகு, ரேகா ஜெயினை தனது பங்குதாரர் இயக்குநராக பஞ்சாப் நேஷனல் வங்கி நியமித்துள்ளது. முன்னதாக, அவர் இந்திய தொலைத்தொடர்பு ஆலோசகர்கள் குழுவில், 2015ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை ஒரு சுயாதீன இயக்குநராக பணியாற்றினார். ஜெயின், TCIL வாரியத்தின் தணிக்கை குழுவிற்கும் தலைமைதாங்கியுள்ளார்.

---

**8.** கோளரங்க புதுமை சவாலை தொடங்கியுள்ள நிறுவனம் எது?

**அ) மைகவ் இந்தியா ☑**

ஆ) இஸ்ரோ

இ) NITI ஆயோக்

ஈ) பிர்லா கோளரங்கம்

✓ இந்திய துளிர்நிறுவனங்கள் & தொழினுட்ப தொழில்முனைவோருக்காக கோளரங்க புதுமை சவாலை மைகவ் கடந்த வாரம் தொடங்கியது. 2021 அக்.10 வரை இதற்காக பதிவுசெய்துகொள்ளலாம். நமது கோளரங்குகளு -க்கான அதிநவீன தொழில்நுட்பத்தை உருவாக்குவதற்காக புது நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்ப தொழில்முனைவோரிடமிருந்து விண்ணப்பங்களை இந்தச் சவால் வரவேற்கிறது.

---

**9.** **சமீபத்தில், ஆசிய–பசிபிக் கட்டற்ற வர்த்தக குழுவில் சேருவதற்கு விண்ணபித்த நாடு எது?**

அ) இந்தியா

ஆ) ஜப்பான்

**இ) சீனா ☑**

ஈ) சிங்கப்பூர்



- ✓ பன்னாட்டு அரசியலில் தனது செல்வாக்கை அதிகரிக்க 11 நாடுகளைக் கொண்ட ஆசிய–பசிபிக் கட்டற்ற வர்த்தகக் குழுவில் சேருவதற்கு சீனா விண்ணபித்துள்ளது. சீன வர்த்தக அமைச்சர் வாங் வென்டாவோ, நியூசிலாந்தின் வர்த்தக அமைச்சரிடம் டிரான்ஸ்–பசிபிக் பார்ட்னர்ஷிப் (CPTPP) அல்லது ஆசிய–பசிபிக் தடையற்ற வர்த்தகக் குழுவிற்கான விரிவான மற்றும் முன்னேற்ற ஒப்பந்தத்தின் பிரதிநிதியாக அந்த விண்ணப்பத்தை சமர்ப்பித்தார்.
- ✓ CPTPP என்பது ஆசியாவுடனான உறவை அதிகரிக்க அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவால் ஊக்குவிக்கப்பட்ட குழுவாகும். CPTPP ஆனது புருனே, ஆஸ்திரேலியா, கனடா, சிலி, ஜப்பான், மலேசியா, மெக்சிகோ, பெரு, சிங்கப்பூர், நியூசிலாந்து மற்றும் வியட்நாம் ஆகியவற்றை உள்ளடக்கியது.

---

**10.** **2021 – ஸ்வச்சதா பக்வாடா தொடங்கப்பட்ட இடம் எது?**

அ) மர்மகோவா துறைமுக அறக்கட்டளை

**ஆ) கொச்சி துறைமுக அறக்கட்டளை ☑**

இ) ஜவஹர்லால் நேரு துறைமுக அறக்கட்டளை

ஈ) நவ ஷேவா சர்வதேச சரக்குகள் முனையம்




- ✓ 2021 செப்.16 அன்று, கொச்சின் துறைமுக அறக்கட்டளையில் 'ஸ்வச்சதா பக்வாடா–2021' தொடங்கப்பட்டது. அனைத்து துறைகளிலும் ஸ்வச்சதா உறுதிமொழி வழங்கப்பட்டது. இதன்போது, துறைமுகப் பகுதிகளில் 'ஷ்ரம்தான் தூய்மைப் பணிகள்' தொடங்கப்பட்டன. முன்மொழியப்பட்ட பக்வாடா நடவடிக்கைகளின் போது துறைமுகப் பகுதிக்குள் வேலை செய்யும் இடங்கள், அலுவலக வளாகங்கள் மற்றும் பொது இடங்களை தூய்மை செய்வது ஆகியவை அடங்கும்.
- ✓ 'ஸ்வச்சதா பக்வாடா' என்பது சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பிரச்சாரமாகும், இது தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்திய விமானப் படை புதிய தலைமைத் தளபதி விவேக் ராம் சௌதரி**

இந்திய விமானப் படையின் புதிய தலைமைத் தளபதியாக விவேக் ராம் சௌதரி நியமிக்கப்படவுள்ளார் என்று நடுவண் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்திய வான்படைத்தலைமைத் தளபதி ஆர் கே எஸ் பதௌரியா செப்.30 ஓய்வு பெறுகிறார். இதையடுத்து விமானப்படையின் புதிய தலைமைத் தளபதியாக ஏர் மார்ஷல் விவேக் ராம் சௌதரியை நியமிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

**2. பெங்களூரு–சென்னை எண்ணூர் அதிவேக விரைவுச்சாலை திட்டம்**

பெங்களூரு–சென்னை எண்ணூர் 6 வழி விரைவுச்சாலை திட்டத்துக்–கான நில எடுப்புப்பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

பிற மாநிலங்களில் இருந்து, சென்னை–எண்ணூர் காமராஜர் மற்றும் காட்டுப்பள்ளி தனியார் துறைமுகங்களுக்கு சரக்கு வாகனங்கள் வேகமாக வருவதற்காக பாரத்மாலா பரியோஜனா திட்டம்மூலம் தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம், ஆந்திர பிரதேச மாநிலம் சித்தூர் முதல், தமிழகத்தின் எல்லையான திருவள்ளூர் மாவட்டத்துக்கு உள்பட்ட தச்சூர் வரையில் 126.550 கிமீ தூரத்துக்கு, பெங்களூரு–சென்னை அதிவேக நெடுஞ்சாலை (6 வழிச்சாலை) அமைக்க திட்டமிடப்பட்டது.

இதில், ஆந்திர மாநிலத்தில் 75 கிமீ, தமிழக எல்லையான திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பள்ளிப்பட்டு, ஊத்துக்கோட்டை, பொன்னேரி ஆகிய வட்டங்களில் 51.550 கிமீ தூரம் உள்ளது. இதற்கிடையே அமைய உள்ள இச்சாலைக்கு NH–716 என்று அழைக்கப்படுகிறது.

---

**3. மதுரையும் மகாத்மாவும்! | மகாத்மா காந்தியின் மதுரை விஜயம் பற்றிய தலையங்கம்**

சரியாக இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இதே செப்டம்பர் 22–ஆம் நாள். நமது தமிழகத்தின் மதுரை மாநகரில் அன்று நடந்த சம்பவம் ஒன்று, கடந்த நூற்றாண்டின் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுகளில் ஒன்றாக உலகத்தவரால் கொண்டாடப்படுகிறது. அதுவரை அஹிம்சையையும், அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலையையும் மட்டுமே தனது குறிக்கோளாகக் கொண்டிருந்த காந்தியடிகளை, அடித்தட்டு சாமானியர் குறித்தும் சிந்திக்க வைத்த சரித்திரத் திருப்பம் அந்த நாளில் மாநகர் மதுரையில் அரங்கேறியது.

ஐந்து தடவை மதுரை மாநகருக்கு விஜயம் செய்திருக்கிறார் அண்ணல் காந்தியடிகள். அவரது ஒவ்வொரு மதுரை விஜயமும் ஒவ்வொரு விதத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது என்பதுதான் ஆச்சரியம். அண்ணல் காந்தியடிகளுக்கு மட்டுமல்ல, சுவாமி விவேகானந்தர், பாலகங்காதர திலகர், அரவிந்த கோஷ், நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் என்று ஏனைய பல தன்னிகரற்ற தலைமைப் பண்பாளர்களின் வாழ்க்கையிலும் தமிழகம் திருப்புமுனைத் திருத்தலமாக இருந்திருக்கிறது என்பதைத் தற்செயல் நிகழ்வாக ஒதுக்கிவிட முடியவில்லை. அந்த வகையில் பார்க்கும்போது, தமிழகம் காந்தியடிகளிடம் ஏற்படுத்திய தலைகீழ் மாற்றத்தை நாம் பெருமிதத்துடன் கொண்டாடக் கடமைப் பட்டிருக்கிறோம்.

மகாத்மா காந்தியின் இரண்டாவது மதுரை விஜயம்தான் வரலாற்றுச் சிறப்புமிக்க விஜயமாக அமைந்தது. 1921 செப்டம்பர் 21, 22 தேதிகளில் மதுரையில் தங்கியிருந்தார் அண்ணல். மதுரைக்கு ரயிலில் வந்து கொண்டிருக்கும்போதுதான் அண்ணலுக்கு அந்த மனமாற்றம் ஏற்பட்டது. அவரது சிந்தனையிலும் செயல்பாட்டிலும் சாமானியன் முன்னிலை பெற்றது அந்தப் பயணத்தின்போதுதான். மதுரையை நோக்கி விரைந்து கொண்டிருந்த அந்த ரயில், திண்டுக்கல்லைத் தாண்டிப் பயணித்துக் கொண்டிருந்தது. ரயில் பெட்டியில் அமர்ந்திருந்தார் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி. குஜராத்தியினருக்கே உரித்தான பாணியில் உடையணிந்து, தலையில் பெரிய தலைப்பாகையுடன் சக பயணிகளுடன் உரையாடிக் கொண்டும், ரயில் பெட்டிக்கு வெளியே எழில் கொஞ்சும் தமிழகத்தின் வயல்வெளிகளைக் கண்குளிரப் பார்த்துக் கொண்டும் பயணித்துக் கொண்டிருந்தார்.

வெறும் கோவணத்துணியுடன் வயலில் உழவர்கள் உழுது கொண்டிருக்கும் காட்சியைப் பார்த்த வண்ணம் பயணித்துக் கொண்டிருந்த மோகன்தாஸின் மனதில் புயலடிக்கிறது. அங்கே பலர் கோவணத்துணியுடன் உழுது கொண்டிருக்க, இங்கே தான் பல முழம் துணிகளால் போர்த்தப்பட்ட உடையணிந்து கொண்டிருப்பதை நினைத்துத் துணுக்குறுகிறது அந்த மாமனிதரின் மனம். தனக்கும் சாமானிய இந்தியனுக்கும் இடையே இருக்கும் இடைவெளியை அவர் புரிந்து கொள்கிறார். அடுத்த நிமிடமே, தனது உதவியாளரை அழைத்து நீண்டதொரு அறிக்கையை அந்த ரயில் பெட்டியில் அமர்ந்தபடியே எழுதுகிறார். இடி முழக்கத்துக்கு முன்னால் வரும் மின்னல் வெட்டுப்போல, அவரது ஆடை மாற்றத்துக்கு முன்னால், அந்த ரயில் பெட்டியில் மனமாற்றம் ஏற்பட்டு விடுகிறது.

மதுரைக்கு வந்த மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி, மேலமாசி வீதி 251 ஏ – இலக்க வீட்டில் தங்குகிறார். செப்டம்பர் 21–ஆம் தேதி இரவு தூங்கப் போவதற்கு முன்னால், அடுத்த நாள் அதிகாலையில் தான் மேற்கொள்ள இருக்கும் மாற்றத்துக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டார். செப்டம்பர் 22 அதிகாலையில் முழுக்க மழித்தத் தலையுடனும், நான்கு முழ வேட்டியுடன் மேலே ஒரு துணியை மட்டும் போர்த்திக் கொண்டு காட்சியளித்த அந்தக் கணமே மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி காற்றுடன் கரைந்து, அங்கே மகாத்மா காந்தி உருவெடுத்து விட்டார். "கடையனுக்கும் கடைத்தேற்றம்' இல்லாமல் அஹிம்சையும், சுதந்திரமும் அர்த்தமற்றவை என்பதை அவர் தனது செயலால் உணர்த்த முற்பட்டார். பொது வாழ்க்கையில் ஈடுபடுபவர்கள் எளிமையின் அடையாளமாக இருந்தாக வேண்டும் என்று தீர்மானித்தார்.

"எனது வாழ்க்கையில் நீண்ட சிந்தனைக்குப் பிறகு நான் எடுத்த எந்தவொரு முடிவு குறித்தும் நான் வருத்தப்பட வேண்டிய அவசியம் ஏற்படவே இல்லை" என்பார் மகாத்மா காந்தி. அப்படி எடுத்த முடிவுகளில் முக்கியமான முடிவுதான் செப்டம்பர் 22, 1921–இல் மதுரையில் அவர் மேற்கொண்ட ஆடை மாற்றம். ""பொது வாழ்க்கையிலும், அரசியலிலும் மற்றவர்களுக்கு வழிகாட்ட முற்படுபவர்கள், தாங்களே முன்மாதிரியாக இருக்க வேண்டும். அடித்தட்டு மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பது போலவே அவர்களைப் போல வாழ்வதும் அவசியம். ஆடம்பரமும் படாடோபமும் அவர்களிடமிருந்து நம்மை அந்நியப்படுத்திவிடும்" –

இதுவும் அண்ணல் காந்தியடிகள் செயல்படுத்திக் காட்டிய அவரது சொற்கள்.

அண்ணல் காந்தியடிகளின் வாழ்க்கையில் மதுரை ஏற்படுத்திய மாற்றங்களின் அடிப்படையில்தான் அகில இந்திய அரசியலில் மாற்றங்கள் ஏற்பட்டன. எளிமை, நேர்மை, தியாகம், சமத்துவம் உள்ளிட்ட காந்தியத்தின் அடையாளம்தான் காந்தியார் அணிந்த ஆடை. இடுப்பை மறைக்க நான்கு முழம் வேட்டியும், மார்பை மறைக்க மேல் துண்டும் என்பது அவரது அரசியல் வாழ்க்கையின் அடையாளம். டால்ஸ்டாய், பெர்ட்ரண்ட் ரஸல், பெர்னார்டு ஷா, மார்ட்டின் லூதர் கிங், நெல்சன் மண்டேலா என்று உலக ஆளுமைகள் அனைவரும் பேராளுமையாக ஏற்றுக்கொண்ட ஒரே இந்தியத் தலைவர் அண்ணல் காந்தியடிகள் மட்டும்தான். அரை நிர்வாண தரித்திர நாராயணர்கள் குறித்து அந்த மகாத்மாவை சிந்திக்க வைத்த பெருமை தமிழகத்துக்கு உண்டு. அதனால், காந்தியார் காட்டிய வழியை அரசியலிலும் வாழ்க்கையிலும் பின்பற்ற வேண்டிய கடமை நமக்கு உண்டு!

---

**1. மீண்டும் பயன்படுத்தக்கூடிய GSLV Mk–III ஏவுகலத்தை உருவாக்குவதற்காக அதன் தொழில்நுட்பங்களில் பணியாற்றிவரும் அமைப்பு எது?**

அ) ஸ்பேஸ் X

**ஆ) இஸ்ரோ ☑**

இ) வர்ஜின் கேலக்டிக்

ஈ) ROSCOSMOS



✓ இந்திய விண்வெளி ஆய்வு மையமானது (ISRO) GSLV MkIII ஏவுகலத்தை மீண்டும் பயன்படுத்தத் தேவையான தொழில்நுட்பத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இந்தப் புதிய நுட்பம், GSLV MkIII ஏவுகலத்தை செங்குத்தாக தரையிறக்க உதவும். இந்த நுட்பம் SpaceX பின்பற்றி வரும் நுட்பதுக்கு இணையாக இருக்கும். மீண்டும் பயன்படுத்தக்கூடிய GSLV MkIII டிரான்ஸ்மிட்டரின் உருவாக்கம், ISRO'இன் நிதியையும் சேமிக்க உதவும்.

---

**2. சமீபத்தில், எந்த நாட்டுடனான பேரிடர் அபாயக் குறைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது?**

அ) ஜெர்மனி

ஆ) ஜப்பான்

**இ) இத்தாலி ☑**

ஈ) பெல்ஜியம்



✓ பேரிடர் அபாயக் குறைப்பு மற்றும் மேலாண்மை துறையில் இந்தியா – இத்தாலி இடையே ஒத்துழைப்புடன் செயல்படும் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு, பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. பேரிடர் அபாயக் குறைப்பு மற்றும் மேலாண்மை துறையில் ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம், இந்தியாவின் தேசிய பேரிடர் மேலாண் ஆணையம், இத்தாலியின் பொது பாதுகாப்புத் துறை இடையே கடந்த ஜூன் மாதம் கையெழுத்தானது.

✓ இருதரப்பின் பேரிடர் மேலாண்மை முறைகளால் இந்தியா மற்றும் இத்தாலி பயனடைய இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் உதவும். பேரிடர் மேலாண் துறையில் தயார்நிலை, மீட்பு நடவடிக்கை, திறன் மேம்பாடு ஆகியவற்றை வலுப்படுத்த இந்த ஒப்பந்தம் உதவும்.

---

**3. 'ஒரு கிராமப்பஞ்சாயத்து–ஒரு DIGI–பே சகி' என்ற பெயரில் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ள மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

அ) உத்தர பிரதேசம்

ஆ) ஹரியானா

இ) அந்தமான் நிக்கோபார் தீவுகள்

**ஈ) ஜம்மு & காஷ்மீர் ☑**



✓ ஜம்மு–காஷ்மீரின் தொலைதூரப் பகுதிகளில் வீட்டுக்கு வீடு டிஜிட்டல் வங்கி மற்றும் நிதிச் சேவைகளை ஊக்குவிப்பதற்காக, துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா பாம்பூரில் உள்ள ஜம்மு மற்றும் காஷ்மீர் தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தில் (JKEDI) 'ஒரு கிராமப் பஞ்சாயத்து–ஒரு DIGI–பே சகி' என்ற திட்டத்தைத் தொடங்கினார்.

---

**4.** 2021 – "Peaceful Mission" பயிற்சி நடைபெறுகிற நாடு எது?

அ) அமெரிக்கா

**ஆ) ரஷ்யா ☑**

இ) ஐக்கிய இராச்சியம்

ஈ) ஆஸ்திரேலியா



✓ இந்திய வான்படையைச் சேர்ந்த 38 பணியாளர்கள் உட்பட 200 பேர் கொண்ட அனைத்து ஆயுதக் கூட்டுப் படைகளைக் கொண்ட இந்திய இராணுவக்குழு, அமைதி மிஷன் – 2021 பயிற்சியில் பங்கேற்கிறது. இந்தப் பயிற்சி 2021 செப்.13 முதல் 25 வரை தென்மேற்கு ரஷ்யாவின் ஓரன்பர்க் பிராந்தியத்தில் நடைபெறுகிறது. SCO "Peaceful Mission" என்பது ஒரு பன்முக மற்றும் கூட்டு பயங்கரவாத எதிர்ப்பு பயிற்சியாகும்.

✓ ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) உறுப்புநாடுகளுக்கிடையே 'ராணுவ ரீதியிலான உறவின்'கீழ் 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்தப் பயிற்சி நடத்தப்படுகிறது.

**5. UNESCO'இன் நடப்பு 2021ஆம் ஆண்டுக்கான அரசர் செஜோங் எழுத்தறிவு பரிசை, இந்தியாவிலுள்ள எந்த அமைப்பு வென்றுள்ளது?**

**அ) தேசிய திறந்தநிலைப் பள்ளிக்கல்வி நிறுவனம் ☑**

ஆ) அண்ணா பல்கலைக்கழகம்

இ) மெட்ராஸ் பல்கலைக்கழகம்

ஈ) IISc

✓ நொய்டாவில் உள்ள தேசிய திறந்தநிலைப் பள்ளிக்கல்வி நிறுவனம் ஆனது (NIOS), புகழ்பெற்ற UNESCO'இன் அரசர் செஜோங் எழுத்தறிவு பரிசு – 2021'ஐ வென்றுள்ளது. இந்த அமைப்பு, கல்வி அமைச்சகத்தால் நடத்தப்படுகிறது. கல்விக்கான புதுமையான அணுகுமுறைக்காக UNESCO'இன் உலகளாவிய அங்கீகாரத்தை இது பெற்றுள்ளது.

✓ UNESCO'இன் பன்னாட்டு எழுத்தறிவு விருதுகள் ஒரு குறிப்பிட்ட கருப்பொருளில் கவனஞ்செலுத்துகின்றன. நடப்பு 2021ஆம் ஆண்டு, "உள்ளடக்கிய தொலைவு மற்றும் டிஜிட்டல் கல்வியறிவு கற்றல்" என்பதில் கவனஞ்செலுத்துகிறது. இந்த ஆண்டின் (2021) UNESCO பன்னாட்டு கல்வியறிவு பரிசுகள் NIOS உடன் இணைந்து கோட் டி ஐவரி, எகிப்து, குவாத்தமாலா, மெக்ஸிகோ மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகியவற்றுக்கும் வழங்கப்பட்டது.

---

**6. "ஏக் பாஹல்" என்ற இந்திய அளவிலான சிறப்பு இயக்கத்தை தொடங்கியுள்ள நடுவண் அமைச்சகம் எது?**

**அ) சட்டம் மற்றும் நீதி அமைச்சகம் ☑**

ஆ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

இ) பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம்

ஈ) நிதி அமைச்சகம்

✓ வீடுகளுக்கேச் சென்று நீதி வழங்கும் "ஏக் பாஹல்" என்ற இந்திய அளவிலான சிறப்பு இயக்கத்தை மத்திய சட்டம் மற்றும் நீதி அமைச்சகம் தொடங்கியுள்ளது. தொலைநிலை–சட்டத்தின்கீழ் பதிவுகளை ஊக்குவிக்கும் வகையில் இது தொடங்கப்பட்டது. நீதித்துறை மற்றும் NALSA இந்த இயக்கத்தை தொடங்கியது.

---

**7. இந்தியாவில் உள்ள 112 முன்னேற விழையும் மாவட்டங்களில் உள்ள மாணவர்களுக்கு இலவசமாக கல்வி வழங்குவதற்காக, NITI ஆயோக், எந்த நிறுவனத்துடன் கூட்டிணைந்துள்ளது?**

அ) அன்அகாடமி

**ஆ) பைஜு ☑**

இ) டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம்

ஈ) ஐஐடி கான்பூர்

✓ இந்தியாவின் 112 முன்னேற விழையும் மாவட்டங்களில் உள்ள மாணவர்களுக்கு இலவச கல்வி வாய்ப்புகளை வழங்குவதற்காக NITI ஆயோக், BYJU உடன் கூட்டிணைந்துள்ளது. இந்தக் கூட்டாண்மையின் ஒருபகுதியாக, உயர்தர & தொழில்நுட்பம் சார்ந்த கற்றல் திட்டங்களை, BYJU's, மாணவர்களுக்கு இலவசமாக வழங்கும். இந்தத் திட்டம் ஒரு பிரத்யேக பணிக்குழுவை நிறுவும். அது அறிவு, கண்டுபிடிப்பு மற்றும் உத்திசார் ஆதரவின் அமைப்பை நிறுவுவதற்கு உதவும்.

---

**8.எந்த நாட்டில் அமைந்துள்ள இந்திய உயராணையரகம் 57ஆவது இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு நாளைக் கொண்டாடியது?**

அ) ஆஸ்திரேலியா

ஆ) கத்தார்

**இ) வங்காளதேசம் ☑**

ஈ) தென் கொரியா

✓ 2021 செப்.16 அன்று, டாக்காவில் உள்ள இந்திய உயராணையரகம் 57 ஆவது இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு நாளைக் கொண்டாடியது. இந்த நிகழ்வை வங்காளதேசத்தில் உள்ள இந்திய உயராணையர் விக்ரம் தொரைசாமி தொகுத்து வழங்கினார். இந்த நிகழ்வில், சுமார் 100 ITEC முன்னாள் மாணவர்கள் மற்றும் அனைத்து தரப்பு முக்கியஸ்தர்களும் பங்கேற்றனர்.

- ✓ ITEC என்பது இந்திய அரசின் முதன்மைத் திட்டமாகும். வளர்ந்து வரும் நாடுகளுக்கு வளர்ச்சி அனுபவத்தையும் பொருத்தமான தொழில் நுட்பத்தையும் வழங்குவதற்காக 1964'இல் இந்தியாவால் நிறுவப்பட்டது.

---

**9. அண்மையில் தொடங்கப்பட்ட திட்டமொன்றின்கீழ் 50,000 இளையோருக்கு பயிற்சியளிக்க முடிவுசெய்துள்ள நிறுவனம் எது?**

அ) NITI ஆயோக்

**ஆ) இரயில்வே அமைச்சகம் ☑**

இ) பிரசார் பாரதி

ஈ) நிதி அமைச்சகம்

- ✓ ரயில் கௌஷல் விகாஸ் யோஜனா திட்டத்தின் ஒருபகுதியாக, ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்னவால், செப்.17 அன்று 18 முதல் 35 வயது வரையிலான 50,000 இளையோருக்கு அடுத்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு இரயில்வே பயிற்சி நிறுவனங்களில் தொழில்தொடர்பான திறன்களைப் பயிற்றுவிப்பதற்கான ஒரு திட்டத்தை தொடங்கினார்.

---

**10.** SPIN (Strengthening the Potential of India) **என்ற தனித்துவமான திட்டத்தைத் தொடங்கியுள்ள நிறுவனம் எது?**

**அ) காதி & கிராமப்புறத் தொழிலகங்கள் ஆணையம் ☑**

ஆ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

இ) தேசிய சிறுதொழில் கழகம்

ஈ) பாரத வங்கி

- ✓ காதி மற்றும் கிராமப்புறத் தொழிலகங்கள் ஆணையமானது (KVIC) SPIN (Strengthening the Potential of India) என்ற தனித்துவமான திட்டத்தைத் தொடங்கியுள்ளது. மேலும் 1100 விளிம்புநிலை குயவர்க்கு வலுவளிக்கும் நோக்கத்துடன், வாரணாசியில் SFURTI திட்டத்தின்கீழ் ஒரு மட்பாண்டத் தொகுதியையும் அமைத்துள்ளது.
- ✓ SPIN திட்டத்தின் பங்கேற்பாளர்களுக்கு மின்சாரத்தில் இயங்கும் 780 வனைசக்கரங்கள் வழங்கப்படும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ₹2,120 கோடி முதலீட்டில் 41,695 பேருக்கு வேலை: அரசுடன் 24 நிறுவனங்கள் ஒப்பந்தம்**

தமிழநாட்டில் 41,695 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ₹2,120 கோடியில் தொழில் முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. சென்னையில் ஏற்றுமதியில் ஏற்றம் – முன்னணியில் தமிழ்நாடு என்ற தலைப்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்தப் புதிய ஒப்பந்தங்கள் பரிமாறப்பட்டன.

---

**2. இனி 'பேட்ஸ்மேன்' கிடையாது!**

பாலின சமத்துவத்தை வலியுறுத்தும் விதமாக 'பேட்ஸ்மேன்' என்கிற கிரிக்கெட் சொல்லுக்கு மாற்றாக 'பேட்டர்' என்கிற சொல்லை அறிமுகப்படுத்தியுள்ளது எம்.சி.சி. கிரிக்கெட் விதிமுறைகளை வகுப்பதில் எம்.சி.சி. என்றழைக்கப்படும் மெரிலேபோன் கிரிக்கெட் கிளப் முக்கியப் பங்கு வகிக்கிறது. இது தரும் பரிந்துரைகளின் அடிப்படையில் கிரிக்கெட் விதிமுறைகளை அமல்படுத்தி வருகிறது ஐசிசி என்கிற சர்வதேச கிரிக்கெட் கவுன்சில்.

---

**1. உலக நோயாளிகள் பாதுகாப்பு நாள் கடைபிடிக்கப்படுகிற தேதி எது?**

அ) செப்டம்பர் 15

**ஆ) செப்டம்பர் 17 ☑**

இ) செப்டம்பர் 20

ஈ) செப்டம்பர் 23

World Patient Safety Day 17 September

✓ உலகளாவிய நோயாளிகளின் பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து ஊக்குவிப்பதற்காக உலக நோயாளிகள் பாதுகாப்பு நாள் செப்.17 அன்று உலகம் முழுவதும் கடைபிடிக்கப்படுகிறது. WHOஉம் அதன் பன்னாட்டு பங்காளர்களும் இந்த நாளைக் கொண்டாடுகிறார்கள். "Safe maternity and newborn care" என்பது நடப்பு 2021ஆம் ஆண்டு உலக நோயாளிகள் பாதுகாப்பு நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**2. பன்னாட்டு சம ஊதிய நாள் கடைபிடிக்கப்படுகிற தேதி எது?**

அ) செப்டம்பர் 20

**ஆ) செப்டம்பர் 18 ☑**

இ) செப்டம்பர் 16

ஈ) செப்டம்பர் 14




✓ 2021 செப்.18 அன்று பன்னாட்டு சம ஊதிய நாள் கொண்டாடப்பட்டது. அனைத்து பிராந்தியங்களிலும், பெண்களின் ஊதியம் ஆண்களைவிட குறைவாக உள்ளது. மேலும் உலகளாவிய பாலின ஊதிய இடைவெளி 23% என மதிப்பிடப்பட்டுள்ளது. சம ஊதிய சர்வதேச கூட்டணியானது உலக தொழிலாளர் அமைப்பு, ஐநா பெண்கள் உள்ளிட்ட அமைப்புகளால் வழிநடத்தப்படுகிறது. எல்லா இடங்களிலும் ஆண்களுக்கும் மகளிர்க்கும் சமமான ஊதியத்தை அடைவதே இக்கூட்டணியின் குறிக்கோளாகும்.

---

**3. அண்மையில, பெண்கள் 1500 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில், தேசிய சாதனையை முறியடித்தவர் யார்?**

அ) B ஐஸ்வர்யா

ஆ) பருல் சௌத்ரி

**இ) ஹர்மிலன் கௌர் பெயின்ஸ் ☑**

ஈ) சுசீலா சானு




✓ வாரங்கலில் உள்ள நேரு உள்ளரங்கத்தில் நடைபெற்ற அறுபதாவது தேசிய திறந்தநிலை தடகள சாம்பியன்ஷிப்பில், இரயில்வே அணியின் B ஐஸ்வர்யா 6.52 மீட்டர் தனிப்பட்ட மகளிர் நீளம் தாண்டுதலில் தங்கப் பதக்கம் வென்றார். ரயில்வேயின் பருல் சௌத்ரி பெண்கள் 3000 மீ ஸ்டீப்பிள் சேஸில் 9:51.01 என்ற தனிப்பட்ட சிறந்த நேரத்துடன் தங்கப் பதக்கம் வென்றார். பெண்கள் 1500 மீ ஓட்டப்பந்தயத்தில், ஹர்மிலன் கௌர் பெய்ன்ஸ் 4:05.39 வினாடிகளில் தங்கம் வென்றார். இதன்மூலம் 2002'இல் சுனிதா ராணியின் தேசிய சாதனையை அவர் முறியடித்தார்.

---

**4. 'கட்லா' மீனை மாநில மீனாக அறிவித்துள்ள மாநிலம் எது?**

அ) மேற்கு வங்கம்

**ஆ) சிக்கிம் ☑**

இ) ஒடிஸா

ஈ) அஸ்ஸாம்



✓ கட்லாவை மாநில மீனாக சிக்கிம் மாநில அரசு அறிவித்துள்ளது. கட்லா மீன் இனங்களை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவற்றை மாநில மீனாக சிக்கிம் அறிவித்துள்ளது. '*Neolissochilus Hexagonolepis*' என்பது இந்த மீனின் அறிவியல் பெயராகும்.

---

**5. உலக மூங்கில் நாள் கடைபிடிக்கப்படுகிற தேதி எது?**

அ) 15 செப்டம்பர்

**ஆ) 18 செப்டம்பர் ☑**

இ) 20 செப்டம்பர்

ஈ) 22 செப்டம்பர்

WORLD BAMBOO DAY

✓ ஆண்டுதோறும், செப்.18 அன்று உலக மூங்கில் நாள் உலகம் முழுவதும் கடைபிடிக்கப்படுகிறது. மூங்கில் தொழில் & மூங்கில் தோட்டங்களின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி குறித்த உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்நாளின் நோக்கமாகும். இந்தச் சிறப்பு நாளை உலக மூங்கில் அமைப்பு (WBO) கொண்டாடுகிறது. அது இயற்கை வளங்கள் & முழு சுற்றுச்சூழலையும் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ "#PlantBamboo: It is time to Plant Bamboo" என்பது 2021 உலக மூங்கில் நாளிற்கான செய்தியாகும். மேலும், "#PlantBamboo" என்ற புதிய ஹேஷ்டேகையும் WBO அறிமுகப்படுத்தியது.

---

**6. பன்னாட்டு சிவப்புப் பாண்டா நாள் கொண்டாடப்பட்ட தேதி எது?**

அ) 15 செப்டம்பர்

**ஆ) 18 செப்டம்பர் ☑**

இ) 20 செப்டம்பர்

ஈ) 22 செப்டம்பர்



✓ ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் மாதம் மூன்றாவது சனிக்கிழமையன்று, சிவப்புப் பாண்டாக்களின் பாதுகாப்பிற்கான பொது விழிப்புணர்வு மற்றும் ஆதரவை அதிகரிக்கும் நோக்கில் பன்னாட்டு சிவப்புப் பாண்டா நாள் கொண்டாடப்படுகிறது. நடப்பு 2021ஆம் ஆண்டில், செப்.18 அன்று இந்த நாள் அனுசரிக்கப்பட்டது. இந்த நாள், கடந்த 2010'இல் ரெட் பாண்டா நெட்வொர்க்கால் தொடங்கப்பட்டது. 2010 செப்.18 அன்று, முதன்முதலாக பன்னாட்டு சிவப்புப் பாண்டா நாள் கொண்டாடப்பட்டது.

---

**7. திறன் சுற்றுச்சூழலமைப்பில் அளப்பரிய பங்காற்றியமைக்காக, எத்தனை பயிற்சியாளர்களுக்கு 2021 கௌசாலாச்சார்யா விருதுகள் வழங்கப்பட்டுள்ளன?**

அ) 31

**ஆ) 41 ☑**

இ) 51

ஈ) 61



✓ மத்திய கல்வியமைச்சரும், திறன் மேம்பாட்டமைச்சருமான தர்மேந்திர பிரதன், திறன் சுற்றுச்சூழலமைப்பிற்கு அளப்பரிய பங்காற்றியமைக்காக 41 தகுதிவாய்ந்த பயிற்சியாளர்களுக்கு 2021 கௌசலாச்சார்யா விருதை வழங்கினார். இந்த 41 பயிற்சியாளர்களும் ஸ்கில் இந்தியா டைரக்டரேட் ஜெனரல் ஆப் டிரெய்னிங், அப்ரண்டிஸ்ஷிப், பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா, ஜன் ஷிக்சான் சன்ஸ்தான் மற்றும் தொழில் முனைவோர்போன்ற பல்வேறு முயற்சிகள் & பயிற்சி திட்டங்களைச் சேர்ந்தவர்களாவர்.

---

**8. அண்மையில் புவிசார் குறியீடு (GI) பெற்ற சிராகோங் மிளகாய் மற்றும் தமெங்லாங் ஆரஞ்சு ஆகியவை சார்ந்த மாநிலம் எது?**

அ) அஸ்ஸாம்

ஆ) நாகாலாந்து

**இ) மணிப்பூர் ☑**

ஈ) மேகாலயா



✓ பொதுவாக மணிப்பூர் மாநிலத்தில் காணப்படும் சிரகோங் மிளகாய் மற்றும் தமெங்லாங் ஆரஞ்சுப்பழம் ஆகியவற்றுக்கு சமீபத்தில் புவிசார் குறியீடு கிடைத்துள்ளது. இதனை மணிப்பூர் மாநில முதலமைச்சர் N பைரன் சிங் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

---

**9. அண்மையில் வெளியிடப்பட்ட 2022 – பெய்ஜிங் ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் குளிர்கால விளையாட்டுப்போட்டிக்கான அதிகாரப்பூர்வ குறிக்கோள் என்ன?**

**அ) Together for a Shared Future ☑**

ஆ) Together We Stand for Peace

இ) United by Emotion

ஈ) Great Athletes. Great Performances




✓ அண்மையில், "Together for a Shared Future" என்பது 2022 – பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் போட்டிக்கான அதிகாரப்பூர்வ குறிக்கோளாக அதன் அமைப்புக் குழுவால் அறிவிக்கப்பட்டது. சீனாவின்

பெய்ஜிங்கில், 2022 பிப்.4–20 வரை குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன.

---

**10. அண்மையில் நிறுத்தப்பட்ட 'எளிதாக வணிகம் புரிவது' குறித்த அறிக்கையை வெளியிடுகிற நிறுவனம் எது?**

அ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

**ஆ) உலக வங்கி ☑**

இ) ஆசிய வளர்ச்சி வங்கி

ஈ) ஐநா வளர்ச்சித் திட்டம்

THE WORLD BANK

✓ உலக வங்கி குழுமத்தால் வெளியிடப்படும் 'எளிதாக வணிகம் புரிவது' குறித்த அறிக்கைகள் நிறுத்தப்படவுள்ளன. பல்வேறு நாடுகளில் நிலவும் வணிகம் மற்றும் முதலீட்டுச் சூழலை மதிப்பிடுவதற்கான ஒரு புதிய முறை கொண்டுவரப்படும் என உலக வங்கி கூறியுள்ளது. முன்னாள் வங்கி ஊழியர்கள் மற்றும் வாரிய உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட நெறி முறை விஷயங்களில் உள்ள முறைகேடுகளை களைந்த பிறகு, உலக வங்கி, உலக நாடுகளில் நிலவும் வணிகம் மற்றும் முதலீட்டுச் சூழலை மதிப்பிடுவதற்கான ஒரு புதிய முறையைக் கொண்டு வரும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தேசிய நெடுஞ்சாலை சுங்கச்சாவடிகள் எண்ணிக்கை விரைவில் அதிகரிக்க வாய்ப்பு**

தமிழகத்தில் 312 கிமீ தூரம் நீளமுள்ள நான்கு வழித்தடங்களை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் பராமரிப்புப் பணிகளுக்காக ஒப்படைக்க மாநில நெடுஞ்சாலைத்துறை முடிவுசெய்துள்ளது. இதனால் அங்கு ஆறு சுங்கச்சாவடிகள் புதிதாக அமைக்கப்படும். இதையடுத்து, தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகளின் எண்ணிக்கை 54ஆக அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இதன்படி, வேலூர் – விழுப்புரம் (121 கிமீ), கடலூர் – சேலம் (92 கிமீ), அவினாசி – அவினாசி பாளையம் (33 கிமீ), பெரம்பலூர் – தஞ்சாவூர் (66 கிமீ) ஆகிய சாலைகளை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் ஒப்படைப்பதற்கான நிர்வாகப் பணிகள் முடிவடைந்துள்ளன. மேலும், பெரம்பலூர் – தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் சுங்கச்சாவடி அமைத்து கட்டணம் வசூலிப்பதற்கான உத்தரவும் மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

---

**2. ₹7,523 கோடியில் 118 நவீன அர்ஜுன் பீரங்கிகள் தயாரிப்பு: ஆவடி கனரக வாகன தொழிற்சாலையுடன் ஒப்பந்தம்**

சென்னை அருகே உள்ள ஆவடியில் ₹7,523 கோடியில் 118 அதிநவீன எம்பிடி எம்கே–1ஏ அர்ஜுன் பீரங்கிகளைத் தயாரிக்க ஆவடி கனரக வாக தொழிற்சாலையுடன் பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. உள்நாட்டிலேயே தயாரிக்கப்படும் இந்த அதிநவீன பீரங்கிகள் இந்திய ராணுவத்தின் தாக்குதல் பலத்தை மேலும் வலுவாக்கும் என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பின் விவரம்:

இந்திய ராணுவத்தில் போர் டாங்கிகளில் பிரதானமாக உள்ள அர்ஜுன் எம்பிடியில், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து மேலும் பல நவீன தொழில்நுட்பத்துடன் மேம்படுத்தி எம்பிடி எம்கே–1ஏ அர்ஜுன் பீரங்கிகள் இரண்டே ஆண்டுகளில் 2012–இல் ஆவடி கனரக தொழிற்சாலை உருவாக்கி சாதனை படைத்தது. பின்னர் 2015 வரையில் 7000 கிமீ தூரத்துக்கும் அதிகமாக பீரங்கிகளில் வெடி பொருள்களுடன் இணைத்து சோதனை நடத்தப்பட்டது.

இந்த நவீன அர்ஜுன் பீரங்கி கூடுதல் தூரத்தில் உள்ள இலக்குகள் மீது துல்லியத் தாக்குதல் நடத்தும் திறன் உள்பட 72 புதிய தொழில்நுட்ப அம்சங்கள் உடையது. மலைப்பகுதிகள் உள்பட அனைத்து பகுதிகளில் செல்லும் வகையிலும், கூடுதல் பாதுகாப்பு அம்சத்துடனும் இரவிலும்–பகலிலும் தாக்குதல் நடத்தும் வகையிலும் நவீன தொழில்நுட்பம் இதில் உள்ளது. ஆவடி கனரக வாக தொழிற்சாலையில் ₹7,523 கோடியில் 118 அதிநவீன எம்பிடி எம்கே–1ஏ அர்ஜுன் பீரங்கிகளை தயாரிக்க மத்திய அரசு ஒப்பந்தம் மேற்கொண்டது. இதன்மூலம் பாதுகாப்புத் துறையில் 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டம் ஊக்குவிக்கப்படுவதுடன், 'தற்சார்பு பாரதம்' திட்டத்தின் முன்னோடியாகவும் இது திகழ்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இந்திய இராணுவத்தின் முப்படைகளுக்கும் அனைத்து வகையிலான நவீன தொழில்நுட்ப பயிற்சி உபகரணங்கள் வாங்க முடிவு செய்துள்ளதாகவும் இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

**3. மாநில ஏற்றுமதி அபிவிருத்திக் குழு அமைப்பு**

மாநிலத்தில் ஏற்றுமதி அபிவிருத்தியை ஊக்குவிக்கவும், கண்காணிக்கவும் தலைமைச் செயலாளர் தலைமையில் தனிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் 6 முக்கிய துறைகளின் செயலர்கள் இடம்பெற்றுள்ளனர். மேலும், ஏற்றுமதி அபிவிருத்திக்கான கூட்டமைப்–பைச் சேர்ந்த ஆறு பேரும் இடம்பெறவுள்ளனர். 'ஏற்றுமதியில் ஏற்றம்–முன்னணியில் தமிழ்நாடு' என்ற தலைப்பில் தொழிற்துறை கருத்தரங்கு சென்னையில் நடைபெற்றது. இதில் பங்கேற்ற முதல்வர் மு க ஸ்டாலின், ஏற்றுமதி அபிவிருத்திக்கென தனிக்குழுவை தமிழக அரசு அமைக்கும் என அறிவித்தார். மேலும், தமிழ்நாடு ஏற்றுமதி அபிவிருத்தி கொள்கை 2021–ஐயும் அவர் வெளியிட்டார். இந்தக் கொள்கையில் மாநில ஏற்றுமதி அபிவிருத்திக் குழு குறித்த விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

குழுவில் யார் யார்? : தமிழ்நாடு மாநில ஏற்றுமதி அபிவிருத்தி குழுவின் தலைவராக, தலைமைச் செயலாளர் செயல்படுவார். மாநில நிதித்துறை செயலாளர், தொழிற்துறை செயலர், கைத்தறி–கைத்திறன்கள் மற்றும் துணிநூல் துறை செயலாளர், வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் துறை செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர்கள் நலத்துறை செயலாளர், சிறு, குறு & நடுத்தரத் தொழில்கள் துறை செயலாளர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பர்.

தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் முதன்மைச் செயல் அலுவலர், மத்திய அரசின் அயல்நாட்டு வர்த்தகத் துறை கூடுதல் இயக்குநர் ஆகியோர் குழுவின் இணை ஒருங்கிணைப்–பாளர்களாக இருப்பர்.

இந்தக் குழுவானது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஏற்றுமதி அபிவிருத்தி தொடர்பான முன்னேற்றங்கள், நடவடிக்கைகளை ஆய்வு செய்யும். இந்தக் கூட்டத்துக்கு வேறு எந்தத் துறைகளையோ அல்லது முகமைகளையோ அழைக்கும் அதிகாரம் குழுவின் தலைவரான தலைமைச் செயலாளருக்கு உள்ளது.

இதேபோன்று, தொழில் துறை முதன்மைச் செயலாளர் தலைமையில் துணைக்குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதி தொடர்பாக மத்திய அரசுடன் இணைந்து பணியாற்றுவது, ஏற்றுமதி தொடர்பான பிரச்னைகள், குறைகளை அணுகி அதற்குத் தீர்வுகாண்பது, ஏற்றுமதி தொடர்பான பணிகளைச் செய்யும் அமைப்புகளுக்கு போதிய ஆதார உதவிகளைச் செய்வது போன்றவற்றை தொழில்துறை செயலாளர் தலைமையிலான குழு ஒருங்கிணைக்கும்.

மாவட்ட அளவிலான குழு: தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும் ஏற்றுமதி அபிவிருத்தி குழுக்கள் அமைக்கப்படும். இந்தக் குழுக்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் தலைவர்களாக இருப்பர். 38 மாவட்டங்களிலும் ஏற்றுமதிக்கு உகந்த சூழல் கொண்ட பொருள்களை அடையாளம் கண்டு அதனை ஏற்றுமதி செய்வதற்கான மாவட்ட அளவிலான திட்டங்கள் அந்தக் குழுக்கள் மூலமாக வகுக்கப்படும் என மாநில ஏற்றுமதி அபிவிருத்தி கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**4. 'ஆக்கஸ்' கூட்டமைப்பில் இந்தியா இணைத்துக் கொள்ளப்பட மாட்டாது**

இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள 'ஆக்கஸ்' கூட்டமைப்பில் இந்தியாவும் ஜப்பானும் இணைத்துக் கொள்ளப்படாது என்று அமெரிக்கா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கத்தைத் தடுக்கும் நோக்கில் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து க்வாட் நாற்கரக் கூட்டமைப்பை அமைத்துள்ளன. இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் அமைதி, ராஜீய ஸ்திரத்தன்மை ஆகியவற்றை நிலைநாட்டுவதை நோக்கமாகக் கொண்டு அக்கூட்டமைப்பு செயல்பட்டு வருகிறது.

அதே நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு 'ஆக்கஸ்' கூட்டமைப்பை ஆஸ்திரேலியா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் கடந்த 15–ஆம் தேதி அமைத்தன. அதன்படி, இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் முக்கிய நாடாகத் திகழும் ஆஸ்திரேலியாவுக்கு அணுசக்தியால் இயங்கும்

நீர்மூழ்கிக் கப்பல்களைக் கட்டுவதற்கான தொழில்நுட்பங்களை பிரிட்டனும் அமெரிக்காவும் இணைந்து வழங்கவுள்ளன. இந்தோ–பசிபிக் பிராந்தியத்தை மையமாகக் கொண்டு அமெரிக்காவுடன் மற்றொரு கூட்டணியை அமைப்பது தொடர்பாக இந்தியாவிடம் விளக்கமளிக்கப்பட்டதாக ஆஸ்திரேலியா தெரிவித்திருந்தது.

இந்நிலையில், அமெரிக்க வெள்ளை மாளிகை தகவல்–தொடர்புத் துறை அமைச்சர் ஜென் சாகி செய்தியாளர்களிடம் கூறுகையில், "இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் நிலைத்தன்மை நிலவ வேண்டும் என்று பிரான்ஸ் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் விரும்புகின்றன.

அந்நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இணைந்து செயல்படுவதற்கான நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொண்டு வருகிறது. வெறும் அடையாளத்துக்காக மட்டும் 'ஆக்கஸ்' கூட்டமைப்பு ஏற்படுத்தப்படவில்லை. அந்தப் பதிய கூட்டமைப்பில் இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட வேறெந்த நாடுகளும் இணைத்துக் கொள்ளப்பட மாட்டாது. இந்தியா, ஜப்பான் இடம் பெற்றுள்ள க்வாட் கூட்டமைப்பு தொடர்கிறது. ஆக்கஸ் குறித்து பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரானிடமும் அதிபர் ஜோ பைடன் தெரிவித்திருப்பார் என நினைக்கிறேன்" என்றார்.

---

**5. மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறன் குறியீடு: முதல் 500 இடங்களில் 12 இந்திய கல்வி நிறுவனங்கள்**

உலக அளவில் மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்தும் கல்வி நிறுவனங்களுக்கான பட்டியலின் முதல் 500 இடங்களில் 12 இந்திய கல்வி நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன. பிரிட்டனைச் சேர்ந்த குவாக்குவரெல்லி சைமண்ட்ஸ் (க்யூஎஸ்) என்ற நிறுவனம், உலக அளவில் உயர்கல்வி நிறுவனங்களை ஆய்வு செய்து வருகிறது. மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்தும் கல்வி நிறுவனங்கள் குறித்த பட்டியலை க்யூஎஸ் நிறுவனம் அண்மையில் வெளியிட்டது.

உலகின் தலைசிறந்த 500 நிறுவனங்கள் அடங்கிய அந்தப் பட்டியலில் இந்தியாவைச் சேர்ந்த 12 கல்வி நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன. மும்பையில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (ஐஐடி) இந்திய அளவில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. தில்லி ஐஐடி, சென்னை ஐஐடி, கரக்பூர் ஐஐடி, கான்பூர் ஐஐடி, ரூர்கி ஐஐடி ஆகியவையும் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

பல்கலைக்கழகங்களில் தில்லி பல்கலை, மும்பை பல்கலைக்கழகம், கொல்கத்தா பல்கலை ஆகியவை இடம்பெற்றுள்ளன. பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கல்வி நிறுவனமும் (ஐஐஎஸ்சி) பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

தனியார் பல்கலைகளில் ஓ பி ஜிண்டால் குளோபல் பல்கலைக்கழகம், பிட்ஸ் பிலானி ஆகியவை இடம்பெற்றுள்ளன. இந்தக் குறியீடு தொடர்பாக க்யூஎஸ் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், 'கரோனா தொற்றின் தாக்கத்திலிருந்து உலக நாடுகள் மீண்டுவரும் நிலையில், மாணவர்க –ளின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்துவது முன்னெப்போதும் இல்லாத வகையில் முக்கியத்துவம் மிக்கதாக விளங்குகிறது.

பட்டியலில் இடம்பெற்றுள்ள அனைத்து கல்வி நிறுவனங்களும் நவீன பணியிடத்துக்கு ஏற்ப மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்ப –டுத்தியுள்ளன. வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்துவதில் பல்கலை –கள் எவ்வாறு செயல்பட்டு வருகின்றன என்பதை மாணவர்களும் முறையாக அறிந்துகொள்ளவேண்டும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

**6. தொழில் தொடங்குவதற்கு உகந்த நகரங்களின் பட்டியல்: 23ஆவது இடத்துக்கு முன்னேறியது பெங்களூரு**

உலக அளவில் தொழில் தொடங்குவதற்கு ஏற்ற சிறந்த சூழல் அமைந்துள்ள நகரங்களின் வருடாந்திரப் பட்டியலில் பெங்களூரு 23ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. இதன் மூலம், கடந்த ஆண்டைவிட அந்தப் பட்டியலில் பெங்களூரு 3 இடங்கள் முன்னேறியுள்ளது. சர்வதேச அளவில் தொழில் தொடங்குவதற்கு ஏற்ற பல்வேறு சூழல்களின் அடிப்படையில் நகரங்களின் பட்டியலை அமெரிக்காவின் சான் ஃபிரான்சிஸ்கோவைச் சேர்ந்த 'ஸ்டார்ட்டப் ஜினோம்' அமைப்பு ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது.

இந்த ஆண்டுக்கான அந்தப் பட்டியலில் புது தில்லி 36–ஆவது இடத்தில் உள்ளது. மும்பை நகரம் வளர்ந்து வரும் சூழல் அமைப்புகளைக் கொண்ட நகரங்களின் பட்டியலில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக முதலிடத்தில் உள்ளது. தொழில்முனைவுக்கான சிறந்த சூழலைக் கொண்ட நகரங்களின் பட்டியலில் பெங்களூரு முன்னேறியிருப்பதற்கு, அந்த நகரில் முதலீடுகளின் வளர்ச்சி முக்கிய பங்காற்றியிருக்கிறது. குறிப்பாக, உணவு விநியோக நிறுவனமான ஸ்விகி இந்த நகரில் 130 கோடி டாலர் (சுமார் ₹9,594 கோடி) முதலீடு செய்துள்ளது. சமூக ஊடக நிறுவனமான ஷேர்சாட் பெங்களூருவில் 50.2 கோடி டாலர் (சுமார் ₹3,706 கோடி) முதலீடு செய்துள்ளது. கல்வி தொழில்நுட்ப நிறுவனமான பைஜூ இந்த நகரில் 46 கோடி டாலர் (சுமார் ₹3,396 கோடி) முதலீடு செய்துள்ளது.

இப்பட்டியலில் தில்லியின் தொழில்முனைவுச் சூழல் வளர்ச்சியடைந்து வருவதாக பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் முதல் பாதியில் இந்தியாவில் புதிதாகத் தொடங்கப்பட்ட நிறுவனங்கள் 1,210 கோடி டாலரை (சுமார் ₹89,275 கோடி) முதலீடாகப் பெற்றுள்ளதாக இந்தப் பட்டியல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்திலுள்ள சிலிகான் பள்ளத்தா –க்கு முதலிடத்தில் உள்ளது என PTI செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

---

**7. ஒடிஸாவில் ஜூனியர் ஹாக்கி உலகக்கோப்பை**

FIH ஆடவர் ஜூனியர் ஹாக்கி உலகக்கோப்பை போட்டி ஒடிஸாவில் நடைபெறவுள்ளது. இதற்கான அறிவிப்பை மாநில முதல்வர் நவீன் பட்நாயக் வெளியிட்டார். அத்துடன் போட்டிக்கான லச்சினை மற்றும் கோப்பையும் அறிமுகம் செய்யப்பட்டன.

இந்தப் போட்டியை நடத்துவதற்காக ஒடிஸா, உத்தர பிரதேச மாநிலங்கள் விருப்பம் தெரிவித்திருந்த நிலையில், இந்த முறை அந்த வாய்ப்பு ஒடிஸாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. உத்தர பிரதேசத்தில் 2016–இல் நடைபெற்ற கடந்த சீசனில் இந்தியா சாம்பியனாகியிருந்தது.

தற்போது எதிர்வரும் உலகக் கோப்பை போட்டி நவம்பர் 24 முதல் டிச.5 வரை ஒடிஸாவின் புவனேசுவரத்தில் உள்ள கலிங்கா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது. இதில் இந்தியா, தென் கொரியா, மலேசியா, பாகிஸ்தான், தென் ஆப்பிரிக்கா, எகிப்து, பெல்ஜியம், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லாந்து, ஸ்பெயின், அமெரிக்கா, கனடா, சிலி, ஆர்ஜென்டீனா ஆகிய 16 நாடுகளின் அணிகள் பங்கேற்கின்றன.

கரோனா சூழல் காரணமாக பயணக்கட்டுப்பாடு இருப்பதால் இந்தப் போட்டியில் ஆஸ்திரேலியா பங்கேற்கவில்லை. ஒடிஸாவில் ஏற்கெனவே 2018 உலகக் கோப்பை போட்டி, 2017 FIH உலக லீக், 2014 சாம்பியன்ஸ் டிராபி போட்டி ஆகியவை நடைபெற்றுள்ளது நினைவு கூரத்தக்கது.

---

**8. உலகளவில் தூய்மைக் கடற்கரையாக புதுச்சேரி சின்ன வீராம்பட்டினம் தேர்வு**

உலகளவில் தூய்மை கடற்கரைப் பகுதிகளில் ஒன்றாக புதுச்சேரி சின்ன வீராம்பட்டினம் 'ஈடன் கடற்கரை' தேர்வு செய்யப்பட்டது. டென்மார்க் நாட்டைச் சேர்ந்த சுற்றுச்சூழல் அமைப்பானது, உலகளவில் பாதுகாப்பு, தூய்மையான கடற்கரைகளைத் தேர்ந்தெடுத்து, 'நீலக்கொடி கடற்கரை' என்ற அங்கீகாரத்தை வழங்கி வருகிறது. அந்த வகையில், புதுச்சேரி சின்ன வீராம்பட்டினம் 'ஈடன் கடற்கரை'க்கு, நீலக்கொடி அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதன்மூலம், இந்தியாவில் நீலக்கொடி அங்கீகாரம் பெற்ற கடற்கரைகளின் எண்ணிக்கை 10ஆக உயர்ந்தது.

புதுச்சேரி கிழக்குக் கடற்கரைச் சாலை அருகே அமைந்துள்ள சின்ன வீராம்பட்டினம் கடற்கரை, 2 கிமீ தொலைவுக்கு மணல் பரப்பைக் கொண்டுள்ளது. கடந்த 2018ஆம் ஆண்டு சுற்றுலாத்துறைமூலம் சீரமைக்கப்பட்டு, 800 மீ தொலைவு மணல் பரப்பில் சுற்றுலாப் பயணிகளுக்காக பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

குடிநீர் வசதி, கழிப்பறைகள், பூங்கா, குடில்கள், ஓய்வு அறைகள் போன்றவை இங்குள்ளன. நெகிழிக்கு தடை, கடலில் குளிப்பவர்கள் மூழ்கினால் மீட்பதற்கு குழுக்கள் எனப் பல்வேறு வசதிகளை இந்தக் கடற்கரை கொண்டுள்ளது.

---

**1.** **ஆண்டுதோறும் 'கிரைம் இந்தியா' அறிக்கையை வெளியிடுகிற நிறுவனம் எது?**

**அ) தேசிய குற்ற ஆவணக் காப்பகம் ☑**

ஆ) NITI ஆயோக்

இ) போதைப்பொருள் கட்டுப்பாட்டு பணியகம்

ஈ) மத்திய புலனாய்வு வாரியம்

✓ தேசிய குற்ற ஆவணக்காப்பகத்தால் ஆண்டுதோறும் 'கிரைம் இந்தியா' என்ற அறிக்கை வெளியிடப்படுகிறது. கடந்த 2020ஆம் ஆண்டிற்கான அறிக்கை சமீபத்தில் வெளியிடப்பட்டது. இவ்வறிக்கையின்படி, இந்தியா, 2020'இல், "சாலை விபத்துக்கள் தொடர்பான அலட்சியம் காரணமாக 1.20 இலட்சம் இறப்புகளைப்" பதிவுசெய்துள்ளது.

✓ 2020ஆம் ஆண்டில், வகுப்புவாத கலவரங்கள் முந்தைய ஆண்டைவிட 96% அதிகரித்துள்ளது. அரசுக்கு எதிரான குற்றங்கள், 2019ஐவிட 27% சரிவடைந்துள்ளன. இந்தப்பிரிவில் உயர்வைப் பதிவு செய்த ஒரே பெரிய மாநிலமாக உத்தர பிரதேச மாநிலம் உள்ளது.

---

**2.** **துளிர் நிறுவனங்களை ஆதரிப்பதற்காக தெற்காசியாவின் மிகப் பெரிய தயாரிப்பு மேம்பாட்டு மையமான 'Digital Hub'ஐ திறந்துள்ள மாநிலம் எது?**

**அ) கேரளா ☑**

ஆ) கர்நாடகா

இ) உத்தரகண்ட்

ஈ) உத்தர பிரதேசம்

✓ கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் சமீபத்தில் காணொலிக் காட்சிமூலம் 200 துளிர் நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் டிஜிட்டல் மையத்தை திறந்துவைத்தார். தெற்காசியாவின் மிகப்பெரிய தயாரிப்பு மேம்பாட்டு மையமான இது, கொச்சி கலமசேரியில் உள்ள தொழில்நுட்ப புத்தாக்க மண்டலத்தில் உள்ளது. கேரளா ஸ்டார்ட்அப் மிஷன் (KSUM) இத்திட்டத்தை செயல்படுத்த வழிவகுக்கிறது.

---

**3.** **பாதுகாப்புப் பயிற்சியான 'சமுத்திர சக்தி'யில் பங்கேற்ற இரண்டு நாடுகள் எவை?**

**அ) இந்தியா மற்றும் இந்தோனேசியா ☑**



ஆ) இந்தியா மற்றும் நேபாளம்

இ) இந்தியா மற்றும் சீனா

ஈ) இந்தியா மற்றும் பூடான்

✓ ஜகார்த்தாவில் செப்.20-22 வரை நடந்த இருதரப்பு கடல் பயிற்சியான 'சமுத்திர சக்தி'யில் இந்திய & இந்தோனேசிய கடற்படை பங்கேற்றது.

✓ இருதரப்பு உறவை வலுப்படுத்துதல், இருநாட்டு கடற்படைகளுக்கு இடையேயான கடல்சார் செயல்பாடுகளில் பரஸ்பர புரிதல் மற்றும் இயங்குதிறனை மேம்படுத்துதல் ஆகியவற்றை இந்தப் பயிற்சி தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தியக் கடற்படை கப்பல்கள் ஷிவலிக் மற்றும் கத்மட் மற்றும் கடற்புற கண்காணிப்பு விமானம் P8I ஆகியவை இந்தப் பயிற்சியில் பங்கேற்றன.

---

**4.** **சமீபத்தில், செஸ்ஸில் இந்தியாவின் 70ஆவது கிராண்ட்மாஸ்டர் ஆனவர் யார்?**

அ) தனியா சச்தேவ்



ஆ) சூர்யா சேகர் கங்குலி

இ) பத்மினி ரூட்

**ஈ) ராஜா ரித்விக் ☑**

✓ தெலுங்கானா மாநிலத்தைச் சார்ந்த ராஜா ரித்விக், ஹங்கேரியின் புடா பெஸ்டில் நடைபெற்ற வெசெர்கெப்ஸோ ஜிஎம் செஸ் சாம்பியன்ஷிப்பில் ELO 2500 மதிப்பெண்களைக்கடந்து இந்தியாவின் 70ஆவது கிராண்ட் மாஸ்டராக ஆனார். செக்கோஸ்லோவாக்கியாவைச் சேர்ந்த FIDE மாஸ்டர் பென்னெக் வக்லாவை வீழ்த்திய பிறகு, அவர் 4 புள்ளிகளைப் பெற்றார்.

---

**5.** **பஞ்சாபின் 16ஆவது முதலமைச்சராக பதவியேற்றவர் யார்?**

அ) சுக்ஜிந்தர் சிங் ரந்தாவா



ஆ) அருணா சௌத்ரி

**இ) சரண்ஜித் சிங் சன்னி ☑**

ஈ) அசோக் கெலாட்

✓ பஞ்சாப் மாநிலத்தின் 16ஆவது முதலமைச்சராக சரண்ஜித் சிங் சன்னி பதவியேற்றார். பஞ்சாபில் ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து இப்பதவியை வகிக்கும் முதல் நபர் இவராவார். பஞ்சாப் ஆளுநரான பன்வாரிலால் புரோகித் அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

---

**6.** **'சூர்யா கிரண்' என்ற இராணுவப் பயிற்சியில், எந்த நாட்டுடன் இணைந்து இந்தியா பங்கேற்கிறது?**

அ) வங்காளதேசம்



ஆ) இலங்கை

**இ) நேபாளம் ☑**

ஈ) இந்தோனேசியா

✓ இந்தியாவும் நேபாளமும் செப்.20 அன்று உத்தரகண்ட் மாநிலத்தில் உள்ள பித்தோர்கரில் 15 நாள் நடைபெறும் இராணுவப் பயிற்சியைத் தொடங்கின. 15ஆவது இந்தியா-நேபாள இராணுவப் பயிற்சிக்கு 'சூர்யா கிரண்' எனப்பெயரிடப்பட்டுள்ளது. இரு ராணுவத்தினருக்கும் இடையே செயல்பாட்டை அதிகரிக்கும் நோக்கோடு இது நடத்தப்படுகிறது.

---

**7.** **ஒலி தயாரிப்பு, திரைப்பட தயாரிப்பு மற்றும் கிராபிக் டிசைனிங் குறித்து மாணவர்களுக்கு பயிற்சியளிக்க 'இசைப்பேருந்து' என்ற ஒன்றைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?**

அ) கர்நாடகா



ஆ) கேரளா

**இ) தில்லி ☑**

ஈ) மத்திய பிரதேசம்

✓ தில்லி அரசானது 'இசைப்பேருந்தை' அறிமுகப்படுத்தியுள்ளது. இது மாணவர்களுக்கு ஒலி தயாரிப்பு, திரைப்படத் தயாரிப்பு மற்றும் கிராபிக் வடிவமைப்பு ஆகியவற்றைப் பயிற்றுவிக்கும். இது இந்தியாவின் முதல் 'நடமாடும் இசை வகுப்பறை மற்றும் ஒலிப்பதிவுக் கூடம்' ஆகும். தில்லி மாநிலப் பள்ளியின் குழந்தைகள் மத்தியில் இசை மீதான ஆர்வத்தைத் தூண்டுவதை நோக்கமாகக்கொண்டு, நிகழ்த்துக்கலை மற்றும் காட்சிக் கலைக்கான சிறப்புப் பள்ளியில் இது தொடங்கப்பட்டது.

---

**8.** **FSSAI'இன் மூன்றாவது மாநில உணவுப் பாதுகாப்பு குறியீட்டில், பெரிய மாநிலங்களுள் முதலிடத்தில் உள்ள மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு



**ஆ) குஜராத் ☑**

இ) கேரளா

ஈ) கர்நாடகா

✓ உணவுப் பாதுகாப்பின் 5 அளவுருக்களில் மாநிலங்களின் செயல்பாடுக -ளை அளவிடும், உணவுப்பாதுகாப்பு & தரநிர்ணய ஆணையத்தின் (FSSAI) 3ஆவது மாநில உணவுப் பாதுகாப்பு குறியீட்டை (SFSI) மத்திய சுகாதாரம் & குடும்பநல அமைச்சர் மன்சுக் மாண்டவியா வெளியிட்டார்.

✓ இந்த ஆண்டு, பெரிய மாநிலங்களில், குஜராத் முதலிடத்தில் உள்ளது, அதற்கு அடுத்தபடியாக கேரளா மற்றும் தமிழ்நாடு உள்ளன. சிறிய மாநிலங்களில், கோவா முதலிடத்திலும், மேகாலயா மற்றும் மணிப்பூர் மாநிலங்கள் அதற்கு அடுத்ததாகவும் உள்ளன. யூனியன் பிரதேசங்களில், ஜம்மு & காஷ்மீர், அந்தமான் & நிக்கோபார் தீவுகள் மற்றும் புது தில்லி முன்னணியில் உள்ளன.

✓ நடமாடும் பரிசோதனை நிலையங்களின் எண்ணிக்கையை 109 ஆக உயர்த்தி நாட்டில் உணவுப் பாதுகாப்பு சூழலியலை உறுதிப்படுத்தும் வகையில், 19 வாகனங்களை அவர் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

---

**9. உலக அறிவுசார் சொத்துரிமை நிறுவனத்தால் வெளியிடப்பட்ட 2021–உலகளாவிய புத்தாக்கக் குறியீட்டில் இந்தியாவின் தரநிலை என்ன?**



அ) 40

**ஆ) 46 ☑**

இ) 35

ஈ) 31

- ✓ 2021 செப்.20 அன்று, உலகளாவிய புத்தாக்கக் குறியீட்டின் 2021 பதிப்பு உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பால் (WIPO) வெளியிடப்பட்டது. 2021 பதிப்பானது 81 வெவ்வேறு குறிகாட்டிகளின் அடிப்படையில், 132 பொருளாதாரங்களை தரவரிசைப்படுத்தியுள்ளது.
- ✓ சுவிச்சர்லாந்து, சுவீடன், அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆகியவை இப்புத்தாக்க தரவரிசையில் தொடர்ந்து முன்னணியில் உள்ளன. 2021 ஆம் ஆண்டில் முதன்முறையாக இதில் முதல் ஐந்து இடங்களுள் தென் கொரியா இடம்பெற்றுள்ளது. முதல் 15 இடங்களுக்குள் இடம்பெற்றுள்ள ஆசியப்பொருளாதாரங்கள்: சிங்கப்பூர் (8), சீனா (12), ஜப்பான் (13) மற்றும் ஹாங்காங் (14). இந்தப் பட்டியலில் இந்தியா 46ஆவது இடத்திலுள்ளது.

---

**10. செப்டம்பர்.20–26 வரை 'வணிக்ய சப்தா'வை கொண்டாடுகிற அமைச்சகம் எது?**

**அ) வணிக அமைச்சகம் ☑**

ஆ) நிதி அமைச்சகம்

இ) பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம்

ஈ) தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம்

Ministry of Commerce & Industry
Government of India

- ✓ விடுதலையின் அம்ருத் மகோத்ஸவத்தைக் கொண்டாடும் வகையில் வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் வர்த்தகத்துறை, இந்த மாதம் 20 முதல் 26ஆம் தேதி வரை நாடு முழுவதும் வணிகம் மற்றும் வர்த்தக வார நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.
- ✓ இதன் சமயம் தேசிய ஒற்றைச் சாளர அமைப்பு மற்றும் தொழிற்பூங்கா மதிப்பீட்டு அமைப்பு தளங்கள் ஆகியவை தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத் துறையால் தொடங்கப்பட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. குஜராத் சட்டப்பேரவைக்கு முதல் பெண் சபாநாயகராக நிமாபென் ஆச்சார்யா தேர்வாகிறார்**

குஜராத் சட்டப்பேரவை சபாநாயகராக இருந்து வந்த ராஜேந்திர திரிவேதி, மாநில பாஜக அரசின் புதிய அமைச்சரவையில் அமைச்சராக பதவி ஏற்றார். இந்நிலையில், குஜராத் சட்டப்பேவையின் மழைக்காலக் கூட்டத் தொடர் வரும் 27–ம் தேதி கூடுகிறது. காலியாக உள்ள சபாநாயகர் பதவிக்கு பெண் எம்எல்ஏ நிமாபென் ஆச்சார்யா பெயரை பாஜக அறிவித்தது.

சபாநாயகர் பதவிக்கு நிமாபென் ஆச்சார்யா சார்பிலும், துணை சபாநாயகர் பதவிக்கு பாஜக எம்எல்ஏ ஜேதா பர்வத் சார்பிலும் சட்டப்பேரவை செயலாளரிடம் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. சட்டப்பேரவையில் எதிர்க்கட்சியாக உள்ள காங்கிரஸும் சபாநாயகர் பதவிக்கு நிமாபென்னை ஆதரித்துள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் பரேஷ் தனானியும் நிமாபென்னுக்கு ஆதரவு அளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். எனவே, முதல் பெண் சபாநாயகராக நிமாபென் ஆச்சார்யா தேர்ந்தெடுக்கப்படுவது உறுதியாகிவிட்டது. அதேநேரம், துணை சபாநாயகர் பதவிக்கு காங்கிரஸ் கட்சி தனது எம்எல்ஏ அனில் ஜோஷியாராவை நிறுத்தி உள்ளது. இதனால், துணை சபாநாயகர் பதவிக்கு போட்டி ஏற்பட்டுள்ளது.

---

**2. டினன்பிளல் புதிய வலைதளம் தொடக்கம்: நிலைப்புத் திறன் அறிக்கை நூல் வெளியீடு**

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் (TNPL) தனது 41–வது ஆண்டு பொதுக்குழு கூட்டத்தை மெய்நிகர் முறையில் நடத்தியது. அப்போது புதிதாக உருவாக்கப்பட்ட டினன்பிளல் வலைதளம் (https://www.tnpl.com/) தொடங்கிவைக்கப்பட்டது; நிலைப்புத்திறன் அறிக்கை நூலும் வெளியிடப்பட்டது.

டினன்பிளல் தொடக்கத்திலிருந்தே 'கழிவிலிருந்து கொழிக்கும் செல்வம்' என்ற கோட்பாட்டில் இயங்குகின்ற நிறுவனமாகும். கரும்பின் கழிவான சக்கைதான் டினன்பிளல் தயாரிக்கும் காகிதத்தின் முதன்மையான மூலப்பொருள். கைவிடப்பட்ட சுமார் 1,87,680 ஏக்கர் தரிசு நிலங்களை மரக்கூழ் செய்வதற்கான பசுமை நிலங்களாக டினன்பிளல் மாற்றி இருக்கிறது. இந்தியாவிலேயே தன் உற்பத்தி கழிவிலிருந்து உயர் தரமான சிமெண்ட் செய்யும் ஒரே காகித நிறுவனம் டினன்பிளல் ஆகும்.

நேர்மறையான எதிர்காலத்தை எதிர்கொள்ள இந்திய காகித உற்பத்தி தொழில் கூடங்களில் முதன்முறையாக உலக அளவில் பின்பற்றுகிற நிலைப்புத்திறன் அறிக்கையை டினன்பிளல் வெளிக்கொணர்ந்துள்ளது. டினன்பிளல் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜீவ் ரஞ்சன், நிதித் துறை செயலர் கிருஷ்ணன், கூடுதல் அரசு முதன்மைச் செயலர் ஆகியோரின் முன்னிலையில் 'Circular Economy – The Roots Of Our Business' (சுழல் வட்ட பொருளாதாரம் எங்கள் வணிகத்தின் வேர்கள்) என்ற நூல் வெளியிடப்பட்டது.

---

**3. தமிழகத்தில் ரூ.100 கோடியில் நகர்ப்புற ஊதிய வேலைவாய்ப்புத் திட்டம்: மாவட்ட ஆட்சியர்களுக்கு தமிழக அரசு அனுமதி**

தமிழகத்தில் நகர்ப்புற ஊதிய வேலைவாய்ப்புத் திட்டத்தை செயல்படுத்த, மாவட்ட ஆட்சியர்களுக்கு தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. மத்திய அரசின் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மூலம் கிராமங்களில் லட்சக்கணக்கானோர் பயனடைந்து வருகின்றனர். இந்நிலையில், நகரங்களில் உள்ள ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில், தமிழக அரசு சார்பில் தற்போது 'நகர்ப்புற ஊதிய வேலைவாய்ப்புத் திட்டம்' அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில், பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், வடிகால்கள், சாலைகள், கட்டிடங்களை அமைத்தல், பராமரித்தல், நீர்நிலைகளைப் புதுப்பித்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த திட்டத்தை பரிசோதனை அடிப்படையில் செயல்படுத்த ₹100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

---

**4. ரூ.20,000 கோடியில் 56 ராணுவ விமானங்கள் கொள்முதல்: ஏர்பஸ் – மத்திய அரசு இடையே ஒப்பந்தம் கையெழுத்து**

இந்திய விமானப் படைக்கு ரூ.20,000 கோடியில் 56 ராணுவத்துக்கான சரக்கு விமானங்கள் கொள்முதல் செய்வதற்கு ஏர்பஸ் டிஃபன்ஸ் அண்ட் ஸ்பேஸ் நிறுவனத்துக்கும் மத்திய அரசுக்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. விமானப் படையில் தற்போது பயன்பாட்டில் உள்ள ஏவ்ரோ–748 ரக விமானங்களுக்குப் பதிலாக, சி–295 ரக ராணுவ சரக்குப் போக்குவரத்து விமானங்கள் கொள்முதல் செய்யப்படவுள்ளன.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமைச்சரவைக் கூட்டம் இரண்டு வாரங்களுக்கு முன்பு நடைபெற்றது. அக்கூட்டத்தில் போர்விமானங்கள் தயாரிப்பில் முன்னணியில் இருக்கும் நெதர்லாந்தை தலைமையிடமாகக்கொண்ட ஏர்பஸ் நிறுவனத்திடம் இருந்து 56 ராணுவ விமானங்கள் கொள்முதல் செய்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதுதொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தின்படி, ஏர்பஸ் நிறுவனத்தின் ஸ்பெயினில் உள்ள தொழிற்சாலையில் இருந்து அடுத்த 4 ஆண்டுகளில் 16 விமானங்கள் இந்தியாவை வந்தடையும். எஞ்சியுள்ள 40 விமானங்கள், இந்தியாவில் உள்ள டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம் நிறுவனத்துக்குச் சொந்தமான தொழிற்சாலையில் தயாரிக்கப்படும். இதுதொடர்பாக ஏர்பஸ் நிறுவனத்து –க்கும் டாடா நிறுவனத்துக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

---

**5. அமெரிக்காவில் மீட்கப்பட்ட 157 தொல்பொருட்களுடன் தாயகம் திரும்பும் பிரதமர் மோடி**

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கடத்தப்பட்ட, திருடப்பட்ட நம்நாட்டின் பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் உலகிற்கு வெளிப்படுத்தும் 157 தொல்பொருட்கள் அமெரிக்க அரசால் மீட்கப்பட்டுள்ளன. அந்தப் பொருட்களுடன் பிரதமர் மோடி தாயகம் திரும்புகிறார். 157 கலைப் பொருட்களில் 71 பொருட்கள் கைவினைப் பொருட்கள், இந்து மதத்தின் கலைகளை விளக்கும் 60 சிலைகள், பவுத்த மதத்தை விளக்கும்16 சிலைகள், ஜைன மதத்தை விவரிக்கும் 9 சிலைகள் மீட்கப்பட்டு தாயகம் கொண்டு வரப்படுகின்றன.

12 நூற்றாண்டைச் சேர்ந்த வெண்கலத்தில் செய்யப்பட்ட கடவுள் நடராஜர் சிலை, 10ம் நூற்றாண்டைச் சேர்ந்த 8.5 செமீ நீளமுள்ள ரேவாந்தா சிலை உள்ளிட்ட மிகப் தொன்மையான சிலைகள் இதில்

அடங்கும். இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட கலைப் பொருட்களை மீட்க பிரதமர் மோடி தலைமையிலான அரசு தொடர்ந்து முயற்சிகளை எடுத்துவருகிறது.

மத்திய அரசு வட்டாரங்கள் கூறுகையில் கடந்த 1976ம் ஆண்டுமுதல் 2013ம் ஆண்டுவரை உலகளவில் இந்தியா சார்பில் 13 தொன்மையான பொருட்கள் மட்டுமே மீட்கப்பட்டன.

ஆனால், 2014ஆம் ஆண்டு பிரதமர் மோடி ஆட்சிக்கு வந்தபின், இதுவரை 200க்கும் மேற்பட்ட இந்தியாவின் பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையு –ம் விளக்கும் கலைப்பொருட்கள் பல்வேறு நாடுகளிலிருந்து மீட்கப்பட்டு இந்தியாவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. அதிலும் 2004 முதல் 2014 ஆம் ஆண்டுவரை ஒரு தொன்மையான சிலை மட்டுமே மீட்கப்பட்டது" எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 40 ஆண்டுகளில் மீட்கப்பட்டதைவிட அதிகமான தொன்மையான பொருட்களை உலகளவில் இருந்து மோடி அரசு மீட்டுள்ளது. தற்போது அமெரிக்காவுக்கு பிரதமர் மோடியின் பயணத்தின் போது, 11ஆம் நூற்றாண்டு முதல் 14ஆம் நூற்றாண்டுவரையிலான சிலைகள், கிமு காலத்து செம்புச் சிலைகள், டெரகோட்டா சிலைகள் உள்ளிட்ட கலைப் பொக்கிஷங்கள் திரும்பி ஒப்படைக்கப்பட்டுள்ளன. அச்சிலைகளில் பல உலோகச்சிலை, கற்சிலை, டெரகோட்டா சிலை போன்றவை அடங்கும்.

**6. வங்கக்கடலில் உருவானது 'குலாப்' புயல்**

மத்திய மேற்கு வங்கக் கடலில் நிலவி வந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுமண்டலமாக மாறி, 'குலாப்' புயலாக வலுப்பெற்றுள்ளது. இது வடக்கு ஆந்திரா மற்றும் தெற்கு ஒடிசா இடையே கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 'குலாப்' என்னும் பெயரை பாகிஸ்தான் வழங்கியுள்ளது.

**7. அமெரிக்க மாகாணங்களில் 'ஹிந்து பாரம்பரிய மாதம்' கொண்டாட்டம்**

அமெரிக்காவில் டெக்சாஸ், ஜெர்ஸி, ஒஹையோ உள்ளிட்ட பல மாகாணங்களில் அக்டோபர் மாதமானது ஹிந்து பாரம்பரிய மாதமாகக் கொண்டாடப்படவுள்ளது. அமெரிக்காவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஹிந்துக்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். அங்கு ஹிந்துக்களின் பண்டிகைகள் சிறப்பாகக் கொண்டாடப்படுவது வழக்கம்.

இந்நிலையில், ஆயுதபூஜை, தீபாவளி உள்ளிட்ட பல ஹிந்து பண்டிகை –ள் கொண்டாடப்படும் அக்டோபர் மாதத்தை இந்து பாரம்பரிய மாதமாகக் கொண்டாட டெக்சாஸ், புளோரிடா, ஜெர்ஸி, ஒஹையோ, மாசசூசெட்ஸ் உள்ளிட்ட மாகாணங்கள் தீர்மானத்தை இயற்றியுள்ளன.

டெக்சாஸ் மாகாணத்தின் தீர்மானத்தில், 'நம்பிக்கை, சேவை, கொள்கைப்பகிர்வு உள்ளிட்டவற்றின் ஒளிவிளக்காக ஹிந்துக்கள் திகழ்ந்து வருகின்றனர். உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான நபர்கள் ஹிந்து நம்பிக்கைகளைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

ஹிந்துத்துவமானது தனது தனிப்பட்ட கலாசாரம், வரலாறு காரணமாக மாகாணத்துக்கும் அமெரிக்க நாட்டுக்கும் முக்கியப் பங்களிப்பை வழங்கியுள்ளது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்டோபர் மாதம் முழுவதும் கலாசார நிகழ்ச்சிகள், கருத்தரங்கங்கள், மாநாடுகள், ஆடை அலங்கார நிகழ்ச்சிகள் உள்ளிட்டவை நடைபெறும் என்று அமெரிக்காவில் உள்ள ஹிந்து அமைப்புகள் தெரிவித்துள்ளன. கரோனா தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகளை முறையாகப் பின்பற்றி நேரடியாகவும் காணொலி வாயிலாகவும் கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**8. உலக வில்வித்தை: இந்தியாவுக்கு இரு வெள்ளி**

அமெரிக்காவில் நடைபெறும் உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியில் காம்பவுண்ட் விளையாட்டில் மகளிர் அணி, கலப்பு அணி ஆகிய இரு பிரிவுகளில் இந்தியா 2ஆம் இடம் பிடித்து வெள்ளிப் பதக்கம் வென்றது. இரு பிரிவுகளின் இறுதிச்சுற்றிலுமே இந்தியாவிடம் இருந்து கொலம்பியா தங்கத்தை தட்டிப் பறித்தது.

உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா இதற்கு முந்தைய சீசன்களில் 8 வெள்ளி, 2 வெண்கலம் என 10 பதக்கங்களை வென்றுள்ளது. இதில் தங்கம் வெல்வதற்கான இந்தியாவின் போராட்டம் தொடர்கிறது. உலக சாம்பியன்ஷிப்பின் காம்பவுண்ட் பிரிவில் கொலம்பியாவின் ஆதிக்கம் தொடர்கிறது. இத்துடன் இப்பிரிவில் அந்த அணிக்கு மொத்தமாக 4 தங்கங்கள் கிடைத்துள்ளன.

**9. செப்.25 – உலக மருந்தாளுநர் நாள்.**

**10. தமிழகத்தில் மாமல்லபுரம், ஏற்காடு, காஞ்சி, குமரி, குற்றாலம், தஞ்சை உட்பட தேசிய கல்விச் சுற்றுலாவுக்காக 100 நகரங்கள் பட்டியல் வெளியீடு**

ஒரே பாரதம், உன்னத பாரதம் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் கல்விச் சுற்றுலாவுக்கு 100 நகரங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இதில் தமிழகத்தில் உள்ள மாமல்லபுரம், ஏற்காடு உட்பட 6 இடங்கள் இடம்பெற்றுள்ளன. தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்காக 'ஒரே பாரதம் உன்னத பாரதம்' என்ற திட்டம் மத்திய அரசால் 2015ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் தேசிய கல்விச் சுற்றுலாவுக்கு தகுதியான 100 நகரங்கள் பட்டியலை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

**11. பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதியை முழுமையாக மீட்டு பறவைகள் சரணாலயமாக மாற்ற உயர் நீதிமன்றம் உத்தரவு**

பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதியை ஆக்கிரமிப்புகளில் இருந்து முழுமையாக மீட்டு பறவைகள் சரணாலயமாகவும், அரிய தாவரம், விலங்கினங்களின் சுற்றுச்சூழலியல் வாழ்விடமாகவும் மாற்றும் சாத்தியக்கூறுகளை ஆராய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

**12. ஆவடி கனரக வாகன தொழிற்சாலையில் ரூ.7,523 கோடியில் 118 அர்ஜுன் எம்கே–1ஏ பீரங்கிகள் தயாரிப்பு: பணி ஆணை வழங்கியது பாதுகாப்புத் துறை**

ஆவடியில் உள்ள கனரக வாகன தொழிற்சாலையில், ரூ.7,523 கோடி மதிப்பில் 118 அர்ஜுன் எம்கே–1ஏ பீரங்கி வாகனங்களைத் தயாரித்து வழங்குவதற்கான பணி ஆணையை பாதுகாப்புத் துறை அமைச்சகம் வழங்கியுள்ளது. நவீன பீரங்கி வாகனமான எம்கே–1ஏ, அர்ஜுன் பீரங்கி வாகனத்தின் புதிய வகையாகும். எம்கே–1வகை பீரங்கி வாகனத்துடன் ஒப்பிடும்போது 72 புதிய அம்சங்கள் மற்றும் உள்நாட்டு உபகரணங்களும், எம்கே–1ஏ பீரங்கி வாகனத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்தப் பீரங்கி வாகனம், அனைத்து வகையான நிலப்பரப்புகளிலும் எளிதாக செல்லும் திறன் பெற்றது. அதோடு, பகலிலும், இரவிலும், துல்லியமாக இலக்கை தாக்கும் திறன் படைத்தது. இந்த பீரங்கி வாகனத்தை, பல மேம்பட்ட வசதிகளுடன் ராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) வடிவமைத்து உருவாக்கியுள்ளது. இதனால் இந்த பீரங்கி வாகனம், உலகத் தரத்துக்கு இணையாக இருக்கும்.

இந்நிலையில், அர்ஜுன் எம்கே–1ஏ பீரங்கிகளைத் தயாரிக்கும் பணி ஆவடி கனரக தொழிற்சாலைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், குறு, சிறு தொழில்நிறுவனங்கள் உட்பட 200 இந்திய நிறுவனங்களுக்கு தொழில் வாய்ப்பு கிடைக்கும்.

அத்துடன், 8000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்த வாகனத் –தை, போர்வாகன ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுநிறுவனம் (சிவிஆர்டிஇ), டிஆர்டிஓ'இன் இதர ஆய்வகங்களுடன் இணைந்து 2 ஆண்டுக்குள் உருவாக்கியது குறிப்பிடத்தக்கது. இத்தகவல் பாதுகாப்புத் துறை பத்திரிகை தகவல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

**13. கோவளம் கடற்கரை பகுதியில் திரவக் கழிவுகள் 100 சதவீதம் மறுசுழற்சி: அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தகவல்**

சிவ.வீ.மெய்யநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழ்நாட்டின் கடலோரப் பகுதி சுமார் 1,076 கிமீ நீளம் கொண்டது. இதில் செங்கல்பட்டு மாவட்டம் கோவளம் கடற்கரைக்கு இந்தியாவின் 9–வது நீலக்கொடி கடற்கரைசான்றிதழை டென்மார்க் நாட்டைச்சேர்ந்த சுற்றுச்சூழல் அமைப்பு வழங்கியுள்ளது. இந்த அமைப்புஉலகளவில் பாதுகாப்பு, தூய்மையான கடற்கரைகளைத் தேர்ந்தெடுத்து இந்த அங்கீகாரத்தை வழங்கி வருகிறது.

கோவளம் கடற்கரையில் பசுங்கொடிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், பார்வையாளர்களைக் கவர 37 வசதிகள் உள்ளன. இதில் பாதுகாப்பான நீச்சல் மண்டலம், உடைமாற்றுப் பகுதி, சாய்ந்திருக்கும் மூங்கில் நாற்காலிகள், நிழற்குடைகள், வெளிப்புற உடற்பயிற்சி உபகரணங்கள், குழந்தைகள் விளையாடும் பகுதி, மூங்கிலால் செய்யப்பட்ட குப்பைத் தொட்டிகள், கழிப்பறை மற்றும் 7 நிலை சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்வழங்கும் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன. மணலை சுத்தம்

செய்யும் இயந்திரத்தைப் பயன்படுத்தி கடற்கரை மணலும் தொடர்ந்து சுத்தம் செய்யப்படுகிறது.

கடற்கரையின் நீராடும் மண்டலத்தில் பாதுகாப்பாக நீந்தக்கூடிய மாற்றுத் திறனாளிகளுக்கான ஆம்பிபியஸ் வீல் நாற்காலியும் உள்ளது. கடற்கரையில் குளிப்பதற்கான காலம் ஜனவரி 15 முதல் செப்டம்பர் 15 வரை அடையாளம் காணப்பட்டுள்ளது.

பார்வையாளர்களின் பாதுகாப்புக்காக 4 கண்காணிப்பு சிசிடிவிகேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. எந்த அவசர அழைப்புக்கும் உயிர்காக்கும் காவலர்கள் கண்காணிப்பு கோபுரத்தில் நிறுத்தப்பட்டுள்ளனர். மேலும், அங்கு உடனடி மருத்துவ கவனிப்பும் பார்வையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. 60 எல்இடி ஒளிரும்தெரு விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ள கடற்கரை, காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை பார்வையாளர்களுக்காக திறந்திருக்கும். குளியல் மண்டலத்தில் தூய்மையான நிலையில் நீர் பராமரிக்கப்படுகிறது.

இந்த கடற்கரை, ஒரு பூஜ்ஜிய திரவ கழிவு மேலாண்மை கடற்கரையாக உள்ளது. இங்கு உருவாகும் திரவக் கழிவுகள் சுத்திகரிக்கப்பட்டு 100 சதவீதம் மீண்டும்பயன்படுத்தப்படுகிறது. அவற்றைவெளியில் விட்டு மாசுபடுத்தப்படுவதில்லை. அங்கு இதில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், 40 கிலோவாட் சூரிய மின் நிலையம் மற்றும் நாளொன்றுக்கு 50 கிலோ செயலாக்க திறன் கொண்ட தானியங்கி உரம் தயாரிக்கும் இயந்திரம் கொண்ட திடக்கழிவு மேலாண்மை அலகும் உள்ளது.

---

**1.** **இந்தியாவின் முதல் யூரோ பசுமைப் பத்திரத்தை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?**

அ) NTPC

**ஆ) பவர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் ☑**

இ) AIIMS

ஈ) TANGEDCO

✓ மின்துறையில் முன்னணி வங்கிசாரா நிதி நிறுவனமான, பவர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிட் தனது முதல் யூரோ 300 மில்லியன், 7 ஆண்டு யூரோ பசுமைப் பத்திரத்தை வெளியிட்டது.

✓ இதன்மூலம் பெறப்பட்ட 1.841 சதவீத விலை, யூரோ சந்தையில் இந்திய வெளியீட்டு நிறுவனத்தால், பெறப்பட்ட மிகக்குறைந்த வசூல். இது, இந்திய வங்கி சாரா நிதி நிறுவனம் வெளியிட்ட முதல் யூரோ பத்திரம் மற்றும் 2017ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவிலிருந்து வெளியிடப்பட்ட முதல் யூரோ பசுமைப் பத்திரம் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பத்திர வெளியீட்டின்போது, ஆசிய மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த 82 முதலீட்டு நிறுவனங்கள் பங்கேற்றன. இது 2.65 மடங்கு மிகையானது.

---

**2.** **2021'க்கான உலகளாவிய விருதுகளில் யூரோமணி வழங்கிய 'உலகின் சிறந்த வங்கி – 2021' பட்டத்தை வென்ற வங்கி எது?**

அ) SBI வங்கி

**ஆ) DBS வங்கி ☑**

இ) ஐசிஐசிஐ வங்கி

ஈ) ஆக்சிஸ் வங்கி

✓ இங்கிலாந்தைச் சார்ந்த நிதியியல் வெளியீடான 'யூரோமணி' அதன் உலகளாவிய விருதுகள் – 2021'இல், DBS'ஐ 'உலகின் சிறந்த வங்கி 2021' என்ற பட்டத்துடன் கௌரவித்துள்ளது. மூன்று ஆண்டுகளில், DBS வங்கி இந்தப் பட்டத்தை வெல்வது இது இரண்டாவது முறையாகும். DBS வங்கி 'உலகின் சிறந்த டிஜிட்டல் வங்கி 2021' என அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் இரு பட்டங்களையும் ஒரே நேரத்தில் வைத்திருக்கும் உலகின் முதல் வங்கியாக இது உள்ளது.

---

**3.** **பாரத மிகுமின் நிறுவனமானது (BHEL) இந்தியாவின் மிகப்பெரிய மிதவை சோலார் PV ஆலையை எம்மாநிலத்தில் தொடங்கியுள்ளது?**

**அ) ஆந்திர பிரதேசம் ☑**

ஆ) மகாராஷ்டிரா

இ) பீகார்

ஈ) கர்நாடகா

✓ இந்தியாவின் மிகப்பெரிய மிதவை சூரிய ஒளிமின்னழுத்த அமைப்பு (PV) ஆலையானது ஆந்திர பிரதேச மாநிலத்தில் உள்ள NTPC சிம்மாத்ரியில் பாரத மிகுமின் நிறுவனம் தொடக்கியுள்ளது. இந்த 25 MW திட்டம், 100 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தூய மின்சாரத்தை உருவாக்குவது மட்டுமல்லாமல், நீர் ஆவியாவதையும் குறைக்கும்.

---

**4.** **"சுற்றுச்சூழல் உணர்திறன், காலநிலை தகவமைப்பு மற்றும் சமூக உள்ளடக்கங்கொண்ட நகர்ப்புற ஆற்றங்கரை திட்டமிடல் & மேம்பாட்டுக்கான வழிகாட்டல் குறிப்பை" அறிமுகப்படுத்தியுள்ள அமைப்பு எது?**



**அ) தேசிய தூய்மை கங்கை திட்டம் ☑**

ஆ) ஜல் சக்தி அமைச்சகம்

இ) நமாமி கங்கே

ஈ) துறைமுகங்கள், கப்பல் & நீர்வழிகள் அமைச்சகம்

✓ தேசிய தூய்மைகங்கை திட்டம் "சுற்றுச்சூழல் உணர்திறன், காலநிலை தகவமைப்பு & சமூக உள்ளடக்கங்கொண்ட நகர்ப்புற ஆற்றங்கரை திட்டமிடல் மற்றும் மேம்பாட்டுக்கான வழிகாட்டல் குறிப்பை" வெளியிட்டு உள்ளது. இது 'கனெக்ட் கரோ'இல் வெளியிடப்பட்டது. இந்தியாவின் உலக வள நிறுவனம் இதனை ஏற்பாடு செய்தது.

---

**5.** **APEDA சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஆண்டு எது?**

அ) 1970

ஆ) 1980

**இ) 1985 ☑**

ஈ) 1995

✓ வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையச் சட்டமானது (APEDA சட்டம்) கடந்த 1985ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

✓ வணிக நுண்ணறிவு மற்றும் புள்ளியியல் இயக்குநரகத்தின் சமீபத்திய மதிப்பீட்டின்படி, APEDA தயாரிப்புகளின் ஏற்றுமதி ஏப்ரல் முதல் ஆகஸ்ட் 2021 வரை 21.8% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

---

**6.** **"ஆதார் அடிப்படையிலான e–KYC", "சுய KYC" மற்றும் "OTP அடிப்படையிலான மாற்றம்" ஆகியவை இந்திய அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட எந்தச் சீர்திருத்தங்களின் ஒருபகுதியாகும்?**



அ) LPG சீர்திருத்தங்கள்

ஆ) மின் துறை சீர்திருத்தங்கள்

இ) MSME சீர்திருத்தங்கள்

**ஈ) தொலைத்தொடர்பு சீர்திருத்தங்கள் ☑**

✓ உலகத்தரம் வாய்ந்த இணைய / டெலி–இணைப்பை வழங்குவதற்கும், KYC செயல்முறைகளை எளிமையாக்குவதற்குமாக இந்திய அரசாங்கம் தொலைத்தொடர்பு துறையில் சீர்திருத்தங்களை ஏற்படுத்தியுள்ளது. இவற்றில் "ஆதார் அடிப்படையிலான e–KYC", "சுய–KYC" ஆகியவை சிம் கார்டுகளை வீட்டுக்கேச் சென்று வழங்குதல் மற்றும் "OTP அடிப்ப–டையில் மொபைல் இணைப்பை பிரீபெய்டிலிருந்து போஸ்ட்பெய்டுக்கு மாற்றுவது" ஆகியவை அடங்கும்.

---

**7.** **அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற, "VR சௌதாரி" என்பவருடன் தொடர்புடைய அமைப்பு எது?**



அ) இஸ்ரோ

**ஆ) இந்திய விமானப்படை ☑**

இ) ஓஎன்ஜிசி

ஈ) இந்தியன் ஆயில்

✓ இந்திய வான்படையின் தற்போதைய துணைத்தலைவர் VR சௌதாரி, இந்திய வான்படையின் அடுத்த தலைமை மார்ஷலாக இந்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் செப்.30 அன்று சேவையிலிருந்து ஓய்வு பெறும் ஏர் சீப் மார்ஷல் ஆர் கே எஸ் பதௌரியாவுக்குப் பின் இப்பதவிக்கு வருவார். VR சௌத்ரி, 1982 டிசம்பரில் ஐஏஎஃப்'இல் பணி நியமனம் செய்யப்பட்டார். பல்வேறு அளவிலான விமானங்களில் 3,800 மணி நேரங்களுக்கு மேல் அவர் பறந்துள்ளார்.

---

**8.** **ஆசாத் கா அம்ரித் மகோத்சவத்தை நினைவுகூரும் வகையில், 'Sailing regattas and Sail parade' என்றவொன்றை நடத்தவுள்ள அமைப்பு எது?**



அ) இந்திய இராணுவம்

**ஆ) இந்திய கடற்படை ☑**

இ) இந்திய கப்பல் கழகம்

ஈ) இந்திய அகழ்வு நிறுவனம்

✓ சுதந்திர இந்தியாவின் வைரவிழா கொண்டாட்டத்தின் ஒருபகுதியாக, கடற்படையின், 3 கட்டுப்பாட்டு மையங்களின் தலைமையிடங்களில் பாய்மரப் படகுப்போட்டிகள் மற்றும் அணிவகுப்புகளை நடத்த இந்தியக் கடற்படையின், பாய்மரப் படகுச் சங்கம் திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் உள்ளூர் மக்களிடையே பாய்மரப் படகு விளையாட்டுகள் பிரபலப்படுத்த–ப்படும். முதல் நிகழ்ச்சியை, கொச்சியில் உள்ள இந்தியக் கடற்படையின் படகு வீரர்கள் பயிற்சி மையம், எர்ணாகுளம் கால்வாயில் செப்டம்பர் 23ஆம் தேதி நடத்துகிறது. இந்தியக் கடற்படையின் 75 வீரர்கள், இதில் கலந்துகொண்டு, தங்கள் திறமையை வெளிப்படுத்துவர்.

---

**9. UGCஉடன் இணைந்து "அனைத்தும் உள்ளடங்கிய நிர்வாகத்தை உறுதி செய்வது: ஒவ்வொருவரையும் உருவாக்குவது தான் முக்கியமான விஷயம்" என்ற தலைப்பிலான வலையரங்கத்தை ஏற்பாடு செய்துள்ள அமைச்சகம் எது?**

அ) நிதி அமைச்சகம்

ஆ) சமூக நீதி அமைச்சகம்

இ) மகளிர் மேம்பாட்டு அமைச்சகம்

**ஈ) கல்வி அமைச்சகம் ☑**



- ✓ அனைவருக்கும் தரமான கல்வியை வழங்கும் தொலைநோக்கின் ஒரு பகுதியாக, "அனைத்தும் உள்ளடங்கிய நிர்வாகத்தை உறுதி செய்வது: ஒவ்வொருவரையும் உருவாக்குவதுதான் முக்கியமான விஷயம்" என்ற தலைப்பிலான இணையக் கருத்தரங்கை மத்திய கல்வி அமைச்சகமும், பல்கலைக்கழக மானியக்குழுவும் நடத்தின. இந்த இணையக் கருத்து அரங்கில் மத்திய பழங்குடியினர் விவகாரத்துறை அமைச்சர் அர்ஜூன் முண்டா, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.
- ✓ இந்த இணையக் கருத்தரங்கு அனைத்து கல்வி நிறுவனங்களின் தலைவர்களை ஒரே தளத்தில் கொண்டுவரும் வாய்ப்பை ஏற்படுத்தியது. இதற்கு லக்னோவில் உள்ள பாபாசாகிப் பிம்ராவ் அம்பேத்கர் பல்கலைக் கழகமும் ஆதரவு தெரிவித்தது.

---

**10. விண்வெளி ஆய்வு தொடர்பான செய்திகளில் இடம்பெறுகிற VIPER'இல் I என்பது எதைக் குறிப்பிடுகிறது?**

அ) Intelligence

**ஆ) Investigating ☑**

இ) Interesting

ஈ) Information



- ✓ அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான NASA, சந்திரனுக்கு VIPER (Volaterles Investigating Polar Exploration Rover) என்ற ஒரு நடமாடும் ரோபோ அமைப்பை அனுப்பவுள்ளதாக அறிவித்துள்ளது. இது 2023ஆம் ஆண்டில், ஆர்ட்டெமிஸ் திட்டத்தின் ஒரு பகுதியாக அனுப்பப்படவுள்ளது. மேலும் இது நிலவின் மேற்பரப்பில் மற்றும் அதற்குக் கீழே பனி மற்றும் பிற வளங்களைத் தேடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ சந்திரனின் தென் துருவமானது நமது சூரிய மண்டலத்தின் குளிரான பகுதிகளுள் ஒன்றாகும். இதுவரை அது ஆராயப்படாமலேயே உள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மங்கள்யான் விண்கலத்தின் 7 ஆண்டுகள் நிறைவு: இஸ்ரோ விஞ்ஞானிகள் தகவல்**

செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்யும் மங்கள்யான் விண்கலம், வெற்றிகரமாக 7–வது ஆண்டை நிறைவு செய்துள்ளதாக இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறியதாவது: மங்கள்யான் திட்டத்தில் அனைத்துவித அம்சங்களும் எதிர்பார்த்ததைவிட சாதகமாகவே அமைந்துள்ளன. இதில் கிடைக்கப் பெற்ற அனுபவங்கள்தான் நமது எதிர்கால திட்டங்களுக்கு பெரிதும் உதவிகரமாக இருக்கின்றன.

மங்கள்யானின் 5 ஆய்வு சாதனங்கள் தொடர்ந்து தகவல்களை அனுப்பி வருகின்றன. இதன்மூலம் செவ்வாய் கிரகத்தின் பருவநிலை மாறுபாடுகள், வளிமண்டல சூழல்கள் குறித்து பல்வேறு தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. தற்போதைய நிலவரப்படி விண்கலத்தின் ஆய்வுக் காலம் மேலும் ஓராண்டுக்கு நீடிக்கும் என்று எதிர்பார்க்கிறோம். வழக்கமாக தொலைத்தொடர்பு மற்றும் கண்காணிப்பு செயற்கைக் கோள்கள்தான் 7 முதல் 9 ஆண்டுகள் வரை செயல்படும். ஆனால், ஒரு விண்கலத்தையும் 7 ஆண்டுகளுக்கு மேலாக இயங்க வைக்க முடியும் என்பதை மங்கள்யான் நிரூபணம் செய்திருப்பது நமக்கு பெருமிதமான தருணமாகும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

---

**2. தமிழக ஏற்றுமதி வளர்ச்சிக்கு மத்திய அரசு உதவி செய்யும்:**

மத்திய அரசின் வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் சார்பில் வர்த்தக வார விழாவின் நிறைவுநாள் நிகழ்ச்சி சென்னை தாம்பரம் மெப்ஸ் வளாகத்தில் உள்ள சிடிஎஸ் கூட்டரங்கில் நேற்று நடைபெற்றது. இதில், மத்திய மீன்வளம், கால்நடை, தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் எல்.முருகன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது: உள்ளூர் தொழில்களை மேம்படுத்தும் நோக்கில் மத்திய அரசு சுயசார்பு பாரதம் என்ற சிறப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

கால்நடை, கடல்சார் பொருட்கள் ஏற்றுமதிக்கு இந்தியாவுக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. இந்திய வேளாண் ஏற்றுமதியில் 17–18 சதவீதம் வரை கடல்சார் பொருட்கள் ஏற்றுமதியின் பங்களிப்பு ஆகும். கடல்சார் பொருட்கள் ஏற்றுமதிக்கு மத்திய அரசு 50 சதவீதம் மானியம் அளிக்கிறது. கால்நடை உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி, கால்நடை நோய்கள் கட்டுப்பாட்டு திட்டம் எனபல்வேறு திட்டங்கள் கால்நடை துறை வளர்ச்சிக்காக செயல்படுத்தப்படுகின்றன. ஒரு லட்சம் கால்நடைகள் கொண்ட பகுதியில் நடமாடும் கால்நடை மருத்துவ கிளினிக் (மொபைல் கிளினிக்) இயக்க மத்திய அரசு உதவுகிறது.

இந்திய அளவிலான ஏற்றுமதியில் தமிழகம் 3–வது இடத்தில் உள்ளது. சென்னையில் இருந்து கார், உதிரிபாகங்களும், நாமக்கல் பகுதியில் கால்நடை சார்ந்தபொருட்களும், தூத்துக்குடியில் இருந்து கடல்சார் பொருட்களும் அதிக அளவில் ஏற்றுமதியாகின்றன. தமிழகத்தின் ஏற்றுமதி மேம்பாட்டுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்துதரும்.

கிராமப் பொருளாதாரம்

வளரும் கிராமப்புற பொருளாதார மேம்பாட்டுக்கு மத்திய அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. கிராமப்புறங்களில் இருந்து பொருட்களை ஏற்றுமதி செய்யும்போது கிராம பொருளாதாரம் வளரும். அதன்மூலம் கிராமங்கள் வளர்ச்சி அடைவதோடு வேலைவாய்ப்பும் அதிகரிக்கும்.

'மேட் இன் இந்தியா' என்று பெருமையாக கூறிக்கொள்ளும் வகையில் இந்தியாவில் இருந்து சிறப்புமிக்க பொருட்கள் தயாரிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலை உருவாக வேண்டும். நாட்டிலேயே முதல்முறையாக தமிழகத்தில் கடல்பாசி பூங்கா அமைக்கப்பட உள்ளது. இதன்மூலம், மீனவ பெண்கள், மகளிர் சுயஉதவிக் குழுவினர், விவசாய உற்பத்தியாளர் குழுவினர் பெரி தும் பயனடைவார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

---

**3. நாக நதியை மீட்ட தமிழக பெண்கள் – பிரதமர் மோடி**

மனதின் குரல் வானொலி உரையில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது: நாடு முழுவதும் நதிகளை மீட்க, தூய்மைப்படுத்த அரசும் தன்னார்வ தொண்டு அமைப்புகளும் இணைந்து செயல்பட்டு வருகின்றன. இதற்கு உதாரணமாக தமிழகத்தின் வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்த மாவட்டங்களின் நீர் ஆதாரமான நாகநதி பல ஆண்டுகளுக்கு முன்பே வறண்டுவிட்டது. அப்பகுதி பெண்கள் ஒன்றிணைந்து நாகநதியை மீட்கும் பணியில் இறங்கினர். அவர்கள் மக்களை ஒன்று திரட்டினர், கால்வாய்களை தோண்டினர். தடுப்பணைகளை உருவாக்கினர், மறுசெறிவு குளங்களை வெட்டினர். இதன்விளைவாக இன்று நாகநதியில் தண்ணீர் ததும்பி ஓடுகிறது.

தேசத்தந்தை காந்தியடிகள் சபர்மதி நதிக்கரையில் ஆசிரமத்தை அமைத்தார். 10 ஆண்டுகளுக்கு முன்பே சபர்மதி நதி வறண்டுவிட்டது. ஓராண்டில் 7 மாதங்கள் வரை நதியில் தண்ணீர் இருக்காது. இதன்பிறகு நர்மதையும், சபர்மதியும் இணைக்கப்பட்டன, இன்று சபர்மதியில் தண்ணீர் நிறைந்திருக்கிறது. தமிழக பெண்களைப் போன்று நாட்டின் பல்வேறு பகுதிகளில் நதிகளை மீட்கும் பணி நடந்து வருகிறது. நம்முடைய துறவிகள் நதிகள் மீட்பு, மரக்கன்று நடுதல் உள்ளிட்ட சமூக சேவைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் நாக நிதியை மீட்கும் திட்டம் கடந்த 2014–ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. வாழும் கலை அமைப்பின் முயற்சியால் தொடங்கப்பட்ட இந்த நதி மீட்பு திட்டத்தில் 20,000–க்கும் மேற்பட்ட பெண்கள் ஆர்வத்தோடு ஈடுபட்டு 3,500–க்கும் மேற்பட்ட மீன் கிணறு, மறுசெறிவு குளங்களை வெட்டினர். 250 தடுப்பணைகள் கட்டப்பட்டன. 5 ஆண்டு உழைப்பின் பலனாக நாகநதி மீண்டும் உயிர் பெற்றது.

---

### 4. தமிழக அரசுப் பள்ளிகளுக்கு 100% குடிநீா் இணைப்பு: மத்திய அமைச்சா் பாராட்டு

ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளுக்கு 100 சதவீத குடிநீா் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதற்கு மத்திய அமைச்சா் பிரகலாத் சிங் படேல் பாராட்டு தெரிவித்தாா். தமிழகத்தில் 2 நாள்கள் சுற்றுப்பயணமாக ஞாயிற்றுக்கிழமை சென்னை வந்த மத்திய உணவு பதப்படுத்துதல் துறை மற்றும் ஜல் சக்தி இணை அமைச்சா் பிரகலாத் சிங் படேலை தமிழக ஊரக வளா்ச்சித்துறை அமைச்சா் கேஆா்.பெரியகருப்பன் மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினாா். அப்போது ஊரக பகுதிகளில் தூய்மை பாரத இயக்கம் மற்றும் ஜல் ஜீவன் இயக்கத்தின் முன்னேற்றம் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

அப்போது மத்திய அமைச்சா் கூறியதாவது: ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள 12,525 ஊராட்சிகளைச் சாா்ந்த 79,395 ஊரகக் குடியிருப்புகளில் உள்ள சுமாா் 1 கோடியே 27 லட்சம் வீடுகளில் இதுவரை 46.33 லட்சம் வீடுகளுக்கு குடிநீா்க் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் அரசுப்பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசுக்கட்டடங்களுக்கு 100 சதவீதம் குடிநீா் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதற்கு எனது பாராட்டுக்கள். மேலும் இக்குடிநீா் இணைப்புகளை உரிய முறையில் பராமரித்து பாதுகாக்கப்பட்ட குடிநீா் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

மக்களின் சுகாதார வாழ்வுக்கு வழிவகுக்கும் வகையில் தமிழகத்தின் ஊரக பகுதிகளில் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகள், திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தை முற்றிலும் ஒழித்திட தனி நபா் கழிப்பறைகள் மற்றும் சமுதாய வளாகங்கள் கட்டி மக்களைப் பயன்படுத்த ஊக்குவித்தல் போன்ற செயல்பாடுகள் தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் ரூ.366.58 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், ஊரக பகுதிகளில் திட மற்றும் திரவக்கழிவுகளை திறம்பட மேலாண்மை செய்திட ஏதுவாக பற்பல முன்முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதும் பாராட்டுக்குரியது. அதே நேரம், மக்களிடையே சுகாதாரம் மற்றும் கழிவு மேலாண்மை பற்றி விழிப்புணா்வு ஏற்படுத்திடவும், நெகிழி கழிவுகள் பயன்பாட்டை முற்றிலுமாக ஒழித்திடவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அவா் அறிவுறுத்தினாா்.

---

### 5. எண்ம சுகாதாரத் திட்டம்: வரலாற்றுச் சிறப்பு மிக்க திட்டத்தை தொடக்கி வைத்தார் பிரதமா்

பிரதமரின் எண்ம (டிஜிட்டல்) சுகாதார இயக்கம் இன்று தொடங்கியது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த முன்முயற்சியை இன்று காலை 11 மணிக்கு காணொலிக் காட்சி வாயிலாக தொடக்கிவைத்து பிரதமர் உரையாற்றினார். தேசிய எண்ம சுகாதார இயக்கத்தின் மாதிரி திட்டத்தை கடந்த 2020 ஆகஸ்ட் 15–இல் செங்கோட்டை கொத்தளத்தில் உரையாற்றுகையில் பிரதமா் அறிவித்தாா். தற்போது 6 யூனியன் பிரதேசங்களில் இந்த மாதிரித் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. ஆயுஷ்மான் பாரத் – பிரதமரின் மக்கள் ஆரோக்கிய திட்டத்தின் மூன்றாவது ஆண்டை கொண்டாடும் வேளையில், நாடு தழுவிய பிரதமரின் எண்ம சுகாதார இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில் மத்திய சுகாதார அமைச்சா் மாண்டவியா உள்ளிட்டோா் பங்கேற்க இருக்கின்றனா்.

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு நபருக்கும் சுகாதார அடையாள அட்டை அளிக்கப்படும். மக்களின் மருத்துவ சிகிச்சைக்கான ஆவணமாக செயல்படும் இந்த அடையாள அட்டையுடன் தனிநபா் பெற்ற மருத்துவ சிகிச்சைகள் உள்பட மருத்துவம் சாா்ந்த அனைத்து தகவல்களும் இணைக்கப்படுவதுடன் செல்லிடப்பேசி செயலி உதவியுடன் அவற்றைத் தெரிந்து கொள்ள முடியும். மற்றொரு முக்கிய அம்சமான சுகாதார தொழில்சாா் நிபுணா்களின் பதிவேடு மற்றும் சுகாதார வசதிகளின் பதிவுகள், நவீன மற்றும் பாரம்பரிய மருத்துவ முறைகளின் மருத்துவா்கள் குறித்த தகவல்கள் அடங்கிய களஞ்சியமாக செயல்படும். மருத்துவா்கள், மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ சேவைகளை வழங்குபவா்கள் உள்ளிட்டோா் எளிதான பணியை மேற்கொள்வதை இது உறுதி செய்யும்.

அதேவேளையில் பாதுகாப்பு, ரகசியத்தன்மை மற்றும் மருத்துவம் சம்பந்தமான தனிநபா் தகவல்களின் தனியுரிமை உறுதி செய்யப்படும். மக்களின் அனுமதி பெற்று அவா்களது மருத்துவ ஆவணங்களை அணுகுவதற்கும் பரிமாற்றம் செய்வதற்கும் இந்த இயக்கம் வழிவகை செய்யும்.

### 6. ஆஸ்ட்ரவா ஓபன் டென்னிஸ் சானியா ஜோடி சாம்பியன்

செக் குடியரசு நாட்டில் நடந்த ஆஸ்ட்ரவா ஓபன் மகளிர் டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா, சீனாவின் ஷுவாய் ஸாங் ஜோடி சாம்பியன் பட்டம் வென்றது. இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் கிறிஸ்டியன் கெய்ட்லின் – எரின் ரவுட்லைப் (நியூசி.) ஜோடியுடன் மோதிய சானியா ஜோடி 6–3, 6–2 என்ற நேர் செட்களில் வென்று கோப்பையை முத்தமிட்டது. இப்போட்டி 1 மணி, 4 நிமிடத்தில் முடிவுக்கு வந்தது. நடப்பு சீசனில் சானியா வென்ற முதல் சாம்பியன் பட்டம் இது. முன்னதாக, கடந்த மாதம் கிறிஸ்டினா மெகேலுடன் இணைந்து விளையாடிய கிளீவ்லேண்ட் ஓபனில் அவர் பைனல் வரை முன்னேறி 2வது இடம் பிடித்திருந்தார்.

---

### 7. எஸ்டோனியா வீராங்கனை அனெட் கோன்டாவெய்ட்

ஆஸ்ட்ரவா ஓபன் மகளிர் ஒற்றையர் பிரிவில் எஸ்டோனியா வீராங்கனை அனெட் கோன்டாவெய்ட் (25 வயது, 30வது ரேங்க்) சாம்பியன் பட்டம் வென்றார். பைனலில் கிரீஸ் நாட்டின் மரியா சாக்கரியுடன் (26 வயது, 12வது ரேங்க்) நேற்று மோதிய கோன்டாவெய்ட் 6–2, 7–5 என்ற நேர் செட்களில் வென்று கோப்பையை முத்தமிட்டார். இப்போட்டி 1 மணி, 32 நிமிடத்துக்கு நீடித்தது.

---

### 8. டி20 கிரிக்கெட்டில் 10 ஆயிரம் ரன்கள்: கோலி சாதனை!

ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு கேப்டன் விராட் கோலி டி20 கிரிக்கெட்டில் 10,000 ரன்கள் என்ற புதிய சாதனையைப் படைத்துள்ளார். ஐபிஎல்–இன் இன்றைய (ஞாயிற்றுக்கிழமை) இரண்டாவது ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு, மும்பை இந்தியன்ஸ் அணிகள் விளையாடி வருகின்றன. முதலில் பேட் செய்த பெங்களூரு நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 165 ரன்கள் எடுத்துள்ளது.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய கோலி 51 ரன்கள் எடுத்தார். இதில், ஜாஸ்பிரித் பும்ரா பந்தை சிக்ஸருக்கு பறக்கவிட்டு 13 ரன்களைக் கடக்கும்போது டி20 கிரிக்கெட்டில் கோலி 10,000 ரன்கள் என்ற சாதனையைப் படைத்தார். இந்த சாதனையை 314–வது டி20 ஆட்டத்தில் அவர் படைத்துள்ளார்.

---

**1. இரஸ்கின் பாண்ட், வினோத் குமார் சுக்லா உள்ளிட்ட அறுவர், அண்மையில் எந்தப் பெல்லோஷிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்?**

**அ) சாகித்ய அகாதமி பெல்லோஷிப் ☑**

ஆ) ஞானபீட விருது

இ) வியாஸ் சம்மான்

ஈ) டாக்டர் B C ராய் விருது



✓ ஆங்கில எழுத்தாளர் இரஸ்கின் பாண்ட், ஹிந்தி எழுத்தாளர் வினோத் குமார் சுக்லா உள்ளிட்ட ஆறு பேர் சாகித்ய அகாதமி பெல்லோஷிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். சாகித்ய அகாதமியின் பொது கவுன்சில் அதன் உயரிய கௌரவமான பெல்லோஷிப்பை அறிவித்ததாக தேசிய எழுத்துக்–கள் அகாதமி கூறியது. சிர்ஷெண்டு முகோபாத்யாய் (பெங்காலி), எம் லீலாவதி (மலையாளம்), Dr பால்சந்திர நெமேட் (மராத்தி), Dr தேஜ்வந்த் சிங் கில் (பஞ்சாபி), சுவாமி இராமபத்ராச்சார்யா (சமற்கிருதம்), இந்திரா பார்த்தசாரதி (தமிழ்) ஆகியோர் பெல்லோஷிப் பெற்ற மற்றவர்களாவர்.

---

**2. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பங்கஜ் அத்வானியுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

அ) பளு தூக்குதல்

**ஆ) ஸ்னூக்கர் ☑**

இ) டென்னிஸ்

ஈ) டேபிள்–டென்னிஸ்



✓ கத்தாரின் தோகாவில் நடைபெற்ற ஆசிய ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப்பை ஈரானின் அமீர் சர்கோசை 6–3 என்ற கணக்கில் வீழ்த்தி இந்தியாவின் பங்கஜ் அத்வானி வென்றார். அவர் கடந்த 2019ஆம் ஆண்டில் பட்டத்தை வென்றார். ஆனால், 2017ஆம் ஆண்டில் இரண்டாமிடத்தைப் பிடித்தார். 2019ஆம் ஆண்டில், அனைத்து வகையான பில்லியர்ட்ஸ், ஸ்னூக்கர், 6 ரெட்ஸ் மற்றும் 10 ரெட்ஸ் ஆகியவற்றில் பட்டங்களை வென்ற உலகின் ஒரே வீரராக பங்கஜ் அத்வானி ஆனார்.

---

**3. அண்மையில் எந்தத் தளத்தில், அமைப்புசாரா தொழிலாளர்கள் குறித்த இந்தியாவின் முதல் தேசிய தரவுத்தளத்தை, தொழிலாளர் அமைச்சகம் வெளியிட்டது?**

**அ) இ–ஷ்ராம் இணையதளம் ☑**

ஆ) சமாதான் இணையதளம்

இ) ஆத்ம நிர்பார் பாரத் இணையதளம்

ஈ) மேற்கூறியவை எதுவுமில்லை




✓ இ–ஷ்ராம் இணையதளமானது அமைப்புசாரா தொழிலாளர்கள் குறித்த இந்தியாவின் முதல் தேசிய தரவுத்தளமாகும். அமைப்புசாரா தொழிலாளர்–களின் பதிவு செயல்முறையை முடிக்குமாறு உச்சநீதிமன்றம் அரசுக்கு உத்தரவிட்டதைத் தொடர்ந்து இந்தத் தளம் நடைமுறைக்கு வந்தது. இ–ஷ்ராம் தளத்தில், 1 கோடிக்கும் மேலானோர் பதிவு செய்துள்ளனர். அப்பதிவுகளில் 68% பொது சேவை மையங்கள்மூலம் செய்யப்பட்டன.

---

**4. எதன் ஆராய்ச்சியாளர்கள் மழைத்துளிகளிலிருந்து மின்சாரத்தை உருவாக்கக்கூடிய ஒரு சாதனத்தை வடிவமைத்துள்ளனர்?**

அ) ஐஐடி மெட்ராஸ்

ஆ) ஐஐடி பம்பாய்

**இ) ஐஐடி தில்லி ☑**

ஈ) ஐஐடி பெங்களூர்



✓ தில்லியில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழக ஆராய்ச்சியாளர்கள் நீர் துளிகள், மழைத்துளிகள், நீரோட்டங்கள் மற்றும் கடல் அலைகளில் இருந்தும் மின்சாரத்தை உருவாக்கக்கூடிய ஒரு சாதனத்தை உருவாக்கியுள்ளனர். இந்தச் சாதனம் மின்னியல் தூண்டல் மற்றும் டிரைபோ–எலக்ட்ரிக் விளைவைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டது.

✓ இது "திரவ–திட இடைமுகம் டிரைபோஎலக்ட்ரிக் நானோ ஜெனரேட்டர்" என்று அழைக்கப்படுகிறது. இந்தச் சாதனம் நானோகாம்போசிட் பாலிமர் மற்றும் ஒரு தொடர்பு மின்முனையால் ஆனது.

---

**5. CBSE / NCERT பாடத்திட்டத்தில் மாற்றஞ்செய்வதற்காக சமீபத்தில் அமைக்கப்பட்ட 12 பேர்கொண்ட குழுவின் தலைவர் யார்?**

அ) அமித் ஷா

**ஆ) கஸ்தூரிரங்கன் ☑**

இ) பிமல் ஜலான்

ஈ) இஞ்செட்டி ஸ்ரீனிவாஸ்



✓ CBSE/NCERT பாடத்திட்டத்தில் மாற்றங்களுக்கான வழிகாட்டுதல்களை வகுப்பதற்காக, இந்திய அரசு, கஸ்தூரிரங்கன் தலைமையில் 12 பேர் கொண்ட தேசிய வழிநடத்துதல் குழுவை அமைத்துள்ளது. இக்குழுவுக்கு மூன்றாண்டுகள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

✓ தேசிய பாடத்திட்ட கட்டமைப்பு எனப்படும் இந்த ஆவணம் கடைசியாக 2005'இல் தயாரிக்கப்பட்டது. கஸ்தூரிரங்கன், இஸ்ரோவின் முன்னாள் தலைவரும் தேசிய கல்விக் கொள்கை–2020'ஐ உருவாக்கிய குழுவின் தலைவராகவும் இருந்தார்.

---

**6. அண்மையில் மத கட்டமைப்புகள் (பாதுகாப்பு) மசோதா, 2021'ஐ நிறைவேற்றிய மாநிலம் எது?**

அ) ஒடிஸா

**ஆ) கர்நாடகா ☑**

இ) மகாராஷ்டிரா

ஈ) கேரளா



✓ கர்நாடக மாநில சட்டசபையானது சமீபத்தில் கர்நாடக மத கட்டமைப்புக–ள் (பாதுகாப்பு) மசோதா, 2021'ஐ நிறைவேற்றியது. பொது இடங்களில் மத நிர்மாணங்களை பாதுகாக்கும் நோக்கில், முதலமைச்சர் பசவராஜ் பொம்மையால் இந்த மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது. மசோதாவின்படி, "கோவில், தேவாலயம், மசூதி, குருத்வாரா, பௌத்த விகாரம், மஜார் போன்றவை, சட்டத்தின் அதிகாரம் இல்லாமல் பொதுவெளி இடத்தில் கட்டப்பட்டிருந்தாலும் அவை மத கட்டமைப்பு எனப்படும்".

---

**7. விலங்கு–மனித மோதலை ஒழிப்பதற்காக, எந்த விலங்குகளுக்கு 'ரேடியோ காலர்'களை பொருத்த ஒடிஸா வனத்துறை திட்டமிட்டு உள்ளது?**

அ) புலிகள்

**ஆ) யானைகள் ☑**

இ) மான்

ஈ) சொம்புமூக்கு முதலை



✓ ஒடிசா மாநிலத்தின் வனத்துறையினர், மாநிலத்தின் 7 யானைகளுக்கு 'ரேடியோ காலர்'களை பொருத்தவும், அவற்றின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும், மனிதக் குடியிருப்புகளுக்குள் அவை நுழைவதைத் தடுக்கவும் திட்டமிட்டுள்ளனர். இது விலங்கு – மனித மோதலை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இதற்காக சந்தக வனவுயிரி சரணாலயத்தின் மூன்று யானைகளும், சிமிலிபால் புலிகள் காப்பகத்தின் 4 யானைகளும் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளன. இக்கருவியில் GPS கருவி பொருத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் யானைகளின் இருப்பிடத்தை நிகழ்நேரத்தில் கண்காணிக்க முடியும்.

---

**8. "Transforming Food Systems for Rural Prosperity" என்றவோர் அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) UNESCO

ஆ) FAO

**இ) IFAD ☑**

ஈ) NABARD

IFAD

✓ "கிராமப்புற செழிப்புக்கேற்றவாறு உணவு அமைப்புகளை மாற்றுவது" என்றவோர் அறிக்கையை ஐநா'இன் சிறப்பு நிறுவனமான வேளாண் வளர்ச்சிக்கான சர்வதேச நிதியம் (IFAD) வெளியிட்டது. இவ்வமைப்பின் தலைமையகம் ரோம், இத்தாலியில் உள்ளது. இந்த அறிக்கை விவசாயம் மற்றும் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் அரசின் முதலீடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

---

**9.** 'நீலக்கொடி' சான்றிதழை வழங்குகிற நிறுவனம் எது?



அ) UNESCO

ஆ) UNICEF

**இ) சுற்றுச்சூழல் கல்வி அறக்கட்டளை ☑**

ஈ) UNFCCC

- ✓ டென்மார்க்கின் சுற்றுச்சூழல் கல்விக்கான அறக்கட்டளை என்பது தற்சமயம்வரை 77 உறுப்புநாடுகளைக்கொண்ட சுற்றுச்சூழல் அமைப்பு ஆகும். இந்த அமைப்பு, 'நீலக்கொடி' சான்றிதழை வழங்குகிறது. இந்தச் சான்றிதழ் கடற்கரைகளின் சூழல் குறித்த தகவல்களை வழங்குகிறது.
- ✓ சமீபத்தில் இந்த அறக்கட்டளை, இந்தியாவில் அமைந்துள்ள மேலும் இரு கடற்கரைகளுக்கு 'நீலக்கொடி' சான்றிதழை வழங்கியது. தமிழ்நாட்டின் கோவளம் மற்றும் புதுச்சேரியில் ஈடன் ஆகியன அவ்விரு கடற்கரைகள் ஆகும். இதன்மூலம், இந்தியாவில் 'நீலக்கொடி' சான்றுபெற்ற கடற்கரை -களின் எண்ணிக்கை பத்தாக உயர்ந்துள்ளது.

---

**10.** **பொருளியல் கூட்டுறவு & வளர்ச்சிக்கான அமைப்பின் (OECD) தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?**

அ) துபாய்

ஆ) தாவோஸ்

**இ) பாரிஸ் ☑**

ஈ) ஜெனீவா

- ✓ பொருளியல் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பு (OECD) என்பது பொருளியல் முன்னேற்றம் மற்றும் உலக வர்த்தகத்தை ஊக்குவிப்பதை நோக்கமாகக்கொண்ட அரசாங்கங்களுக்கிடையேயான பொருளாதார அமைப்பாகும். இது பிரான்சின் பாரிஸை தலைமையிடமாகக் கொண்டு உள்ளது. இது 36 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது.
- ✓ அண்மையில், அமெரிக்க அதிபர், OECD'க்கான அமெரிக்காவின் அடுத்த தூதுவராக மூத்த இந்திய–அமெரிக்க அரசியல் வல்லுநர் மனிசா சிங்கை நியமித்தார். பல்வேறு குறிப்பிடத்தக்க பதவிகளில் பணியாற்றியுள்ள அவர், தற்போது பொருளாதாரம் மற்றும் வணிக விவகாரங்களுக்கான உதவி செயலாளராக பணியாற்றி வருகிறார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழகத்தில் இருந்து முதல்முறையாக – 'போயிங்' நிறுவனத்துக்கு பாகங்கள் தயாரிக்க ஒப்பந்தம்**

தமிழகத்தில் முதல்முறையாக போயிங் விமான நிறுவனத்துக்கு முக்கிய பாகங்கள் தயாரித்து வழங்குவதற்கான ஒப்பந்தம் முதல்வர் மு க ஸ்டாலின் முன்னிலையில் வழங்கப்பட்டது. இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு சேலத்தில் உள்ள ஏரோஸ்பேஸ் இன்ஜினீயர்ஸ் நிறுவனம், உலகளாவிய விண்வெளி நிறுவனத்தின் தயாரிப்புகளுக்கான முக்கிய விமான பாகங்கள் தயாரித்து வழங்க நீண்டகால ஒப்பந்தத்தை போயிங் இந்தியா நிறுவனத்திடம் இருந்து பெற்றுள்ளது. இந்த ஒப்பந்தம் தமிழகத்தில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தரம், துல்லியம் மற்றும் கூட்டு கலாச்சாரத்தின் அர்ப்பணிப்புக்கான சான்றாகும். ஏரோஸ்பேஸ் இன்ஜினீயரிங் நிறுவனம் – போயிங் இடையிலான ஒத்துழைப்பு ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும். இது சேலம், ஒசூர் உள்ளிட்ட தமிழ்நாடு பாதுகாப்பு தொழில் வழித்தடத்தில் உள்ள வளர்ந்து வரும் விண்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்களுக்கு உத்வேகத்தை அளிக்கும்.

ரூ.150 கோடி முதலீடு

ஏரோஸ்பேஸ் இன்ஜினீயர்ஸ் நிறுவனம், ஒசூரில் ரூ.150 கோடி முதலீட்டில் சிவில் ஏரோஸ்பேஸ் உற்பத்திக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு புதிய உற்பத்தி வசதியை அடுத்த 24 மாதங்களில் ஏற்படுத்த உள்ளது. மேலும், தற்போது சேலத்தில் உள்ள உற்பத்திக் கூடத்தை50 ஆயிரம் சதுர அடி பரப்பில் விரிவுபடுத்தவும் திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் 1,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படும். இது, தமிழக முதல்வரின் தொலைநோக்குப் பார்வையான 'தமிழகத்தில் தயாரிக்கப்பட்டது' (Made in TamilNadu) என்பதன் ஒருபடியாக அமையும்.

---

**2. பாதுகாப்புத் துறையில் தொழில்நுட்பங்களை கொண்டுவரும் டிஆர்டிஓ.வின் சென்னை 'புதுமை ஆராய்ச்சி மையம்'**

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமான டிஆர்டிஓ, நாட்டின் பாதுகாப்புத் தேவைகளையும் ஆராய்ச்சிப் போக்கையும் இணைக்கும் நோக்கில், 'புதுமை ஆராய்ச்சி மையம்' (ஆர்.ஐ.சி) செயல்பட்டு வருகிறது. இம் மையம்சென்னை ஐஐடி ஆராய்ச்சி பூங்காவில், கடந்த 2012–ம் ஆண்டு நிறுவப்பட்டது. கல்வியாளர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள், தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றை இணைக்கும் தொடர்புக் கண்ணியாக இருப்பதும், பாதுகாப்புத் துறையில் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களை அடையாளம் கண்டு, அவற்றில் ஆராய்ச்சி மேற்கொண்டு, அவற்றை எளிதாக்கி பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதுமே இந்த மையத்தின் முக்கிய நோக்கம்.

எலக்ட்ரானிக்ஸ், மைக்ரோ எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டேஷன் சிஸ்டம்ஸ் (EMECS), கடற்படைஅமைப்பு, கடற்படை தொழில்நுட்பங்கள் (NSNT), மேம்பட்ட வாகனதொழில்நுட்பங்கள் (AVT) போன்றவற்றில் இந்த ஆராய்ச்சி மையம் மேற்கொண்டிருக்கும் ஆராய்ச்சிகளும் கண்டுபிடிப்புகளும் புதுமையாக உள்ளன. இந்த ஆராய்ச்சி மையத்தின் வெற்றிக்கு, சமீபத்தில் ஹைதராபாத்தில் தொடங்கப்பட்ட மற்றொரு மையமே சான்று. கடந்த 5 ஆண்டுகளாக இந்தஆராய்ச்சி மையத்தின் இயக்குநராகப் பணியாற்றிவரும் வி.நடராஜன், இந்த தலைமுறை மாணவர்களுக்கு வழிகாட்டுபவராகத் திகழ்கிறார்.

விண்வெளியில் காஸ்மிக் கதிர்வீச்சு பாதிப்பைத் தடுக்கும் விண்வெளி கலங்களின் மீதான மேற்பூச்சு, எல்லையில் எதிரிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கப் பயன்படுத்தப்படும் ஆளில்லா குட்டி விமானம், கடலில் எதிரிகளின் ஊடுருவலைக் கண்காணிக்க உதவும் சோனார் தொழில்நுட்பம் போன்றஆராய்ச்சிகள் அவருடைய தலைமையின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. கோயம்புத்தூருக்கு அருகிலுள்ள குக்கிராமத்தில் பிறந்து, வளர்ந்து, படித்த அவர், இன்றுஎட்டியிருக்கும் உயரம் அளப்பரியது. கடினமாக உழைத்தால் தடைகளை மீறி சாதிக்கலாம் என்பதை அந்த உயரம் உணர்த்துகிறது.

இந்த ஆராய்ச்சி மையம் விண்வெளி, மென்பொருள் மேம்பாடு, நானோ பொருட்கள் உற்பத்தி ஆகியவற்றில் கவனம் செலுத்தி வருகிறது. இம்மையத்தின் விஞ்ஞானிகள் சென்னை ஐஐடியில் துணைபேராசிரியர்களாகவும் பணியாற்றுவதன் மூலம், மாணவர்களுக்கு ஆராய்ச்சிகளின் மேல் ஈர்ப்பையும் பிடிப்பையும் ஏற்படுத்துகின்றனர். ஆராய்ச்சிகளில் தனிப்பட்ட நபர்களை அல்லாமல், ஒட்டுமொத்த கல்வி நிறுவனத்தையே இந்த ஆராய்ச்சி மையம் பங்கேற்க வைத்திருக்கிறது. இதனால் மாணவர்கள், ஆசிரியர்கள் மாறினாலும், ஆராய்ச்சி தடையின்றி தொடர்வது உறுதிசெய்யப்படுகிறது.

---

**3. பாலிசி கையேடு அச்சிட்டு டெலிவரி செய்ய – இந்திய தபால் துறையுடன் எல்ஐசி நிறுவனம் ஒப்பந்தம்**

பாலிசி கையேடுகளை அச்சிட்டு சம்பந்தப்பட்ட நபர்களிடம் சேர்க்கும் வகையில் எல்ஐசி நிறுவனமும் இந்திய தபால் துறையும் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளன. இதுதொடர்பாக எல்ஐசி (ஆயுள் காப்பீட்டு கழகம்)வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

எல்ஐசியின் பாலிசி கையேடுகளை (புக்லெட்) அச்சிட்டு, சம்பந்தப்பட்ட பாலிசிதாரர்களின் முகவரியில் கொண்டு சேர்க்கும் வகையில் இந்திய தபால் துறையுடன் 'பிரின்ட் டு போஸ்ட் சொல்யூஷன்' என்ற ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம்மும்பையில் உள்ள எல்ஐசி தலைமையகத்தில் எல்ஐசி, அஞ்சல் துறை உயர் அதிகாரிகள் முன்னிலையில் நேற்று கையெழுத்தானது.

---

**4. சேதி தெரியுமா?**

செப்.19: திருக்குறளை இந்தியில் மொழிபெயர்த்த டி.இ.எஸ். ராகவன், தாகூரின் 'கோரா' நாவலைத் தமிழில் மொழிபெயர்த்த கா.செல்லப்பன் ஆகியோர் 2020–ஆம் ஆண்டு மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாடமி விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டனர்.

செப்.20: பஞ்சாப் மாநிலத்தின் புதிய முதல்வராக சரண்ஜித் சிங் சன்னி பொறுப்பேற்றார். முன்னதாக உட்கட்சிப் பிரச்சினை காரணமாக கேப்டன் அம்ரீந்தர் சிங் முதல்வர் பதவியை ராஜினாமா செய்தார்.

செப்.21: ஜப்பானைச் சேர்ந்த 107 வயதான இரட்டைச் சகோதரிகள் உமேமோ சுமிம்மா, கவுமே கோடமா ஆகியோர் உலகின் மிக வயதான இரட்டையர்கள் என்று கின்னஸ் அமைப்பு அங்கீகரித்துள்ளது.

செப்.21: கனடா நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் கட்சி மூன்றாவது முறையாக ஆட்சியைத் தக்கவைத்தது. ஜஸ்டின் ட்ரூடோ 2015 முதல் அந்நாட்டுப் பிரதமராக இருந்துவருகிறார்.

செப்.22: சுதந்திரப் போராட்டத்தின் ஒரு பகுதியாக மதுரையில் மகாத்மா காந்தி கோட், சூட் அணிவதைத் துறந்து, அரையாடைக்கு மாறிய நிகழ்வின் நூற்றாண்டு நாள் கடைப்பிடிக்கப்பட்டது.

செப்.22: தமிழகத்தில் காலியாக இருந்த இரு மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கான இடைத் தேர்தலில் திமுக வேட்பாளர்கள் கனிமொழி, ராஜேஷ்குமார் ஆகியோர் போட்டியின்றித் தேர்வா யினர். புதுச்சேரியில் முதன் முறையாக பாஜகவைச் சேர்ந்த செல்வகணபதி மாநிலங்களவை எம்.பி.யானார்.

செப்.23: தமிழகத்தின் கோவளம், புதுச்சேரியின் ஏடென் ஆகிய கடற்கரைகள் உலகப் புகழ்பெற்ற நீலக்கொடிச் சான்றிதழைப் பெற்றன. இதன் மூலம் இந்தியாவில் இச்சான்றிதழைப் பெற்ற கடற்கரைகளின் எண்ணிக்கை பத்தாக உயர்ந்தது.

செப்.23: தோகாவில் நடைபெற்ற ஸ்னூக்கர் உலகக் கோப்பை சாம்பியன் பட்டத்தை இந்தியாவின் பங்கஜ் அத்வானி வென்றார். இது அவர் வெல்லும் 24–ஆவது பட்டமாகும்.

செப்.24: பெருளாதாரத்தில் பின்தங்கிய உயர் வகுப்பினருக்கு 10 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்க, உச்ச நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது.

செப்.25: இந்திய விமானப் படையின் தளபதி பதவுரியா ஓய்வுபெற உள்ள நிலையில், புதிய தளபதியாக விவேக் ராம் சவுத்ரி நியமிக்கப் பட்டுள்ளார்.

---

**5. அறியப்படாத சுற்றுலா இடங்களைப் பிரபலப்படுத்த 'தமிழ்நாட்டைக் கண்டு மகிழ்வோம்' நிகழ்ச்சி**

உலக சுற்றுலாத் தினத்தை முன்னிட்டு சென்னை தீவுத்திடலில், 'தமிழ்நாட்டைக் கண்டு மகிழ்வோம்' என்ற நிகழ்ச்சியை, சுற்றுலாத்துறை அமைச்சா் மதிவேந்தன் திங்கள்கிழமை தொடக்கி வைத்தாா். சமூக வலைதள ஆா்வலா்கள் மூலம் தமிழகத்தில் அறியப்படாத சுற்றுலாத்தலங்களை மக்களுக்கு தெரியப்படுத்தும் முயற்சியில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை இறங்கியுள்ளது

அந்த வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளா்ச்சிக் கழகத்தின் பேருந்து மூலம் தமிழ்நாடு முழுவதும் உள்ள சுற்றுலாத் தலங்களுக்கு 10 போ் கொண்ட சமூக ஊடகவியலாளா்கள் (நா்ஞீண்ஹப் ஙங்க்ண்ஹ ஐய்ச்ப்ன்ங்ய்ஸ்ரீங்ழ்ள் பங்ஹம்) பயணம் மேற்கொள்கின்றனா். இதற்கான வாகனத்தை சுற்றுலாத்துறை அமைச்சா் மதிவேந்தன் கொடியசைத்து தொடங்கி வைத்தாா். இதையடுத்து அமைச்சா் மதிவேந்தன் செய்தியாளா்களிடம் கூறியது: 'சமூக வலைதளங்களில் சுற்றுலாத்துறையில் ஆா்வமுள்ள 10 போ் கொண்ட குழு, தமிழ்நாடு முழுவதும் அறியப்படாத ஒவ்வொரு சுற்றுலாத் தலங்களுக்கும் சென்று அந்த இடத்தின் வரலாற்றை புகைப்படங்கள், விடியோக்கள் மூலமாக தங்களின் சமூக வலைதள பக்கங்களில் பகிர உள்ளனா்.

செப். 27 முதல் அக்டோபா் 6– ஆம் தேதி வரை இந்தக் குழு பயணம் மேற்கொள்ளவுள்ளனா். மக்கள் அறியாத சுற்றுலாத்தலங்களை வெளிக்கொண்டு வரும் முயற்சியே இந்த பயணத்தின் நோக்கமாகும். கரோனாவால் சுற்றுலாத்தலங்கள் நலிவடைந்துள்ளதால், அதனை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் கீழடியை சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்கு முதல்வா் நிதி அறிவித்திருக்கிறாா். அதற்கானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுற்றுலாத்துறைக்கென உள்ள செயலியை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றாா். இந்நிகழ்ச்சியில், சுற்றுலாத் துறையின் முதன்மைச் செயலாளா் சந்திரமோகன், இயக்குநா் சந்தீப் நந்தூரி உள்ளிட்டோா் கலந்து கொண்டனா்.

---

**6. 100–ஆவது நாளில் மின்னகம்: 3.50 லட்சம் புகாா்களுக்கு தீா்வு**

மின்னகம் தொடங்கப்பட்டு 100 நாள்களை எட்டிய நிலையில், 3.50 லட்சம் புகாா்களுக்கு தீா்வு காணப்பட்டுள்ளதாக மின்சாரத்துறை அமைச்சா் வி.செந்தில் பாலாஜி தெரிவித்தாா். சென்னை, அண்ணாசாலையில் உள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிா்மானக் கழகத் தலைமை அலுவலகத்தில், மின்னகம் திறந்து வைக்கப்பட்டு திங்கள்கிழமையுடன் நூறு நாள்கள் நிறைவடைந்துள்ளன. இதையொட்டி மின்சாரத்துறை அமைச்சா் வி.செந்தில் பாலாஜி நேரடியாக மின்னகத்தை திங்கள்கிழமை ஆய்வு செய்தாா். மின்னகம் சிறப்பாக செயல்பட துறை சாா்ந்த அலுவலா் மற்றும் பணியாளா்களுக்கு அவா் ஆலோசனைகளை வழங்கினாா்.

99 சதவீதம் புகாா்களுக்குத் தீா்வு: பின்னா், செய்தியாளா்களிடம் அமைச்சா் கூறியதாவது: தமிழகத்தில் உள்ள மின் நுகா்வோா் 24 மணி நேரமும் தங்களுடைய புகாா்களைத் தெரிவிப்பதற்கு ஏதுவாக மின்னகத்தை (94987 94987) முதல்வா் மு.க.ஸ்டாலின் ஜூன் 20–ஆம் தேதி தொடக்கி வைத்தாா். அன்று முதல் திங்கள்கிழமை வரை 3.53 லட்சம் புகாா்கள் வரப்பெற்றுள்ளன. இதில் 3.50 லட்சம் புகாா்களுக்கு தீா்வு காணப்பட்டுள்ளன. அதாவது, 99 சதவீதம் புகாா்களுக்கு தீா்வு காணப்பட்டுள்ளது. இதுதவிர இதுவரை 14.69 லட்சம் புகாா்கள் மின் கட்டணம் தொடா்பாக வரப்பெற்றுள்ளன. மின்னகத்துக்கு மட்டும் 44,767 புகாா்கள் வந்தன. இவை அனைத்துக்கும் தீா்வு காணப்பட்டுள்ளன.

4 மாதங்களுக்குள் 8,905 மின்மாற்றிகள்: கடந்த ஆட்சியில் மின் பராமரிப்புப் பணிகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்ற நிலையில், ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் எந்த இடத்தில் மின் அழுத்தம் அதிகம், குறைவு என்பதை அறிய 8,905 இடங்கள் கணக்கெடுக்கப்பட்டன. இதுவரை 2 ஆயிரம் மின்மாற்றிகள் பொருத்தப்பட்டுள்ளன. 4 மாத காலத்துக்குள் திட்டமிட்டபடி புதிய மின்மாற்றிகள் பொருத்தப்படும்.

பருவமழை – 1 லட்சம் மின்கம்பங்கள் தயாா்: இந்த பருவமழையைப் பொருத்தவரை, தடையற்ற மின் விநியோகம் வழங்க முதல்வா் அறிவுறுத்தியுள்ளாா். அவ்வாறு தடையில்லா மின்சாரம் வழங்குவதற்காக ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மின் கம்பங்கள் கையிருப்பில் உள்ளன. தேவையான உபகரணங்களும் கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளன. எந்த இடங்களில் இடா்பாடு வருகிறதோ அதை உடனடியாக நிவா்த்தி செய்யக்கூடிய அளவுக்கு அந்தந்த மாவட்டங்களில் ஆட்சியா்களுடன் சோ்ந்து மின்வாரிய அதிகாரிகள் ஒன்றிணைந்து பணி செய்ய உள்ளனா்.

தமிழகத்தில் மொத்தம் உள்ள 3 லட்சத்து 63,000 மின்மாற்றிகளில் ஏற்படும் பழுதை மின்வாரியம் அறியும் வண்ணம் டிடி மீட்டா் அமைக்கும் பணிகள், ரூ.1270 கோடி மதிப்பீட்டில் நடைபெற இருக்கின்றன. அனைத்து மின்இணைப்புதாரா்களுக்கும் அவா்களே அவா்களுடைய மின்அளவீட்டை பாா்த்துக் கொள்ளும் வகையில் ஸ்மாா்ட் மீட்டா் பொருத்தும் பணிகளும் டிடி மீட்டா் பொருத்தும் பணி நிறைவடைந்தவுடன் தொடங்கப்படும். விரைவில் மின்வாரியத்தில் காலிப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். கொருக்குப்பேட்டை சாலையில் 500 மீட்டருக்குள் 7 டாஸ்மாக் மதுபான கடைகள் அமைந்துள்ள விவகாரம் குறித்து அறிக்கைகள் வரப்பெற்றுள்ளன. புதன்கிழமை அறிக்கையின்படி கடைகள் அகற்றப்படும் என்றாா் அமைச்சா் வி.செந்தில் பாலாஜி.

---

**7. அமெரிக்க கடற்படையில் முதல் முறை:சீக்கிய அதிகாரிக்கு தலைப்பாகை அணிய அனுமதி**

அமெரிக்க கடற்படையில் பணியாற்றும் 26 வயது சீக்கிய அதிகாரிக்கு தலைப்பாகை அணிய சில கட்டுப்பாடுகளுடன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 246 ஆண்டு வரலாற்றைக் கொண்ட கடற்படையில் இந்த சிறப்பு அனுமதியைப் பெறும் முதல் நபா் இவா் ஆவாா். இது தொடா்பாக 'நியூயாா்க் டைம்ஸ்' வெளியிட்ட செய்தியில் கூறப்பட்டிருப்பது: அமெரிக்க கடற்படையில் பணிபுரியும் சீக்கியரான சுக்பீா் தூா் கடந்த ஐந்து ஆண்டுகளாக காலையில் சீருடை அணிவது வழக்கம். இந்நிலையில் சீக்கியா் என்ற முறையில் தலைப்பாகை அணியும் அனுமதி கிடைத்ததைத் தொடா்ந்து அவா் கடந்த வியாழக்கிழமை தலைப்பாகையும் அணிந்து கொண்டாா்.

அமெரிக்க கடற்படையின் 246 ஆண்டு வரலாற்றில் இதுவரை இதுபோன்ற சிறப்பு அனுமதிகள் அளிக்கப்பட்டதில்லை. எனினும், அண்மையில் கேப்டனாக பதவி உயா்வு அளிக்கப்பட்ட பின், தலைப்பாகை அணிய அனுமதி கிடையாது என்ற நிலையை எதிா்த்து மேல்முறையீடு செய்ய தூா் முடிவு செய்தாா். அவருக்கு ஜூன் மாதம் அளிக்கப்பட்ட பதிலில் அவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாகவே தெரிவிக்கப்பட்டது. அப்படையின் தளபதி அளித்த பதிலில் 'இவ்வாறு ஒரு தனிநபா் தனது மத அடையாளத்தை வெளிப்படுத்துவதை அனுமதிப்பது கடற்படையில் ஒழுக்கத்தையும் அா்ப்பணிப்பு உணா்வையும் சீா்குலைத்து விடும். படைகள் மீதான நாட்டின் நம்பிக்கையையும் அது சீரழித்து விடும். தாக்குதல் திறனையும் அது குறைத்து விடும்' என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும், சுக்பீா் தூா் தலைப்பாகை அணிவதற்கு கடந்த வியாழக்கிழமை சில கட்டுப்பாடுகளுடன் அனுமதி அளிக்கப்பட்டது. அதாவது வழக்கமான பணியிடங்களில் அவா் தலைப்பாகை அணியலாம். ஆனால் போா் நடக்கும் ஒரு பகுதியில் பணிபுரியும்போதோ, ராணுவ விழா

போன்றவற்றில் பங்கேற்கும்போதோ அவா் தலைப்பாகை அணியக் கூடாது. இந்த விவகாரம் தொடா்பாக சுக்பீா் தூா் கூறுகையில் 'தலைப்பாகை அணியும் உரிமையைப் பெற்றிருக்கும் விவகாரத்தில் நீண்ட தூரத்தைக் கடந்து வந்துள்ளோம். இன்னும் நிறைய தூரம் செல்லவேண்டியுள்ளது. கட்டுப்பாடுகளுடன் தலைப்பாகை அணிய அனுமதி அளித்திருப்பதை எதிா்த்து மேல்முறையீடு செய்துள்ளேன். முழுமையான அனுமதி கிடைக்காவிட்டால் கடற்படையை எதிா்த்து வழக்கு தொடா்வேன்' என்று தெரிவித்தாா். இதனிடையே, அமெரிக்க ராணுவம், விமானப்படையில் பணியாற்றும் சுமாா் 100 சீக்கியா்கள் முழுமையாக தாடி வைத்தும் தலைப்பாகை அணிந்தும் பணியாற்றுகின்றனா்.

---

### 8. புன்னைநல்லூர் மாரியம்மன் கோவிலில் தேங்காய் நீர் பிரசாதம் வழங்கும் திட்டம் துவக்கம்

இந்தியாவிலேயே முதன்முறையாக பிரசித்திபெற்ற புன்னைநல்லூர் மாரியம்மன் கோவிலில் பக்தர்களுக்கு தேங்காய் தண்ணீர் பிரசாதமாக வழங்கும் கருவியை மத்திய இணை அமைச்சர் பிரகலாத் சிங் படேல் தொடங்கி வைத்தார்.

தஞ்சாவூர் அருகே புன்னைநல்லூர் மாரியம்மன் கோவிலில் உடைக்கப்படும் தேங்காயிலிருந்து வெளியாகும் தண்ணீர் வீணாவதை தடுக்கும் விதமாக, இந்திய உணவு பதன தொழில்நுட்ப கழகம் சார்பில், வீணாகும் தேங்காய் தண்ணீரை பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கும் நவீன கருவி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதனை மத்திய உணவு பதப்படுத்துதல் மற்றும் தொழிற்சாலைகள் மற்றும் நீர்வளத்துறை துறை மத்திய இணை அமைச்சர் பிரகலாத் சிங் பட்டேல் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் இந்திய உணவு பயிர் பதன கழக இயக்குனர் அனந்த ராமகிருஷ்ணன், கலெக்டர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தான பரம்பரை அறங்காவலர் பாபாஜி ராஜா போன்ஸ்லே, இந்து சமய அறநிலையத் துறை உதவி கமிஷனர் கிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கோவிலில் நேர்த்திக்கடனாக உடைக்கப்படும் தேங்காயில் இருந்து வெளியேறும் தண்ணீரை சுத்திகரித்து பக்தர்களுக்கு வழங்கப்படும். இந்தியாவிலேயே முதல்முறையாக இந்தக் கருவி புன்னைநல்லூர் மாரியம்மன் கோவிலில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ஏழு லட்சம் ரூபாய். இதில், தேங்காய் தண்ணீரை சுத்திகரித்து, 50 லிட்டர் வரை நீரை சேமித்து வைத்து பக்தர்களுக்கு வழங்கப்படும் என இந்திய உணவு பதன கழகம் நிறுவனம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### 9. 'ஆகாஷ் பிரைம்' ஏவுகணை சோதனை வெற்றி

நிலத்திலிருந்து வான் இலக்கைத் தாக்கி அழிக்கும் 'ஆகாஷ் பிரைம்' ஏவுகணை சோதனை ஒடிசாவில் வெற்றி பெற்றது. ஒடிசாவின் சந்திப்பூரில் பரிசோதனைக்காக ஏவப்பட்ட ஏவுகணை வெற்றிகரமாக இலக்கைத் தாக்கி அழித்ததாக மத்திய பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. 'ஆகாஷ் பிரைம்' ஏவுகணை ஆளில்லா விமானங்களைத் தாக்கி அழிக்கும் திறன் கொண்டது. இந்த ஏவுகணையை மேம்படுத்தியபின், விமானத்தில் இருந்து பரிசோதிக்க மத்திய பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

---

**1. 2020ஆம் ஆண்டுக்கான தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருது பெற்ற பிரிக் S V சரஸ்வதியுடன் தொடர்புடையது எது?**



அ) அரசியல்வாதி

**ஆ) செவிலியர் ☑**

இ) காவல்

ஈ) அறிவியலாளர்

✓ இராணுவ செவிலியர் சேவைகளின் துணை இயக்குநர் ஜெனரல் – பிரிக் S V சரஸ்வதிக்கு தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருது – 2020 வழங்கப்பட்டுள்ளது. தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருது என்பது தன்னலமற்ற சேவைக்காக செவிலியர்களுக்கு வழங்கப்படும் ஒரு மிகவுயர்ந்த தேசிய விருதாகும்.

✓ படையினர் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு நர்சிங்கில் அவர் செய்த குறிப்பிடத்தக்க சேவைக்காக, அவருக்கு பொது அதிகாரி கமாண்டிங்–இன்–சீஃப் பாராட்டு (2005), ஐக்கிய நாடுகள் பதக்கம் (MONOC) (2007) மற்றும் இராணுவத் தலைவர் பாராட்டு (2015) ஆகியன வழங்கப்பட்டது.

---

**2. 2021ஆம் ஆண்டின் "Freedom on the Net" அறிக்கையில், முதல் இடத்தில் உள்ள நாடு எது?**

அ) நோர்வே

**ஆ) ஐஸ்லாந்து ☑**

இ) ஜெர்மனி

ஈ) பின்லாந்து

✓ ஆண்டுதோறும் வெளியிடப்படும் "இணையத்தில் சுதந்திரம்" அறிக்கை அமெரிக்க சிந்தனைக்குழுவான பிரீடம் ஹவுஸால் வெளியிடப்பட்டது. இவ்வாண்டுக்கான (2021) அறிக்கையின்படி, ஐஸ்லாந்து தரவரிசையில் முதலிடத்தைப்பிடித்தது.

✓ எஸ்டோனியா மற்றும் இணைய அணுகலை மனித உரிமையாக அறிவித்த உலகின் முதல் நாடான கோஸ்டாரிகா ஆகியவை இரண்டாம் இடத்தைப் பிடித்தன. மியான்மர் மற்றும் பெலாரஸில் நிகழ்ந்த இணைய முடக்கம், தொடர்ச்சியாக 11ஆவது ஆண்டாக ஆன்லைன் உரிமைகள் உலகளவில் குறைந்துவிட்டதைக் காட்டுகிறது.

---

**3. 'இந்தியாவில் நகர்ப்புற திட்டமிடல் திறனில் சீர்திருத்தங்கள்' என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) ப்ளூம்பெர்க் இந்தியா

**ஆ) NITI ஆயோக் ☑**

இ) உலக வங்கி

ஈ) யுனிசெஃப்

✓ இந்தியாவில் நகர்ப்புற திட்டமிடல் திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை NITI ஆயோக் சமீபத்தில் வெளியிட்டது. இந்த அறிக்கைக்கு, "இந்தியாவில் நகர்ப்புற திட்டமிடல் திறனில் சீர்திருத்தங்கள்" என்று பெயரிடப்பட்டது.

✓ இந்த அறிக்கை NITI ஆயோக், சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் மற்றும் நகர்ப்புற மற்றும் பிராந்திய திட்டமிடல் துறையில் நிபுணர்களுடன் கலந்தாலோசித்து உருவாக்கப்பட்டுள்ளது. இது 9 மாத காலப்பகுதியில் நடத்தப்பட்ட ஆலோசனைகளின் முடிவை அளிக்கிறது. இந்தியாவில், நகர்ப்புற திட்டமிடல் திறன் மதிப்புச் சங்கிலியில் உள்ள தடைகளைத் தீர்க்க இந்த அறிக்கை பல்வேறு பரிந்துரைகளைத் தருகிறது.

---

**4. உலக காண்டாமிருக நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**



**அ) செப்டம்பர் 22 ☑**

ஆ) செப்டம்பர் 23

இ) செப்டம்பர் 24

ஈ) செப்டம்பர் 25

✓ காண்டாமிருகம் அழிவின் விளிம்பிலுள்ள ஓர் உயிரினமாகும். அவற்றை காப்பதற்கான முயற்சிகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்ட, உலக காண்டாமிருக நாள், கடந்த 2010ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் செப்.22 அன்று கொண்டாடப்படுகிறது. இந்திய காண்டாமிருகம் என்றும் அழைக்கப்படும் ஒற்றைக்கொம்பு காண்டாமிருகத்தை IUCN அழிவாய்ப்பு நிலையிலுள்ள இனமாக பட்டியலிடுகிறது.

---

**5. சமீப செய்திகளில் இடம்பெற்ற 'நீலப்புரட்சி'யுடன் தொடர்புடைய தயாரிப்பு எது?**



**அ) நறுமணப் பயிர்கள் ☑**

ஆ) தோட்டக்கலை பயிர்கள்

இ) பால் பொருட்கள்

ஈ) கோழிப் பொருட்கள்

✓ மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சரான ஜிதேந்திர சிங், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்காக ஜம்மு – காஷ்மீருக்கான ஒருங்கிணைந்த நறுமணப்பால் தொழில்முனைவு திட்டத்தை முன்மொழிந்தார்.

✓ மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின்கீழ் CSIRமூலம் ஏற்கனவே தொடங்கப்பட்ட அரோமா இயக்கத்துடன் இவற்றைத்திறம்பட ஒருங்கிணைக்க முடியும் என்று பரிந்துரைத்தார். "லாவெண்டர் அல்லது நீலப்புரட்சி" என்று பிரபலமாக அழைக்கப்படுகிறது "அரோமா இயக்கம்" ஐரோப்பாவைச் சேர்ந்த பயிரை ஜம்மு – காஷ்மீரின் டோடா, கிஷ்ட்வார் மற்றும் ரஜோரி மாவட்டங்களில் CSIR–IIIM அறிமுகப்படுத்தியுள்ளன.

---

**6. மாற்றுத்திறனாளிகளுக்கு தேர்தல் தொடர்பான உரிமைகளை உறுதிசெய்வதற்கான சட்ட ஆணையை வழங்குகிற சட்டம் எது?**




அ) மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1951

**ஆ) மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016 ☑**

இ) தேர்தல் விதிகளின் நடத்தை, 1961

ஈ) தேர்தல் சட்டங்கள் (திருத்தம்) சட்டம், 2003

✓ மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016 ஆனது மாற்றுத்திறன் கொண்டவர்கள் அனைத்து வாக்குச்சாவடிகளையும் அணுகுவதை உறுதிசெய்வதற்கான சட்ட ஆணையை வழங்குகிறது. தேர்தல் செயல் முறை தொடர்பான அனைத்து தகவல்களும் எளிதில் புரிந்துகொள்ளக் கூடியவை மற்றும் பயன்படுத்தக்கூடியவையாகும்.

✓ இந்திய தேர்தல் ஆணையமானது சமீபத்தில் 'அணுகக்கூடிய தேர்தல்க –ள் 2021' பற்றிய ஒரு மெய்நிகர் தேசிய மாநாட்டை ஏற்பாடு செய்தது. நம்நாட்டில் சுமார் 77.4 லட்சம் மாற்றுத்திறனாளிகள் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களாக உள்ளனர்.

---

**7. எந்த நாட்டோடு இணைந்து, 'ரேபிட் டிரைடென்ட் – 2021' என்ற இராணுவப் பயிற்சியை NATO தொடங்கியுள்ளது?**



**அ) உக்ரைன் ☑**

ஆ) சூடான்

இ) நார்வே

ஈ) தான்சானியா

✓ 2021 செப்டம்பர் 20 அன்று உக்ரைன், அமெரிக்கா மற்றும் பிற நேட்டோ படைகளுடன் கூட்டு இராணுவப் பயிற்சிகளைத் தொடங்கியது. அதே வேளையில், அண்டை நாடுகளான ரஷ்யாவும் பெலாரஸும் மிகப்பெரிய அளவிலான பயிற்சிகளை நடத்தின, இது மேற்குலகின் விழிப்புணர்வை தூண்டும் விதமாக உள்ளது. இந்தப் பயிற்சி அக்டோபர்.1 வரை தொடரும்.

---

**8. ஜஸ்டின் ட்ரூடோ, 3ஆவது முறையாக எந்த நாட்டின் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார்?**



அ) ஆஸ்திரேலியா

ஆ) நியூசிலாந்து

இ) ஜெர்மனி

**ஈ) கனடா ☑**

✓ கனடாவின் லிபரல் கட்சித்தலைவரான ஜஸ்டின் ட்ரூடோ மூன்றாவது முறையாக அந்த நாட்டின் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 2015 முதல் ஆட்சியில் இருந்து வருகிறார். 6 ஆண்டுகளில் 3 தேர்தல்களில் அவர் வெற்றிபெற்றுள்ளார்.

---

**9. விரிவான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தம் (CEPA) குறித்து எந்த நாட்டுடன் இந்தியா முறையாக பேச்சுவார்த்தை நடத்தியது?**



அ) அமெரிக்கா

ஆ) சீனா

இ) பிரேசில்

**ஈ) UAE ☑**

- ✓ ஐக்கிய அரபு அமீரகமானது (UAE) 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் இந்தியாவின் 3ஆவது பெரிய வர்த்தக பங்காளியாக உள்ளது. வர்த்தக மதிப்பு தற்போது $59 பில்லியன் டாலர்களாக உள்ளது.
- ✓ UAE, அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக இந்தியாவின் 2ஆவது பெரிய ஏற்றுமதி இடமாக உள்ளது. சமீபத்தில், இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் (UAE) ஆகியவை ஒரு விரிவான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தையை முறையாக தொடங்கின.

---

**10.பின்வரும் எந்த நோக்கத்தை அடைய "முதலீட்டாளர்கள் மற்றும் வணிகங்களுக்கான தேசிய ஒற்றைச்சாளர அமைப்பு" தொடங்கப்பட்டுள்ளது?**

**அ) ஒப்புதல் மற்றும் அனுமதிக்கான ஒற்றைச்சாளரம் ☑**




ஆ) வரி தள்ளுபடி கோருதல்

இ) GST தரவு உள்ளீடு

ஈ) குறைதீர்ப்பு

- ✓ இந்திய அரசு சமீபத்தில் "முதலீட்டாளர்கள் மற்றும் வணிகங்களுக்கான தேசிய ஒற்றைச் சாளர அமைப்பை" அறிமுகப்படுத்தியுள்ளது.
- ✓ முதலீட்டாளர்களுக்கான ஒப்புதல்கள் மற்றும் அனுமதிகளை வழங்கும் ஒரே இடமாக தேசிய ஒற்றைச் சாளர அமைப்பு திகழும். 18 மத்திய துறைகள் மற்றும் 9 மாநிலங்களுக்கான ஒப்புதல்களை இந்தத் தளம் தற்போது வழங்கிவரும் நிலையில், இன்னுமொரு 14 மத்திய துறைகள் மற்றும் 5 மாநிலங்கள் 2021 டிசம்பருக்குள் இணைக்கப்படும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. காவிரி மேலாண்மை ஆணையத்தின் தலைவராக எஸ்.கே. ஹல்தர் நியமனம்:**

காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தின் முழு நேர தலைவராக, மத்திய நீர்வள ஆணையத்தின் தலைவராக உள்ள எஸ்.கே. ஹல்தர் நியமிக்கப்பட்டுள்ளார். கர்நாடகா, தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி ஆகிய 4 மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்காக காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையம் அமைக்குமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து மத்திய அரசு கடந்த 2018 ஜூன்.1 அன்று காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.

மத்திய நீர்வள ஆணையத்தின் தலைவரே இந்த ஆணையத்தின் தற்காலிக ஆணையராக செயல்பட்டு வந்தார். இதனால் கடந்த 2018ஆம் ஆண்டு டிசம்பரில் தமிழக அரசு காவிரி மேலாண்மை ஆணையத்துக்கு முழு நேர தலைவரை நியமிக்குமாறு உச்சநீதிமன்றத்தில் முறையிட்டது.

மத்திய நீர்வள ஆணையத்தின் தலைவரான எஸ் கே ஹல்தர் கடந்த ஜனவரியில் காவிரி நதி நீர் மேலாண்மை ஆணையத்தின் இடைக்கால தலைவராக நியமனம் செய்யப்பட்டார். இவரது பதவிக்காலம் வரும் 30 ஆம் தேதியுடன் நிறைவடைவதால் காவிரி மேலாண் ஆணையத்துக்கு முழு நேரத் தலைவரை நியமிப்பது தொடர்பாக மத்திய அரசு பரிசீலித்து வந்தது. இந்நிலையில் நேற்று மத்திய பணியாளர் மற்றும் ஓய்வூதிய அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், "காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தின் முழு நேர தலைவராக சவுமித்ரா குமார் ஹல்தர் நியமிக்கப்படுகிறார். 5 ஆண்டுகளுக்கு அல்லது அடுத்த உத்தரவு வரும் வரை இவர் தலைவராக செயல்படுவார்.

இவர்வரும் நவ.30 பணியில் இருந்து ஓய்வுபெற்றாலும், ஆணையத்தின் தலைவராக நீடிப்பார்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**2. பூச்சித் தொல்லை, பருவநிலை மாற்றத்தை தாங்கி வளரும் – நெல், கோதுமை, தானியம் உட்பட 35 புதிய பயிர் வகைகள் அறிமுகம் : பிரதமர் நரேந்திர மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார்**

பூச்சித் தொல்லை, பருவநிலை மாற்றத்தை தாங்கி வளரும், ஊட் டச்சத்து நிறைந்த நெல், கோதுமை, சிறுதானியங்கள் உள்ளிட்ட 35 புதிய பயிர் வகைகளை பிரதமர் நரேந்திர மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார். பூச்சித் தொல்லை, பருவ நிலையை தாங்கி வளரும், ஊட்டச் சத்து நிறைந்த 35 புதிய பயிர் வகைகளை இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் (ஐசிஏஆர்) உருவாக்கியுள்ளது. நெல், கோதுமை, சோயாபீன், சோளம் உள்ளிட்ட இந்த பயிர் வகைகளின் அறிமுக விழா காணொலி வாயி லாக நேற்று நடைபெற்றது. இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று புதிய பயிர்களை நாட்டுக்கு அர்ப்பணித்தார். அப்போது அவர் பேசியதாவது:

பருவநிலை மாற்றம், புதிய வகை பூச்சிகள், புதிய நோய்கள், தொற்று நோய்கள் பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்து வருகின்றன. இதன் காரணமாக மனிதர்கள், கால்நடைகள், பயிர்கள் பாதிக்கப்படுகின்றன. இந்த சவால்களை எதிர்கொள்ள அறிவியல் ஆராய்ச்சி அவசியமாகிறது.

அறிவியல், அரசு, சமூகம் இணைந்து செயல்பட்டால் மட்டுமே இத்தகைய சவால்களை சமாளிக்க முடியும். நாடு முழுவதும் பூச்சிகளால் பயிர் சாகுபடி கடுமையாக பாதிக்கப் படுகிறது. பல்வேறு மாநிலங்களில் வெட்டுக்கிளி தீராத பிரச்சினையாக நீடிக்கிறது. இதன்காரணமாக விவ சாயிகள் பேரிழப்பை சந்திக்கின்றனர். இதை தடுக்க விவசாயிகளும் விஞ்ஞானிக –ளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

கடந்த 7 ஆண்டுகளாக வேளாண் துறையில் நவீன தொழில்நுட்பங் கள் புகுத்தப்பட்டு வருகின்றன. அதேநேரம் நமது பழங்கால வேளாண் மரபுகளும் கண்டிப்புடன் பின்பற்றப்படுகின்றன.

அந்த வகையில் பூச்சிகளை எதிர்த்து, பருவநிலை மாற்றங் களை தாங்கி வளரும் 35 புதிய பயிர் வகைகள் அறிமுகம் செய்யப் பட்டுள்ளன. இவை விவசாயி களுக்கு அதிக மகசூலை அளிக்கும். அதிக ஊட்டச்சத்து நிறைந்த உணவு தானியங்களாகவும் இருக்கும். வேளாண்மையில் புதுமைகளை கடைபிடிக்க விவசாயிகள் தயங்கக்கூடாது.

தேவைக்கு ஏற்ற பயிர் வகைகளை விளைவித்து, அவற்றை மதிப்பு கூட்டி விற்பனை செய்ய வேண்டும். பல ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டிருந்த 100 பாசன திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளோம்.

இதுவரை 11 கோடி மண் வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 2 கோடி கிசான் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள் ளன. குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப்பட்டுள்ளது. வானிலை நிலவரம் குறித்து விவசாயி களுக்கு முன்கூட்டியே தகவல் தெரிவிக்கப்படுகிறது. விவசாயி களுக்கு வங்கிக் கடன் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

புதிய நெல் வகைகள் காணொலி நிகழ்ச்சியின்போது, ராய்பூரில் உள்ள தேசிய உயிர் வாழ்வு நெருக்கடி மேலாண்மை நிறுவனத்தில் புதிதாக கட்டப் பட்ட வளாகத்தை பிரதமர் திறந்து வைத்தார். வேளாண் பல்கலைக்கழகங்களுக்கான பசுமை வளாக விருதையும் அவர் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மத்திய வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர் பேசும்போது, "விவசாயிகள் சொந்த காலில் நிற்க வேண்டும் என்பதற்காக பி எம் கிசான் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது" என்றார். இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் இயக்குநர் ஏ கே சிங் பேசும்போது, "இந்த நெல் வகைகளுக்கு குறைந்த அளவு தண்ணீர் போதுமானது. ஊட்டச்சத்து நிறைந்த அதிக மகசூல் கிடைக்கும்" என்றார்.

---

**3. ஈரோடு தமிழன்பன் உள்ளிட்ட 10 அறிஞர்களுக்கு – 'கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகள்' அறிவிப்பு :**

ஈரோடு தமிழன்பன் உள்ளிட்ட 10 தமிழ் அறிஞர்களுக்கு 'கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகள்' அறிவிக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பாக தமிழ் வளர்ச்சித் துறை வெளியிட்ட அறிவிப்பு: மத்திய செம்மொழித் தமிழாய்வுநிறுவனத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதி, தனது சொந்த நிதியிலிருந்து ரூ. ஒரு கோடி வழங்கி,'கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழாய்வு அறக்கட் டளை' யை நிறுவினார்.

ரூ.10 லட்சம் பரிசுத் தொகை அதன்படி, தொல்லியல், கல்வெட்டியல், நாணயவியல், இலக்கியம், மொழியியல், படைப்பிலக்கியம், இலக்கியத் திறனாய்வு, மொழிபெயர்ப்பு, நுண்கலைகள் உள்ளிட்டவையில் சிறந்த பங்களிப்பை வழங்கிய அறிஞர்களுக்கு ஆண்டுதோறும் 'கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது' வழங்கப்படுகிறது. அதனுடன், இந்தியாவிலேயே அதிக தொகையாக ரூ.10 லட்சம் பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும், கருணாநிதியின் உருவச்சிலையும் வழங்கப்படும். முதல்முறையாக, பின்லாந்து நாட்டு அறிஞர் பேராசிரியர் அஸ்கோ பர்ப்போலா–வுக்கு 2010–ம் ஆண்டு ஜூன் 23–ம் தேதி கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் வழங்கப்பட்டது

இந்நிலையில், 'கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது' 2010முதல் 2019–ம் ஆண்டு வரை 10 ஆண்டுகளுக்கு வழங்கப்படாமல் இருந்தது. இதைத் தொடர்ந்து, முதல்வர் மு.க.ஸ்டாலினால் அமைக்கப்பட்ட விருது தேர்வுக் குழுவினரால் 10 ஆண்டுகளுக்கும் சேர்த்து 10 அறிஞர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் 2020, 2021, 2022–ம்ஆண்டுகளுக்கான 'கருணாநிதிசெம்மொழித் தமிழ் விருது' களுக்கான முன்மொழிவுகளைப் பெறவிளம்பரம் வெளியிட ஆட்சிக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 10 ஆண்டுகளுக்குரிய விருது,மாநில அளவிலான தமிழ்மொழி சார்ந்த விழாவில் விரைவில் வழங்கப்படவுள்ளது. மேலும் 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளுக்கான விருதுகள் வழங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

---

**4. காஞ்சிபுரம் மாவட்டம் – ஒரகடத்தில் ரூ.450 கோடியில் : மருத்துவ சாதனங்கள் உற்பத்தி பூங்கா : முதல்வர் மு.க.ஸ்டாலின் தகவல்**

காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடத்தில் ரூ.450 கோடியில் மருத்துவ சாதனங்கள் உற்பத்திப் பூங்கா அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் தொழிற்பூங்காக்களும், குறிப்பிட்ட தொழில்களுக்கான சிறப்புப் பூங்காக்களும் சிப்காட் நிறுவ னம் மூலம் அமைக்கப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில், இந்த நிதியாண்டுக்கான தமிழக நிதிநிலை அறிக்கையில், காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடத்தில் சிப்காட் நிறுவனம் மூலம் மருத்துவ சாதனங்கள் உற்பத்திப் பூங்கா அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்தப் பூங்காவில், உட்கட்ட மைப்பு வசதிகள் ஏற்படுத்த நிதியுதவி வேண்டி, மத்திய அரசின் மருந்தியல் துறைக்கு தமிழக அரசு சார்பில் கருத்துரு அனுப்பப்பட்டது. தமிழக அரசின் இந்தக் கோரிக்கையை ஏற்று, தற்போது தேசிய அளவில் நான்கு மருத்துவ சாதனங்கள் உற்பத்திப் பூங்காக்களை அமைக்க, மத்திய அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

மத்திய அரசு நிதியுதவி

இமாச்சலப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசத்தை தொடர்ந்து, தமிழகத்தில் காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடத்தில் மருத்துவ சாதனங்கள் உற்பத்திப் பூங்கா அமையும். இங்கு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற் படுத்த, அதிகபட்சமாக ரூ.100 கோடி நிதியுதவியை மத்திய அரசு வழங்கும்.

ஒரகடம் சிப்காட் தொழிற் பூங்காவில் 350 ஏக்கர் பரப்பில், சுமார் ரூ.450 கோடி திட்ட மதிப்பில், அடிப்படைக் கட்டமைப்புகள், ஆய்வுக் கூடங்கள், முன்னோடி மாதிரி மையம், திறன் மேம்பாட்டு மையம் முதலியவற்றை உள்ளடக்கி, ஒரே குடையின்கீழ் பல்வேறு வசதிகள் கொண்ட பூங்காவாக இது அமையும். மருத்துவத் துறையின் தேவைகளை நிறைவேற்றும் வகையில், வெண்டிலேட்டர்கள், பி.பி. திரைகள் , பேஸ்மேக்கர்கள், அறுவைசிகிச்சை உபகரணங்கள், கண் மற்றும் பல் உள்வைப்புகள் உள்ளிட்டவற்றைத் தயாரிக்கும் தொழில்களை ஊக்குவிக்கும் வகையில் இந்தப் பூங்கா அமையும்.

10 ஆயிரம் பேருக்கு வேலை இது ரூ.3,500 கோடி முதலீடுகளை ஈர்ப்பதுடன், 10,000 பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை வழங்கும். மருத்துவ சாதனங்கள் உற்பத்திக்கென பிரத்தியேகமாக அமைக்கப்படும் இந்தப் பூங்கா, சர்வதேச தரத்தில், அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் சிப்காட் நிறுவனத்தால் உருவாக்கப்படும். மேலும், மருத்துவ சாதனங்கள் உற்பத்தியிலும் உலக அளவில் முக்கியமான உற்பத்தி மையமாக இது உருவாகும். இவ்வாறு முதல்வர் தெரிவித் துள்ளார்.

---

**5. சென்னை எழும்பூரில் தமிழ்நாடு காவல் அருங்காட்சியகம் : முதல்வர் ஸ்டாலின் திறந்துவைத்து பார்வையிட்டார்**

சென்னை எழும்பூரில் தமிழ்நாடு காவல் அருங்காட்சியகத்தை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்து பார்வையிட்டார். சென்னை எழும்பூரில் உள்ளபாரம்பரியம் மிக்க பழைய காவல்ஆணையரக அலுவலகம், தமிழ்நாடு காவல் அருங்காட்சியகமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. 24 ஆயிரம் சதுரஅடி பரப்பளவில் 2 தளங்களாக உள்ள இக்கட்டிடத்தின் தரைதளத்தில் காவல் துறையில் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள், சீருடைகள், வாத்திய இசைக் கருவிகள், காவல் துறையின் சாதனைகள், மீட்டெடுக்கப்பட்ட சிலைகள், கள்ளநோட்டு அச்சடிக்கும் இயந்திரம், வெடிகுண்டுகள், குண்டுகளை கண்டெடுக்க உதவும் கருவிகள்,மாதிரி சிறைச்சாலை ஆகியவையும், முதல் தளத்தில் பல்வேறு வகையான துப்பாக்கிகள், வாள்மற்றும் தோட்டாக்களும் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

மேலும், காவல் துறையில் சிறப்பாக பணி செய்தவர்களுக்கு வழங்கப்படும் பதக்கங்கள், முக்கிய வரலாற்று ஆவணங்கள், காவல் துறை தொடர்பாக அக்காலத்தில் இயற்றப்பட்ட அதிமுக்கிய அறிவிப்புகள், ஆங்கிலேயர் காலத்து காவல்துறையினர் பயன்படுத்திய ஆயுதங்கள், தமிழக காவல் துறையின் தொடக்க கால சீருடைகள், பெல்ட்,மோப்ப நாய் படைகளின் புகைப்படங்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க செய்தித் தொகுப்புகள், காவல் ஆணையர் அலுவலக அறையில் இருந்த பழமையான பொருட்கள், அணிவகுப்பு சின்னங்கள், கம்பியில்லா தொலைதொடர்பு கருவிகள், காவல் துறை சேவை பதக்கங்கள், கலைப்பொருட்கள் ஆகியவையும் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

இந்த காவல் அருங்காட்சியகத்தை முதல்வர் ஸ்டாலின் நேற்று திறந்து வைத்து பார்வையிட்டார். அருங்காட்சியகத்தை பார்வையிட வந்த பள்ளி மாணவ, மாணவிகளிடம் முதல்வர் கலந்துரையாடி, இனிப்புகளை வழங்கினார். பொதுமக்கள் நாளை (செப்.30)வரை கட்டணமின்றி அருங்காட்சியகத்தைப் பார்வையிடலாம். அக்.1–ம் தேதி முதல் குறைந்த அளவில் நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படும். இந்த நிகழ்ச்சியில், அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு, உள்துறை செயலர் எஸ்.கே.பிரபாகர், டிஜிபி சைலேந்திர பாபு, சென்னை பெருநகர காவல் ஆணையர் சங்கர் ஜிவால்,தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் ஏ.கே.விஸ்வநாதன், தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியக இயக்குநர் அ.அமல்ராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

**6. மூத்த குடிமக்களுக்கான நாட்டின் முதல் இலவச உதவி எண் : 14567**

மூத்த குடிமக்களுக்கான நாட்டின் முதல் இலவச உதவி எண் : 14567 வெளியிடப்பட்டுள்ளது. இது மூத்த குடிமக்களுக்குத் தேவையான தகவல்களையும், வழிகாட்டுதல்களையும் இலவசமாக வழங்குகிறது. 2050ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் 20 சதவீதம் பேர் அதாவது 300 மில்லியனுக்கும் மேற்பட்டோர் மூத்த குடிமக்களாக இருப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளுக்கான தேவை அதிகரிப்பதைக் கருத்தில் கொண்டு, அவர்கள் சந்திக்கும் பிரச்னைகளையும், சவால்களையும் நிவர்த்தி செய்வதற்கு நாடு முழுவதுமான இலவச உதவி மைய எண் – 14567ஐ வெளியிட்டுள்ளது. இது முதியோர் உதவி எண் என அழைக்கப்படுகிறது. ஓய்வூதிய விஷயங்கள், சட்ட விஷயங்கள், உணர்வுபூர்வமான ஆதரவு போன்ற தகவல்களும், வழிகாட்டுதல்களும் இந்த உதவி எண் மூலம் இலவசமாக வழங்கப்படுகின்றன. துஷ்பிரயோக பிரச்சினைகள் இருந்தாலும், இந்த உதவி மையம் தலையிடுகிறது. வீடுகள் இன்றி தவிக்கும் முதியோரையும் இந்த உதவி மையம் மீட்கிறது.

அனைத்து குடிமக்களுக்கும் தேவையான தகவல்களையும், அன்றாட பிரச்னைகளுக்கான வழிகாட்டுதல்களையும் வழங்குவதே இந்த முதியோர் உதவி எண்ணின் நோக்கமாகும். .டாடா அறக்கட்டளை அமைப்பின் முயற்சியில், விஜயவாஹினி அறக்கட்டளையுடன் இணைந்து தெலங்கானா அரசு ஒத்துழைப்புடன் ஐதராபாத்தில் உள்ள முதியோர்களுக்கு உதவ கடந்த 2017ஆம் ஆண்டு இந்த முதியோர் உதவி மைய எண் தொடங்கப்பட்டது. இன்று, இந்த முதியோர் உதவி எண்ணை நாடு முழுவதும் செயல்படுத்த டாடா அறக்கட்டளையும், என்எஸ்இ அறக்கட்டளையும் மத்திய அரசுடன் தொழில்நுட்பப் பங்குதாரராக இணைந்துள்ளது.

---

**7. லட்சுமி தேவி உருவம் பொறித்ததங்கக் கட்டிகளை வெளியிடுகிறது பிரிட்டன்**

ஹிந்து கடவுளான லட்சுமி தேவி உருவம் பொறித்த தங்கக் கட்டிகளை பிரிட்டன் ராயல் நாணய வாா்ப்பகம் வெளியிட இருக்கிறது. தீபாவளிப் பண்டிகையின்போது இந்த தங்கக் கட்டிகள் விற்பனைக்கு வரவுள்ளன. ராயல் நாணய வாா்ப்பகம் பிரிட்டன் அரசு நிறுவனமாகும். அறுபதுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு தங்கக் கட்டிகளை ஏற்றுமதி செய்யும் இந்த நிறுவனம் 1,100 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்படும் பாரம்பரியத்தைக் கொண்டது. பிரிட்டன் அரசு நாணய வாா்ப்பகம் ஹிந்து கடவுள் உருவம் பொறித்த தங்கக் கட்டிகள் வெளியிடுவது இதுவே முதல்முறையாகும். பிரிட்டன் காா்டிஃப் நகரில் உள்ள ஸ்வாமி நாரயண் கோயிலுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு இந்த பிரத்யேக தங்கக் கட்டிகளை பிரிட்டன் ராயல் நாணய வாா்ப்பகம் வெளியிட இருக்கிறது.

இதனை பிரிட்டன் ராயல் மிண்ட் வடிவமைப்பாளா் எம்மா நோபிள் வடிவமைத்துள்ளாா். லட்சுமி உருவம் பொறித்த ஒவ்வொரு தங்கக்கட்டியும் 20 கிராம் எடை கொண்டவை. இதன் விலை உள்ளூரில் ஒரு தங்கக் கட்டிக்கு 1,080 பவுண்ட் (சுமாா் ரூ.1.08 லட்சம்) நிா்ணயம் செய்யப்பட்டுள்ளது. பல தரப்பட்ட நாடுகளின் கலாசாரத்தை கௌரவிக்கும் வகையிலும், கலாசார ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் வகையில் இந்த தங்கக் கட்டிகளை வெளியிடுவதாக பிரிட்டன் ராயல் நாணய வாா்ப்பகம் தெரிவித்துள்ளது.

இது தொடா்பாக அந்த வாா்ப்பகத்தின் நாணயங்கள் பிரிவு இயக்குநா் ஆண்ட்ரூ டிக்கி கூறுகையில், 'தீபாவளிப் பண்டிகையின்போது தங்கத்தைப் பரிசளிப்பது பாரம்பரியமாகவும், உயா்ந்ததாகவும் கருதப்படுகிறது. இந்த ஆண்டு அழகு மற்றும் பாரம்பரியத்துடன் தங்கக் கட்டியை வெளியிடத் தீா்மானித்தோம். அதில் ஹிந்துக்களின் செல்வக் கடவுள் இடம் பெறுவதும் சரியான தோ்வாக இருக்கும் என முடிவு செய்தோம். இதனை எங்கள் வலைதளம் வழியாக வாங்க முடியும். இந்த நாணயம் 'ஓம்' என்ற பிரணவச் சொல் பொறித்து வடிவமைக்கப்பட்ட பிரத்யேகப் பெட்டியில் வைத்து வழங்கப்படும்' என்றாா்.

---

**8. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துக்கு 3 தேசிய விருதுகள்**

தேசிய உயா்கல்வித் திட்டத்தின் கீழ் இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் நடத்திய போட்டிகளில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துக்கு பசுமை மற்றும் தூய்மையான வளாகம் உள்பட 3 தேசிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய அளவில் தோட்டக்கலை, வனவியல் மற்றும் மத்திய, மாநில வேளாண் பல்கலைக்கழகங்களுக்கு தேசிய உயா்கல்வித் திட்டத்தின் கீழ் பசுமை மற்றும் தூய்மை வளாக போட்டி இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் சாா்பில் 2020 அக்டோபரில் நடத்தப்பட்டது. இதில் வீணாக தூக்கி எரியப்படும் பொருள்களை மறுசுழற்சி செய்து கையாளுதல், தினசரி மின் தேவைகளுக்கு புதுப்பிக்கல்ல ஆற்றல் மூலங்களை பயன்படுத்துதல், சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருள்களை வாங்குதல் ஆகியவற்றில் பல்கலைக்கழகங்களின் ஈடுபாடு ஆகியவை மதிப்பீடு செய்யப்பட்டது.

மேலும் பல்கலைக்கழக வளாகத்திலுள்ள தோட்டத்தின் பரப்பளவு, கழிவு மேலாண்மை, நீா்ப் பாதுகாப்பு, ஆற்றல் சேமிப்பு நடைமுறைகள், பாடங்கள், திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சுற்றுச்சூழல் அக்கறை குறித்த பட்டறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் கல்வி நிறுவனங்கள் விருதுக்குத் தோ்வு செய்யப்பட்டுள்ளன. இதில் மாநில மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான போட்டியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் பங்கேற்று 2ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

இதற்கு ரொக்கப் பரிசாக ரூ.8 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. தவிர தேசிய அளவில் நடைபெற்ற வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் முதுகலை படிப்பிற்கான ஊக்கத்தொகைக்கான போட்டித் தோ்வில் தேசிய அளவில் தோட்டக்கலை வனவியல் பிரிவு, வேளாண் பொறியியல் துறையில் அதிக மாணவா்கள் தோ்ச்சி பெற்று இரண்டு துறை மாணவா்களும் 2ஆவது இடத்தைப் பிடித்துள்ளனா். 20க்கும் மேற்பட்ட மாணவா்கள் தோ்ச்சிப் பெற்று சாதனைப் படைத்துள்ளனா்.

இந்நிலையில், புதுதில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் மற்றும் மாநில வேளாண் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தா் கூட்டத்தில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்துக்கான தேசிய விருதுகளை துணைவேந்தா் நீ.குமாரிடம், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத் தலைவா் திரிலோச்சன் மொஹபத்ரா வழங்கினாா். முன்னதாக பசுமை மற்றும் தூய்மையான வளாக விருதுக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தோ்வு செய்யப்பட்ட விவரத்தை பிரதமா் நரேந்திர மோடி அறிவித்தா் என்று பல்கலைக்கழக நிா்வாகம் சாா்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**9. இயற்கை சீற்றங்களின்போது உதவ 350 மாவட்டங்களில் பேரிடர் நண்பர் குழு: அமித்ஷா அறிவிப்பு**

இயற்கை பேரிடர்களின்போது உடனடியாக சென்று முதல் கட்ட மீட்பு பணிகளில் ஈடுபடுவதற்காக, நாடு முழுவதும் 350 மாவட்டங்களில் 'பேரிடர் நண்பர்கள் குழு' வை ஒன்றிய அரசு ஏற்படுத்த உள்ளது. டெல்லியில் நேற்று நடைபெற்ற தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் 17வது தொடக்க விழாவில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசியதாவது: நாட்டில் எந்த இடத்தில் இயற்கை பேரிடர்கள் ஏற்பட்டாலும், முதல் ஆளாக சென்று பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்காகவும், உதவிகள் செய்வதற்காகவும் நாடு முழுவதும் 350 மாவட்டங்களில், 'பேரிடர் நண்பர்கள் குழு' அமைக்கப்படும். இவர்களுக்கு 'ஆப்த மித்ரா' திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்படும். கொரோனாவை எதிர்த்து மற்ற நாடுகளை விட, 130 கோடி மக்கள்தொகையை கொண்ட இந்தியா சிறந்த முறையில் போராடியது.

பெருந்தொற்று காலத்தில் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் பணி பாராட்டுக்குரியது. கொரோனா காலத்தில் சில பகுதிகளில் புயல் பாதிப்பு ஏற்பட்டது. அந்த நேரத்தில் சிறந்த திட்டமிடுதல் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் ஒரு ஆக்சிஜன் உற்பத்தி ஆலை கூட சேதமாகவில்லை. அதே போன்று மருத்துவமனையில் மின் தடையும் ஏற்படவில்லை. 'ஆப்த மித்ரா' திட்டத்தை சோதனை முயற்சியாக 25 மாநிலங்களில் உள்ள 30 மாவட்டங்களில் வெற்றிகரமாக நிறைவேற்றி உள்ளோம். இதனால், இந்த திட்டம் மேலும் விரிவுப்படுத்தப்படுகிறது. இயற்கை பேரிடர்களின் போது மக்களை உடனடியாக காப்பாற்றுவது தொடர்பாக அந்தந்த பகுதிகளை சேர்ந்த மக்களுக்கே இத்திட்டத்தில் பயிற்சி அளிக்கப்படும். பேரிடர் காலங்களில் ஒருவர் கூட உயிரிழக்க கூடாது என்பதே ஒன்றிய அரசின் இலக்கு. இவ்வாறு அவர் கூறினார்.

---

**1. எந்த அபாயகரமான இரசாயனத்தை சேமிப்பதற்கான விதிகளை இந்தியா சமீபத்தில் தளர்த்தியது?**

அ) சோடியம் குளோரைடு



ஆ) நைட்ரிக் அமிலம்

இ) கந்தக அமிலம்

**ஈ) அம்மோனியம் நைட்ரேட் & கால்சியம் கார்பைடு ☑**

✓ மேம்பட்ட பாதுகாப்பிற்காக, அம்மோனியம் நைட்ரேட் மற்றும் கால்சியம் கார்பைடு சேமிப்பு மற்றும் கையாளுதல் தொடர்பான விதிகளை இந்திய அரசின் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை (DPIIT) திருத்தியுள்ளது மற்றும் தளர்த்தியுள்ளது. துறைமுகத்தில் 3,000 டன் அம்மோனியம் நைட்ரேட்டை ஆறு ஆண்டுகள் சேமித்து வைத்ததன் காரணமாக ஏற்பட்ட கொடிய பெய்ரூட் (லெபனானின் தலைநகரம்) வெடி விபத்தின் பின்னணியில் இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

---

**2. 2025-26ஆம் நிதியாண்டு வரை நிலையான நிதியுதவி தரும் விதமாக, இந்தியாவில், ₹30,000 கோடி கடன் வழங்க முடிவுசெய்து உள்ள வங்கி எது?**

அ) பாரத ஸ்டேட் வங்கி

**ஆ) ஆக்சிஸ் வங்கி ☑**

இ) ஐசிஐசிஐ வங்கி

ஈ) யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா


✓ இந்தியாவின் முன்னணி தனியார் துறை வங்கியான ஆக்சிஸ் வங்கி, நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கு ஏற்ப, 2025-26ஆம் நிதியாண்டு வரை நிலையான நிதியுதவி வழங்கும் விதமாக ₹30,000 கோடி கடன் வழங்க ஆக்ஸிஸ் வங்கி முடிவுசெய்துள்ளது.

✓ இந்த உறுதிப்பாடு, 2030ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைய உதவுவதை நோக்கமாகக்கொண்டு உள்ளது. நேர்மறையான சமூக மற்றும் சுற்றுச்சூழல் தாக்கத்தை ஏற்படுத்தும் நிலையான சமூக மேம்பாட்டுத் திட்டங்களுக்கு மொத்தக் கடன் வழங்கவும் ஆக்ஸிஸ் வங்கி திட்டமிட்டுள்ளது.

---

**3. 'உலக அல்சைமர் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ) செப்டம்பர் 20




**ஆ) செப்டம்பர் 21 ☑**

இ) செப்டம்பர் 22

ஈ) செப்டம்பர் 23

✓ ஆண்டுதோறும் செப்.21 அன்று உலக அல்சைமர் தினமாக கடைபிடிக்க -ப்படுகிறது. இந்த நாள் அல்சைமர் நோய், அதன் காரணங்கள், அறிகுறிகள் மற்றும் அதை கையாளும் முறைகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அல்சைமர் நோய் என்பது மூளையின் நினைவாற்றல் மற்றும் அறிவாற்றல் திறன்களை குறைக்கின்ற ஒரு நோயாகும். முதியோர்களில் பொதுவாக காணப்படும் ஞாபக மறதி நோய்க்கு இது காரணமாகும்.

---

**4. சமீப செய்திகளில் இடம்பெற்ற NDEAR மற்றும் NETF என்பது எந்த மத்திய அமைச்சகத்துடன் தொடர்புடைய முன்னெடுப்புகளாகும்?**

அ) மின்துறை அமைச்சகம்

**ஆ) கல்வி அமைச்சகம் ☑**

இ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஈ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

✓ "டிஜிட்டல் கல்விமூலம் தரமான கல்வியை அனைத்து இடங்களிலும் கிடைக்கச் செய்வது" குறித்த கூட்டத்தை மத்திய கல்வியமைச்சர் தர்மேந்திர பிரதான் நடத்தினார். ஒருங்கிணைந்த டிஜிட்டல் சூழலியலை உருவாக்க செயற்கைக்கோள் தொழில்நுட்பம் மற்றும் இணையத்தை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.

✓ ஸ்வயம் பிரபா போன்ற முன்முயற்சிகளை வலுப்படுத்தவும், தேசிய டிஜிட்டல் கல்வி கட்டமைப்பு மற்றும் தேசிய கல்வி தொழில்நுட்ப மன்றம் உள்ளிட்டவற்றை ஒருங்கிணைக்கவும் அவர் வலியுறுத்தினார். அவை 2020 தேசிய கல்வி கொள்கையில் அறிவிக்கப்பட்டது.

**5. G24 அரசாங்கங்களுக்கு இடையேயான சங்கத்தின் தலைமை நிலையம் அமைந்துள்ள இடம் எது?**

**அ) வாஷிங்டன் டிசி ☑**

ஆ) ஜெனீவா

இ) பாரிஸ்

ஈ) ரோம்

✓ சர்வதேச செலவாணி விவகாரங்கள் மற்றும் மேம்பாடு குறித்த 24 அரசாங்கங்களுக்கிடையிலான குழுவானது கடந்த 1971'இல் பெருவின் லிமாவில் நிறுவப்பட்டது. இது வாஷிங்டன் டிசியை தலைமையிடமாகக் கொண்டுள்ளது. G77'இன் ஓர் அத்தியாயமான இது வளரும் நாடுகளை செலவாணி மற்றும் மேம்பாட்டு நிதி சிக்கல்களில் ஒருங்கிணைக்கிறது.

✓ இந்தியா, மற்ற 24 (G24) உறுப்பு நாடுகளுடன் சேர்ந்து, சமநிலை வரி போன்ற நடவடிக்கைகளை திரும்பப்பெறுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து உள்ளது. முன்மொழியப்பட்ட உலகளாவிய டிஜிட்டல் வரி ஒப்பந்தமானது 100 முன்னணி நிறுவனங்களை மட்டுமே உள்ளடக்கியுள்ளது. அது வளரும் நாடுகளுக்கு போதுமான வருவாய்க்கு வழிவகுக்காது என்று இந்தியா கவலை கொண்டுள்ளது.

---

**6. 'டூயிங் பிசினஸ்' அறிக்கை என்பது எந்நிறுவனத்தின் முதன்மை வெளியீடாகும்?**

அ) IMF



**ஆ) உலக வங்கி ☑**

இ) WTO

ஈ) NITI ஆயோக்

✓ 'டூயிங் பிசினஸ்' அறிக்கை உலக வங்கியின் முதன்மை வெளியீடாகும். 2018 மற்றும் 2020ஆம் ஆண்டின் அறிக்கைகளில் தரவு முறைகேடுகள் கண்டறியப்பட்டதை அடுத்து, இந்த அறிக்கையின் எதிர்கால வெளியீடுக -ளை உலக வங்கி நிறுத்தியுள்ளது. சர்வதேச செலவாணி நிதியத்தின் நிர்வாக இயக்குநர் கிறிஸ்டலினா ஜார்ஜீவாவும் இதில் ஈடுபட்டதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

---

**7. ADB'இன் சமீபத்திய மதிப்பீட்டின்படி, 2020-21 நிதியாண்டுக்கான இந்தியாவின் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சி விகிதம் என்ன?**

அ) 14%

ஆ) 12%

**இ) 10% ☑**

ஈ) 8%

✓ ஆசிய வளர்ச்சி வங்கியானது (ADB) இந்தியாவின் 2020-21ஆம் நிதி ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக் கணிப்பை 10% ஆக குறைத்துள்ளது. ஏப்ரல் மாதத்தில் 11% எனக் கணிக்கப்பட்டு இருந்தது. 2ஆவது COVID அலை காரணமாக ஏற்படும் இடையூறுகளே விகிதக் குறைப்புக்குக் காரணமாகும்.

✓ 2021-22ஆம் நிதியாண்டுக்கான வளர்ச்சிக்கணிப்பானது முந்தைய 7 சதவீதத்திலிருந்து 7.5%ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 2ஆவது அலையின் சீர்குலைவுகள் சேவைகள், உள்நாட்டு நுகர்வு மற்றும் நகர்ப்புற முறை சாரா துறையை மோசமாக பாதித்துள்ளது. 2020-21 நிதியாண்டின் கடைசி மூன்று காலாண்டுகளில் பொருளாதாரம் மீண்டுவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

**8. இந்தியாவின் அதிக உயரத்தில் அமைந்துள்ள கல்வியமைப்பான SECMOL, அமைந்துள்ள மாநிலம் / UT எது?**

அ) சிக்கிம்



**ஆ) லடாக் ☑**

இ) உத்தரகாண்ட்

ஈ) அருணாச்சல பிரதேசம்

✓ லடாக்கின் மாணவர்களின் கல்வி மற்றும் கலாசார இயக்கம் (SECMOL) லடாக் யூனியன் பிரதேசத்தில் லைட் பிடிலிட்டி (LiFi) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இணைய இணைப்பு பெற்ற முதல் நிறுவனமாக மாறி உள்ளது. SECMOL என்பது இந்தியாவின் அதிவுயரத்தில் அமைந்துள்ள

கல்விநிறுவனமாகும். LiFi அமைப்புகள் அதிவேக தரவு இணைப்புகளை வழங்குகின்றன.

**9.** **ACOO1 என்ற பெயரில் மின்சார வாகனங்களுக்கான உள்நாட்டு மின்னேற்றியை உருவாக்கியுள்ள நிறுவனம் எது?**

அ) DRDO

ஆ) ISRO

**இ) ARAI ☑**

ஈ) CSIR

✓ இந்திய தானியங்கி ஆராய்ச்சி சங்கம் (ARAI) ACOO1 எனப்பெயரிடப்பட்ட மின்சார வாகனங்களுக்கான மின்னேற்றியை உள்நாட்டிலேயே வடி -வமைத்து உருவாக்கியுள்ளது. பாரத் எலக்ட்ரானிக்ஸ்மூலம் இது பெரிய அளவில் உற்பத்தி செய்யப்படவுள்ளது. தற்போது மின்சார வாகனங்களு -க்கான பெரும்பாலான மின்னேற்றி கூறுகள் இறக்குமதி செய்யப்படுகி -ன்றன. இக்கூறுகளின் உள்நாட்டு உற்பத்தி, இந்தியாவில் மின்சார வாகனப் போக்குவரத்தை அதிகரிக்கும்.

**10.** **"டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் சிறந்த பயன்பாடு" பிரிவின்கீழ், 2021'இன் கொள்முதல் விருதுகளில் 'சிறப்பு CIPS' விருது பெற்றுள்ள இந்தியாவின் தொழில்நுட்ப முன்னெடுப்பு எது?**

அ) SDG டாஷ்போர்டு

**ஆ) GeM ☑**

இ) சாம்பியன்ஸ் போர்டல்

ஈ) GST போர்டல்

✓ இந்திய அரசின் மின்னணு சந்தைத்தள (GeM) முன்னெடுப்பு, "டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் சிறந்த பயன்பாடு" பிரிவின்கீழ், 2021'இன் கொள் முதல் விருதுகளில் சிறப்பு CIPS விருது பெற்றுள்ளது.

✓ இந்த விருது வழங்கும் விழா இங்கிலாந்தின் லண்டனில் நடைபெற்றது. GeM என்பது இந்திய அரசாங்கத்தால் பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்குவதற்கான ஓர் அர்ப்பணிக்கப்பட்ட இணையவழிச் சந்தையாகும்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. அரசு மற்றும் உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு – 'பிஎம்–போஜன்' என்ற பெயரில் மதிய உணவு: மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பிஎம்–போஜன் என்ற பெயரில் மதிய உணவு திட்டத்தை செயல்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள் ளது. தற்போது பள்ளிகளில் நடை முறையில் இருக்கும் தேசிய மதிய உணவு திட்டத்துக்கு பதிலாக இந்த திட்டம் செயல்படுத்தப்படும். இந்த திட்டத்துக்கு அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.1 லட்சத்து 30,795 கோடி செலவிடப்படும். இத்திட்டம் மூலம் பள்ளி மாணவர்களுக்கு ஒருவேளை சூடான உணவு வழங்கப்படும்.

பிஎம்–போஜன் திட்டம் தொடர் பாக மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: நாடு முழுவதும் 11.2 லட்சத்துக்கும் மேற்பட்ட பள்ளிகளில் 1 முதல் 8–ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு பிஎம்–போஜன் திட்டம் செயல்படுத்தப்படும். இதன்மூலம் 11.8 கோடி மாணவர்கள் பயனடைவர். 2021–22 நிதியாண்டு முதல் 2025–26 வரையிலான 5 வருட காலத்துக்கு இத்திட்டத்துக்கு மத்திய அரசு ரூ.54,061 கோடியே 73 லட்சம் செலவிடும். இது தவிர உணவு தானியத்துக்கான கூடுதல் செலவாக ரூ.45 ஆயிரம் கோடியை மத்திய அரசு ஏற்கும்.

மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு ரூ.31,733 கோடியே 17 லட்சம் செலவு ஏற்படும். எனவே, இந்த திட்டத்தின் மொத்த பட்ஜெட் ரூ.1 லட்சத்து 30,794 கோடியே 90 லட்சமாக இருக்கும். அரசு மற்றும் அரசு தொடக்கப்பள்ளிகளில் இயங்கும் மழலையர் வகுப்புகள் மற்றும் அங்கன்வாடிகள் தற்போதுஇத்திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. இந்த வகுப்புகளுக்கும் இத்திட்டம் பின்னர் விரிவுபடுத்தப்படும். பள்ளிகளில் ஊட்டச்சத்து தோட்டங்கள் ஏற்படுத்தவும் அரசு ஊக்குவிக்கும். இவ்வாறு மத்திய அரசின் அறிக்கை யில் கூறப்பட்டுள்ளது.

**2. குஜராத் கடற்பகுதியில் புதிய புயல் 'ஷாகீன்'**

குஜராத் கடற்பகுதியில் 'ஷாகீன்' என்ற புதிய புயல் நாளை (அக்.1) காலைக்குள் உருவாகி பாகிஸ்தானை நோக்கி செல்லக் கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வங்கக் கடலில் உருவான 'குலாப்' புயலானது, கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆந்திர பிரதேசத்தில் கரையை கடந்தது. இப்புயலில் எச்சங்கள் தெலங்கானா, மகாராஷ்டிரா முழுவதும் நகர்ந்து, நேற்று தெற்கு குஜராத் மீதிருந்தன. இந்நிலையில் வியாழக்கிழமை காலையில் இவை காற்றழுத்த தாழ்வுமண்டலமாக மாறி, மேற்கு, வடமேற்கு திசையில் நகரும். பிறகு இது வெள்ளிக்கிழமை (அக்.1) காலைக்குள் வட அரபிக் கடலில் புயலாக உருவெடுக்கும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இப்புயலுக்கு கத்தார் நாடு அளித்த பரிந்துரையின்படி 'ஷாகீன்' என பெயரிடப்பட்டுள்ளது. இப்புயல் பாகிஸ்தான் நோக்கி செல்லக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இந்தியாவுக்கு நேரடி அச்சுறுத்தல் இல்லை. என்றாலும் இந்தியா மற்றும் அதன் அண்டை நாடுகளின் மீனவர்கள் அக்டோபர் 2 வரை கடலுக்கு செல்ல வேண்டாம் என எச்சரிக்கப் பட்டுள்ளது. மேலும், இன்று முதல் 3 நாட்களுக்கு மகாராஷ்டிரா, குஜராத் கடற்பகுதி கொந்தளிப்புடன் காணப்படும். 55 முதல் 65 கி.மீ. வரையிலான வேகத்தில் காற்று வீசக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 'தவுக்தே' புயலுக்குப் பிறகு அரபிக் கடலில் உருவாகும் இரண்டாவது புயல் இதுவாகும்.

இதனிடையே குஜராத்தின் பல்வேறு இடங்களில் கடந்த 2 நாட்களாக கனமழை பெய்தது. வடக்கு கொங்கன், குஜராத் கட்ச், சவுராஷ்டிரா ஆகிய பகுதிகளில் இன்று அதிக கன மழைக்கு வாய்ப்புள்ளதால் 'ரெட் அலர்ட்' விடுக்கப்பட்டுள்ளது.

**3. சிங்காரச் சென்னை 2.0 திட்டம்; ரூ.500 கோடி ஒதுக்கீடு: அரசாணை வெளியீடு**

சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான அரசாணை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக, சென்னை மாநகராட்சி இன்று (செப். 29) வெளியிட்ட செய்திக்குறிப்பு: "தமிழக முதல்வர், பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதில் சரியான முன்னேற்றம் இல்லாததால் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், சர்வதேச தரத்துக்கு உயர்த்தவும் சிங்காரச் சென்னை 2.0 திட்டம் செயல்படுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, 2021–22ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கையில் சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தைச் செயல்படுத்த ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் 24.08.2021 அன்று தமிழக சட்டப்பேரவையில் நடைபெற்ற மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 42 உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் சரியான முன்னேற்றம் இல்லாததால் இக்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், சென்னை மாநகரக் கட்டமைப்பை சர்வதேச தரத்துக்கு உயர்த்தவும், சிங்காரச் சென்னை 2.0 என்னும் புதிய திட்டம் இவ்வரசால் தீட்டப்பட்டு இவ்வாண்டு ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்துடன் வேறு பல திட்டங்களை இணைத்து பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு உள்கட்டமைப்புப் பணிகள் மற்றும் சேவைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என அறிவித்தார்.

**4. மதுரவாயல்– துறைமுகம் இடையே 2 அடுக்கில் பறக்கும் சாலை திட்டம்**

நாட்டில் முதல் முறையாக 2 அடுக்கு சாலையாக அமையவுள்ள மதுரவாயல்– துறைமுகம் பறக்கும் சாலைக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி 3 மாதங்களில் நிறைவடையும். திட்ட அறிக்கை கிடைத்ததும் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் நிதி முதலீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று நெடுஞ்சாலைத் துறை செயலர் தீரஜ் குமார் தெரிவித்துள்ளார்.

**5. நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் – நெல் விற்பனைக்கு பதிவு செய்ய புதிய செயலி :**

திருவள்ளூர் மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் விற்பனைக்கு பதிவு செய்ய e–DPC என்ற புதிய செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் நடப்பு சொர்ணவாரிபருவத்தில், அரசு உத்தரவின்படி, இதுவரை 48 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் பணிகள் நடைபெற்றுவருகின்றன. இந்நிலையில், எதிர்வரும் கொள்முதல் பருவம் 2021–22–ல் விவசாயிகள் நேரடிநெல் கொள்முதல் நிலையங்களில் தேவையின்றிநீண்ட நேரம் காத்திருப்பதை தவிர்க்கும் பொருட்டும் எளிதில் பதிவுசெய்து உடனடியாக விற்பனைசெய்யவும் ஏதுவாக தமிழக அரசு e–DPC என்ற புதியசெயலியை அறிமுகம் செய்துள்ளது.

இச்செயலியை www.tncsc.tn.gov.in மற்றும் www.tncsc–edpc.in என்ற இணைய தளங்களில் காணலாம். இச்செயலியில் விவசாயிகள் தங்கள் பெயர், ஆதார் எண், புல எண் மற்றும் வங்கி கணக்கு எண் ஆகிய விவரங்களை பதிவேற்றம் செய்து, கொள்முதல் செய்ய வேண்டிய தேதியை முன்பதிவு செய்து கொள்ளலாம். இந்த செயலியில் விவசாயிகள் வரும் அக்டோபர் 1–ம் தேதி பதிவேற்றம் செய்யலாம்.

---

**6. 17 மருத்துவ சிகிச்சைகளை உள்ளடக்கிய கலைஞரின் – வரும்முன் காப்போம் திட்டம் தொடக்கம் : பயனாளிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கினார் முதல்வர் ஸ்டாலின்**

வாழப்பாடியில் நேற்று கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தை 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தில் இணைக்கவும், ஓராண்டில் 1,250 முகாம்கள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், 'கலைஞரின் வரும்முன் காப்போம் மருத்துவ முகாம் திட்ட' தொடக்கவிழா சேலம் மாவட்டம் வாழப்பாடியில் நேற்று நடந்தது. விழாவுக்கு தலைமை வகித்து முகாமை தொடங்கி வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின், பயனாளிகளுக்கு அடையாள அட்டைகளை வழங்கினார்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் வரவேற்று பேசும்போது, "முதல்வர் ஸ்டாலின், இத்திட்டத்தில் இருதயம், மகப்பேறு, எலும்பு சிகிச்சை, பல், கண் என 17 மருத்துவப் பிரிவுகளை உள்ளடக்கி, கலைஞர் வருமுன் காப்போம் திட்டத்தை செயல்படுத்த உத்தரவிட்டார். இதன்படி கிராமம் தொடங்கி, நகரம் வரை ஓராண்டில், 1,250 முகாம்கள் நடத்தப்படவுள்ளது. இத்திட்டத்தில் முகாம்கள் மூலம்மக்களுக்கு நோய்களை கண்டறிந்து மருந்து, மாத்திரை வழங்கப்படும். சிகிச்சை தேவைப்படுவோர் அரசு மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர். வரும்முன் காப்போம் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்துடன் இணைக்கப்படும்" என்றார்.

---

**7. 60 வயது முதியோர் வேலை தேட புதிய இணையதளம் தொடக்கம்: மத்திய சமூக நீதித் துறை அறிமுகம்**

அறுபது வயதுக்கு மேற்பட்ட முதியோர் மீண்டும் வேலைவாய்ப்பை தேட, புதிய இணையதளத்தை மத்திய சமூக நீதித் துறை அமைச்சகம் நாளை அறிமுகம் செய்கிறது. இந்தியாவில் முதியோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கடந்த 1951–ம் ஆண்டு 2 கோடியாக இருந்த முதியோரின் எண்ணிக்கை, கடந்த 2001–ம்ஆண்டு 7.6 கோடியாக உயர்ந்தது. கடந்த 2011–ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் படிஇந்த எண்ணிக்கை 10.4 கோடியாக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், 60 வயதைக் கடந்த முதியோர் பலர் பல்வேறு காரணங்களால் மீண்டும் வேலை செய்ய விருப்பப்படுகின்றனர். அதை கருத்தில் கொண்டு மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் துறை அமைச்சகம் முதல் முறையாக புதிய இணையதளத்தை அறிமுகம் செய்கிறது. நாட்டில் 60 வயது அல்லதுஅதற்கு மேற்பட்ட முதியோருக்கு மீண்டும் கவுரவமான வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருவதே இதன் நோக்கம். இதற்காக 'சீனியர் ஏபுள் சிட்டிசன் பார் ரீ–எம்ப்ளாய்மென்ட் இன் டிக்னிட்டி (சேக்ரட்) போர்ட்டல்' என்ற பெயரில்மத்திய அமைச்சகம் இணையதளத்தை அறிமுகம் செய்கிறது. இது நாளை முதல் செயல்பாட்டுக்கு வருகிறது. மீண்டும் வேலை செய்ய விரும்பும் முதியோர் இதில் பதிவு செய்து கொள்ளலாம்.

---

**8. ஹாசனில் முதல் முறையாக கோயிலுக்குள் நுழைந்த தலித் மக்கள்: உரிமையை பெற்றது மகிழ்ச்சி அளிப்பதாக பேட்டி**

கர்நாடக மாநிலம் கொப்பலில் கோயிலில் நுழைந்த 4 வயது தலித் குழந்தைக்கு கடந்த வாரம் ரூ. 25 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. அதேபோல குல்பர்காவில் கோயிலுக்குள் நுழைந்த தலித் இளைஞருக்கு ரூ. 5 லட்சம் அபராதம் விதிக்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதேபோல ஹாசன் மாவட்டத்தின் தின்டகூரு உள்ளிட்ட பிற இடங்களிலும் தலித் மக்களை ஆதிக்க சாதியினர் கோயிலுக்குள் நுழைய விடாமல் தடுப்பதாக அதிகாரியிடம் புகார் அளிக்கப்பட்டது.

இதையடுத்து சென்னராயபட்டணா வட்டாட்சியர் ஜே.பி.மாருதி அனைத்து சாதியினரையும் அழைத்து தின்டகூருவில் கூட்டம் நடத்தினார். இதை பெரும்பாலான சாதியினர் புறக்கணித்தனர். இதையடுத்து நேற்று முன்தினம் அதிகாரிகள் மற்றும் போலீஸார் முன்னிலையில் தலித் மக்கள் தின்டகூரு கோயிலுக்குள் நுழைந்து சிறப்பு பூஜை செய்து வழிபட்டனர். இதைத் தொடர்ந்து தின்டகூருவை சுற்றியுள்ள சோமேஷ்வரா கோயில், மஹாலட்சுமி கோயில், கேசவா கோயில் ஆகியவற்றிலும் நேற்று போலீஸார் முன்னிலையில் தலித் மக்கள் கோயிலுக்குள் நுழைந்து வழிபாடு நடத்தினர்

இதுகுறித்து 75 வயது திம்மையாகூறும்போது, "நான் இதேகிராமத்தில் பிறந்து வளர்ந்திருந்தாலும் இதுவரை கோயிலுக்குள் சென்றதில்லை. திருவிழா நாட்களில் கோயிலுக்கு வெளியே நின்று வணங்குவேன். என் அப்பா, தாத்தாவும் இந்த கோயிலுக்குள் நுழைந்ததில்லை. முதல் முறையாக கோயிலுக்குள் பூஜை செய்தது மகிழ்ச்சியாக இருக்கிறது'' என்றார். பீர் ஆர்மி அமைப்பின் நிர்வாகி சந்தோஷ் கூறும்போது, "ஹாசன் மாவட்டத்தில் பல நூற்றாண்டுகளாக தலித் மக்களுக்கு மறுக்கப் பட்டிருந்த ஆலய நுழைவு உரிமைபெற்றது பெரிய சாதனை ஆகும். இதற்காக நீண்ட காலமாக தலித் மக்கள் போராடி வந்துள்ளனர்.

ஏராளமானோர் பல்வேறு இன்னல்களை அனுபவித்துள்ளனர். தற்போது கோயிலுக்கு சென்று பூஜை செய்ததை விட, அதற்கான உரிமையை பெற்றது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது'' என்றார். தலித் மக்களின் ஆலய நுழைவை தொடர்ந்து தின்டகூருவை சுற்றியுள்ள கிராமங்களில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.ஹாசன் மாவட்டம் தின்டகூருவில் உள்ள மல்லேஸ்வரா கோயிலுக்குள் சென்று வழிபட்ட தலித் மக்கள்.

---

**9. இந்தியாவின் அதிவேக பைக் பந்தய வீராங்கனை கல்யாணி**

இந்தியாவின் அதிவேக மோட்டார் சைக்கிள் பந்தய வீராங்கனை என்ற சாதனையைப் படைத்துள்ளார்27 வயதான கல்யாணி பொடேகர். சமீபத்தில் என்சிஆரின் புத்தா இன்டர்நேஷனல் சர்க்யூட்டில் நடைபெற்ற மோட்டார் சைக்கிள் பந்தயத்தில், 2.08 நிமிடங்களில் இலக்கை கடந்து அசத்தினார் கல்யாணி பொடேகர். இதன் மூலம் இந்தியாவின் அதிவேக மோட்டார் சைக்கிள் பந்தய வீராங்கனை என்ற சாதனையைப் படைத்திருந்தார் கல்யாணி பொடேகர். இதற்குமுன்னர் கல்யாணி 2.16 நிமிடங்களில் பந்தய தூரத்தை கடந்திருந்தார். இந்த சாதனையை தற்போது டுகாட்டி பனிகல் வி 4 சூப்பர் பைக் மூலம் முறியடித்து புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இதுகுறித்து கல்யாணி பொடேகர் கூறும்போது, "மோட்டார் சைக்கிள்கள், ஓட்டப்பந்தயம், வேகம் இவை அனைத்தும் என்னை கவர்ந்தது. மற்ற குழந்தைகள் சைக்கிளில் மிதிப்பது எப்படி என்று கற்றுக் கொண்டிருந்த வயதில், நான் 9 வயதிலேயே துல்லியமாக இருக்க கனரக இயந்திரங்களை இயக்கிக் கொண்டிருந்தேன். என் கால்கள் சரியாக தரையை தொடாத நிலையில் அப்பாவின் ஆர்எக்ஸ் 100 பைக்கை ஓட்டத் தொடங்கினேன். எனது அப்பா பின்னால் அமர்ந்து கொண்டு கியர்களை எப்படி பயன்படுத்த வேண்டும் என கற்றுக்கொடுத்தார்.

நான் வளர்ந்தவுடன், பைக்பந்தயத்தில் பங்கேற்க விரும்பினேன். பின்னர் 2017 ல், நான் கலிபோர்னியா சூப்பர்பைக் பள்ளியில் பயிற்சி பெற்றேன், பைக்கை நான் நன்றாக நிர்வகிக்க மற்றும் சவாரி செய்ய முடிந்தாலும், என் கால்கள் தரையை எட்டாததால் தெளிவற்ற காரணத்தைக் கூறி, ஒரு குறிப்பிட்ட பிராண்ட் மோட்டார் சைக்கிளை சவாரி செய்ய எனக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. ஒரு வருடம் கழித்து, அதே பைக்கில் நான் சென்றபோது எனக்குவாய்ப்பு வழங்க மறுத்த அதே நபர் என்னுடன் செல்ஃபி எடுத்தார். எனது அத்தைகூட இந்த பைக்கிற்கு எப்படி பெட்ரோல் நிரப்புவாய்? அதனால் நீ வேலைக்குச் செல் என ஏளனமாக கூறுவார். அவர்களது கருத்துகளை எடுத்துக் கொண்டு அவர்கள் மீதே அடியெடுத்து வைத்து முன்னேறிச் செல்ல வேண்டும்'' என்றார்.

கல்யாணி பொடேகர் பல்வேறு சாதனைகள் படைத்துள்ளார். உலகின் உயரமான பந்தயமான ரைரடிட ஹிமாலயா, இந்திய மோட்டார்ஸ்போர்ட்ஸ் கிளப் ஆதரவளிக்கும் இந்திய தேசிய ரேசிங் சாம்பியன்ஷிப் ஆகியவற்றில் கல்யாணிகலந்து கொண்டுள்ளார்.

---

**10. பள்ளி மாணவா்களுக்கு பிரதமா் ஊட்டச்சத்து திட்டம்: மத்திய அமைச்சரவை ஒப்புதல்; 11.80 கோடி போ் பலனடைவா்**

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 8–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவா்களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்க வகை செய்யும் 'பிரதமா் ஊட்டச்சத்து திட்டத்துக்கு' (பிஎம்–போஷண்) மத்திய அமைச்சரவை புதன்கிழமை ஒப்புதல் வழங்கியது. நாடு முழுவதுமுள்ள 11.20 லட்சம் பள்ளிகளில் பயிலும் சுமாா் 11.80 கோடி மாணவா்கள் இத்திட்டத்தின் வாயிலாகப் பலனடைவா் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் கூட்டம் பிரதமா் நரேந்திர மோடி தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது. அக்கூட்டத்தில் 'பிரதமரின் போஷண் சக்தி நிா்மாண்' (பிஎம்–போஷண்) திட்டத்தைச் செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டது. அத்திட்டத்தின்படி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 8–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவா்களுக்கு 2021–2022–ஆம் நிதியாண்டு முதல் 2025–2026–ஆம் நிதியாண்டு வரை சூடான மதிய உணவு வழங்கப்படவுள்ளது. இதே நோக்கில் ஏற்கெனவே அமல்படுத்தப்பட்டு வரும் மதிய உணவுத் திட்டமானது பிஎம்–போஷண் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தொடக்கப் பள்ளிக்கு முந்தைய வகுப்புகளில் படிக்கும் மாணவா்கள், பால்வாடி மையங்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ளது

புதிய திட்டத்தில் மேலும் பல அம்சங்கள் இடம்பெற்றுள்ளதாக மத்திய தகவல்–தொடா்புத் துறை அமைச்சா் அனுராக் தாக்குா் செய்தியாளா்களிடம் தெரிவித்தாா். ரூ.1.3 லட்சம் கோடி செலவு: திட்டம் தொடா்பாக மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில், 'பிஎம்–போஷண் திட்டத்துக்கு 2025–26–ஆம் நிதியாண்டு வரை ரூ.5,4061.73 கோடியை மத்திய அரசும், ரூ.31,733.17 கோடியை மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளும் செலவு செய்யவுள்ளன. உணவு தானியங்களுக்கான சுமாா் ரூ.45,000 கோடி கூடுதல் செலவை மத்திய அரசு ஏற்கும். ஒட்டுமொத்தமாக இத்திட்டத்தின் பட்ஜெட் மதிப்பு ரூ.1,30,794.90 கோடியாக உள்ளது. பிஎம்–போஷண் திட்டத்தின் மூலமாக நாடு முழுவதும் 11.20 லட்சம் பள்ளிகளில் பயிலும் 11.80 கோடி மாணவா்கள் பலனடைவா்.

உள்ளூா் பொருளாதாரம் மேம்படும்: பண்டிகை காலங்களில் மாணவா்களுக்கு சிறப்பு உணவு வழங்குவது தொடா்பாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது. மாணவா்களுக்கு இயற்கை மற்றும் தோட்டங்கள் தொடா்பான அனுபவத்தை வழங்குவதற்காக பள்ளிகளில் ஊட்டச்சத்து தோட்டங்கள் வளா்க்கப்படும். ரத்தசோகை அதிகமாகக் காணப்படும் மாவட்டங்களில் உள்ள மாணவா்களுக்குக் கூடுதல் ஊட்டச்சத்துப் பொருள்கள் வழங்கப்படும். இத்திட்டத்தை அமல்படுத்துவதில் விவசாய உற்பத்தியாளா் அமைப்புகள், பெண்கள் சுயஉதவிக் குழுக்கள் ஈடுபடுத்தப்படும். இத்திட்டத்துக்கு உள்ளூா் பாரம்பரிய உணவுப் பொருள்களைப் பயன்படுத்துவதால் உள்ளூா் பொருளாதாரம் மேம்படும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இசிஜிசி நிறுவனத்தைப் பங்குச் சந்தையில் பட்டியலிட ஒப்புதல்: பொதுத் துறை நிறுவனமான ஏற்றுமதி கடன் உத்தரவாத நிறுவனத்தை (இசிஜிசி) பங்குச் சந்தையில் பட்டியலிட மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது. இந்த நடவடிக்கை மூலமாக 5 ஆண்டுகளில் ரூ.4,400 கோடி வரை முதலீடுகளை ஈா்க்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இது தொடா்பாக மத்திய அமைச்சா் பியூஷ் கோயல் செய்தியாளா்களிடம் கூறுகையில், "அடுத்த நிதியாண்டில் இசிஜிசி நிறுவனம் பங்குச் சந்தையில் பட்டியலிடப்படும். எவ்வளவு பங்குகளை வெளியிடுவது என்பது குறித்து விரைவில் முடிவெடுக்கப்படும். அதன்மூலம் கிடைக்கும் முதலீட்டுத் தொகையானது, ஏற்றுமதி நிறுவனங்களுக்குக் கடன்களை வழங்கப் பயன்படுத்தப்படும். 2025–26–ஆம் நிதியாண்டுக்குள் இசிஜிசி நிறுவனத்தின் கடன் வழங்கும் மதிப்பை ரூ.1 லட்சம் கோடியிலிருந்து ரூ.2.03 லட்சம் கோடியாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது' ' என்றாா்.

என்இஐஎ திட்டத்துக்கு ரூ.1,650 கோடி: தேசிய ஏற்றுமதி காப்பீட்டுக் கணக்கு (என்இஐஎ) திட்டத்துக்கு 5 ஆண்டுக்குள் ரூ.1,650 கோடியை வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இதன்மூலம் ரூ.33,000 கோடி மதிப்பிலான ஏற்றுமதி திட்டங்கள் ஊக்குவிக்கப்படும் என்றும், சுமாா் 2.6 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. இரட்டை ரயில் பாதைகளுக்கு ஒப்புதல்: குஜராத்தின் ராஜ்கோட்– கனாலஸ், மத்திய பிரதேசத்தின் நிமச்–ரத்லம் இடையேயான ரயில் வழித்தடத்தை இரட்டிப்பாக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இது தொடா்பாக மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில், 'ராஜ்கோட்– கனாலஸ் இடையேயான 111.20 கி.மீ. வழித்தடத்தை இரட்டிப்பாக்கும் திட்டத்துக்காக ரூ. 1,168.13 கோடியை செலவிட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழித்தடத்தைப் பல்வேறு நிறுவனங்கள் தங்கள் சரக்குகளை எடுத்துச் செல்லப் பயன்படுத்தி வருகின்றன. எதிா்காலத்தில் இந்த வழித்தடத்தில் நிலக்கரி, சிமென்ட், உரங்கள், உணவு தானியங்கள் உள்ளிட்டவை அதிக அளவில் கொண்டு செல்லப்படும். சுற்றுலா மேம்படும்: நிமச்–ரத்லம் இடையேயான 132.92 கி.மீ தூரத்துக்கு ரூ.1,184.67 கோடி செலவில் இரட்டை ரயில் பாதை அமைக்கப்படவுள்ளது. இந்த வழித்தடத்தில் மின் நிலையங்கள், சிமென்ட் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ளதால் சரக்குப் போக்குவரத்து அதிகரிக்கும்; பயணிகள் ரயில் போக்குவரத்து அதிகரித்து சுற்றுலாத் துறையும் மேம்படும். இரு திட்டங்களும் 4 ஆண்டுகளில் நிறைவடையும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

**11. இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் ரூ.43 லட்சம் கோடியாக அதிகரிப்பு**

இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் நடப்பாண்டு மாா்ச் இறுதி நிலவரப்படி ரூ.43 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. இதுகுறித்து மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் நடப்பு 2021–ஆம் ஆண்டு மாா்ச் மாத இறுதி நிலவரப்படி 57,000 கோடி டாலராக (இந்திய மதிப்பில் சுமாா் ரூ.43 லட்சம் கோடி) அதிகரித்துள்ளது. இதற்கு முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது வெளிநாட்டுக் கடன் அளவானது கரோனா நெருக்கடிக்கு இடையிலும் 2.1 சதவீதம் மட்டுமே மிதமான அளவில் அதிகரித்துள்ளது. கடந்த 2020–ஆம் ஆண்டு மாா்ச் இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20.6 சதவீதமாக இருந்த வெளிநாட்டுக் கடன் நடப்பாண்டு மாா்ச்சில் 21.1 சதவீதமாக உயா்ந்துள்ளது. இதே காலகட்டத்தில் இந்தக் கடனுக்கான ஒதுக்கீட்டு விகிதம் 85.6 சதவீதத்திலிருந்து 101.2 சதவீதமாக உயா்ந்துள்ளது.

வழக்கமாக வெளிநாட்டுக் கடனில் டாலா் சாா்ந்த கடனே அதிக அளவில் உள்ளது. மொத்தக் கடனில் இதன் பங்களிப்பு 52.1 சதவீதமாகும். இதைத் தொடா்ந்து இந்திய ரூபாய் (33.3 சதவீதம்), யென் (5.8 சதவீதம்), எஸ்டிஆா் (4.4 சதவீதம்), யூரோ (3.5 சதவீதம்) ஆகியவை உள்ளதாக நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

**12. 38–ஆவது 'பிரகதி' கூட்டம்: ரூ.50,000 கோடி திட்டங்களை ஆய்வு செய்தாா் பிரதமா் மோடி**

38–ஆவது 'பிரகதி' கூட்டம் பிரதமா் நரேந்திர மோடி தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது. இதில் ரூ.50,000 கோடி மதிப்பில் செயல்படுத்தப்பட்டும் வரும் பல்வேறு திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டன. மத்திய மற்றும் மாநில அரசுகளின் செயல்திறனை மதிப்பிடுவது, அரசின் திட்டங்களை உரிய நேரத்தில் செயல்படுத்துதல் ஆகியவையே 'பிரகதி' என்று அழைக்கப்படுகிறது. கடந்த 2015–இல் இந்த பிரகதி திட்டம் தொடங்கப்பட்டது. புதன்கிழமை நடைபெற்ற பிரகதி கூட்டத்தில் 8 திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டன. இவற்றில் நான்கு ரயில்வே அமைச்சக திட்டங்கள், 2 மின் அமைச்சக திட்டங்களாகும். இது தவிர சாலைப் போக்குவரத்து அமைச்சகம், விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் தலா ஒரு திட்டமும் ஆய்வு செய்யப்பட்டன. ஒடிஸா, ஆந்திரம், பிகாா், ஜாா்க்கண்ட், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம், ஹரியாணா ஆகிய 7 மாநிலங்களில் நடைபெறும் இந்த திட்டங்களின் மொத்த மதிப்பு ரூ.50,000 கோடியாகும். இதற்கு முன்பு நடைபெற்ற 37 பிரகதி கூட்டங்களில், ரூ.14.39 லட்சம் கோடி மதிப்பிலான 297 திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டன.

---

**13. ஐ.நா. பொதுச் சபையில் உலக நாடுகள் உரக்கச் சொன்னது என்ன?**

ஐ.நா. பொதுச் சபையின் 76–ஆவது ஆண்டுக் கூட்டத்தில் பொது விவாதம் செப். 21–ஆம் தேதி தொடங்கி செப். 27–ஆம் தேதி வரை நடைபெற்றது. இதில் 100–க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் நேரில் பங்கேற்று உரையாற்றினர். சுமார் 60 நாடுகளைச் சேர்ந்த தலைவர்களின் பதிவு செய்யப்பட்ட விடியோ உரை காணொலி

முறையில் ஒளிபரப்பப்பட்டது. கரோனா பெருந்தொற்றிலிருந்து உலகம் சிறிது சிறிதாக மீண்டு வரும் நிலையில் நேரடியாக நடத்தப்பட்ட இக்கூட்டம் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. இதில், உலக நாடுகளின் தலைவர்கள் தங்கள் உரையில் முக்கியமாக வலியுறுத்திய கருத்துகள்...

இந்தியா

இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் நேரடியாகப் பங்கேற்று உரையாற்றினார். சர்வதேச தடுப்பூசி நிறுவனங்கள் இந்தியாவில் கரோனா தடுப்பூசி உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும் என அவர் அழைப்பு விடுத்தார். பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்கும் நாடுகளுக்கு அதனாலேயே ஆபத்து ஏற்படும் என பாகிஸ்தானை மறைமுகமாக மோடி குறிப்பிட்டார். இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் விரிவாக்க நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் சீனாவை மறைமுகமாகச் சாடிய மோடி, பெருங்கடல்கள் பகிரப்பட்ட பாரம்பரியம். அவற்றை நாடுகளின் விரிவாக்க நடவடிக்கையிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்றார். பிற நாடுகளுக்கு எதிரான பயங்கரவாதத் தாக்குதலுக்கு ஆப்கன் பயன்படுத்தப்படக் கூடாது என்பதை உறுதி செய்ய சர்வதேச சமூகத்துக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

அமெரிக்கா

சீனாவின் பெயரைக் குறிப்பிடாமல், அந்நாட்டுடன் அதிகரித்து வரும் பதற்றம் குறித்த கவலையை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் ஒப்புக்கொண்டார். அதேவேளையில், "நாங்கள் புதிய பனிப் போரையோ அல்லது பிளவுபட்ட உலகத்தையோ விரும்பவில்லை' என்றார். ஆப்கனிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறியது குறித்து, "இடைவிடாத யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்துள்ளோம். உலகம் முழுவதும் மக்களை மேம்படுத்துவதற்கான புதிய வழிகளில் எங்களது திறனை முதலீடு செய்யும் புதிய சகாப்தத்தை தொடங்கியுள்ளோம்' என்றார்.

பிரிட்டன்

பருவநிலை மாற்றம் குறித்த பிரச்னைக்கு பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் முக்கியத்துவம் அளித்தார். அவர் தனது உரையில், "தொழில்புரட்சிக்கு முந்தைய நிலையைவிட உலகின் வெப்பநிலை உயர்வை 1.5 டிகிரி செல்சியஸாக கட்டுப்படுத்துவதற்கான மாற்றங்களை உலகம் இப்போது நடைமுறைப்படுத்த வேண்டும்' எனக் கேட்டுக்கொண்டார்.

ஆஸ்திரேலியா

ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரீஸன் தனது பதிவு செய்யப்பட்ட உரையில், சர்வதேச கூட்டணியின் மதிப்பை வலியுறுத்தினார். அமெரிக்கா- பிரிட்டன்- ஆஸ்திரேலியா இடையிலான "ஆக்கஸ்' கூட்டணிக்கு பிரான்ஸ் எதிர்ப்பு தெரிவித்துள்ள நிலையில் அவர் இக்கருத்தைக் கூறினார்.

சீனா

அமெரிக்காவுடன் அதிகரித்து வரும் பதற்றத்தை மறைமுகமாக தனது பதிவு செய்யப்பட்ட உரையில் குறிப்பிட்டார் சீன அதிபர் ஷி ஜின்பிங். "நாடுகளுக்கு இடையிலான சச்சரவுகள் பேச்சுவார்த்தை மூலம் கையாளப்பட வேண்டும். ஒரு நாட்டின் வெற்றியானது மற்றொரு நாட்டின் தோல்வியாக கருதப்படக் கூடாது. மோதலையும், ஒரு குறிப்பிட்ட நாட்டை தனிமைப்படுத்துவதையும் உலகத் தலைவர்கள் தவிர்க்க வேண்டும்' என்றார் அவர்.

பாகிஸ்தான்

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் பதிவு செய்யப்பட்ட உரையில், "ஆப்கானிஸ்தானின் இன்றைய நிலைக்கு பாகிஸ்தான் காரணம் என அமெரிக்காவிலிருந்தும், ஐரோப்பிய யூனியனிலிருந்தும் அரசியல்வாதிகள் குற்றம்சாட்டுகின்றனர். இரட்டை கோபுர தாக்குதலுக்குப் பின்னர் பயங்கரவாதத்துக்கு எதிரான அமெரிக்காவின் கூட்டணியில் இணைந்ததையடுத்து, ஆப்கானிஸ்தான் தவிர அதிகம் பாதிக்கப்பட்டது பாகிஸ்தான்' என்றார்.

இலங்கை

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நடைபெறுவதை ஐ.நா. மனித உரிமைகள் பிரிவு தலைவர் மிஷெல் பாச்சலெட் அண்மையில் கண்டித்திருந்தார். அதற்கு பதிலளிக்கும் வகையில், ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் பேசிய அதிபர் கோத்தபய ராஜபட்ச, "இலங்கையில் தமிழர்களுக்கு நீடித்த அமைதியை அடைய உள்நாட்டு அமைப்புகள் மூலம் முயற்சிப்பது அவசியம்' என்றார். "அமைதியை அடைவது என்பது தொடர்ச்சியான செயல்முறை ஆகும். உள்நாட்டு அமைப்புகளுக்கு இதற்கு போதிய வாய்ப்பளிக்க வேண்டும். இந்த அமைப்புகள் செய்யும் பணியை வெளி அமைப்புகள் மாற்றியமைக்கக் கூடாது' என அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பெரிஸ் கூறியதும் குறிப்பிடத்தக்கது.

வங்கதேசம்

வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா தனது உரையில், தடுப்பூசி சமநிலை, கரோனா தொற்றிலிருந்து நிலையான மீட்பு, பருவநிலை சவால்கள் உள்ளிட்ட 6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தினார். தங்கள் நாட்டில் தஞ்சமடைந்துள்ள ரோஹிங்கயா அகதிகள் தம் சொந்த நாடான மியான்மருக்கு திரும்ப சர்வதேச சமூகம் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அவர் அழைப்பு விடுத்தார்.

ஜப்பான்

ஜப்பான் பிரதமர் யோஷிஹிடே சுகா தனது உரையில், "கரோனா நோய்த்தொற்றால் உலகம் அளவிட முடியாத துயரத்தை எதிர்கொண்டாலும், டோக்கியோ ஒலிம்பிக் போட்டியானது மக்களிடையே உலகளாவிய ஒற்றுமையின் அடையாளமாக நிரூபிக்கப்பட்டது. ஒலிம்பிக் போட்டியை நடத்துவதில் பல்வேறு கருத்துகள் இருந்தாலும் எங்களது கடமையை நிறைவேற்றினோம்' எனப் பெருமிதம் கொண்டார்.

ரஷியா, பிரான்ஸ்

ரஷியா சார்பில் அதன் வெளியுறவுத் துறை அமைச்சர் செர்ஜி வி லாவ்ரோவ் கலந்துகொண்டார். "ஐ.நா. சாசனத்தின் நோக்கங்கள், கோட்பாடுகளை நிலைநாட்ட புதிய ஒருமித்த கருத்தை எட்டுவதற்கு அவர் அழைப்பு விடுத்தார். பிரான்ஸ் சார்பில் வெளியுறவு அமைச்சர் ஜான் ஈவ் லெட்ரியன் பங்கேற்று, கரோனா, பருவநிலை மாற்றம், நாடுகள் இடையிலான சச்சரவுகள் போன்றவற்றுக்கு தீர்வு காண பலதரப்பு ஒத்துழைப்பை வலியுறுத்தினார்.

பிரேஸில் ஏன் முதலில்?

ஐ.நா. பொதுச் சபையின் ஆண்டு கூட்டத்தில் முதலில் உரையாற்றும் வாய்ப்பு பிரேஸிலுக்கு வழங்கப்படுவது பாரம்பரியமாக உள்ளது. பிரேஸிலுக்கு ஏன் அந்த வாய்ப்பு வழங்கப்படுவது என்பது குறித்து இரு கருத்துகள் உள்ளன. 1. ஐ.நா. சபை 1945-இல் தொடங்கப்பட்டது. ஆரம்பத்தில் அதன் ஆண்டுக் கூட்டத்தில் முதலில் உரையாற்ற எந்த நாடும் தயாராக இல்லை. பிரேஸில்தான் முதலில் உரையாற்ற தாமாக முன்வந்தது. அதுமுதல் பிரேஸிலுக்கு அந்த வாய்ப்பு கிடைத்து வருகிறது. 2. பிரேஸில் பிரதிநிதி ஒஸ்வால்டோ அரன்கா ஐ.நா. பொதுச் சபையின் முதல் சிறப்புக் கூட்டத்துக்கு தலைமை வகித்தார். பொதுச் சபையின் இரண்டாவது கூட்டத்துக்கும் அவரே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதுமுதல் பிரேஸிலுக்கு முதல் வாய்ப்பு வழங்கப்படுகிறது.